விலை ரூபா 30 பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 31 கதிர் 101 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 23, ஞாயிற்றுக்கிழமை 06.03.2016

மகாராஜா பொதிகள் சேவை
புதிய சேவை
லண்டன்,பிரான்ஸ் நாடுகளுக்கு
20 நாள் பொதிகள் சேவை
1kg கட்டணம் 150/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200

## தலா 8 லட்சம் ரூபா பெறுமதியில் யாழ். மாவட்டத்தில் 3,000 வீடுகள்

### நிர்மாணிக்கவுள்ளது மீள்குடியேற்ற அமைச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 6
மீள்குடியேற்ற அமைச்சால் யாழ்.மாவட்டத்தில் தலா 8 லட்சம் ரூபா செலவில் 3 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளன. இதற்கான பயனாளிகள் தேர்வு புள்ளியிடல் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதில் முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்து பாதுகாவலர்களின் பராமரிப்பில் சிறுவர் உள்ள குடும்பங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் கிராம சேவையாளர்களால் பரிந்துரைக் பக். 53

## கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்திருந்தனர். இந்தக் குழுவின் கூட்டம் கடந்த மாதம் மூன்றாம் வாரத்தில் இடம்பெற்றிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே இன்றைய கூட்டம் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியமர்வு, அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களும், தமிழ்த் பக். 53

# புலம்பெயர் தமிழருடன் அமைச்சர் மங்கள பேச்சு

### போர்க்குற்ற மீறல்களை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றை அமைப்பது தொடர்பில்



கொழும்பு, மார்ச் 6
இறுதிப்போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட நீதிமன்றமொன்றை அமைப்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் தீவிர கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.
இதற்காக அமைச்சர் நீண்ட நாள்களாக அமெரிக்காவில் தங்கியுள்ளார். பக். 53

## முச்சந்தி முரளி



தமிழர் தரப்பை வளைக்க படாதபாடு பாருங்கோ...

## சிவில் பாதுகாப்புப் படையின் முன்பள்ளிகள் மூடப்படமாட்டா

### அவற்றின் செயற்பாடு தொடரும் என்கிறார் பணிப்பாளர் நாயகம்

கிளிநொச்சி, மார்ச் 6
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கி வருகின்ற சிவில் பாதுகாப்புத் திணைக்களமும், அதன் கீழான முன்பள்ளி நடவடிக்கைகளும் தொடர்ந்தும் இயங்கும். அவை மூடப்படமாட்டாது என சிவில் பாதுகாப்புத்திணைக் களத்தின் பணிப் பக். 53

## வெலிக்கடைச் சிறை முன் கர்ப்பிணிப் பெண் மீது சூடு

### அதிர்ச்சியில் தென்னிலங்கை

கொழும்பு, மார்ச் 6
வெலிக்கடைச்சிறைச்சாலைக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 3.50 மணியளவில் பக். 53

## லசந்தவின் படுகொலை; விசாரணையில் சந்தேகம்

### பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவரிடம் தீவிர விசாரணை

கொழும்பு, மார்ச் 6
சண்டேலீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை மூடி பக். 53

## ஏப்ரலில் அமெரிக்கா செல்கிறார் மைத்திரி



கொழும்பு, மார்ச் 6
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த மாத இறுதியில் அமெரிக்கா செல்கிறார்.
அமெரிக்காவில் நடைபெறவுள்ள பக். 53

## சூளைமேடு கொலை வழக்கில் டக்ளஸிடம் நேற்று விசாரணை

விரிவு பக். 45

## வீட்டுத்திட்ட ஆய்வறிக்கை வடக்கு முதலமைச்சரிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
மீள்குடியேற்ற அமைச்சால் அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் முன்னோடி வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டு, அது பக். 53

## கோத்தா அரசியலுக்கு வந்தால் ஆதரிப்பேன்

### பசில் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கும், சிறந்த எதிர்க்கட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கும் புதிய கட்சியொன்று தேவை என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கோத்தபாய ராஜபக்ச அரசியலுக்குள் பிரவேசிப்பாரென் பக். 53

## வடமாகாண சபை அமர்வை குழப்பக்கூடாது ஆளும்தரப்பு

### விடயங்களை ஆளும்கட்சிக் கூட்டத்தில் ஆராய்வது என்று நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படவேண்டும் என்றும், மாகாண சபையில் எந்தக் குழப்பங்களும் ஆளும் கட்சியினரால் ஏற்படுத்தப்படக்கூடாதெனவும், முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் ஆளும் கட்சிக் கூட்டத்திலேயே விடயங்கள் ஆராயப்பட பக். 53

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# திறந்த நீதிமன்றில் சட்டத்தரணிகள் மோசமான வார்த்தைப் பிரயோகம்

## இருவரையும் எச்சரித்த நீதிவான் பொலிஸில் முறையிடவும் ஆலோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 6

நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது வழக்காளிகள் மற்றும் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகியிருந்த இரு சட்டத்தரணிகள் தமக்கிடையே அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டனர். அதனால் ஏனைய சட்டத்தரணிகளும் பொதுமக்களும் அசௌகரியங்களுக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் யாழ். நீதிமன்றில் கடந்த புதன்கிழமை நடந்துள்ளது.

குறித்த இரு சட்டத்தரணிகளையும் கடுமையாக எச்சரித்த நீதிவான் தனிப்பட்ட விடயங்கள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் என்று தெரிவித்தார். இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒரு சட்டத்தரணியால் மற்றைய சட்டத்தரணிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

வெளிநாட்டுக்குக் குடும்ப நுழைவிசைவுகளையும் மாணவர் நுழைவிசைவுகளையும் பெற்றுத்தருவதாகக் கூறிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு மோசடி செய்யப்பட்டது என்று யாழ்.நகரில் இயங்கிய நிறுவனம் ஒன்றுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. அந்த வழக்கு நடவடிக்கை யாழ்ப்பாண விசேட குற்ற விசாரணைப் பிரிவால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வழக்கில் நிறுவனத்தின் சார்பில் பிரபல சட்டத்தரணியொருவரும், பாதிக்கப்பட்டவர் சார்பில் பிரபல பெண் சட்டத்தரணியொருவரும் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கு நடவடிக்கையின் ஒரு கட்டத் தில் இரண்டு சட்டத்தரணிகளும் ஒவ்வொருவரினதும் நடத்தை தொடர்பாக நீதிவானிடம் முறையிட்டதுடன் நீதிமன்றுக்கு பொருந்தாத அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து இருவரையும் கடுமையாக எச்சரித்த நீதிவான், வழக்குடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் நீதிமன்றில் விவாதிக்குமாறும் தனிப்பட்ட விடயங்கள் இருப்பின் அதனைப் பொலிஸாரிடம் முறையிடுமாறும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பெண் சட்டத்தரணியால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பாக இரண்டு சட்டத்தரணிகளின் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இதேவேளை, கடந்த வருடமும் தமிழ் அரசியல்வாதியொருவரின் தாபரிப்பு வழக்குக்காக கணவனுக்கும் மனைவிக்கும் எதிர் எதிர் தரப்புகளில் முன்னிலையாகியிருந்த குறித்த இரண்டு சட்டத்தரணிகளும் அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மிகவும் மோசமான வார்த்தைகளால் ஒருவரையொருவர் கடுமையாக விமர்சித்ததால் அப்போதிருந்த நீதிவானால் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாகவும் அவர்களால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நாட்டின் மிக உன்னத நிலையில் வைக்கப்பட்டுள்ள நீதித்துறையில் தொழிலாற்றுகின்ற சட்டத்தரணிகள் தமது பணியின் மாண்பை உணராது தரம் தாழ்ந்து நடப்பது வேதனையளிப்பதாக இந்தச் சம்பவங்களை அவதானித்த பொது மக்கள் கருத்து தெரிவித்தனர்.

(ற-4,103)

### யாழில் நீர் வழங்கல் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்.மாநகர சபையின் பிரதான நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்டுள்ள உடைவு காரணமாக நீர் வழங்கும் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

தற்போது பாதிக்கப்பட்ட நீர் குழாய்களைத் திருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் இந்தக் காலப் பகுதியில் பிரதான தாங்கியில் இருந்து வழங்கப்படும் நீர் விநியோகம் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் விரைவாக செய்யப்பட்டு முடிவடைந்ததும் நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் யாழ்.மாநாகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் குறிப்பிட்டுள்ளார்.

(ற-ஐ-ரி5)



சாவகச்சேரி அஞ்சலக வளாகத்தினுள் ஐந்தடி நீளமான வெள்ளை நாக பாம்பு காணப்பட்டது. அலுவலகத்தைச் சுற்றி மதில் காணப்படும் நிலையில் அந்தப் பாம்பு முன்வாசல் வழியாக உள்நுழைந்து பூமரங்களுக்கிடையில் இருந்துள்ளது. நேற்று காலை பூப்பறிக்கச் சென்ற அஞ்சலக ஊழியர் அதனைக் கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வெள்ளை நாகபாம்பு காணப்படுவதாக தகவல் பரவியதையடுத்து பெருமளவு பொதுமக்கள் கூடிப் பார்வையிட்டனர்.

(ற-ஐ-9)

## விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையக் கட்டடம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச் 6

நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலைய கட்டடம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையத்தின் பொறுப்பதிகாரி அ.ரமணிதரன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் மத்திய விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி றொகான் விஜயகோன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.



யாழ்.அரச அதிபர் என்.வேதநாயகன், விவசாய திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி வசந்த சித்திரால், விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலைய பிரதி பணிப்பாளர் கலாநிதி திருமதி லக்மினி பிரியந்த, கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.சிவகுமார், வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய பிரதி மேலதிகப் பணிப்பாளர் அரசகேசரி, யாழ். மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம், மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி கலாநிதி எஸ்.கருணாநாதன், பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.சிவநேசன் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பணிப்பாளர்கள் பிரதேச மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மாடிக் கட்டடம் ஏற்கனவே ஜனாதிபதியால் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனாதிபதியின் வருகைக்காக இந்தக் கட்டடத்துக்கு செல்லும் பிரதான வீதியும் மீளவும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. எனினும் தற்போது இந்தக் கட்டடம் எதுவித ஆரவாரமும் இன்றி விவசாயப் பணிப்பாளரால் திறந்து வைக்கப்பட்டது.

விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையம் தனியான கட்டட வசதி இன்றி இதுவரை காலமும் திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய கட்டடத்தின் ஒரு பகுதியிலேயே செயற்பட்டு வந்தது. தற்போது புதிய கட்டடம் இதற்கென அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதனால் இந்தக் கட்டடத்திலேயே அதற்கான பணிகள் யாவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

(ற-ஐ-17)

## சங்கிலி கொள்ளையடித்தவருக்கு மூன்று வருடங்கள் கடூழியச் சிறை

### மல்லாகம் மேலதிக நீதிவான் தீர்ப்பு

சங்கிலியைக் கொள்ளையடித்து அதனைத் தன் உடமையில் வைத்திருந்த குற்றவாளிக்கு மல்லாகம் நீதிமன்று 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்தத் தண்டனைத் தீர்ப்புவிதிக்கப்பட்டது.

தெல்லிப்பழை யூனியன் சந்தியில் சில வருடங்களுக்கு முன்னர் வீதியில் சென்ற பெண்ணிடம் கொள்ளை இடம்பெற்றது. இரண்டு பேர் சேர்ந்து பெண் ஒருவரைத் தாக்கி பெறுமதி மிக்க சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

அது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான விசாரணையின் போது ஒருவர் தான் குற்றவாளி என்பதனை ஏற்றுக்கொண்டார். மற்றையவர் தான் சுற்றவாளி என்று நீதிமன்றில் தெரிவித்ததால் அவருக்கு எதிரான வழக்கை விசாரிக்க நீதிமன்று உத்தரவிட்டது. குற்றவாளி என்று குற்றத்தை ஒப்புக் கொண்டவருக்கு மட்டும் தண்டனைத் தீர்ப்பை அறிவித்தது.

அதன்படி கொள்ளையடித்த குற்றத்துக்காக 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் கொள்ளையடித்த சங்கிலியைத் தன் வசம் வைத்திருந்த குற்றத்துக்காக ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையுமாக 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மல்லாகம் மேலதிக நீதிவான் சி.சதீஸ்தரன் இந்தத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதுதவிர, கந்தரோடையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குற்றவாளிகள் 3 பேரும் அத்துமீறி வீடு புகுந்து தந்தையாருக்கு வாளால் வெட்டியதோடு மகனுக்கு அடித்துக் காயப்படுத்தியுள்ளனர்.

அவர்களுக்கு அத்துமீறி வீடு புகுந்தமைக்காக 3 பேருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஒவ்வொருவருக்கும் 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அடித்துக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஒவ்வொருவருக்கும் 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொருவரும் இரண்டரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க உத்தரவிடப்பட்டது. அத்துடன் காயப்பட்டவர்களுக்கு நட்டஈடாக ஒவ்வொருவரும் ஒரு லட்சம் ரூபா வீதம் 3 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்று தீர்ப்பளித்தது. (ற-4)

# எயிட்ஸ் வதந்தியால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு பாடசாலை அனுமதி

## விரைவில் வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதி

கொழும்பு, மார்ச் 6

எயிட்ஸ்நோய்ப்பாதிப்புக்குள்ளாகியுள்ளார் என்ற வதந்தியால் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சிறுவனின் தாயாருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். பாடசாலை ஒன்றில் அனுமதி பெற்றுத் தரப்படும் என்று அவர் இதன் போது உறுதியளித்துள்ளார் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைச்சிறுவன்ஒருவனுக்கு எயிட்ஸ்நோய் இருப்பதாக வதந்தி பரவியமையால், பாடசாலை அனுமதி கிடைக்காமல் குறித்த சிறுவன் பாதிப்பை எதிர்கொண்டிருந்தார். இதன் பின்னர் பாடசாலை ஒன்றில் கடும் அழுத்தம் காரணமாகச் சேர்க்கப்பட்டார். ஆனால், அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் ஏனைய மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டோம் என்று தெரிவித்ததால், இறுதியில் குறித்த பாடசாலையிலிருந்தும் சிறுவன் இடைநிறுத்தப்பட்டார்.

தற்போது எந்தவொரு பாடசாலையும் அனுமதிக்காத நிலையில், சிறுவனும், அவனது தாயாரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அந்த சிறுவனையும், தாயாரையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் போது அங்கிருந்து பிரதியமைச்சர் ரஞ்சன் அலைபேசி ஊடாக ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறுவனின் தாயாருடன் தொலைபேசியூடாகப் பேசியுள்ளார். இதன்போது பாடசாலை ஒன்றில் அனுமதி பெற்றுத் தருமாறு தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால, இனிமேல் அந்தக் குடும்பத்தினருக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாது என்றும், பாடசாலை அனுமதி பெற்றுத்தரப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# புதிய யோகா பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகாப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த யோகாப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் நா. நவராஜ் ஆளுமை மேம்பாட்டுக்கான யோகா வழிமுறைகள் என்னும் தொனிப்பொருளில் விசேட விரிவுரையை வழங்கவுள்ளார்.

யோகாப் பயிற்சிநெறியானது காலை 6 மணியிலிருந்து 7 மணிவரையும், மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரையும், மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரையும் என மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

பெண்களுக்கு பெண் ஆசிரியரால் பயிற்சி வழங்கப்படுவதோடு, நீரிழிவு நோயாளர்களுக்கு இந்தப் பயிற்சியில் விசேட கவனமும் எடுக்கப்படும்.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் கையேடுகளும் வழங்கப்படும். இந்தப் பயிற்சி நெறியில் இணைய விரும்புவர்கள் அறிமுக விழாவில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

# மகளின் படிப்புக்காகவே நகைகளைத் திருடினேன்

## சந்தேக நபர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

மகளின் படிப்புச் செலவுக்காகவே நகைகளைத் திருடியதாக, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

கல்கிஸ, நுகேகொட, தெஹிவளை, தெமட்டகொட போன்ற பிரதேசங்களில் திருட்டு நடவடிக்கைகளில் குறித்த சந்தேக நபர் ஈடுபட்டு வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த நபரிடமிருந்து 25 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தங்க நகைகளைத் திருடிய சந்தேகநபர், அதனைப் புறக்கோட்டையில் விற்பனை செய்தபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது, தனது ஒரே மகளின் கல்விச் செலவுக்காகவே இந்த திருட்டுத் தொழிலில் ஈடுபட்டார் என்று அந்த நபர் தெரிவித்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-5)

# சிவராத்திரி பூசை

சிவராத்திரிதினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை வியாபாரி மூலை பத்திர காளி சமேத ஆதி சிவவீரபத்திரர் ஆலயத்தில்நான்குசாமங்களும் விசேட அபிசேகமும் பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

பிரம்மஸ்ரீ வாசுதேவக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் 2 ஆம் காலப் பூசையில்லிங்கோற்பவருக்கு ஸ்நான அபிசேகம் இடம்பெற்று அம்பாள் உள்வீதி வலம் வருவார்என்றும்தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-108)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 470
சீட்டிழுப்பு திகதி 2016.03.05
வெற்றி இலக்கங்கள்
05 12 16 19 S
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 45,950,460/=
Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2747 திகதி: 2016-03-05
48 58 61 67 K 03
ரூ. 15,915,600/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள்
2016.03.07 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை அன்னம்மா



தோற்றம் 23.04.1937 — மறைவு 04.03.2016

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அன்னம்மா (04.03.2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான இராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- ஆச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருகளும் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் பூமணி, இரத்தினம், நல்லம்மா, காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராஜ சிங்கம் (வவா), சற்குண சிங்கம் (வேவி), காலஞ்சென்ற ரவீந்திர ராணி (ராணி) மற்றும் சிறிராஜசிங்கம் (சிறி), ஜெயராஜசிங்கம்(ஜெயா), காலஞ்சென்ற நிர்மலாராணி மற்றும் ஜெகதாசன்(தாசன்), சுதாராணி (சுதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேமாவதி, தவஈஸ்வரி காலஞ்சென்ற நடராஜா மற்றும் கலையரசி, கிருஸ்ணவேணி, சாந்தினி, தவயோகநாதன் ஆகியோரின் மாமியும் சிவந்தா- பிரதீபன், அஜந்தா- சூரியகுமார், சிவயந்தன், சுயந்தா, தெகிதா, நிஷான், நிருஷன், துஷியந்தி- சசிக்குமார், துஷிகா- கையிலைநாதன், துஷிகாந்தி, துஷிகாந்தன்- கௌசி, துஷியந்தன், சதீஸ், ஆதி, விதுஸ், ஆதவன், யவாகர், ஆராதனி, கிஷாந், கிருசிகன், கீர்த்திகா, தனுசிஜா,மதூசன், கார்த்தியா ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும் பிரிற்றி, பிரவீன், ரிவ்வியா, சபீனா, திஷாலன், திஷாலினி, சரீனா ஆகியோரின் செல்லப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
கந்தரோடை.

தகவல்
குடும்பத்தினர்.

(69860)(12.18.20)

வவா- 077 638 1807
வேவி- 077 804 8414 , 021 224 0865

புங்குடுதீவு பிட்டியம்பதி அருள்மிகு
ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

கலந்துரையாடல்

காளிகா அம்பாளின் ஆலய பாலஸ்தாபனம் தொடர்பாக விசேட கலந்துரையாடல் எதிர்வரும் சிவன்ராத்திரி தினத்தன்று 07.03.2016 திங்கள் முற்பகல் 11.45 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளதால் அம்பாளின் அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(c 29743)
(12.18.20)

பரிபாலன சபை
புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா
பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

Vacancy

Agoysoft (pvt) Ltd. is founded in 2012, developing software, online concept and mobile applications for local and foreign clients.

The following vacancies are exists at our Jaffna branch located in kokuvil.

1. Soft ware Developers 2. IT Executives
3. Designer 4. Management Assistant

18-30 வயதுக்குட்பட்டவர்கள் தமது சுயவிவரக் கோவையை அண்மையில் எடுத்த புகைப்படப் பிரதியுடன் இணைத்து நேரிலோ / தபாலிலோ 11.03.2016 இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

Agoysoft (pvt)Ltd
20,K.K.S.Road, Kokuvil 021 205 2393
info@agoysoft.com

3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை
பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே

SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
தர்ஷன் 077 7 009 666
சுஜந்தன் 077 7 391 449
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்



# மகா சிவராத்திரி மாசி அமாவாசை

# தின சிறப்பு ஏற்பாடுகள்

மகா சிவராத்திரி, மாசி அமாவாசை திருநாள்களை முன்னிட்டு சுஜீவா வைத்தியசாலை (சுஜீவா தாய்மைப்பேறு சிறப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலை) நாச்சிமார் கோயில் யாழ்ப்பாணம், சுஜீவா விற்பனை நிலையம், கேணி வீதி கீரிமலை என்பன இணைந்து பின்வரும் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

**01. சிவனடியார்களுக்காக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சைவசமயக்கிரியைக்கான கங்கா தீர்த்தம் இலவசமாக வழங்குதல்**

- சுஜீவா வைத்தியசாலை 07.03.2016 காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
- சுஜீவா விற்பனை நிலையம் 07.03.2016 காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை

**02. கீரிமலைக் கேணி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் (108 பாணலிங்க கோயில்) ஆலயத்தில் பூஜை வழிபாடுகள்**

- கருங்கல் லிங்கத்தை விட 32 இலட்சம் மடங்கு சக்தி கூடிய பாணலிங்கமானது 108 எண்ணிக்கையில் சுமார் 3000 வருடங்களிற்கு முன்னர் இந்தியாவிலிருந்து ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இவை இராதாகிருஷ்ண சுவாமிகளால் ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு சீலைச்சுவடியில் எழுதப்பட்டபடி மாவைக்கந்தன் ஆலயத்துக்கு சம்பந்தமான ஏற்கனவே சிறிய சிவன் கோயில் இருந்த கீரிமலை தீர்த்தக் கேணிக்கு அருகிலுள்ள இடத்தில் பிரமிட் வடிவில் ஆலயம் எழுப்பப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வருடம் சிவராத்திரி தினம் காலை முதல் மறுநாள் மாசி அமாவாசை மாலை வரை வழமையான பூஜைகளுடன் விசேடபூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- **108 பாணலிங்கங்களுக்கான லிங்காபிஷேகம்**
  **(07.03.2016 காலை 8.00 மணிமுதல் 08.03.2016 மாலை 6.00 மணிவரை)**
  இங்கு வரும் அனைத்து சிவனடியார்களும் இலட்சம் மடங்கு அபிடேகம் செய்த பலனை தரவல்ல வலம்புரிச் சங்குகளால் கங்காதீர்த்த அபிஷேகம் செய்யலாம். இதே போல சிவராத்திரி முதல் காலம் பாலும், இரண்டாம் காலத்தில் தயிரும் மூன்றாம் காலத்தில் (லிங்கோற்பவ) நெய்யும், வெந்நீரும் அபிஷேகம் செய்யலாம்.
- **ருத்ர யாகம் ருத்ரபாராயணம் ஸ்ரீருத்ர மந்திர ஜபம்**
  **(07.03.2016 முற்பகல் 11.00 மணிமுதல் மதியம் 2.30 மணிவரை)**
  சிவதொண்டர் சுவாமி மனோஜன், அநகாய சர்மா, செல்வலிங்க ஐயர், பாபா சுவாமிகள், நரசிங்க சித்தர், சிவரூப சிவத்தொண்டர்கள் பாலகிருஷ்ண பிரசாந்தன், தங்கராஜசிங்கம் போன்றோரின் வழிகாட்டல்களில் இங்கு வரும் அனைத்து சிவனடியார்களும் பங்கு கொள்ளலாம்.

**சிவசின்னங்களான சுத்த திருநீறு மற்றும் இலட்சம் மடங்கு பலனைப் பெற உதவும் உருத்திராட்சைகள் என்பன தரித்து சிவனருள் பெற்றுக் கொள்வீராகுக.**

## சுஜீவா வைத்தியசாலை

**(சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)**

குழந்தையின்மை உட்பட்ட மாற்றமுடியாது என கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பிரசித்தி பெற்றது.

வேதங்களிலொன்றான அதர்வவேதத்தின் உபபிரிவான ஆயுள்வேத சித்த வைத்தியம் தூயநிலையில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது.

**நாச்சிமார் கோயிலடி,**
K.K.S **வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சுஜீவா விற்பனை நிலையம்

**(ஆலயப் பொருள்கள் விற்பனை நிலையம்)**

பசுச்சாணத்தால் செய்யப்பட்டு திருநீற்றுப்பச்சிலை சேர்க்கப்பட்ட தூயதிருநீறு 2முகம் முதல் 21முகம் வரையான ருத்ராட்சைகள் யந்திரங்கள், லிங்கங்கள், பூஜைசெய்யப்பட்ட வாஸ்துதோஷம், நவக்கிரகதோஷம் நீங்கும் பொருள்கள், நோய் தீர்க்கும் - செல்வம் தரும் தாயத்துக்கள், படிகம் மாலைகள், ஸ்ரீசக்கரம், சாளக்கிரமம், வெள்ளெருக்குப் பிள்ளையார், கூர்மயந்திரம் எனப் பல சமய பொருள்கள் வாங்கலாம்.

---

முல்லைத்தீவு-கரைதுறைப்பற்று

கோட்டக் கல்விப் பணிப்பாளர்

# கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன் (G.S.P)

அவர்களின்



Best Wishes

# மணிவிழா 06.03.2016

### வாழ்த்துச் செய்தி



மணிவிழா காணும் G.S. பரமேஸ்வரன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் கரைத்துறைப் பற்று) அவர்களை நெடு நாள்களாக அறிவேன். 60 ஆவது வயதடைந்து சேவையை நிறைவு செய்யும் பரமேஸ்வரனை இவ்வேளை பாராட்டுவதில் நானும் மகிழ்ச்சியடைகின்றேன். விடாமுயற்சி, திட்டமிடல், இரவுபகலான சேவை, மாணவர் சேவையை மகேசன் சேவையாக கொள்ளும் பாங்கு, இறுக்கமான நிர்வாகத்திறன் என்று அன்னாரின் சேவைகள் மீட்கவேண்டியவையாகும். ஒவ்வொரு திறன்களையும் பகுப்பாய்வு செய்து சரி பிழை அறிந்து சரிக்காக உழைத்த அந்த கல்விமான் வாழ்வாங்கு வாழவேண்டும். அவர் உடல் உள ஆரோக்கியம் எதிர்காலத்திலும் நலமாக அமைய வேண்டும். பிறர் பிள்ளைகள் தலை தடவியதால் அவர் பிள்ளைகள் கல்வியில் அகிலத்தை தொட வேண்டும் என்று நானும் வாழ்த்துகின்றேன். மற்றும் ஆசிரியராய், அதிபராய், கோட்டக் கல்வி பணிப்பாளராய் அவர் எம் மாவட்டத்தில் ஆற்றிய சேவைகள் என்றும் மறையாதென்றும், அவ் அத்திவாரங்கள் எங்கள் மாவட்டத்தில் அடியுரமாக இருக்கும் என்பதாலும் அவரை மாவட்டம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**C.A மோகன் றாஸ்**
மேலதிக அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்- முல்லைத்தீவு.

### மனவளமும் பொருளாதார வளமும் கொண்ட பரமேஸ்

எனது நண்பரும், என் வதிவிட அயலவரும் ஆன உயர்திரு ஜீ.எஸ். பரமேஸ்வரன் அவர்களது மணிவிழாநாளில் வாழ்த்து செய்தி வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய வேளை, யாழ். இடப்பெயர்வு காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேச பாடசாலைகளில் மாணவர்கள் தொகை திடீரென அதிகரித்தது. அவ்வேளையில் மல்லாவியிலிருந்து உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபராக கடமையேற்றிருந்தார். பல்வேறு சுமைகளையும், நெருக்கடிகளையும் மிக இலாவகமாக கையாண்டு தனது பணியை வெற்றிகரமாக ஆற்றியதை நான் அறிவேன். மனவளமும், பொருளாதார வளமும் மிகப்பெற்றவரான அவர் திணைக்களம் வாய்ப்பு வசதிகளை வழங்கும் வரை காத்திராது களம் இறங்கி பணியாற்றியவர்.

கல்விச் செயற்பாடுகள் தொய்ந்து விடாதிருக்க தனது பாடசாலை தாழ்ந்துவிடாது இருக்க, அவர் ஓடி ஓடி ஓய்வில்லாது பணியாற்றியமை இன்றும் பசுமையாக என் நினைவில் உள்ளது.

இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சமூகத்துக்கு பணியாற்ற இறை ஆசிவேண்டி நிறைவு செய்கின்றேன்.

**செ.தயானந்தா**
ஓய்வுநிலை பிரதேச செயலாளர்

### நிறை மனிதர்



மணிவிழா காணும் G.S. பரமேஸ்வரன் (கரைதுறைப் பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்) ஒரு நிறை மனிதராவார். உடற் பலத்தை விட உளப் பலம் நூறுவீதம் உடைய கல்விமானவர். நோயுற்ற வேளையிலும் அதை மதியாது கோட்டம், மாணவர்கள், பெறுபேறு என்று அனுதினமும் உழைத்த அம் மனிதனின் இறந்தகாலம் மீட்கப்பட வேண்டிய காலமாகும். நிகழ்கால எதிர்கால சவால்களை உடைத்து நிர்வாகம் செய்யும் நிர்வாகிகள் அவரது நல்ல நிர்வாகப் பண்புகளை பின்பற்ற வேண்டும். யாவரும் வெற்றியில் நின்று தான் சாதனை செய்ய துடிப்பார்கள். ஆனால் G.S. பரமேஸ்வரன் தோல்வியில் நின்று தான் சாதனை பதித்தமை வரலாற்றுத் தடங்களாகும். நான் படித்த கோட்டம், நான் படித்த பாடசாலைகளில் அதிபராக, ஆசிரியராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக சேவை செய்த G.S. பரமேஸ்வரன் எனது தந்தையும் அதிபருமான மு.சிவப்பிரகாசம் அவர்களுடன் இணைந்து நிறை சேவை வழங்கியமையையும் அறிவேன். அவ்வாறான சேவை நலங்கொண்ட G.S.பரமேஸ்வரனின் சேவை மணிவிழாவுடன் ஓய்ந்தாலும் அவரது கற்பித்தல் நிர்வாக எச்சங்கள் எம் சமூகத்துடன் வாழும் என்று வாழ்த்துகின்றேன்.

**Dr. சி.சிவமோகன்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்.

### பரமேசின் சேவை பரம திருப்தி



தர்மபுரம் இல2 அ.த.க.பாடசாலையில் சமூகக்கல்வி பாட ஓர் உதவி ஆசிரியராக துடிப்புள்ள இருபது வயது இளைஞனாக வந்து சேர்ந்தார் பரமேஸ்வரன். அவரது இளமை வாழ்வு, கடின உழைப்பாளியாகவும் பிரயாசை மிக்க ஒருவராகவும் திகழவைத்தது.

வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தின் அதிபராக இவர் சேவையாற்றிய காலம் அப்பள்ளி புதுப்பொலிவுடன் உயரப் பறந்தது. அதனைத் தொடர்ந்து விசுவமடு பாடசாலையை ஊரார் உற்றார் உறவினர்கள் ஆகியோருடன் ஆயிரக் கணக்கான பிள்ளைகளை சரியான பாதையில் வழி நடத்தினார். பின்னர் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் அதிபர் பதவியை ஏற்று அப்பாடசாலையைச் சிறக்க வைத்தார். இம்மூன்று பாடசாலைகளும் முல்லைத்தீவின் வடபகுதியை அலங்கரிக்கும் பள்ளிகளாகும். மீண்டெழும் தனது முத்திரையை பதித்த வரலாறு இனி அவருக்கு கிடைக்குமோ தெரியாது.

மூன்று கல்லூரிகளிலும் இவர் செய்த பணிகளுக்கு இவரது மாணாக்கரே சாட்சியமாகும். புதுக்குடியிருப்பில் இவருடைய சேவை எவ்வாறு இருந்ததென அப்பகுதி புத்திஜீவிகள் இப்போதும் நன்றியுடன் நினைவு கூரு வார்கள். ஆனால் சேவையைவிட்டு இளைப்பாறப் போகும் நேரத்தில் புதுக்குடியிருப்புக் கோட்டத்தைவிட்டு கரைதுறைப்பற்றுக் கோட்டத்திற்கு இடம்மாற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்.

சேவை தன்னிலே தற்போது இளைப்பாறுபவர்கள் செய் யும் எந்த ஒரு எடுப்பும் இல்லாமல் எதையும் எதிர்பார்க் காமல் இளைப்பாற்றுக் காலத்திற்கு முன்னதாகவே எந்த வொரு சலனமும் இல்லாமல் வீடு சென்றவர். பரமேசின் சேவை பரம திருப்தியை அளித்தது. இவரது வாழ்வும், இளைப்பாற்றுக் காலமும் தனது குடும்பத்தாருடன் மகிழ்வாக இருக்க வாழ்த்துகிறேன்.

**த.குருகுலராசா,**
மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.

# தன்னைப் பெயர் சொல்லி அழைத்த மாணவியை பாராட்டிய முதலமைச்சர்

## பெருந்தன்மை கண்டு இந்தியாவே வியக்கின்றது

கேரளா, மார்ச் 6

முதலமைச்சரைப் பெயர் சொல்லி அழைத்து, தனது தோழனுக்கு வீடு கட்ட உதவி செய்யும் படி இரண்டாம் வகுப்பு மாணவி ஒருவர் கேட்ட சம்பவம், கேரளாவில் பெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

அந்த மாணவி கேட்டுக் கொண்ட உதவியைச் செய்தது மட்டுமல்லாமல் தன்னைப் பெயர் சொல்லி அழைத்தமைக்காக அந்த மாணவியை முதலமைச்சர் உம்மன் சாண்டி பாராட்டியுள்ளார்.

கேரள மாநிலத்தில் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலையில், ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அந்த மாநிலத்தின் முதல்வர் உம்மன் சாண்டி கலந்து கொண்டார்.

நிகழ்வில் அவர் மேடையை நோக்கி நடக்கும் போது, திடீரென "உம்மன் சாண்டி" என்று முதலமைச்சரின் பெயர் சொல்லி அழைக்கப்பட்டது. மேடையைச் சூழவிருந்த மாணவிகள் பக்கத்திலிருந்து அந்தக் குரல் வந்ததை இனங்கண்டு கொண்டார் முதலமைச்சர். அங்கே யார் அழைத்தது என்று தேடிய போது, இரண்டாம் வகுப்பு மாணவி ஒருவர் கையை உயர்த்தி அழைத்தது தானே என்று தெரிவித்துள்ளார்.

அந்த மாணவியை முதலமைச்சர் உம்மன் சாண்டி தனது பக்கத்தில் அழைத்தார். ஏன் தன்னை அழைத்தாய் என்று முதலமைச்சர் கேட்க, தான் ஷிவானி என்றும், தன்னுடன் படிக்கும் அமல் கிருஷ்ணன் என்ற மாணவனின் பெற்றோர் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு வீடு இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்குமாறும் முதலமைச்சரிடம் கேட்டுள்ளார்.

இதனைக் கேட்ட முதலமைச்சர் உம்மன் சாண்டி, பாடசாலை அதிபரை அழைத்து, மாணவி கூறுவது உண்மையா? என்று கேட்டுள்ளார். அதற்கு அதிபர், பாடசாலை மாணவி கூறுவது உண்மை என்று கூறினார். இதன்போது முதலமைச்சர், உடனடியாக அது தொடர்பில் கோரிக்கை மனுவை எழுதித் தருமாறு கேட்க, அதில் கையெழுத்திட்டு வீடு கட்ட 3 லட்சம் (இந்திய மதிப்பில்) ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

இதன் பின்னர் நிகழ்வில் பேசும் போது, தன்னைப் பெயர் சொல்லி அழைத்தமைக்காக குறித்த மாணவியைப் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-ஜ-5)

### திருக்கேதீஸ்வர ஆலய சிவராத்திரி நிகழ்வு

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வழமை போன்று மகா சிவராத்திரி தின விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது என்று ஆலய திருப்பணி சபை தெரிவித்துள்ளது. இந்த விழாவில் திருமுழுக்கு பூசை, அர்ச்சனை, நான்கு சாமப் பூசைகளும் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. அடியார்கள் பாலாவித் தீர்த்தத்தில் திருமுழுக்கு செய்வதற்குரியஒழுங்குகளும்செய்யப்பட்டுள்ளன. நள்ளிரவு 12.15 மணிக்கு இலிங்கோற்பவ பூசை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஜ-ரி)

### சிவராத்திரியை முன்னிட்டு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 6

மன்னார் திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம் கோயில்களில் நாளை திங்கட்கிழமை நடைபெறும் சிவராத்திரிப் பூசை வழிபாட்டை முன்னிட்டு யாழ். மத்திய பஸ்நிலையத்தால் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள் என என்று யாழ். சாலைப் பொது முகாமையாளர் செ. குலபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

மன்னார் திருக் கேதீஸ்வரம் செல்லும் அடியவர்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆசன முற்பதிவை செய்து தமது பயணத்தை இலகுவாக மேற் கொள்ள முடியும். அத்துடன் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் குழுவாக ஒன்று சேர்ந்து இ.போ.ச. சாலைகளில் கோரிக்கைவிடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்துக்குச் சென்று ஏற்றி, ஆலயம்சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப் படுவார்கள். மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கு 0212222207, 0771058150 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-ஜ-ரி)

### பொலிஸ் என்று கூறி கப்பம் பெற்றவர் சிக்கினார்

சாவகச்சேரி, மார்ச் 6

தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் தான் பொலிஸ் எனக் கூறி 5 ஆயிரம் ரூபாவை கப்பமாகப் பெற்ற கெற்பேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அன்று அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-ஜ-9)

அறை வாடகைக்கு
யாழ்.நகரில் மாணவர்கள்/ வேலை பார்ப்போருக்கு சகல வசதிகளுடன் அறைகள் வாடகைக்குண்டு.
021 221 7925

காசாளர் தேவை
பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு காசாளர் தேவை.
30 வயதுக்குட்பட்ட ஆண் விரும்பத்தக்கது.
077 161 5694

விற்பனைக்கு
முத்து மணவறை,
பூ மணவறை விற்பனைக்கு உண்டு.
மேலதிக விவரங்களுக்கு
தொடர்பு : 077 978 9467

வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், தட்டாதெரு சந்திக்கு அருகில் நல்ல வீடு விற்பனைக்கு.
விலை : 90லட்சம்
தொடர்பு : 077 905 0274

வீடு விற்பனைக்கு
நல்லூர் வட்டாரத்தில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு அரச அலுவலகங்களுக்கு அண்மையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 839 2301

வீட்டுடன் காணி விற்பனைக்கு
நல்லூர் மூத்த விநாயகர் வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
077 853 1954

நோயாளர் பராமரிப்பு
எமது நிறுவனத்தால் வைத்திய சாலையிலும், வீடுகளிலும், நோயாளர்களுக்கு அனுபவம் மிக்க பராமரிப்பாளர்களால் சேவை வழங்கப்படும்.
021 221 6373, 077 264 9881

சாரதி தேவை
அரிசி ஆலைக்கு வடிவான் செலுத்தக் கூடிய சாரதி உடன் தேவை.
077 722 2178, 077 314 8249

காணவில்லை
மன்னாரில் வசிக்கும் திரு. அருளானந்தம் யேசுராஜன் (வயது-28) என்பவரை கடந்த ஒரு மாதகாலமாகக் காணவில்லை.தகவல் அறிந்தவர்கள்
077 436 5052, 077 741 0768
என்ற இலக்கங்களுக்கு அழைத்துக் கூறுங்கள்.
தகவல்:அம்மா
(69627)(16.20)



உடனடி வேலைவாய்ப்பு
யாழில் புதிதாக திறந்துள்ள தனது 2 ஆவது கிளைக்கான Goldern Group Advertisment Company இற்கு 04 வகையான பதவி வெற்றிடங்கள்.
1. Filed Officer 2. Supervisor 3. Assistant Manager
4. Addministration (Female)
தகைமைகள்
O/L, A/L (O/L சித்தியடையாதவர்களுக்கு விசேட பயிற்சி அளித்து உள்வாங்கப்படுவர்.)
வயதெல்லை -18-40
குறிப்பு:
அடிப்படைச் சம்பளம் 20,000/=
தங்குமிடம், உணவு இலவசம் (தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு)
077 998 7699, 021 300 4664
No 38, பற்றிக்ஸ் வீதி ( சென் சாள்ஸ் அருகில்), யாழ்ப்பாணம்.

கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி
(2 Weeks Result)
ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
Herbal Whitening Cream
Cream விலை 2500/-, 5500/-
+முகப்பரு +கண் கருவளையம் +முகச் சுருக்கம் +உதடு கருப்பு +முதுகு கழுத்து கருப்பு
+கை கருப்பு மற்றும் முகம் தாடைகளில் உள்ள தேவையற்ற உரோமங்களை அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. (வெளி மாவட்டங்களுக்கு நேரடியாக விநியோசிக்கப்படும்.)
ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு
எங்களிடம் Day, Night, Body Cream, Face Pack, Body Pack உண்டு
இங்கு Facial செய்யப்படும் 1 Settingயில் அற்புதமான வித்தியாசம்
(Rasult இல்லையேல் Money Back)
மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை, டொனிக், பால்மா, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு. (69668)(15,17,20)
T.P : 077 210 6155

TSD PRODUCTS
10 Pcs
100% Vegan
ஆட்டா மா { சப்பாத்தி / பூரி } கொழுப்பு சத்து / இனிப்பு சத்து } குறைந்த அளவு
பரோட்டா ரொட்டி
சில நொடிகளில் மிக மலிவான விலையில் இலகுவாக உடன் சமைத்து உண்ணக்கூடியதும் உடல் நலத்துக்கும் உகந்ததுமான உணவு (Healthy Food) விசேடமாக நீரழிவு, இருதய நோயாளர்களுக்கும் மிகவும் உகந்த உணவாகும்.
கிடைக்கும் இடங்கள்:-
Annai Nagaa Food City ,Jaffna. 175 KKS Road Jaffna 0217390193
Annai Nagaa food city, Nallur. 343, Point Pedro Road Jaffna 0214927082
TCT (தியாகி அறக்கொடை நிலையம்) 527 Navalar Road யாழ்ப்பாணம் 0217451895, 0777511285
Jeevan Phamacy ஜீவன் பார்மசி சுன்னாகம் 52,New Supramaniam Road, Bus stand, Chunnakam
நீலாம்பரி உணவகம் 742 KKS வீதி யாழ்ப்பாணம் 0215100245
Janusha Express 397 பிரதான வீதி (பஸ்டியன் சந்தி) யாழ்ப்பாணம 02122217547
Family Super Spot 142B யாழ் வீதி மானிப்பாய் 02112256131
Rathy stores 174 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம் 0212226784
Ruba Cash and Carry (Ruba commercial Bulding) பலாலி வீதி உரும்பிராய். 02122431055
யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்
J.Jeeva (ஜீவ மிக்சர்) 6 பிளர்ச்சஸ் ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
T.P: 0212229876, 0777459867



வெளிவந்துவிட்டது...
ADVANCED LEVEL
அஸ்ரன் பதிப்பகத்தின் புதிய வெளியீடு
2000+ MCQs
➤ உயிரியல்
➤ பௌதிகவியல்
➤ இரசாயனவியல்
1980 தொடக்கம் இன்றுவரை நடைபெற்ற 2000 இற்கும் மேற்பட்ட பல்தேர்வு வினாக்கள் புதிய பாடத்திட்டத்தின் பாட அலகுகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன.
கடந்த கால பரீட்சை வினாக்களும் விடைகளும்
TAMIL & ENGLISH MEDIUM
• கணக்கீடு • இந்துநாகரீகம் • இஸ்லாம் • புவியியல்
• ICT • GENERAL ENGLISH • COMMON GENERAL TEST
• தமிழ் • வணிகக்கல்வி • பொருளியல் • உயிரியல்
• இரசாயனவியல் • இணைந்த கணிதம் • அரசியல்
• பௌதிகவியல் • அளவையியலும் விஞ்ஞான முறையும்
பிரதான புத்தகசாலைகளில் கிடைக்கப்பெறும்.
ASTAN PUBLICATIONS
PIONEERS IN PUBLISHING PAST PUBLIC EXAM QUESTIONS, MODEL QUESTIONS & ANSWERS
92, MANNING PLACE, WELLAWATA. TEL: 2362590

## சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் உடன் விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 6
தலைநகரில் பெரும் பதற்றத்தையும், அச்சத்தையும் தோற்றுவித்துள்ள தொடர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், இதனைக் கட்டுப்படுத்தத் தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேல் மாகாணத்தின் சகல பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும், பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான நபர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு நாள்களில் கொழும்பில் மாத்திரம் 4 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர். இதன் காரணமாக கொழும்பில் அச்சமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தொருநிலையிலேயே பொலிஸ்மா அதிபர் மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

பாதாள உலகக்கோஷ்டிகளை அடக்குவது மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் என்பன மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசேட அதிரடிப் படையினதும், பொலிஸாரினதும் கூட்டு முயற்சியாக பாதாள உலகக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. முதலில் மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பின்னர் பாதாள உலகக் குழுச்செயற்பாடுகள் காணப்படும் ஏனைய மாகாணங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (ந-ஐ-5)


### துயர் பகிர்கின்றோம்



திருமதி
**நாகரட்ணம் கதிரித்தம்பி**
(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பித்த போது ஆசிரியராக இருந்த நமசிவாயம் செல்லப்பா (செல்லப்பா மாஸ்ரர்) அவர்களின் மூத்த மகளும், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத் துக்கு செல்லப்பா மாஸ்ரர் ஞாபகார்த்தமாக நிதி வழங்கிய அவரின் பேரன் திரு. க.ஞானச்சந்திரன் மற்றும் அவரது பேரப்பிள்ளைகளின் பேர்த்தியு மான திருமதி நாகரட்ணம் கதிரித்தம்பி அவர்கள் 105 ஆவது அகவையில் இறைபதம் எய்திய செய்தி கல்லூரி சமூகத்துக்குக் கிடைத்தது. அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் நிதியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்கள் துயரத்தை நாமும் பகிர்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரி குல தெய்வமான கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் (89850)5.17.16.20

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிரித்தம்பி சேகர்**
மலர்வு
1954.01.12
உதிர்வு
2015.02.17
திதி: துவாதசி (06.03.2016)

எம் குடும்பத் தலைவராய்
எம் மீது பாசமழை பொழிந்து
எம்மோடு ஒன்றாய் வாழ்ந்து
எமை உயர வைத்தீர்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
என்றென்றும் உம் நினைவு எம் மனதில் நிறைந்திருக்கும்
எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
குடும்பத்தினர்.

ஓம் விநாயகா் பிரம்மனே நமஹ
### 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**தருமலிங்கம் குணமணி**



தோற்றம்:
15.03.1921

மறைவு
19.02.2016

கடந்த 19.02.2016 ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வில்லி,
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
(89836)5.16.20
குடும்பத்தினர்.


## எழுவரின் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளில் பின்னடைவு

கொழும்பு, மார்ச் 6
தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவிக்கும் ஏழு பேரையும் விடுவிக்கும் தமிழக அரசின் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ஜெயகுமார், ராபர்ட் பயஸ் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கான அனுமதி கேட்டு, இந்திய மத்திய அரசுக்குத் தமிழக அரசு அண்மையில் கடிதம் எழுதியது.

இந்தக் கடிதத்தை மத்திய அரசு பரிசீலனை மேற்கொள்வதாகத் தெரிவித்தது.

இந்த விவகாரத்தில் மாநில அரசின் நடவடிக்கைக்கு மத்திய அரசு அனுமதி அளித்தால், அது ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் ஒரு தரப்பினருக்குச் சாதகமாகும் என்ற கருத்து நிலவுவது குறித்து இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் நசீம் சைதியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், இந்த விவகாரத்தில் இதுவரை இந்திய மத்திய அரசு எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று அறிகிறோம். ஒருவேளை மத்திய அரசு எடுக்கும் முடிவு தொடர்பாக ஆணையத்திடம் எவரேனும் முறைப்பாடு தெரிவித்தால், அதனைத் தேர்தல் நடத்தை விதிகளின்படி ஆணையம் அணுகும் என்று பதிலளித்திருந்தார்.

இந்த விவகாரத்தில் மத்திய அரசு எந்த முடிவை எடுத்தாலும் அதற்கு தலைமைத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியம் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-ஐ-5)

## மகா சிவராத்திரி வழிபாடு

காரைநகர், மார்ச் 6
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மகா சிவராத்திரி வழிபாடு நாளை திங்கட்கிழமை அதிகாலை முதல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை தொடர்ச்சியாக இடம்பெற உள்ளது.

நாளை திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் ஓம் நமசிவாய சிவாய நம ஓம் எனும் திருவைந்தெழுத்து மந்திரம் ஓதப்பட உள்ளதுடன், நான்கு சாமங்களும் விசேட அபிசேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகளும் இடம்பெற்று மறுநாள் அதிகாலை சுந்தரேஸ்வரப்பெருமான் தீர்த்தமாடுவதற்காக துர்வாசசாகரம் என்னும் புண்ணிய சமுத்திரத்துக்கு எழுந்தருளுவார்.

சுவாமி தீர்த்தமாடியதைத் தொடர்ந்து பத்தர்கள் தீர்த்தமாடுவதற்கும் அடியார்கள் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்குமான ஒழுங்குகள் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்று யாழ்.நகரிலிருந்து ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகள் இடம்பெறவுள்ளதுடன், மாணிக்க வாசகர் மடாலயத்தில் பாறணையை நிறைவேற்றும் அடியார்களுக்காக திருவமுது வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-250)

# போர்க்குற்ற விசாரணைகளில் நம்பகத் தன்மையே வேண்டும்

### ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மையான விசாரணைகளின் மூலம், இலங்கை அரசு நம்பகத் தன்மையை வெளிப்படுத்துவதையே ஐ.நா. விரும்புகின்றது என்று ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் முறையான விசாரணைகளின் மூலம் நல்லிணக்கம் மற்றும் இருதரப்புப் பொறுப்புக்கூறலின் ஊடாக உண்மையான மறுசீரமைப்புக்குச் சிறந்த சந்தர்ப்பமாகத் தற்போதைய சூழல் அமைந்துள்ளது.



போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசு விசாரணைப் பொறிமுறையை முன்னெடுக்கவுள்ள நிலைப்பாடானது இலங்கை அரசின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-ஐ-5)


### 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**கார்த்திகேசு சோதிலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஊழியர்.
மின்சாரசபை)



தோற்றம் - மறைவு
16.08.1947 05.02.2016

கடந்த 05.02.2016 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கார்த்திகேசு சோதிலிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. எதிர்வரும் 12.03.2016 சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளவும்.

போத்தலை,
மாவிட்டபுரம்.
தொ.பே.021 205 9255
குடும்பத்தினர்.

# கடல் நீரை நன்னீராக மாற்றும் திட்டத்தை மருதங்கேணியில் செயற்படுத்த விடோம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீனவர் சங்கங்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

எமது 16 மீனவ சங்கங்களின் எதிர்பையும் மீறி மருதங் கேணியில் வைத்து கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை செயற்படுத்த முனைந்தால், அதனை நாம் இறந்த பின்னரே செய்ய முடியும் - இவ்வாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தால், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெரும் அமளி - துமளி ஏற்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மாத்திரமே பங்கெடுத்தார். ஏனையோர் கூட்டத்துக்கு வருகை தரவில்லை.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே குழப்பம் ஏற்பட்டது. கடற்தொழில் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு கூட்ட நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கப்படவில்லை என்று கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழில் சங்கங்கள் தெரிவித்தன.

கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தின் காரணமாகவே இது நிகழ்ச்சி நிரலில் வேண்டுமென்று தவிர்க்கப்பட்டுள்ளது என்று அவர்கள் குற்றம் சுமத்தினர். கடற்றொழில் சமூகத்தை அதிகம் கொண்ட பிரதேசத்தில் கடற் றொழில் சம்பந்தமான விடயத்தைத் தவிர்த்தது தவறானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் மாவை.சேனாதிராசா, அது தவறுதலாக இடம்பெற்றுள்ளது. ஆனால் கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவித்தார். அதற்கமைய கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அதில், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் ஆரம்பம் முதலே கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது கடுமையான எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

> இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால், வடமராட்சி கிழக்கு கடற் பிரதேசத்தில் உப்பின் செறிவு அதிகரிக்கும். அவ்வாறு அதிகரிப்பு ஏற்பட்டால், மீன்கள் இந்தப் பகுதிக்கு வராது. இதனால் எமது பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி அழிக்கப்படும். இறுதியில் உணவு இல்லாமல் நாங்கள் சாவடைய வேண்டிதான் வரும் என்று மீனவ சங்கங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால், வடமராட்சி கிழக்குக் கடற் பிரதேசத்தில் உப்பின் செறிவு அதிகரிக்கும். அவ்வாறு அதிகரிப்பு ஏற்பட்டால், மீன்கள் இந்தப் பகுதிக்கு வராது. இதனால் எமது பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி அழிக்கப்படும். இறுதியில் உணவு இல்லாமல் நாங்கள் சாவடைய வேண்டித்தான் வரும் என்று தெரிவித்தனர்.

இதே கருத்தையே பல கடற்றொழிலாளர் சங்கங்களும் வெளிப்படுத்தின. இதன்போது சபையில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டன. இந்தத் திட்டத்துக்கு மருதங் கேணி கடற்பிரதேசம் ஏன் தெரிவு செய்யப்பட்டது என்பதை விளக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பு உப்புச் செறிவு குறைந்தது. இதனால் தான் இந்தப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது என்ற விடயம் உள்ளிட்ட பல்வேறு விளக்கங்களைத் தெரிவித்தார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் எந்தத் திட்டமும் மேற்கொள்ளப்பட மாட்டாது. நல்ல தண்ணீர் தேவை. அதனை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம், எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பில் ஆராய்வோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை . சேனாதிராசா குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடமராட்சி கிழக்குக் கடற்றொழில் சமாச முன்னாள் தலைவர், கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்துக்குக் கையெழுத்திடவில்லை என்ற காரணத்துக்காகத்தான் மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட தன்னை, வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு தன்னிச்சையாக நீக்கியது. தற்போது தன்னைப் பதவி நீக்கியமைக்கான காரணத்தைத் தேடுகின்றது. இது வெட்கக்கேடான விடயம் என்று தெரிவித்தார்.

"கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் பதில் வழங்குவதற்கு இரண்டு வார கால அவகாசம் தேவை. மத்திய அரசுடன் பேசி, இந்தத் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக கூட்டம் ஏற்பாடு செய்யப்படும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ற-ஐ-5-109)

### விபத்தில் உயிரிழந்தவரை அடையாளம் காட்டக் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்.ஸ்ரான்லி வீதியில் டிப்பர் – சைக்கிள் விபத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை அடையாளம் காட்டுமாறு யாழ்.பொலிஸார் பொதுமக்களைக்கோரியுள்ளனர். இவர் காயமடைந்த நிலையில் தனது பெயர் வல்லிபுரம் என்றும் 68 வயது என்றும் கூறியுள்ளார் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பதிவேட்டில் பதிவாகியுள்ளது என்று யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதுபற்றிய அறிக்கையை யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள பொலிஸார் விபத்தில் உயிரிழந்தவரை அடையாளம் காட்டுமாறு கோரியுள்ளனர்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் கடந்த புதன்கிழமை அவரது சைக்கிளுடன் வீதியைக் கடக்க முற்பட்டபோது டிப்பர் மோதி ஏற்பட்ட விபத்தில் அந்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் கோருகின்றனர். (ற-ஐ-4)

## நிர்வாக அலுவலர்களுக்கு தொலைபேசிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், பிராந்திய அலுவலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை சிறப்புத் தரத்தைச் சேர்ந்த நிர்வாக அலுவலர்களுக்குத் தொலைத்தொடர்பு சேவைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அந்தந்த மாதச் சம்பளத்துடன் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தால் அவை மீளளிக்கப்படவுள்ளன.

அலுவலரின் உத்தியோகபூர்வ அலுவலகத் தொலைபேசி மற்றும் உத்தியோகபூர்வ இருப்பிட அலைபேசி இணையத் தொடர்பு ஆகியவற்றுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

2015 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன் சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ற-ஐ-9)



திருகோணமலை நகரத்தில் உள்ள மனையாவெளி கிராமத்துக்குள் நேற்று முன்தினம் மாலை 12 அடி நீளம் உள்ள மலைப் பாம்பு ஒன்று புகுந்துள்ளது. அதனைப் பொது மக்கள் பிடித்து பாதுகாப்பான இடத்தில் வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)

## ஆன்மிகத்தில் நாட்டம் குறைந்ததாலேயே இளைஞர்கள் மதுப் பாவனைக்கு அடிமை

வவுனியா, மார்ச் 6

ஆன்மிகத்தில் நாட்டம் அற்றுப் போனமையினாலேயே இளைஞர்கள் மதுப் பாவனைக்கு ஆளா கின்றனர். இன்றைய இளை ஞர்களுக்கு ஆன்மிகத்தின் அறப் போதனைகளை நாம் ஏற்படுத்தத் தவறினால் எம்மை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்று குடியிருப்பு பிள்ளையார் ஆலய குரு கந்தசாமி குருக்கள் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக வடமகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இன்றைய இளைஞர்கள் மதுப் பாவனையை மேற்கொண்டு விட்டு, பொது இடங்களில் வெறுக்கத்தக்க செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

இவர்கள் பெற்றோர்களை, ஆசிரியர்களை எதிர்க்கிறார்கள். இதற்குக் காரணமாக, அவர்களுக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அற்றுப் போனமையைக் குறிப்பிடலாம். சிறுவர்கள், இளைஞர்களுக்கு ஆன்மிகத்தில் நாம் நாட்டத்தை ஊட்ட வேண்டும். அறப் போதனைகளை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் எம்மை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.– என்றார்.

குறித்த கலந்துரையாடலில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தினி ஸ்ரீகந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி நடராஜ், வவுனியா அரச அதிபர் றோகண புஸ்பகுமார, வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன்சோமராஜா, உளநலவைத்தியர் சிவதாஸ், உளநலவைத்தியர் சுதாகரன் மாவட்ட சிறுவர்பாதுகாப்பு அதிகாரசபையினர், பெண்கள் அதிகாரசபையினர், சமூகசேவை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், மதத்தலை வர்கள், பிரதேச செயலர்கள், உதவிப்பிரதேச செயலர்கள் அரச அரச சார் பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-402,21)

### சிவராத்திரியன்று காரைநகரிலிருந்து 3 வழியில் பஸ்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

சிவராத்திரி தினத்தன்று மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு காரைநகரிலிருந்து 3 வழித்தடங்களில் பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளர் ஆர்.ஜெயராசா தெரிவித்துள்ளார்.


அதன்படி காரைநகர் சாலையிலிருந்து நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 785, 786 மற்றும் 782 ஆகிய 3 வழிகளில் பஸ்கள் சேவையில் ஈடுபடும்.

அவ்வாறே திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் பூசைகள் நிறைவடைந்தவுடன் இதே வழியில் பஸ்கள் திரும்பவும் காரைநகர் சாலைக்கு வந்துசேரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஐ-4)

# குப்பி விளக்கு வெளிச்சத்தில் மல்லிகைத்தீவு கிராம மக்கள்

## மின்னிணைப்பு வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கோரிக்கை





முல்லைத்தீவு, மார்ச் 6

புதுக்குடியிருப்பு பிரதேச செயலத்துக்கு உட்பட்ட மல்லிகைத் தீவு கிராம மக்களுக்கான மின் இணைப்புக்கள் வழங்கப்படாதுள்ளன. அதனால் அந்தக் கிராமக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்துகின்றனர். தமக்கு உடனடியாக மின்சார இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மின்சாரம் இன்மையால் தமது பகுதியில்உள்ளமாற்றுத்திறனாளிகள், பாடசாலை மாணவர்கள் தங்களுடையசெயற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதில் இடையூறுகளைச் சந்திக்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீடுகளுக்கு மின்னிணைப்பைப் பெறுவதற்காக கடன்களைப் பெற்று, வீட்டு மின்சுற்று வேலைகளைமேற்கொண்டுள்ளோம்.மின்னிணைப்பைப் பெறுவதற்கான விண்ணபத்தை பூர்த்தி செய்து வழங்கி எட்டு மாதத்துக்கு மேலாகின்றது. இன்னமும் எங்களுக்கு மின்னிணைப்பு ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இருபத்தைந்து குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வரும் இந்தக் கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்கப்படாதுள்ளதால் ஊனமுற்றவர்கள், விதவைப் பெண்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் தொடர்ந்து இடையூறுகளைச் சந்தித்து வருன்றனர். பல கிராமங்கள் எவ்வளவோ முன்னேற்றங்கள் அடைந்துள்ளன. ஆனால், எங்களுடைய கிராமத்துக்கு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. எங்கள் பிள்ளைகள் இன்றும் குப்பிவிளக்கின் உதவியுடனேயே தங்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

> “பணம் செலுத்தினால் மூன்று நாள்களில் மின் இணைப்பு வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். பணம் செலுத்தும் அளவுக்கு நாங்கள் வசதி வாய்ப்புடன் இருந்தால் எப்போதோ மின்னிணைப்பை பெற்றிருப்போம். எங்களது கிராமம் காட்டுப் பகுதியில் இருப்பதால் உடனடியாக மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.”

மின்னிணைப்பைப் பெறுவதற்காக அலைந்து அலைந்து களைத்துவிட்டோம். பணம் செலுத்தினால் மூன்று நாள்களில் மின் இணைப்பு வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். பணம்செலுத்தும் அளவுக்கு நாங்கள் வசதி வாய்ப்புடன் இருந்தால் எப்போதோ மின்னிணைப்பைப் பெற்றிருப் போம். எங்களது கிராமம் காட்டுப் பகுதியில் இருப்பதால் உடனடியாக மின்சார வசதிகளை ஏற்படுத்திதரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபையினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; வடக்கின் வசந்தம் நிறுத்தப்பட்ட காரணத்தாலேயே குறித்த மக்களுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டனர். தற்போது மின்சாரம் வழங்கப்படாமல் உள்ள குடும்பங்களுடைய விவரங்கள் கிராம சேவகர் ஊடாகப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவர்களால் எங்களுக்கு வழங்கப்படும் விவரங்களுக்கு ஏற்ப நாங்க்ள் மின்சார இணைப்பு வழங்கி வருகின்றோம்.

குறித்த கிராம மக்களுடைய பெயர் விவரங்களும் பிரதேச செயலாளரூடாக எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் நாம் மின் இணைப்பை வழங்குவோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-ஐ-21,ரி7)

# மதிய உணவு வழங்கும் திட்டத்தைச் சரியான முறையில் பயன்படுத்துக

## வவு. மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு



வவுனியா, மார்ச் 6

கட்டடங்கள் கட்டுவது, வீதியைத் திருத்துவது என்பவற்றைவிட பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பது சிறந்ததொரு சேவை என வவுனியா மாவட்டச் செயலகத்தின் திட்டப் பணிப்பாளரும் உலக உணவுத் திட்டக் கண்காணிப்பாளருமான திருமதி கிருபாசுதன் தெரிவித்தார்.

தற்போது சில பாடசாலைகளில் உலக உணவுத் திட்டம் மூலம் வழங்கப்படும் உணவை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்துவதில்லை. இது கவலையளிக்கின்றது என்றும்- அவர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரக் கோட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைமாணவர்களுக்கான உணவூட்டல் தினம் கடந்த புதன்கிழமை சிதம்பரபுரம் சிறிநாகராஜா வித்தியாலயத்தில் அதிபர் வரதராஜன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று சில பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்துவதில்லை. பிள்ளைகள் பாடசா லைக்கு வரும்போது வீட்டில் சாப்பிடும் உணவை விட பாடசாலையில் வழங்கப்படும் உணவையே விரும்பி உண்கிறார்கள். வீட்டில் எல்லோருக் கும் போசாக்கான உணவு கிடைக்கும் என்றும் சொல்லமுடியாது.

வடமாகாணத்தின் பொருளாதாரம் அப்படியான வறுமை நிலையில் உள்ளது. போருக்குப் பின்பும் அதன் தாக்கம் உள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு காலை வேளை பிள் ளைக்குத் தேவையான சத்துணவை வழங்குவதற்கு நேரம் இல்லை. வேலைக்குப் போகும் அவதியில் பாண், பணிஸ் போன்றவற்றைக் கொடுக்கிறார்கள். இது எந்தளவு தூரம் ஆரோக்கியமான உணவாகும் என்பது கேள்விக் குறியே. பாடசாலையில் ஒரு நாளில் பிள்ளையொன்றுக்கு 75 கிராம் அரிசி, 20 கிராம் பருப்பு , 15 மில்லி லீற்றர் எண்ணெய், 15 கிராம் மீன்ரின் என்பவை சமைக்கப்படுகிறது. இதனால் பிள் ளையின் உடல் மட்டுமல்ல, அறிவும் விருத்தியடைகிறது.

ஒரு பாடசாலையின் கல்விப் பெறுபேற்றில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் உணவு செல்வாக்குச் செலுத்துகிறது.

கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வியில் உணவூட்டலின் தாக்கம் செல்வாக்குச் செலுத்துகிறது. பெற்றோர்கள் பாடசாலையில் வந்து இந்த உணவைச் சமைத்து கொடுக்க முன்வரவேண்டும்.

கட்டடங்கள் கட்டுவது, வீதியைப் போடுவதை விட, பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுவது சிறந்ததொரு சேவை. இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் மட்டும் பாடசாலை மாணவர்களுக்கான உணவூட்டல் வழங்கப்படுகிறது- என்றார்.

(ற-ஐ-21,402)

# பௌதிகவியல் ஆசிரியர் இன்மையால் பளை மத்திய கல்லூரி மாணவர் சிரமம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அதிபர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி,மார்ச் 6

பளை மத்திய கல்லூரிக்கு கடந்த இரண்டு வருடங்களாக பௌதிகவியல் பாடத்துக்கு ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என பாடசாலை அதிபர் கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும்தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரை அதற்கென ஆசிரியர் நியமிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கல்வி தொடர்பான ஆராய்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது பாடசாலையில் 69 ஆசிரியர்கள் தேவையான போதிலும், தற்போது 52 ஆசிரியர்களே உள்ளனர். ஒரு நாளில் அதிகமான ஆசிரியர்கள் விடுமுறை எடுக்கும் பொழுது, மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்ட ஆசிரியர்களை கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றம் செய்யும் பொழுது எமது பாடசாலைக்கு ஆசிரியர்கள் ஒதுக்கப்படுவதில்லை. மாறாக ஆசிரியர்களை ஒதுக்கும்போது நோய் மற்றும் வேறு காரணங்களைத் தெரிவிக்கும் ஆசிரியர்களை எமது பாடசாலைக்கு நியமிக்கின்றனர்.

கடந்தாண்டு இடம் பெற்ற உயர்தர க.பொ.த. பரீட்சையின் போது குறித்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாதபோதும் மாவட்டத்தில் முதல் நிலையை ஒரு மாணவன் பெற்றுக் கொண்டான்.

பளை மத்திய கல்லூரிக்கு பௌதிகவியல் பாடத்துக்கான ஆசிரியரை உடனடியாக நியமிக்க வேண்டும்- என்றார். (ற-ஐ-21)

# தென்மராட்சியில் மீள்குடியமர்ந்த 687 குடும்பங்களுக்கு வீடு தேவை

## பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தெரிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 6

தென்மராட்சி பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்புப் பகுதிகளாக இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்து, மீள்குடியமர்வு செய்யப்பட்ட ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னமும் 687 குடும்பங்களுக்கு வீடுகளும், 494 குடும்பங்களுக்கு மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

மறவன்புலோ, தனன்களப்பு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பைக்குறிச்சி ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் ஆயிரத்து 565 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டன. எனினும் இதுவரை அந்தக் குடும்பங்களுக்கு சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம்., இந்திய வீடமைப்புத் திட்டம், உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன் 862 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

> மீளக்குடியமர்ந்துள்ள மேலும் 687 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பின், பிரதேசத்தில் வீடுகள் அற்றோரின் எண்ணிக்கை பூர்த்தியடையும். எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட 72 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அதிகார சபையால் வீடுகள் புனரமைப் பதற்கு மானியமும், வீடுகள் சேதமடைந்த 72 குடும்பங்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிக்கை சமர்ப்பித்து இணைத் தலைமைகளுக்கு சுட்டிக்காட்டினார்.

மீளக்குடியமர்ந்துள்ள மேலும் 687 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பின்பிரதேசத்தில் வீடுகள் அற்றோரின் எண்ணிக்கை பூர்த்தியடையும். எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட 72 குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அதிகார சபையால் வீடுகள் புனரமைப்பதற்கு மானி யமும், வீடுகள் சேதமடைந்த 72 குடும்பங்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட்டுள்ளன.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தால் மறவன்புலோ, தனன்களப்பு ஆகிய பகுதிகளில் 376 கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் 53 குடும்பங்களுக்கே மலசலகூடம் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. மேலும், 494 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைத்து வழங்க வேண்டியுள்ளது என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அத்துடன் அங்கு புனரமைக்கப்பட வேண்டிய கிணறுகள், வாய்க்கால்கள், மதகுகள், குளக்கட்டுகள், மண் அணை அமைத்தல், வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதிகள், பிரதேச சபை வீதிகள், ஆலயங்கள், மயானங்கள், பொது நோக்கு மண்டபங்கள், பஸ் தரிப்பிடங்கள் போன்ற விவரங்களையும் அவர் சுட்டிக்காட்டினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015 ஆம் ஆண்டு வரை பிரதேசத்தில் 328.3021 மில்லியன் ரூபா செலவில் 807 அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களுக்கு சமூக நல்வாழ்வு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, கிராம அபிவிருத்தி அமைச்சு, அஞ்சல் திணைக்களம், இந்து சமய மற்றும் கலாசார திணைக்களம், இடர் முகாமைத்துவ அலகு, நீரியல் வளத்துறை அமைச்சு, தேசிய மொழிகள் அமைச்சு, வாழ்வின் எழுச்சித்திட்ட திணைக்களம் (வீடுகள் மற்றும் வாழ்வாதார உதவி), சுகாதார அமைச்சு, கைத்தொழில் திணைக்களம், வட மாகாண அபிவிருத்தித் திட்டம், மாகாண பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டம் போன்றவற்றின் மூலம் கிடைத்த நிதிகள் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ற-ஜ-9)

## குறைகேள் நடமாடும் சேவை 16 ஆம் திகதி செட்டிகுளத்தில்

வவுனியா, மார்ச் 6

வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்கான மக்கள் குறைகேள் நடமாடும் சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி திகதி செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை, வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலகம்ஆகியவை இணைந்து இந்த மக் கள் குறைகேள் நடமாடும் சேவையை நடத்தவுள்ளன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் செட்டிகுளம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற குறைகேள் நடமாடும் சேவை தொடர்பான கலந்துரையாடலிலேயே, எதிர்வரும் 16ஆம் திகதி குறித்த குறைகேள் நடமாடும் சேவையை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்கள் குறைகேள் நடமாடும் சேவையில் மாகாண, மத்திய அரசின் கீழுள்ள திணைக்களங்களின் சேவையை பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் மாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராசா, முதலமைச்சரின் இணைப்பு செயலாளர் சண்முகப்பிரியன், பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நடமாடும் சேவைக்கு வருகை தரும் பொதுமக்களின் நலன்கருதி இலவச போக்குவரத்து சேவைகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-21,402)

## நுணாவில் பெண் சாவு; தேடப்பட்டவர் கைது

சாவகச்சேரி, மார்ச் 6

நுணாவில் மேற்கில் தூக்கில் தொங்கிய நிலையில் ஐந்து தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண்ணின் சாவு தொடர்பாகத் தேடப்பட்டுவந்த அவரது கணவர் எனக் கூறப்படுபவரைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் எட்டாம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி நுணாவில் மேற்கு வீரபத்திரர் வீதியில் உள்ள வீடொன்றில் எழுந்த துர்நாற்றம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிஸார் அங்கு சென்று பார்வையிட்டபோது அந்த வீட்டில் தங்கியிருந்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 37 வயது பெண்ணொருவர் கயிற்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து நீதிவானின் பணிப்பின் பேரில் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து இவருடன் தங்கியிருந்த 62 வயது நபர் தலைமறைவாகியதால் பொலிஸார் அவரைத் தேடி வந்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். ஏற்கனவே பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் எட்டாம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவிருப்பதால் அன்று வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஜ-9)

## வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சைக் கான விசேட வழிகாட்டல் செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தின் பணிப்பாளர் பா. தனபாலன் தெரிவித்துள்ளார்.

"வெளிநாட்டுக் கல்வி அனுபவங்களில் ஒப்பீட்டுக் கல்வி அணுகுமுறையில் இலங்கைக் கல்விப்பிரச்சினை" என்ற தலைப்பிலான விரிவுரையை பா. தனபாலன் வழங்கவுள்ளார். இந்தச் செயலமர்வில் திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட, சேவை மூப்பு அடிப்படையிலான போட்டிப் பரீட்சைகளில் தோற்றுபவர்கள் பங்குகொள்ள முடியும். மற்றும் நுண்ணறிவு, பொது அறிவு, ஒப்பீட்டுக் கல்வி, கல்வியியலில் விடய ஆய்வு ஆகிய பாடநெறிகளுக்கான மாதிரி வினாத்தாள்களும் அங்கு வைத்துவெளியிடப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

## பொதுக் கூட்டம்

கரணவாய், மார்ச் 6

பருத்தித்துறை பிரதேச பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உயர்தொழில்நுட்ப நிறுவன முன்னாள் பணிப்பாளர் எஸ்.கதிரமலை தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-108)

## நிழல் குடையின்மையால் பயணிகள் பெரும் சிரமம்

சாவகச்சேரி, மார்ச் 6

சாவகச்சேரி நுணாவில் சந்தியில் பயணிகள் நிழற்குடை அமைக்கப்படாததால், அங்கு தினமும் வருகை தரும் நூற்றுக் கணக்கான பயணிகள் வெயிலில் காத்திருக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

சரசாலை, மட்டுவில், கல்வயல், நுணாவில் உட்பட பதினைந்து கிராம அலுவலர் பிரிவகளைச் சேர்ந்த மாணவர்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள் உட்பட பொதுமக்கள் நுணாவில் சந்தியிலிருந்து தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் நுணாவிலில் அமைந்துள்ளதால், அங்கு வரும் பொது மக்களும் வீதியின் இரு பக்கமும் பயணிகள் தங்கக் கூடிய நிழற்குடைகள் அமைக்கப்படாததால் வெயிலில் காத்திருந்து பயணிக்கவேண்டியுள்ளனர்.

ஏ -9 வீதி புனரமைப்பின் போது அங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நிழற்குடைகள் அகற்றப்பட்டிருந்தன. வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் ஏ-9 வீதியின் இரு புறமும் பல இடங்களில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை நுணாவில் சந்தியில் நிழற்குடை அமைக்க அரசோ அல்லது அமைப்புக்களோ அல்லது நலன்விரும்பிகளோ முன்வராதமை குறித்து பயணிகள் கவலை தெரிவித்தனர்.

மாகாண சபையினால் பயணிகள் நிழற்குடை அமைக்கும் திட்டத்தின் கீழ் நுணாவில் சந்தியில் அவசியம் தற்காலிகமாகவேனும் நிழற்குடை அமைத்துத் தருமாறும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ற-ஜ-9)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 6

கைதடி அரச முதியோர் இல்லம் நடத்தும் "மூத்தோர் பராமரிப்பின் சவால்களும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் இல்லத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் இல்ல நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார். (ற-ஜ-17)




Every day, we deliver dairy nutrition in more than 100 countries around the world. Fonterra has been providing high-quality dairy nutrition to Sri Lankan families for more than 38 years through Anchor. We collect over 10 million litres of milk a year to manufacture our Anchor and Anchor Newdale range of fresh dairy products. Fonterra has a presence in over 100,000 grocery, pharmacy and food service outlets across the entire country

## Sales Representative

### THE EXPERIENCE WE OFFER YOU

- As a Sales Representative, you will represent Fonterra Brands Sri Lanka in working closely with our consignment agents, traders and other channels in the assigned territory
- You will make regular trade and channel visits and ensure relevant in-store standards are maintained
- Reflecting on your selling experience, you will analysis route efficiencies and suggest plans to optimize selling opportunities
- Through this experience, you will be mentored by Area Sales & Channel Development Managers, who will share their expertise with you.
- You will have a high level of responsibility and autonomy in managing your role, and are expected to conduct on-going performance monitoring and reporting.
- Through your contribution, you will help us plan and execute all channel and customer plans to achieve brand/sales objectives in relate to availability, offer and communication
- You will maintain a healthy and safe working environment for you and others and will role model food safety and quality standards

### TO SUCCEED IN YOUR ROLE

- You will carry any of the below combinations of qualification and experience
  - GCE (O/L) and GCE(A/L) qualifications with sales experience
  - Diploma in Sales or Marketing with limited or no sales experience
- You will enjoy working with people and possess communication, interpersonal, planning, analytical and time management skills

### SHOW YOUR INTEREST

If you see yourself living this experience and succeeding in the role, show your interest by send in your comprehensive application to **careers@fonterra.com**

Anchor · Anchor Newdale · Anchor PediaPro · Anchor PediaPro Mama · Anlene

Keep in touch with us
Like our facebook fan page
**Fonterra Brands Lanka Careers**

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல பாவனையில் உள்ள
TVS. Scoorty விற்பனைக்கு உண்டு.
(69723)(14,18,20)

தொடர்பு: 077 978 9752

### வயல்காணி விற்பனைக்கு

இரண்டு வயல் காணிகள் இருபாலையில் விற்பனைக்குள்ளன

01. கொட்டுக்குளி - நெற்பரப்பு - 31
02. கலியாணக்குளம் - நெற்பரப்பு - 27 1/2

தொடர்பு: 077 9369 369, 077 6141 360, 078 7018 701

### காணி விற்பனை

கோண்டாவில் கிழக்கு பஸ் டிப்போவிற்கு கிழக்கு பக்க மதிலுடன் அண்மித்ததாக மின்சார வசதியுடன் கூடிய நில. பர.2 குளி 4.5 காணி விற்பனைக்கு உண்டு. ஓரளவு திருத்த வேலைகளுடன் கூடிய இரண்டு சிறிய கல்வீடுகளும் உள்ளன. (த.2956)(2,16,20)

077 899 9914, 077 497 5620

### காணி விற்பனைக்கு

சரசாலை தெற்கு. செட்டிய குறிச்சி மெய்கண்டான் வீதியில் குடியிருப்புக்கான 7 பரப்புக் காணியும். 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன. தரகர் தேவையில்லை (த.2956)(2,16,20)

077 727 9794

### வளர்ப்பின கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

வான்கோழி. பண்டம்.சில்கி. காடைக்கோழி வளர்ப்பினப் புறாக்கள்.லவ்பேட்ஸ்.பல இனக் குருவிகள். வளர்ப்பின கலர் மீன்கள். மீன் தொட்டி.அவற்றிக்குரிய அனைத்து உபகரணங்கள்.முயல். நாய்க்குட்டி. கினிப்பிக் அனைத்து செல்லப் பிராணிகளுக்குமான கூடுகள் உணவுப் பொருள்கள் என்பவற்றை மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளிற்கு : மக்ரி பாம் பெட் பரடைஸ்
941. K.K.S வீதி. தட்டாதெருச் சந்தி. யாழ்ப்பாணம்
021 221 7600. 075 988 0000

### வீடு விற்பனைக்கு

இல. 267. கொழும்புத்துறை வீதி.
கணக்கர் சந்திக்கு அருகில்
அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியுடன்
சகல வசதிகளும் அடங்கிய வீடு
விற்பனைக்குண்டு. (த.2956)(2,16,20)

077 742 0240

### வீடு விற்பனைக்கு

கொழும்பு 10, மருதானையில் 4.8 பேர்ச்சஸ் காணியுடன் பழைய வீடொன்று விற்பனைக்கு உண்டு. [முஸ்லிம் பள்ளி வாசலுக்கு அருகில்] விலை 70 இலட்சம் ரூபா.

தொடர்பு - 0777 329 096

### JCB விற்பனைக்கு

தயாரிப்பு: இங்கிலாந்து (England)
உற்பத்தி ஆண்டு -2002
பதிவு செய்யப்பட்ட ஆண்டு - 2012
இடம்: மன்னார்
விலை பேசித்தீர்க்கப்படும்

தொடர்பு: 077 474 1753

### வீடும் , காணியும் விற்பனைக்கு உண்டு.

வதிரி பெண்கள்
பாடசாலைக்கு அருகில்
தாரிக்கப்பற்று
ஒழுங்கையில் 7
நிலப்பரப்பில் வீட்டுடன்
கிணறும் உடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 226 3466

### நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு

Lion German Sheperd இன 42 நாள் கொண்ட ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

075 626 8997 (சாவகச்சேரி)

### விற்பனைக்குண்டு

வவுனியாவில் தேக்கங் கன்றுகள்
விற்பனைக்குள்ளன.

075 465 5591, 077 837 2296

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மாட்டீன் ஒழுங்கையில் 1 3/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) (த.2956)(2,16,20)

077 978 9112

## தேவை

### தேவை

உழவு இயந்திரத்தில் பொருத்தக்கூடிய நீர்த்தாங்கி (பௌசர்) தேவை. றொபின் நீர் இறைக்கும் இயந்திரமும் தேவை.

077 116 5968

### வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் கோயில் சுற்றாடலில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை

077 316 2803

### தேவை

யாழில் ஆஸ்பத்திரி வீதியில்
அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு
மருந்தாளர்(Pharmasist)
உடனடியாகத் தேவை.

077 730 1455

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970 இல் பிறந்த கனடா P.R உள்ள சூரியனும், செவ்வாயும்,ஏழிலும், 87 பாவமும், கார்த்திகை 2ஆம் பாதம் பிறந்த மணமகனுக்கு 1976இற்குப் பின் பிறந்த மணமகள் தேவை.

077 315 1245

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு

- ★ முகாமையாளர்
- ★ காசாளர்
- ★ கொத்துரொட்டி போடுபவர்
- ★ அப்பம் போடுபவர்
- ★ பரிமாறுபவர்

போன்ற வேலையாள்கள் தேவை. 2 வருட முன் அனுபவம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்

077 078 2375

(காலை 07.00 மாலை 7.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்.

## ஏனையவை

### வாடகைக்கு

ஆனைப்பந்திச் சந்திக்கு மிக அருகில் வீட்டின் அனெக்ஸ் வாடகைக்குண்டு. பெண்கள் இருவர் உள்ள குடும்பத்திற்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்புக்கு - 077 6180186

### கடை வாடகைக்கு

இல. 210, ஆனைப்பந்தி
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 2
பெரிய விசாலமான கடைகள் Parking
வசதியுடன் வாடகைக்கு விடப்படும். (68533)(2,19,20)

076 831 3674

### கணக்காளர் (கணக்குப் பிள்ளை) தேவை

இலங்கையில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வவுனியா மற்றும் கிளிநொச்சிக் கிளை அலுவலகங்களுக்கு அனுபவம் வாய்ந்த கணக்காளர் (கணக்குப்பிள்ளை ) தேவை. விசேடமாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கடமை புரிய வேண்டும்.

தொடர்பு: 076 690 1125

### Majestic Cineplex Jaffna

கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
facebook. CeylonTheatres
www.ceylontheatres.lk

### Spoken English & Sinhala

கொழும்பு (யாழ்.முன்னாள் பிரபல ஆசிரியர்) யாழ். மாவட்டத்தில் ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் ஆரம்பிக்க உள்ளதால் மாணவர்கள், கல்விநிறுவன இயக்குநர்கள் தொடர்பு கொள்ளவும்.(வாரத்தில் 2 நாள்கள் யாழில், 5 நாள்கள் வெள்ளவத்தையில்) மாணவரின் தன்மைக்கேற்ப மிகக் குறுகிய காலத்தில் எழுத வாசிக்க பேச்சுப் பயிற்சியுடன் சான்றிதழ் வழங்கப்படும்.

077 725 4627

### அறை வாடகைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஆத்திசூடி ஒழுங்கை, கந்தர்மடத்தில் அறை வாடகைக்கு உண்டு.

077 132 5568

### தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.

076 638 5626

### நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

டாசோன் நல்ல இன
நாய்க்குட்டி விற்பனைக்கு
உண்டு (68533)(2,19,20)

077 035 5560, 077 079 0775

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### வீடு வாடகைக்கு உண்டு

புங்குடுதீவு, ஆலடிச்சந்திக்கு அருகில் பிரதான வீதியில் மின் இணைப்புடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. கல்வி நிலையம், யோகா நிலையம் மற்றும் சிறு பணிமனை போன்றவற்றுக்கு மிகவும் உகந்தது.

077 386 8562

### வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான நிட்டம்பு, பஸ்யால, தெமட்டகொட, வத்தலை, பாணந்துறை, சீதுவை போன்ற தொழிற்சாலைகளுக்கு உடனடி வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் இலவசம். நாள்சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளமாக 38,000 பெற்றுக்கொள்ள முடியும். வந்தவுடனே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். கீழ்க்காணும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

072 389 6106, 077 636 3156

முன்மாதிரியான பொய்யின்றி உழைப்பிற்கேற்ப சம்பளம் பெற ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு உண்டு. நூடில்ஸ், பால்மா, டொபி, டிபிடிபி ஆகிய பிரிவுகளுக்கு சம்பளம் (25.000 - 35,000) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம்.வயது 18-50. OT யுடன் நாள் சம்பளம் 1500/=

077 989 8443, 076 988 1700

2016ஆம் ஆண்டின் முற்பகுதியில் அதிக சம்பளத்துடன் வேலையை எதிர்பார்க்கும் ஆண், பெண் இருபாலாருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். பிறிமா நூடில்ஸ் (லொக்கா), சொசேயஸ், பால்மா போன்ற கம்பனிகளில் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. ஒருநாள் சம்பளம் 1000/=. OT 1 hour 100/= 35000- 45000 வரை மாதாந்த சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும். வயது எல்லை 18 - 50 வரை. தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். உணவு உட்பட.

076 980 4744, 075 286 9947

எமது நிறுவனம் உணவு உற்பத்தி செய்யும் பிரசித்திபெற்ற நிறுவனமாகும். அதி உயர் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். (பிஸ்கட், சொக்லேட், கிளவுஸ்,குளிர்பானம், லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு OT - 150. மாதசம்பளம் Rs.45000 மேல். திறமையானவர்களுக்கு விசேட கொடுப்பனவு கொடுக்கப்படும். உணவு தங்குமிடம் முற்றிலும் இலவசம். நாள்சம்பளம், கிழமை சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். (மாதத்துக்கு ஒரு முறை போனஸ் 25000/= பெற்றுக் கொள்ளலாம்.வயது 18- 55.

076 915 5233, 077 165 7473

அரசு அங்கீகரிக்கப்பட்ட பெயின்டிங், டிங்கரிங், வெல்டிங், கப்பல் சுத்திகரிப்பாளர்கள் போன்ற உதவி ஆள்கள் உடனடியாகத் தேவை. உணவு, தங்குமிடம், வேலைநேரம் இலவசமாக வழங்கப்படும். சம்ப ளம் 29.000 - 55,000 வரை. வயது எல்லை 18-40 வரை.

077 956 9606, 075 028 7319

# 96 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள் 06.03.1920

ஸ்ரீ ஹரி ஹர புத்திர ஐயனார்
அருள் புரியும் அனலையம்பதியில்

## அகவை 96 ஐக் காணும்
## செல்லமுத்து நமசிவாயம்




**இன்பம் மிகுந்த இந்த இனிய நன் நாளில் பிறந்தநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துகொள்கின்றோம்.**

அகவை 96 ஐக் காணும் எங்கள் தாயே! ஆண்டுகள் நீண்டிட நீஞழி
நீர் வாழ்கவே இன்பங்கள் வந்து உங்களைச் சூழ
இவ்வையத்தில் உங்களுக்கு ஈடு இணையில்லாமல்
இன்னும் பல காலம் வாழ்க! வாழ்கவே

*வாழ்த்துவோர்:*


**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.**

**தொடர்பு: 021 300 4579**

**அனலைதீவு, ஐயனார் கோயிலடி, 5 ஆம் வட்டாரம்.**

(68413) (13.18)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




கடந்த எட்டு வருடங்களாக எமது பாடசாலையில் அதிபராகக் கடமை யாற்றி, க.பொ.த.(உயர்தரம்) கலைப்பிரிவை ஆரம்பித்து எமது வித்தி யாலயத்தைத் தரமுயர்த்தி அளப்பெரும் சேவையாற்றி இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை மணிவிழாக்காணும் எமது அதிபர்

## உயர்திரு.இராஜேந்திரன் - வசந்தகுமார்

(B.Com.Sp.Dip in Ed., SLTS - I, SLPS - II)

**அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

**சேவை விவரம் :**

1. அ/ ஈந்தல் வெட்டுணுவ முஸ்லிம் வித்தியாலயம் - 1989 .05.18 - 1990.04.01
2. அ/ சாயிரா முஸ்லிம் வித்தியாலயம் - 1990.04.02 - 1991.12.31
3. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி - 1992. 01.01 - 2007.04.30
4. யா/நவாலி மகாவித்தியாலயம் - 2007.04.31 - 2015.08.31

வாழ்த்துவோர்:

(69793)(11.18.20) பாடசாலைச் சமூகம்– யா/ நவாலி மகாவித்தியாலயம்

## விற்பனைக்கு



KB-xxxx இலக்க முடைய
TATA SUMO JEEP உடன் விற்பனைக்
குண்டு. மொடல் - 2005 (c 29743) (12.18.20)

**தொடர்பு: 077 161 0195**


## இதயத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய்
### அன்ஜைனா - மார்பு அடைப்பு

இதய நாடிகளில் கொழுப்பு படியும் போது இரத்தம் இதயத்திற்கு செல்வது கடினமாகிறது.
நெஞ்சுவலி, மார்பு இறுக்கம் அதன் விளைவுகளாகும்.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள் :**
**புகைத்தல். உயர்இரத்தஅழுத்தம். அதிக கொழுப்புச்சத்து. நீரிழிவு**

**நெஞ்சுவலி-மார்பு அடைப்பையும் பூரணமாக சுகப்படுத்தும் எமது ஆயுர்வேத மருத்துவம் உன்னதமானது. நிரூபண மானது!**




FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி.கிழக்கு
இல.69. ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
Office 011 4 388 200/ 4 388 100 / 4 388 101/4 388 102

**APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY**

Habitat for Humanity Sri Lanka

## கேள்வி கோரல்
## அலுவலகப் பாவனைக்கு இடம் தேவை

Habitat for Humanity Sri Lanka நிறுவனமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் வீடமைப்புத் திட்டத்தை (Grant # DCI ASIE/2015 369-395) கிளிநொச்சி. முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப் படுத்துவதற்குரிய அலுவலகங்களாக பயன்படுத்துவதற்குரிய வீடுகள் வாடகைக்கு எதிர்பார்க்கிறது. கீழ்வரும் தேவைப்பாடுகள் கொண்ட வீடுகள் அவசியமாகிறது.

1. கிளிநொச்சி அல்லது புதுக்குடியிருப்பு அல்லது முள்ளியவளை நகரங்களில் இருந்து 2Kmஎல்லைக்குள் இருக்கவேண்டும்.
2. குறைந்தது 6 அறைகள் (ஒவ்வொன்றும் 120 சதுர அடிகளுக்கு குறையாமல்) கூட்டங்கள் நடத்தக் கூடியவாறான ஒரு மண்டபம் or பெரிய ஹோல் (250 சதுர அடிக்கு குறையாதது) சமையலறை ஒன்று மற்றும் இணைந்த குளியலறை மலசலகூடம் கொண்ட வீடு.
3. 24 மணித்தியாலங்களும் தடையின்றி குழாய் மூலம் நீர் வழங்கக்கூடிய நீர்த்தாங்கி மற்றும் தனியாக மின்பாவனை பெறக்கூடிய மின் இணைப்பு (3 Phase line விரும்பத்தக்கது).
4. தனித்தனியான வெளியேறும்/ உள்வரும் வீட்டு வாசல்கள்
5. வாகனத்தரிப்பிட வசதி (குறைந்தது 3 வாகனங்கள்)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் **வேல்ட் விஷன் லங்கா இல.167, கண்டி வீதி, கிளிநொச்சி அல்லது வேல்ட் விஷன் லங்கா இல.64/291, கணுக்கேணி, முள்ளியவளை, முல்லைத்தீவு** ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று தங்களது கேள்வி கோரல்களைக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் **16 மார்ச் 2016 இற்கு முன்னர்** கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பவும்.

### வாகனங்களுக்கான விலைமனுக்கோரல்

Habitat for Humanity Srilanka நிறுவனத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு. கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் வீடமைப்புத்திட்டத்தில் (Grant # DCI - ASIE 2015/369 - 395) களவேலைகள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டுக்குத் தேவையான வாடகை வாகனங்களை எதிர்பார்க்கின்றது.

**Pick ups / Vans - (ஆகக் கூடியது நான்கு வாகனங்கள்)**

* குளிரூட்டல் வசதி/ இரட்டை குளிரூட்டல் வசதி
* சீர்செய்யக்கூடிய Fabric துணி இருக்கை வசதி
* நல்ல நிலை
* சாரதி: 40 - 55 வயதுக்கு இடைப்பட்ட ஆங்கிலம் நன்றாக பேச எழுத தெரிந்தவராக இருத்தல்

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் **இல.143/2, பவுன்டரி றோட் மட்டக்களப்பு** அல்லது **வேல்ட் விஷன்லங்கா, 167, A9 றோட் கிளிநொச்சி** அல்லது **வேல்ட் விஷன் லங்கா 64/291, கணுக்கேணி, முள்ளியவளை, முல்லைத்தீவு** அல்லது கீழ் குறிப்பிடப்படும் முகவரியிலுள்ள எமது தேசிய அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று தங்களது விலை கோரல்களையும் பதிவுத்தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு 16 **மார்ச் 2016 இற்கு முன்னர்** அனுப்பிவைக்கவும்.

**National Director,**
**Habitat for Humanity Srilanka,**
**22/5, Station Road, Dehiwala.**
**T.P. 011 271 4275**
**www.hfhsl.org**

# வைத்திய அதிகாரி பணிமனைக்கு காணி தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டடம் அமைப்பதற்குப் பிரதேச சபை எல்லைக்குள் 4 பரப்புக் காணி தேவையாக வுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலர் ஆ. சிறி தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிபாலன எல்லைக்குள் வசிக்கும் நலன் விரும்பிகள் எவராவது கட்டடம் அமைப்பதற்குத் தேவையான காணியை நன்கொடையாக வழங்க முன்வருபவர்கள் நல்லூர் பிரதேச செயலர் மற்றும் நல்லூர் வைத்திய அதிகாரியை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக தொடர்புகொள்ளுமாறு அவர் தெரிவித் துள்ளார். (ற-ஜ-ரி)

# மகளிர் தின சிறப்பு பரதநாட்டிய நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு யாழ். இந்திய துணைத் தூரகமானது யாழ். திருமறைக் கலாமன்றம் மற்றும் கொழும்பு அருஸ்ரீ கலைக்கூடத்துடன் இணைந்து வழங்கும் மகளிர் தினச் சிறப்பு பரதநாட்டிய நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5. 30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து வந்துள்ள பரதநாட் டிய கலைஞர்களான ஸ்ருதி மற்றும் பாஷ் வனாத் உபாத்யே வழங்கும் நாத நிருத்தி யம் நிகழ்வுக்கு, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-ரி)

# சைவத் தமிழ் இளைஞர் மாநாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 6

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில், சைவத் தமிழ் இளைஞர் மாநாடு இன்றும் நாளையும் வவுனியா கோவிற் குளம் சிவன்கோயிலில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சைவ மகா சபையின் தலைவர் சி. சோதி நாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும், சிறப்பு விருந்தி னர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், இந்து சமய கலாசார திணைக்கள பணிப் பாளர் உமாமகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வுகள், வவுனியா வேப் பங்குளம் ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து ஆன்மிக நடைபவனியுடன் ஆரம் பித்து, கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலில் நிறைவடைய உள்ள துடன் தொடர்ந்து, ஆய்வு அரங்கங்களும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் யோகாசன, தியான வகுப்புக்களும், கலை அரங்கமும் நடைபெறவுள்ளன. (ற-ஜ-ரி5)

# சிவராத்திரி விரதம்

காரைநகர், மார்ச் 6

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிர மணியர் ஆலயத்தில் சிவராத்திரி விரதம் நாளை திங்கட்கிழமை சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

நான்கு சாமங்கள் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற உள்ளதுடன் ஆலயத்தில் பயிரிக்கூடல் இந்துமாமன் றத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி மாண வர்களின் கலைநிகழ்வுகள், இசைக் கச்சேரி, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற உள்ளன. (ஐ-250)


## யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2016

எமது பாடசாலையின் வருடாந்த அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் 22.03.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை தம்பையா மண்டபத்தில் இடம்பெற இருப்பதனால் சகல பெற்றோரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி வே.சண்முகரத்தினம்,
தலைவர் (அதிபர்)

(சி/29605)(11.17.18.20)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் 23.01.2016 சனிக்கிழமை 4.00 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த இசைவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்படிருந்தது. இந்த இசைவிழா எதிர்வரும் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும் என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(c 29743)(12.18.20)

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## வாகனம் விற்பனைக்கு

Tata Telcoline TD14 X 42005
Type : Double Cab Pickup
Engine Capacity : 2000 cc
Turbo inter - Cooler வாகனம் விற்பனைக்கு உண்டு.

076 852 4355

## ஆச்சி ஹொட் ஃபூட் றெஸ்ரோரண்ட்
## Aachee Hot Food Restaurant



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகா சிவராத்திரி தின விசேட உணவுகள் மிகமிகச் சுத்தமும், செயற்கைச் சுவையூட்டிகள் அற்றதும் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைக் கொண்டதும், குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கை யாளரைப் பெற்று உணவு விற்பனையில் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் நிறுவனமாக விளங்குகின்றது.

- 147, பலாலி றோட், திருநெல்வேலி- 021 222 5001
- இராமநாதன் றோட், யாழ்ப்பாணம்(கம்பஸ்) 021 221 7888
- நவீன சந்தை, மானிப்பாய் 076 675 7466
- No, 102, சுன்னாகம்- 077 468 8286
- கண்டி றோட், சாவகச்சேரி 077 427 8900
- கைதடி கிழக்கு கைதடி- 021 205 7455 (Main Kitchen)
- மருத்துபீடம் யாழ்ப்பாணம்- 021 222 5010 (c 29743)(12.18.20)

## டுபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு



50 டிரைவர் (டெக்ஸி) ஆண்கள்
800Dhs / சம்பளம் : Rs.31,200/- + கமிசன்.

INTERVIEW 07,08,09 March

Hot Line : 072 720 0005

இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள்
Sri Lankan Licence Holders

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் வேலை
- நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம்
- ஒரு நாள் லீவு வழங்கப்படும்.
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர்.
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் டுபாய் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

வயது : 48 வயதிற்கு கீழ்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ.100,168 அறவிடப்படும்.

1 DHS = Rs.39 பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு – 05.
Tel : 0112552598 | 0726999886

max adz

## KANDY HOMES & CONSTRUCTION IN JAFFNA



இலங்கையில்
வீடு / கட்டட நிர்மானத் துறையில்
15 வருட காலம் அனுபவம்

தமிழ் கலாசாரத்துக்கு அமைவான வடிவமைப்பு

5ஆவது ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக உங்கள் அனைத்து கட்டடத் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகின்றோம். வாஸ்துசாஸ்திர முறைப்படி அமைத்து தருகின்றோம்.




இல.81, பலாலி வீதி,
இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.
kandyhomes11@gmail.com
0777 4634 69
0777 4628 89
021 7917 623

## மணமகள் தேவை 077 617 2941

யாழ். இந்து 1963இல் பிறந்த மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் உடன் தேவை. சாதி, மதம் பார்க்கப்பட மாட்டாது மணமகன் சொந்தமாக வியாபாரம் செய்கிறார்.

## NORTHERN ENGINEERS AND CONSULTANTS (PVT)LTD.

உங்களது வீடுகள், கட்டடங்களை குறைந்த செலவில் உறுதியாக வும், அழகாகவும் . அமைப்பதற்கான தொழில்நுட்ப சேவை.

சேவை வழங்குவோர்

"A group of chartered Engineers, Chartered Architects, Quantity Surveyors, Qualified Draughtsman & Technical Officers are providing the Services"

70, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
078 583 2356
Email- info@northernengineers.com

## பதவி வெற்றிடம்

TILKO JAFFNA CITY HOTEL யாழ் மையப் பகுதியில் முன்னணி நட்சத்திர Hotel ஆக இயங்கிவருகின்றது. எமது நிறுவனத்திற்கு சமையலாளர்கள் தேவை. விண்ணப்பதாரி குறைந்தது 3 வருடங்கள் Hotel துறையில் சமையல் அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

Email: tilko.tilak@gmail.com

மேலதிக விவரங்களுக்கு
077 330 6985 (சி.2956)(12.18.20)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், கோண்டாவில், கோண்டாவில் மேற்கு, கே.கே.எஸ் வீதி என்னுமிடத்தைச் சேர்ந்த பாலக்கிருஷ்ணன் கைம்பெண் சத்தியபாமா ஆகிய நான் தெரியப்படுத்துவதாவது யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறையில் அமைந்துள்ள முத்தட்டு நிலப்பரப்பு 6 குளி 0.96 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தில் எனக்கு சீவிய உரித்துள்ளது. மேற்படி ஆதனத்தை எவரேனும் எனது மகளிடம் விலைக்கு கொள்வனவு செய்திருப்பின் அவ்வுறுதியை கையுதிர்க்குமாறு தெரிவிக்கின்றேன். இல்லையேல் என்னால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி சத்தியபாமா பாலக்கிருஷ்ணன்,
கே.கே.எஸ் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
021 222 3604

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன் (பாபு)**

(உரிமையாளர் - சுந்தரமூர்த்தி அன்சன்ஸ். யாழ்ப்பாணம்)



மலர்வு
19.07.1947

உதிர்வு
07.02.2016

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட 07.02.2016 ஆம் திகதி காலமான எம் குலவிளக்கு சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன் அவர்களின் அந்தியேஷ்டிக் கிருத்திய நிகழ்வு இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வில்லூண்டி மடத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 08.03.2016 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவர் நோயுற்றவேளைகளில் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர் பேரானந்தராஜா அவர்களுக்கும் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதி இல.10இன் Dr.Lasantha மற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் மரணச்சடங்கில் எம்மோடு தோளோடு தோள் நின்று உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், வர்த்தகர்கள்,வர்த்தக ஊழியர்கள், தொழிலாளர் வர்க்கத்தினர் மற்றும் தொலைபேசி, தொலைநகல், சமூகவலைத் தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். **தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

210,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(69774)(11.18.20)

சகோதர. சகோதரிகள்.
(சுந்தரமூர்த்தி குடும்பம்)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 17.10.1927
மறைவு : 03.03.2016

அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியில் துறைத் தலைவரும், பணியாளர் வாண்மை விருத்தி நிலையப் பணிப்பாளரும், யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமாகிய பேராசிரியர் **பு.ரவிராஜன்** அவர்களின் அன்புத் தந்தை **அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி** அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தி, ஆத்மசாந்திக்காக இறையருள் இறைஞ்சுவதோடு அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விரிவுரையாளர்களும், பணியாளர்களும்,
பௌதிகவியல் துறை, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(69825)(11,17,18)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி
பிரதேச செயலகம் - உடுவில்)

மறைவு
06.03.2011

நாடுபோற்ற அன்பை நம்மீது வாரி இறைத்துவிட்டு
பாடுபட்ட பலனைப் பலரிடமும் பார்க்குமுன் - கூடுவிட்டு
விரைந்தே இறைவனிடம் வேகமாய்ப் போனதுமேன்
ஆழமான காயம் வலிதாங்க முடியவில்லை
கரைந்தே ஓடுதே கண்ணீர்....

எம் உயிர் உள்ளவரை எம்மோடு இருப்பீர்கள்
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(68806)(11.19.20)


## மகளிர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி,மார்ச் 6 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்தும் மகளிர் தின நிகழ்வு கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளன. சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும், சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கத்தின்மூத்தஉறுப்பினர்கள்கௌரவிப்பு மற்றும் உறுப்பினர்களின் கலை நிகழ்வுகள் போன்றவை இடம் பெறவுள்ளன.

(ற-ஐ-9)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை ஜெயசீலன்

(கரவெட்டித்திடல் , நாகேஸ்வரா வித்தியாலயம் - BSc ஆசிரியர்)



முரசுமோட்டை பழையகமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயசீலன் 04.03.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜெயச்செல்வியின் (ஆசிரியை - நாகேந்திரபுரம் வித்தியாலயம்) அன்புக் கணவரும், சுப்பிரமணியம்- இராசேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கௌதமி, அபிநயா, அச்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்வதிப்பிள்ளை, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, சத்தியசீலன், குணசீலன், யோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பதுமநிதி, சிவராஜா,கணேசராஜா, சியாமளா, செல்வராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் முரசுமோட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர் - வே.குணசீலன்
மற்றும் குடும்பத்தினர்.

(சி/29781)(11,18,20)

**077 040 9979, 076 616 7853**

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து சிவசோதி

(கந்தன் களஞ்சியம் - உரிமையாளர் - கிளிநொச்சி மாருதி களஞ்சியம்- உரிமையாளர்- யாழ்ப்பாணம்)



பிறப்பு : 14.01.1945
இறப்பு : 03.03.2016

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.14.2/1, அருத்துஷா ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 6ஐ வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவசோதி 03.03.2016 வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான சுப்பையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவபாலன் (கனடா- BSc நில அளவையாளர் மொரட்டுவ பல்கலைக்கழகம்), சிவகலா (கனடா- குழந்தைகளுக்கான ஆசிரிய உதவியாளர்), சிவசதீசன் (ஆஸ்திரேலியா -BSc இலத்திரனியல் பொறியியலாளர்- மொரட்டுவ பல்கலைக்கழகம்), சிவதாரணி (மெதடிஸ்த திருச்சபை ஞாபகார்த்த முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகரஞ்சனா (கனடா), தயானந்தராஜா (கனடா- CAD வடிவமைப்பு பொறியியலாளர்- மொரட்டுவ பல்கலைக்கழகம்), பிறேமினி (ஆஸ்திரேலியா), அருள்ராஜா (பொறியியலாளர் - பாரிய நிர்மாணப் பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களம் - கொழும்பு தலைமைக் காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹம்சினி, கிருஷாந், கிஷோர், நிலுக்ஷனன், ஹரிணி, வாசுகி, ஹரிஷ், தனுஷாந் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி-கொழும்பு 4 - தரம் 4D) ஆகியோரின் பாசமிகு பேரனும், கருணாநிதி (சூரியன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான கற்பகநாதன் (சிறி மாதவன் - யாழ்ப்பாணம்), பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா - யாழ்ப்பாணம்) மற்றும் கணேசன் (இராசு களஞ்சியம் - யாழ்ப்பாணம்), பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர்), நகுலேஸ்வரன் (கணக்காளர் - சிக்கனக் கடன் கூட்டுறவுச் சமாசம்), நிமலேஸ்வரன் (நிமலன் ஸ்ரோர்ஸ்- யாழ்ப்பாணம்), லோகேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரன் (பிரதிப் பணிப்பாளர் - தொழில்நுட்பக் கல்வித்திணைக்களம்), கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி (அதிபர்- தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம்- காரைநகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் மக்களின் அஞ்சலிக்காக சனிக்கிழமை வைக்கப்பட்டு இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/29781)(11,18,20)

தகவல்: மனைவி, பிள்ளைகள்

**077 379 6373, 077 340 5934, 011 236 2087**


Unilever
Knorr
7 நாட்களுக்கு
7 விதமான பருப்பு
Knorr
Knorr
චිකන් කියුබ්
WITH REAL CHICKEN
20g
புதிய வடிவில் வித்தியாசமான பருப்பு சாப்பிட
0722 000 666 க்கு
மிஸ்ட் கோல் கொடுத்து ரெசிபீஸ்களை தெரிந்து கொள்ளுங்கள்
ரூ.17/

# விற்றமின் மாத்திரைகளை உட்கொண்ட மாணவருக்குத் தொடர்ந்தும் சிகிச்சை

கொழும்பு, மார்ச் 6
பண்டாரவளை - பூணாகலை பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் வழங்கப்பட்ட விற்றமின் மாத்திரைகளை உட்கொண்ட மாணவர்கள் தொடர்ந்தும், வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒவ்வாமை காரணமாக வாந்தி, மயக்கம் போன்றவற்றால் கடந்த வியாழக்கிழமை 93 மாணவர்கள் பண்டாரவளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் மாணவர்கள் ஆபத்தான நிலையில் இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய, குறித்த பாடசாலை மாணவர்களுக்கு அன்று காலை உணவுக்குப் பின்னர், விற்றமின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

தரம் 8,9,10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கே அயன் மாத்திரைகள் உள்ளிட்ட விற்றமின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து அன்று பிற்பகல் சுகவீனமுற்ற நிலையில் மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பண்டாரவளைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விற்றமின் மாத்திரைகளின் மாதிரிகளை, வைத்திய ஆய்வுப் பிரிவுக்கும் அனுப்பியுள்ளனர்.

இந்த மாத்திரைகளை 2018ஆம் ஆண்டு வரை பாவிக்க முடியும் என்று கால எல்லை குறிப்பிடப்பட்டிருந்தது. (ற-ஜ)








## இந்தியாவை பின்தள்ளியது சீனா

கொழும்பு, மார்ச் 6
கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கு 57 ஆயிரத்து 269 சீனச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட 49 சதவீத அதிகரிப்பாகும். அதேவேளை இந்தியச் சுற்றுலாப் பயணிகள் முதல் இரண்டு மாதங்களில் 55 ஆயிரத்து 454 பேர் வருகை தந்துள்ளனர்.

இதுவரை காலமும் இலங்கைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளாக இந்தியர்கள் வந்திருந்த நிலையில் இந்த ஆண்டு அந்த இடத்தைச் சீனாவிடம் இந்தியா இழந்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களின் அடிப்படையில், சீனர்களே அதிகளவில் இலங்கைக்கு வந்துள்ளனர். 57 ஆயிரத்து 269 சீனர்கள் இந்த ஆண்டில் இலங்கைக்கு வந்துள்ளனர். இது 49 சதவீத அதிகரிப்பாகும்.

அதேவேளை, 55 ஆயிரத்து 454 இந்தியர்களும் இந்த ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது 29 சதவீத அதிகரிப்பாகும்.

நீண்ட காலமாகவே இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தை வகித்து வந்தது. தற்போது அந்த இடத்தைச் சீனாவிடம் இந்தியா இழந்திருக்கிறது.

இதற்கிடையே இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களிலும், 3 லட்சத்து 21 ஆயிரத்து 787 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீத அதிகரிப்பாகும்.

இலங்கை 2015 ஆம் ஆண்டு 1.79 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, 2.86 பில்லியன் டொலரை வருமானமாகப் பெற்றிருந்தது. இந்த ஆண்டில் 2.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலங்கை திட்டமிட்டுள்ளது. (ஐ-5)

## இலங்கையுடனான உறவுகளுக்கு பாகிஸ்தான் உயர் முக்கியத்துவம்

அந்நாட்டு வெளிவிவகார சிறப்பு உதவியாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
இலங்கையுடனான உறவுகளுக்கு பாகிஸ்தான் உயர் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது என்று பாகிஸ்தான் பிரதமரின் வெளிவிவகார சிறப்பு உதவியாளர் சையத் தாரிக் பதேமி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான இலங்கை புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜெயநாத் லொக்குகேத்தாகொடகேயுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தூதுவரை வரவேற்ற பாகிஸ்தான் பிரதமரின் வெளிவிவகார சிறப்பு உதவியாளர் பதேமி, அண்மையில் இரு நாடுகளின் உயர் மட்டத் தலைவர்களின் பேச்சுக்கள் மூலம் இருதரப்பு உறவுகள் மேலும் பலமடைந்துள்ளன என்று குறிப்பிட்டார். இருதரப்பு ஒத்துழைப்பை புதிய பரப்புக்கு கொண்டு செல்வதற்கும் இது உதவியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-5)

**12 மாத நிலையான வைப்பிற்கு அதிகூடிய வட்டி சம்பத் வங்கியிடமிருந்து**

# 8.5%

(A.E.R. 8.5%)

உங்கள் சௌகரியம் கருதி
வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும்
சம்பத் வங்கியின் 12 சுப்பர் கிளைகள் உள்ளிட்ட
நாடெங்கிலுமுள்ள 225 கிளைகள் உங்களுக்கு
சேவை வழங்க காத்திருக்கின்றன.

Like us on facebook.com/Sampathbankplc

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) | 0112 30 30 50 | www.sampath.lk




நாம் எதிர்பார்ப்பதை விடவும் விரைவாக வயதுமுதிர்வு வந்தடைந்துவிடும். நிஜ வாழ்வும் அதுவே! நீங்கள் உங்களின் அன்பிற்குரியவர்களுடன் ஓய்வின் பின்னரான வாழ்வினை முழுமையாக அனுபவிப்பதற்கு நிதிரீதியாக ஆயத்தமாக உள்ளீர்களா? உலகின் இரண்டாவது மிகப் பெரியதும், 90 வருடங்களுக்கு அதிகமான வரலாற்றினையும் கொண்ட ஆசியாவின் முன்னணி ஆயுள் காப்புறுதியாளரான AIA, பல ஓய்வூதிய தீர்வுகளை வழங்குகிறது. AIA வழங்கும் ஓய்வூதிய சேமிப்புத் திட்டங்கள் உங்கள் வசம் உள்ள ஓய்வூதிய சேமிப்புத் தொகைக்கும், நீங்கள் பெற விரும்பும் தொகைக்குமிடையிலான இடைவெளியை நிரப்பும். ஆகவே, தேவையான சந்தர்ப்பத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் வருமானம் மற்றும் வாழ்க்கை முறையை நெருங்கிட முடியும்.

THE REAL LIFE COMPANY

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு ரயில் பயணிகளின் உயிர்காக்க முன் வருக...

ரயில் கடவைகள் இல்லாத இடங்களில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுவது குறித்து ரயில்வே திணைக்களம் கண்டும் காணாத நிலைப்பாட்டை கையில் எடுத்துள்ளதா?

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் விபத்து ஏற்பட்டதால் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஆகப்பிந்திய ஒன்றாகும்.

நீண்ட பல வருடங்களாக யாழ்.- கொழும்பு ரயில் சேவை கைவிடப்பட்ட நிலையில், மக்களின் பயணம் நீர்த்துப் போய் இருந்தமை, பெரும் "சரித்திரமாகி" விட்டது. அது தப்பாது சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

நீண்ட இடைவெளியின் பின்னர், மகிந்த அரசின் கடைசிக் காலத்தில், யாழ்- கொழும்பு ரயில் சேவை தலைகாட்டியமை வடக்கு-தெற்குப் பயணத்தை இலகுவாக்கியது. முந்தைய காலங்களைப் போன்று காங்கேசன்-கொழும்பு ரயில் பயணம் தொடங்கப்பட்டது.

எனினும், அது முழு அளவில் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கு உகந்ததாக இருக்க்வில்லை. சாபக்கேடாகவே தடித்துப் பருத்துள்ளது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் சொற்ப காலத்தில் அனேகரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு விட்டன. பாடசாலை மாணவன், புலனங்கக் குறைபாடு உடையவர், பொறியியலாளர் என்று பல தரப்பினரையும் ரயில்ச் சேவை காவு கொண்டமை தட்டிக்கேட்கப்பட வேண்டிய கொலைச் சம்பவங்கள் எனலாம். அதற்கான முழுப்பொறுப்பையும் அரசே -- ரயில்வே திணைக்களமே -- ஏற்றுக்கொள்ள வேண்டும்.

காங்கேசன்-கொழும்பு ரயில் சேவையில், பாதுகாப்பற்ற கடவைகளே, பிரயாணிகளின் உயிர்க்கொல்லிகளாக உயர்ந்து நிற்கின்றன!

ரயில் கடவைகள் உயிர்கொல்லிகளாத மாற்றப்படுகின்றன என்றும் கருதலாம். அதனைத் தடுப்பதற்கான வழிதுறை இல்லை என்பதல்ல.

ரயில்கடவைகளில் பாதுகாப்புச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு உகந்த போதிய மனித வளம் உண்டு. அவர்களுக்கான ஊதியத்தை உயர்த்தி வழங்கினால் --

அப்பாவி ரயில் பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றலாம்.

மற்றொரு பக்கத்தைத் திருப்பிப் பார்த்தால் வடபுலத்துக்கான ரயில் சேவையின் வருமானத்தில் இருந்தே--

ரயில்க் கடவைப் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான (போதிய) ஊதியத்தை கொடுப்பனவை வழங்க முடியும். இப்போது வழங்கப்படும் ஊதியம் மிகக் குறைவானது என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் சுட்டிக் காட்டுவதை ரயில்வே திணைக்கள உயர்மட்டங்கள் உள்வாங்கி, நியாயமான கொடுப்பனவுகளை வழங்க வகை வேண்டும். அதனைத் தட்டிக்கழித்துச் செயற்பட முனையலாகாது.

ரயில் விபத்துக்கள் ஏற்படும்போது அவை குறித்துப் பேசுவதும், அதிகாரிகள் கூட்டங்களை, மாநாடுகளை நடத்துவதும்--

பின்னர் அவை குறித்து மறந்து போனவர்களாக அக்கறை காட்டாமல் போட்டுவிட்டுக் கிடப்பதும் வழமையாகிவிட்டது...!

பாதுகாப்புக் கடவைகளை விடவும் ஒலி எழுப்பும் சாதனங்களை பயன்படுத்துவது மெத்தவும் பொருத்தமானது என்றும் துறைசார்ந்தோர் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வடக்கின் ரயில் பயணிகளின் உயிர்காக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய (அவசர) பொறுப்பு நல்லாட்சி அரச அதிகாரிகளுக்கு உண்டு. அதனை அவர்கள் மறந்து விடக் கூடாது. - எதிர்பார்க்கலாமா..?

# எண்ணவே நடுங்குகிறது

## நாமலின் பழிவாங்கும் கருத்துக்களை

சேரலாதன்



ராஜபக்சமார் எவரும் குற்றம் எதுவும் புரியவில்லை, அவர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகளில் நல்லாட்சி அரசு ஈடுபடுகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நாமல் ராஜபக்ச தான் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும், தனது தம்பியாகிய யோசிதவுக்கும் சி.எஸ்.என் . தொலைக்காட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை, அவர் தமது காதலியைப் பார்ப்பதற்காக மட்டுமே குறித்த தொலைக்காட்சி ஒளிபரப்பு இடம்பெறுகின்ற வளாகத்திற்குள் சென்று வந்தார் என்றெல்லாம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதைவிட மேலுமொரு பாரதூரமான விடயத்தை அவர் தெரிவித்திருக்கிறார். நல்லாட்சி அரசில் அங்கம் வகிப்பவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர். எதிர்காலத்தில் அவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என அவர் கூறியிருக்கிறார். ராஜபக்ச குடும்பத் தில் அவர் முக்கிய இடத்தை வகிக்கின்றார் என்பதோடு நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகிக்கின்றார். அவரது தந்தையான மகிந்தவும் மக்கள் முன்பாகத் தோன்றி இவ்வாறான கருத்துக்களையே விதைத்து வருகின்றார். தாமும் தமது தரப்பினரும் எதுவுமே அறியாத அப்பாவிகள் என்பது போன்றதொரு தோற்றத்தை உருவாக்குவதில் அவர் முனைப்புக்காட்டுகிறார். இந்தநிலையில், எதிர்காலம் தொடர்பாக நாமல் ராஜபக்சகூறிய கருத்துக்கள் மகிந்த தரப்பினருக்கு எதிரான அனைவருக்குமே பொருத்தமானது.

> பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமானால் இனவாதத் தைக் கையில் எடுத்தாக வேண்டிய கட்டாய நிலை தென்பகுதியில் காணப் படுகின்றது.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவைத் தோற்கடிப்பதில் பெரும்பங்கு வகித்த சிறுபான்மையின மக்களுக்கு அதிகம் பொருத்தமானது. ஆட்சியில் இருக்கும்போது மகிந்தவும் அவரது தரப்பினரும் தமிழ்மக்களுக்கு எதிராகவே செயற்பட்டிருந் தனர். இப்போது அடிபட்ட வேங்கையாகச் சீற்றத்துடன் உலாவிவரும் மகிந்த, சிலவேளை திரும்பவும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து விட்டால் ஏற்படப்போகும் விபரீதங்களை எண்ணிப் பார்ப்பதற்கே உடம்பு நடு ங்குகின்றது. இதைத் தான் நாமலும் சூட்சுமமாகத் தெரிவித்துள்ளார்.


யோசிதவுக்கு எதிரான சகல விசாரணைகளும் பூர்த்தியான தன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டார் என்று அரசு கூறுகின்றது. ஆனால் யோசிதவின் கைது, அரசியல் பழிவாங்கல் என்று மக்களை நம்ப வைப்பதற்கு மகிந்த தரப் பினர் தீவிரமாக முயன்று கொண் டிருக்கின்றனர். இவ்வாறு மக்களைக் குழப்பமடைய வைத்து மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பது தான் மகிந்த தரப்பினரின் திட்டமாகும். இதை முறியடித்து மக்களின் மயக்கத்தைப் போக்க வேண்டியது அரசின் மிக முக்கியமான கடமையாகும்.

பிரபல விளையாட்டு வீரரான தாஜுதீன் கொலையுடன் நாமல் ராஜபக்சவுக்கு முக்கிய தொடர்பிருப்பதாகவும், அவர் விரைவில் கைது செய்யப்படுவாரெனவும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப் பட்ட கைது இடம்பெற்றால், அதுவும் அரசியல் பழிவாங்கல் தான் என்று காட்டுவதற்கான முயற்சியே நாமல் தெரிவித்து வரும் கருத்துக்களாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்றபோது தற்போதைய ஜனாதிபதி தமது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு தலைமறைவாக இருக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டது. பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமானால் இனவாதத்தைக் கையில் எடுத்தாக வேண்டிய கட்டாய நிலை தென்பகுதியில் காணப்படுகின்றது. மகிந்த தரப்பினர் தற்போது இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றனர்.

மகிந்தயுகம் மீண்டும் மலர்வதைச் சிறுபான்மையின மக்கள் ஒரு போதுமே விரும்பமாட்டார்கள். ஏனென்றால் கடந்த காலங்களில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அவர்களால் அவ்வளவு விரைவில் மறக்க முடியாதவை. அந்த மோசமான யுகம் எப்போதுமே வேண்டாம் என்பதே அவர்களது பிரார்த்தனையாகும்.

நாமல் ராஜபக்ச இப்போது கூறியிருப்பதைப் போல அவரது தந்தையோ அல்லது அவரைச்சேர்ந்த ஒருவரோ ஆட்சிக்கு வந்து தமது எதிரிகளைப் பழி வாங்குவது இடம்பெறுமானால் சிறுபான்மையினரின் கதியை எண்ணிப் பார்க்கவே மனது நடுங்குகிறது. எனவே அவர்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் இருப்பதற்காக இந்த நாட்டு மக்கள் அனைவரும் உழைத்தாக வேண்டும். அதிலும் சிறுபான்மையின மக்கள் மிகக் கவனமாக உழைத்தாக வேண்டும்.



# தன்னிலை மறக்கும் தமிழ்ச் சாதி!

அலெக்ஸ் பரந்தாமன்

கடந்த மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்றுவந்த 14 முன்னாள் போராளிகள் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களைச் சமூகத்துடன் இணைக்கும் பயிற்சிகள் முடிவடைந்ததை அடுத்து அவர்களைக் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெ.ரத்நாயக்க, புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் முன்பாக ஓர் உண்மையை உளறிக் கொட்டி விட்டிருக்கிறார்

'எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை மாத்திரமே நாங்கள் நிறைவேற்றினோம். எனவே, தமிழ் மக்கள் இராணுவத்துக்கு எதிராகக் கோபப்படவோ அல்லது வைராக்கி யப்படவோ கூடாது' என்றிருக்கிறார் அவர்.

இங்கே புனர்வாழ்வு ஆணையாளர் கூறியது போன்று, அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை மாத்திரமே அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள், அதில் சந்தேகம் ஏதுமில்லை. மாத வருமானத்துக்காக 'நாட்டின் பாதுகாவலர்' என்ற நடைமுறைக்குள் இருக்கும் அனைவரும், தகுதி தராதரமின்றி தங்களுக்கென ஒப்படைக்கப்பட்ட வேலைகளையே செய்து முடித்திருக்கின்றார்கள். அதில் சந்தேகம் ஏதும் மக்களுக்கில்லை. ஆனால், அவர் ஏன் இப்போது இந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்கினார் என்ற சந்தேகம் இருக்கிறது. புனர்வாழ்வு ஆணையாளரின் இந்தக் கூற்றானது, 'மேலிடம் சொன்னதைத் தான் நாங்கள் செய்து முடிச்சிருக்கிறம். அதாவது உங்களின் உறவுகளைச் சாகடித்தது மேலிடம்தான். அதைச் செய்ததற்காக எங்கள் மீது கோபமோ அன்றி வைராக்கியமோ கொள்ளாமல் இருங்கள்' என்று கேட்பதைப்போன்று இருக்கிறது. வன்னிப் பெருநிலப்பரப்பு இராணுவத்திடம் வீழ்ந்த பின்பு, முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் மற்றும் பாலியல் சம்பவங் கள்கூட, அவர்களுக்கென்றே (மேலிடத்தால்) ஒப் படைக்கப்பட்ட வேலை எனக் கொள்ள முடியும்.

இதேவேளை- புனர்வாழ்வு ஆணையாளர் கூறிய இன்னொரு கருத்தும் மனதைச் சற்று நெருடவே செய்கிறது.

'இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படவில்லை. தமிழ் மக்களின் ஓர் அமைப்புக்கெதிராகவே செயற்பட்டது...' என்று அவர் கூறுகிறார்.

இவரின் இந்தக் கூற்றில் எந்தளவுக்கு உண்மைத்தன்மை அடங்கியுள்ளது என்பதை, போரினுள் அகப்பட்டு வதைபட்ட மக்க ளுக்குத்தான் தெரியும். வன்னிக்கு வெளியே வாழ்ந்தவர்களுக்கு இது புரிபடாமல்கூட இருக்கலாம். ஆனால், போர் நுட்பத்தில் வல்லுநர்களான எவருக்கும் நடந்தது தமிழ் மக்களுக்கு எதிரான போர்தான் என்பதை உய்த்துணர்வது அவ்வளவு கடினமல்ல.

'போர் நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல..' எனக் கூறும் புனர்வாழ்வு ஆணையாளர், உடையார்கட்டில் அரசு அறிவித்தபாதுகாப்புவலயத்துக்குள் மக்களைத் திரளச் செய்துவிட்டு, அவர்கள் மீது ஆட்டிலறி மற்றும் பல்குழல் குண்டுகளைப் பொழிந்ததை ஓர் அமைப்புக்கு எதிரான தாக்குதலாக எப்படிக் கூற முடியும்?

'இராணுவம் தமிழ் மக்களின் ஓர் அமைப்புக்கு எதிராகவே செயற்பட்டது..' என்று அவர் சொல்ல வருவது விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டோம் என்பது தான். அவர் சொல்வதை அப்படியே எடுத்துக்கொண்டாலும்கூட, தமிழ் மக்களின் அமைப்பு என்பது தமிழர்கள்தானே, அதற்கு எதிரான போர் என்பது தமிழர்களுக்கு எதிரான போர்தானே? மக்களின் அரசு என்பதற்கும், மக்களின் அமைப்பு என்பதற்கும் பெரிதாக என்ன வித்தியாசம் இருக்கப்போகிறது? புலிகளை பயங்கரவாதிகள் அமைப்பு என்றோ ஒரு ஆயுதக் குழு என்றோ புனர்வாழ்வு ஆணையாளர் கூறவில்லையே! தமிழ் மக்களின் அமைப்பு என்றுதானே கூறியிருக்கிறார்! எனவே, தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் செயற்படவில்லை என்ற அவரது கருத்து படு அபத்தமானது.

பொறுப்பு நிலையில் உள்ள ஓர் உயரதிகாரி தன்னை நிதானப்படுத்திக் கொள்ளாமல், கள யதார்த்த நிலைமைகளை

> 'போர் நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல..' எனக் கூறும் புனர்வாழ்வு ஆணையாளர், உடையார்கட்டில் அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்துக்குள் மக்களைத் திரளச் செய்து விட்டு, அவர்கள் மீது ஆட்டிலறி மற்றும் பல்குழல் குண்டுகளைப் பொழிந்ததை ஓர் அமைப்புக்கு எதிரான தாக்குதலாக எப்படிக் கூற முடியும்?

விளங்கிக் கொள்ளாமல், எழுந்தமானமாகக் கருத்துக்களைப் பகிரங்கமான இடத்தில் உதிர்ப்பது, அவரது தூரநோக்குப் பார்வையில் உள்ள குறைபாடு.

அத்தோடு, ஆணையாளரின் இந்தப் பேச்சுக்குறித்து இதுவரை எந்தவொரு எதிர் விமர்சனங்களும் எவரிடமிருந்தும் எழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளிடம் இருந்துகூட எழவில்லை என்பது கவலையளிக்கிறது. தேசம் பற்றிப் பேசும் தமிழ்த் தேசிய முன்னணியினர் கூட ஆணையாளரின் கூற்றை ஏற்றுக் கொண்டவர்கள்போலத்தான் கடந்து போயிருக்கிறார்கள்.

குறிப்பாக, தமிழ் மக்களுக்கு தாங்களே பாதுகாவலர்கள் எனக் கூறிக் கொள்ளும், காட்டிக்கொள்ளும் இந்த அரசியல்வாதிகளும், ஊடகத்துறை சார்ந்தவர்களும், ஆணையாளரின் இந்தக் கருத்தை எதிர் வினைகள் இன்றிக் கடந்திருப்பது ஆச் சரியத்தை ஏற்படுத்துகிறது. அப்படியானால் அவர்களும் அவரது கூற்றை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுதானே எண்ணவேண்டியிருக்கிறது? இவர்கள் எல்லோரும் இப்படி 'ஊமையர்களாக' இருப்பதானது, உண்மைக்குப் புறம்பான சொல்லாடல்களை இன்னும் தோற்றுவிக்கவே செய்யும். அது மட்டுமல்ல, எதிர்காலத்தில் அவை உண்மையாக நிலைகொண்டும்விடும்.

ஊமைகள் இருக்கிற சபையில் உளறுவாய்கள் எல்லாம் பண்டிதர்கள் என்பது போல், உண்மைக்குப் புறம்பான கருத்துக்களுக்கு எதிர்வினை கூறத் தயங்குகின்ற 'உமையர்கள்' எம்மைச் சுற்றி இருக்கும் வரை, உளறுவாய்களும் தெரிந்தோ தெரியாமலோ பொது இடங்களில் தமது நிலைமறந்து உளறிக்கொட்டுவதுதவிர்க்க முடியாததொரு நிகழ்வாகவே இருக்கும்.

இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படவில்லை. தமிழ் மக்களின் ஓர் அமைப்புக்கு எதிராகத்தான் செயற்பட்டது எனும் புனர்வாழ்வு ஆணையாளரின் கருத்துக் குறித்து, அன்று அந்த நிகழ்வில் பங்கு பற்றிய 14 போராளிகளும் அவர்களது பெற்றோரும் உதடுகள் பிரியாமல் தமக்குள்ளே சிரித்திருப்பார்கள் நிச்சயமாய்!

ஏனெனில் போரையும் புலிகளையும் நன்கு அறிந்து, அனுபவித்து வாழ்ந்தவர்கள் அவர்கள்!

## சாவு ஊர்வலம் எப்படி இருக்கவேண்டும்?

மனித இறப்பென்பது இயற்கையின் நியதி. பூதவுடல், இறுதிக் கிரியை நடைபெறும் இடத்துக்கு ஊரவர், உற்றார், உறவுக்காரர் முதலியோர் உடன் செல்ல எடுத்துச் செல்லப்படும். இன்று சாவு வீடுகளுக்கு ஏனடா போனோம் என்பதாக நிலமையை மாற்றி விடுகிறார்கள். இந்துக்களின் சாவு வீடுகள் கூட 'பான்ட்' வாத்தியத்தின் இடியோசை, காதைப் பிளக்கும் வெடியோசை என்று பேரிரைச்சலுடன் நடக்கிறது. 'சாவுச் செய்தியை' ஊரவருக்கு அறிவிக்க என வந்த 'பறை மேளம்' ஊர்வ லத்தில் சந்திக்குச் சந்தி மேளக்கச்சேரியாக மாறி விடுகிறது. இவை இரண்டுமேதவிர்க்கப்படவேண்டும்.

சாவகச்சேரியில் டச்சுவீதியில் உள்ள 'சுமைதாங்கி' வீட்டுக் கந்தசாமி அண்ணாவின் சாவு ஊர்வலம் 'பான்ட்' வாத்தியமின்றி, வெடியோசை இல்லாமல் மேளக் கச்சேரியில்லாமல், குறுகிய நேரத்தில் கண்ணாடிப் பிட்டி இந்து மயா னத்தை அடைந்தது. அமைதியான முறையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. சாவு ஊர்வலத்தில் பங்குபற்றியோர் இப்படியல்லோ அமைதியான ஊர்வலம் நடைபெற வேண்டும் என வாயாரப் புகழ்ந்தனர். சாவு வீட்டிலேயும், ஊர்வலத்திலும் பொறுப்புணர்வுள்ள பெரியோர் தலைமை தாங்கி எமது பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். தமிழ் மக்கள் சந்தித்த உயிர் இழப்புக்கள், சொத்து அழிவுகளை மற ந்து விட்ட ஒரு தலைமுறையினர். சாவு ஊர்வலத்தை கேளிக்கையாகக் கொண்டாட முற்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். இந்த வேண்டுகோளை மனப்பூர்வ மாக ஏற்று முன் உதாரணமாக சமூக சேவகன், நாடக நடிகன், அன்பன் கணபதிப்பிள்ளை குணராசாவின் (குணம் அண்ணா) சாவு ஊர்வலம் மிகமிக அமைதியான முறையில், குறுகிய நேரத்தில் நடத்தி நிறைவு பெற்றது. அவரின் இறுதிக்கிரியையின் பொறுப்பாளர்கள், நிகழ்வில் பங்கு பற்றியோர் எல்லோருக்கும் நன்றி.

குழைக்காட்டான்

## சரசாலை தெய்வங்கேணி வீதியையும் திருத்துவார்களா?

சரசாலை தெய்வங்கேணி வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதைச்சுட்டிக்காட்டி கடந்த ஐந்து வருட காலமாக சாவ கச்சேரி பிரதேச சபையினருக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தட வைகள் கடிதங்களை எழுதிவிட்டோம். இந்த வருடமும் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவருக்கும் மாகாண முதல மைச்சருக்கும் கடிதம் அனுப்பப்பட்டும் அவர்கள் பதில்கூட எழுதவில்லை. மேற்படி வீதியைத் திருத்தும்படி கேட்டு மக்கள் சார்பில் கோரிக்கைக் கடிதம் அனுப்பியவரை மக்கள் காணும்போது கவலையுடன் விசாரிக்கும் நிலை தோன்றி விட்டது.

தேர்தலின்போது தேடி வந்த எவரையும் இப்போது காணவில்லை. தேர்தல் முடிந்தால் அவர்களின் பணி முடிந்து விட்டதா? வெள்ளத் திலும் குண்டும் குழியிலும் விழுந்து சாவது தான் எமது விதியா என்று மக்கள் சினந்து கொள்கிறார்கள். இந்த வீதியையும் திருத்துவார்களா?

## கனதி மிக்க செய்தியை மறுபதிப்புச் செய்வீர்களா?

20.02.2016 திகதியன்று உதயனில் பெண்கள் அணியும் உடைகளால் ஆண்கள் தலை குனியும் நிலை என்ற தலைப்பில் வெளிவந்த சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் ஐயாவின் கருத்துக் குறித்த செய்தி கனதிமிக்கது. அதனை மறுபதிப்புச் செய்வதற்கு ஆசிரியர் ஆவன செய்யவேண்டும்.

உதயன் பத்திரிகையில் வரும் மிகச் சிறிய எழுத்துக்களைத் தவிர்த்து எல்லோரும் தெளிவாக வாசிக்கக் கூடிய வகையில் எழுத்துக்களை நடைமுறைப்படுத்த ஆவன செய்யவும். அது மட்டுமல்லாது சில இடங்களில் நிறங்கள் அதிகமாகக் காணப்படுவதால் வாசிக்க முடியாது போகிறது. எனவே, அவற்றையும் கருத்தில் கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஜே.பீ.

# அரசின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கு தனித்துவம் வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 6

முப்பது வருடகாலம் நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு மனச்சுத்தமாக அரசு தீர்வு கொண்டு வந்தால், அதனை எதிர்க்கும் நோக்கம் முஸ்லிம்களுக்கில்லை. ஆனால் இந்தத் தீர்வில் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். -இவ்வாறு, கல்முனை மாநகர சபையின் பிரதி மேயரும், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவருமான ஏ.எல் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில், அரசமைப்பு மாற்றம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் கருத்து வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டித்தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது.

இத்தகைய இணைப்பு சாத்தியப்படுமானால் கிழக்கில் அமைந்துள்ள முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைத்து பெரும்பான்மை முஸ்லிம் மாகாணம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதே முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பாக அமையும்.

இத்தகைய தனி முஸ்லிம் அலகு பற்றி முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் வெளியிட்ட கருத்தை இன்று சிலர் தனிநாடு கோருவதாகக் கூட விமர்சிக்க முற்பட்டுள்ளனர்.

தென்பகுதி முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும், முஸ்லிம் காங்கிரஸ் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும் இத்தகைய விமர்சனங்களைச் செய்து வருகின்றனர். குறிப்பாக அரசியல் அடிச்சுவடி தெரியாதவர்களாகவும், அரசியல் கற்றுக்குட்டிகளாகவுமுள்ளோர், முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துவருகின்ற அரசியல் கோரிக்கைகளை விமர்சனம் செய்யப் புறப்பட்டுள்ளனர்.

முப்பதுவருடகாலப்போரில் வடக்கு,கிழக்கு முஸ்லிம்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். இங்கு முஸ்லிம் புத்திஜீவிகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டதுடன், முஸ்லிம்களின் கோடிக்கணக்கில் பெறுமதி மிக்க, அசையாச் சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன.

சொந்த நிலங்களில் இன்றும் வாழ முடியாத நிலையும், பூர்வீக விளைநிலங்களில் பயிர்செய்ய முடியாத நிலையிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஆட்சி அதிகாரத்தைப் பெறவே கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது என்பதையும், முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்துக்கு அம்பாறை மாவட்டமே அடித்தளமென்பதையும் எவரும் மறந்து விட முடியாது.

எனவே முஸ்லிம்கள் சமத்துவ ரீதியில் உரிமை பெற்று வாழ எவரும் தடையாக இருக்க முடியாது, குறிப்பாக தெற்கிலுள்ள முஸ்லிம்கள், புத்திஜீவிகள் இதனை ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தாலும் சரி, பிரிந்திருந்தாலும் சரி, முஸ்லிம்களுக்கான சுயாட்சிப் பிரதேசம் ஒன்று அமைய வேண்டுமென்பதே முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையாகும்.- என்றார். (ற-ஐ-30)

கலையெழில் வாய்ந்த புத்தாண்டு



புத்தாண்டில் உங்கள் இல்லங்களை
எழிலூட்ட லங்கா டைல்களுக்கு
15% தொடக்கம்
விலைக்கழிவுகள்

இச் சலுகையைச்
சகல லங்கா டைல்ஸ்
காட்சியறைகளிலும்
நாடெங்கிலுமுள்ள விற்பனை
முகவர்களிடமும்
பெற்றுக்கொள்ளலாம்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் போயா
தினத்திலும் திறந்திருக்கும்.
கையிருப்பு உள்ள வரை மட்டும்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

LANKATILES
கலைநயமான வாழ்க்கை

தலைமை அலுவலகம்: 215, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05. | தொலைபேசி: (+94-11) 4526700
ஜாவத்தை அலுவலகம்: 133, ஜாவத்தை வீதி, கொழும்பு 05. | தொலைபேசி: (+94-11) 3883510
மின்னஞ்சல்: info@lankatiles.com | இணையம்: www.lankatiles.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளுத்கம | 034 2272409 | ஹொரணை | 034 7451675 | மொனராகலை | 055 2277460 |
| அம்பலாங்கொடை | 091 2258288 | யாழ்ப்பாணம் | 021 2228157 | மொறட்டுவை | 011 2642355 |
| அம்பலாந்தோட்டை | 047 2225361 | ஜா-எல | 011 2244885 | நீர்கொழும்பு | 031 2234162 |
| அம்பாறை | 063 2224942 | கண்டி | 081 4475498 | நிட்டம்புவ | 033 3723981 |
| பலாங்கொடை | 045 2289996 | கடவத்தை | 011 2969993 | பாணந்துறை | 038 2240897 |
| பண்டாரவளை | 057 2221400 | கடுவெல | 011 2487791 | பேராதனை | 081 2386204 |
| பதுளை | 055 2228300 | கேகாலை | 035 2221695 | இரத்தினபுரி | 045 2232412 |
| சிலாபம் | 032 2224124 | குருநாகல் | 037 2056130 | வவுனியா | 024 2227250 |
| தம்புள்ளை | 066 2283888 | கொட்டாவ | 011 2842835 | வரக்காபொல | 035 2267506 |
| காலி | 091 2233411 | மஹியங்கனை | 055 2258550 | வாரியப்பொல | 037 2268077 |
| கம்பஹா | 033 2231810 | மாத்தளை | 066 2231042 | வத்தளை | 011 2948355 |
| கம்பளை | 081 2353126 | மத்துகம | 034 2249054 | வெள்ளவாய | 055 2055083 |
| எம்பிலிப்பிட்டி | 047 2261958 | மினுவாங்கொடை | 011 2294945 | வென்னப்புவ | 031 2255444 |


# தேங்காய் உடைப்பு போராட்டத்தின் நான்காம் கட்டம் முகத்துவாரத்தில்

கொழும்பு, மார்ச் 6

அரசுக்கு எதிராக நேர்த்திக்கடன் வைத்து தேங்காய் உடைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொது எதிர்க் கட்சியினர், நான்காம் கட்ட தேங்காய் உடைப்புப் போராட்டத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முகத்துவாரம் காளி கோயிலில் முன்னெடுத்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்தவருமான பந்துல குணவர்தன தலைமையில் நேர்த்திக்கடன் வைத்து தேங்காய் உடைக்கும் போராட்டம் இடம்பெற்றது.

ஒடுக்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும், அரசியல் சுதந்திரத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளவும் தேங்காய் உடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது என்று பொது எதிர்க் கட்சியினர் தெரிவித்தனர்.

மேல் மாகாணசபை உறுப்பினர் ஜெகத்குமாரவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. பொது எதிர்க்கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஜெகத்குமாரவும் இதில் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொது எதிரணியினர் தேங்காய் உடைத்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பந்துல குணவர்தன,

இன்று நாட்டில் ஊடகத்துறை ஒடுக்கப்பட்டு மக்களுக்குத் தமது கருத்துகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாதுள்ளது. தமிழ், சிங்களவர், முஸ்லிம்கள் எவராயினும் அவர்களின் கருத்துகளைத் தெரிவிக்க அனுமதியளிக்க வேண்டும். அதுவே, ஊடக சுதந்திரமாகும். நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதால், சகல தரப்பிலிருந்தும் அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சியடைகின்றனர்.

விவசாயிகளின் மானியம் இல்லாதொழிக்கப்பட்டு வருகிறது. இராணுவத்தினர் ஒடுக்கப்பட்டுள்ளனர். மத சுதந்திரம் நாட்டில் இல்லை. நாட்டின் சாதாரண மக்களின் அடிப்படை உரிமையான சமுர்த்தி திட்டம் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, இவ்வாறான அரசியல் ஒடுக்கு முறையிலிருந்து சுதந்திர நாட்டில் அரசியலைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (ற-ஐ-5-சி)

# அரசியல்வாதிகள் மீதான விசாரணைகள் முடிவுக்கு

## இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

பிரபல அரசியல்வாதிகள் நால்வர் மீதான முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன எனவும், விசாரணை முடிவில் அவர்கள் மீதான மேலதிக நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கப்படும் எனவும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னைய அரசில் பிரபல அரசியல்வாதிகளாக இருந்த இவர்கள் நால்வரும், மோசடியாகச் சொத்து சேர்த்துள்ளமை தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அந்த விசாரணைகள் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளன. இன்னும் சில தினங்களில் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (ற-ஐ-5-சி)



சூரியகாந்தி

# கல்வி
## எப்படி இருக்க வேண்டும்?

### பின்லாந்தின் அதிசிறந்த உதாரணம்

■ ரூபன்

பின்லாந்து என்ற நாடு நோக்கியா அலைபேசிகளின் மூலம் நமக்கு அறிமுகம். நோக்கியா நிறுவனத்தின் தாய்நாடு பின்லாந்து. ஆனால் எமக்கெல்லாம் தெரியாத சங்கதி, உலக அளவில் கல்வியின் மெக்கா என அழைக்கப்படுவதும் அதே பின்லாந்துதான் என்பது.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருந்தாலும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான டொலர் என்ற மந்திரித்த தாயத்தை வைத்திருந்தாலும், அவர்களால் கல்வியில் பின்லாந்துடன் போட்டிபோட முடியவில்லை.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு என்பது வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டமைப்பு. இதன் சார்பில் தங்கள் நாட்டு மாணவர்களின் கல்வித் திறன் குறித்த ஆய்வு அவ்வப்போது நடைபெறும். இதற்கு சர்வதேச மாணவர் மதிப்பீட்டு நிகழ்ச்சி (PISA - Programme for International students Assessment) என்று பெயர்.

மற்ற நாடுகள் விருப்பப்பட்டால் இதில் சேர்ந்துகொள்ளலாம். இந்த ஆய்வில் உலகின் மற்ற நாடுகள் பின்வரிசையில் இருக்க; பின்லாந்து எப்போதும் முன்வரிசையிலேயே இடம் பிடிக்கிறது.

அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்விமுறையில்?

➔

# கல்வி எப்படி இருக்க வேண்டும்?

பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பாடசாலைக்குச் செல்லத் தொடங்குகிறது. ஒன்றரை வயதில் 'ப்ளே ஸ்கூல்', இரண்டரை வயதில் நேர்சரி, மூன்று வயதில், நான்கு வயதில் நேரம் அதிகமான நேர்சரி என்ற சித்திரவதை அங்கே இல்லை.

கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பாடசாலையில் அமரும் எந்த அவசரமும் அங்குள்ள குழந்தைகளுக்கு இல்லை. எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான்.

இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால் அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை. ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாள்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாள்கள் விடுமுறை. ஒவ்வொரு நாளும் பாடசாலை இயங்கும் நேரமும் குறைவுதான்.

அந்த நேரத்திலும்கூட படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டுக்கும் உண்டு. ஒவ்வொரு பாடசாலையிலும் ஓர் ஓய்வறை இருக்கும். படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.

முக்கியமாக, 13 வயது வரை பிள்ளைபோடும் தரம் பிரிக்கும் கலாசாரம் கிடையாது; 'ரிப்போர்ட்' தந்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறையும் கிடையாது. தங்கள் பிள்ளையின் கற்றல்திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் எனப் பெற்றோர்கள் விரும்பினால் தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் போட்டியும் பதற்றமும் மாணவர்களுக்கு இல்லை. சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை. இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப் பாடம் செய்து வரலாம்.



ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல் நிலையை தனிப்பட்ட முறையில்கவனித்துஆலோசனைகள் வழங்குவார். ஒரு பாடசாலையில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம்; அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது. முக்கியமாக பின்லாந்தில் தனியார் பாடசாலைகளே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். கோடீஸ்வரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும்... அனைவரின் குழந்தைகளும் ஒரே பாடசாலையில்தான் படிக்கவேண்டும். என் பிள்ளை "இன்டர்நஷனல் ஸ்கூல்ல படிக்கிறான்" என எவரும் பெருமைப்படமுடியாது. அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி அங்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர். அதில் 94 சதவிகிதம் பேர் உயர் கல்விக்குச் செல்கின்றனர். இலங்கையில், பாடசாலைக் கல்வியை முடிப்பவர்களிலேயே 12 வீதம்பேர்தான் உயர்கல்விக்குச் செல்கிறார்கள் என்பதுடன் இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். மலையளவு வித்தியாசம் புரியும். 'ரியூசன்' என்ற அருவருப்பான கலாசாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை. பரீட்சைகளை அடிப்படையாகக் கொள்ளாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான் உலக அளவில் நடைபெறும் பல்வேறு பரீட்சைகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர். இது எப்படி என்பது கல்வியியலாளர்களுக்கே புரியாத புதிர்.

அந்தப் புதிருக்கான விடையை, ஐ.நா. சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது.

உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

பின்லாந்து கல்விமுறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியியலாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர். அந்த நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது.

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியியலாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை. "பின்லாந்து கல்விமுறைதான் (Finnish Education system) உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. சர்வதேச மாணவர் மதிப்பீட்டு நிகழ்ச்சி ஆய்வில் எல்லா நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒரு முடிவை வந்தடைய முடியாது. எங்களைவிட சிறந்த கல்விமுறையும் இருக்க முடியும்" என்கிறார்கள் தன்னடக்கத்துடன். நிறைகுடம் தளும்பாது என்று இதைத்தான் சொல்லியிருப்பார்கள் போலும்–

இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமையாளர்கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை; மதிக்கத்தக்க மனநிலை. கல்வியில் இருந்து நாம் பெறவேண்டிய சாராம்சம் இதுதான். இத்தகைய சிறந்த கல்விமுறையை உருவாக்கியதிலும் பராமரிப்பதிலும் பின்லாந்தின் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. சொல்லப்போனால் பின்லாந்து ஆசிரியர்கள்தான் இதற்கு முழுமுதல் காரணம். பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் எஸ்.எல்.ஏ.எஸ். பணிபோல மிகுந்த சமூக மதிப்பு உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ்நாள் இலட்சியம். அதேநேரம் அங்கு ஆசிரியராவது அத்தனை சுலபம் அல்ல! உயர் வகுப்பில் முதல் 10 இடம் பிடிக்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். பயிற்சி ஐந்து ஆண்டுகள் தொடரும். உறைவிடப் பாடசாலைகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் இராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பாடசாலைகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி. ஏதாவது ஒரு பாடத்தில் திட்டத் தயாரிப்பு, குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ், தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று... என ஆசிரியர் பயிற்சியை முடிக்க சுமார் ஏழு வருடங் களைச் செலவிடவேண்டும்.

இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது!

### தாய்மொழி கல்விதான் சிறந்தது!

2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையிலும் பின்லாந்தின் கல்வி அமைச்சராக இருந்த ஹென்னா மரியா விர்க்குனன் (Henna maria virkkunen), பின்லாந்தின் கல்விமுறை குறித்து www.hechingerreport.org என்ற கல்வி இணைய இதழுக்கு அளித்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்...

"பின்லாந்து ஆசிரியர்கள் சிறப்பாகச் செயல்படுவது எப்படி?"

"பின்லாந்தில் ஆசிரியர் பணி மிகவும் மதிப்புமிக்க இடத்தில் இருக்கிறது. இளைஞர்கள் ஆசிரியராவதைத் தங்கள் இலட்சியமாகக் கொண்டுள்ளனர். ஆசிரியர் பயிற்சி படிப்பு, பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் அது ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது.

ஆசிரியர்கள் கற்பித்தலில் புதிய உத்திகளைக் கையாளலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. அதேபோல, எங்கள் கல்விமுறை நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்டது. பாடசாலைகளில் ஆய்வு நடைபெறும் என்றாலும் அதன் நோக்கம், ஆசிரியர்களைக் கண்காணிப்பது அல்ல; கல்வி நிலையை மேம்படுத்துவதாகவே இருக்கும். நாம் எல்லோரும் மனிதர்கள். நம்பிக்கைதான் அடிப்படையாக இருக்க வேண்டும்."

"பின்லாந்தில் புலம்பெயர்ந்து வரும் அகதிகளின் குழந்தைகளுக்கு எவ்வாறு போதிக்கப்படுகிறது?"

"எங்கள் நாட்டில் அகதிகள் குறைவு. ஹெல்சின்கி (Helsinki) என்ற பகுதியில் அதிகபட்சமாக 30 சதவிகித மாணவர்கள் புலம்பெயர்ந்தோர். பலவீனமான கல்வி மற்றும் சமூகப் பின்னணியில் இருந்துவரும் இவர்களை, வழக்கமான பாடசாலைகளுக்கு அனுப்பும் முன்பாக, ஒரு வருட காலம் சிறப்புப் பாடசாலைகளுக்கு அனுப்பி தயார்ப் படுத்துகிறோம். அதைப்போலவே புலம்பெயர் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியைக் கற்பிப்பதில் முனைப்புடன் இருக்கிறோம். தாய்மொழி யைப் பயில்வதன்மூலம்தான் ஒரு குழந்தை உண்மையான கல்வியைப் பெற முடியும். ஹெல் சின்கி பகுதியில் 44 வேறுபட்ட தாய்மொழி களைக்கொண்ட புலம்பெயர் குழந்தைகள் படிக்கி றார்கள். அவர்களுக்கு 44 மொழிகளில் கற்பிக்கப் படுகிறது. எங்களுக்கு இது சவாலான வேலைதான். என்றாலும் அவர்கள் தமது தாய்மொழியைக் கற்பது மிகவும் அவசியம். தாய்மொழியில் சரியாக எழுத, பேச, படிக்க, சிந்திக்கக் கற்றுக்கொள்ளும்போதுதான் பின்னிஷ் (Finnish- பின்லாந்து மொழி), ஆங்கிலம் போன்ற மற்ற மொழிகளைச் சரியாகப் படிக்க முடியும்."

"பின்லாந்து கல்விமுறையில் இருந்து மற்ற நாடுகள் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?"

(37ஆம் பக்கம் பார்க்க)

# பகடைக் காயாகும் குடிதண்ணீர் பிரச்சினை

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் மருதங்கேணியிலிருந்து கடல் நீரைச் சுத்தப்படுத்தி யாழ். குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்துக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் அமைப்பு உட்பட சில அமைப்புகள் போராட்டத்தை ஒருங்கிணைத்திருந்தன. கடல் நீரைக் குடிதண்ணீராக்கும்போது, திரும்பவும் விடப்படும் நீரில் உப்புச்செறிவு அதிகமாக இருப்பதால் அந்தப் பகுதியின் மீன்வளம் பாதிக்கப்படுமென மீனவர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர். ஆனால் அந்தத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் இந்தத் திட்டத்தால் பாதிப்பு எதுவும் ஏற்படாதெனவும் உப்புச் செறிவுகூடிய நீர்க்குழாய்கள் மூலம் 3 கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் விடப்படுமெனவும் தெரிவித்திருந்தனர்.

யாழ்ப்பாண மக்கள் சர்வதேசத் தரத்துக்குக் குறைவான மட்டத்திலான நீரையே அருந்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் குடிதண்ணீர் விநியோகம் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

கடைசியாக இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் இந்தப் பிரச்சினை தொடர்பாக போராட்டங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கும் அப்பால் வேறு ஒரு இலக்கை நோக்கியே மேற்கொள்ளப்படுவதாக சந்தேகம் கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே யாழ். குடாநாட்டின் குடிதண்ணீர்த் தேவைக்கு இரணைமடுக் குளத்திலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டுவரும் திட்டம் முன்வைக்கப்பட்டது. இந்தத் திட்டம் கிளிநொச்சி விவசாயத்தையும் குடிதண்ணீர்த் தேவையையும் பாதிக்கும் என்பதால் கிளிநொச்சி விவசாயிகள் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் காரணமாக இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தை நிறுத்துமாறு பரிந்துரை செய்ததாக வடக்கு மாகாண சபையால் அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து வடக்கு மாகாண விவசாய அமைச்சால் இந்தத் திட்டம் மூன்று பகுதிகளாக நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இரணைமடுக் குளக்கட்டை உயர்த்தி அதன் நீர்ப்பிடிப்புக் கொள்ளளவை அதிகரிப்பது. கடல் நீரை நன்னீராக்கி குடிதண்ணீர் பெறுவது. யாழ்ப்பாண நகரம் உள்ளிட்ட தேவையுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் மற்றும் கழிவகற்றலை மேற்கொள்வதற்கான விநியோக வழியை ஏற்படுத்துவது ஆகியனவே அந்த மூன்று திட்டங்களுமாகும்.

யாழ். குடாநாட்டின் குடிதண்ணீர்த் தேவைக்கும் கடல் நீரைக் குடிதண்ணீராக்கி வழங்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. இப்போ மருதங்கேணியில் தொடக்கப்படவுள்ள அந்தத் திட்டத்துக்கு எதிராகவே போராட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கடந்தவாரம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள், யாழ். குடாநாட்டுக்கு இரணைமடு நீரைக் கொண்டு வருவதற்கான நியாயப்பாட்டுடன் மருதங்கேணி கடல் நீரைக் குடி தண்ணீராக்கி விநியோகிக்கும் திட் டத்தைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளைத் தொடர்பு படுத்தியமையைக் காணக் கூடியதாக இருந்தது. இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆதரித்து அதிகாரிகளும் அங்கு கருத்துத் தெரிவித்தமையைக் காணமுடிந்தது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடல்நீரைக் குடிதண்ணீராக்குவது செலவுகூடியது எனவும் விரைவில் மாற்று ஏற்பாடு செய்யப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கமோ முன்னைய திட்டத்தைக் கைவிட்டது தவறு என்றும் கடலில் சென்று கலக்கும் இரணைமடு நீரையென்றாலும் யாழ்ப்பாணம் கொண்டு வரலாம் எனவும் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா குடிதண்ணீர்ப் பிரச்சினையால் இனத்தையே அழிக்கவும் துணிந்து விட்டோம் எனக் கூறியுள்ளார்.

> வடக்கின் சுயபொருளாதாரத் தனித்துவத்தைக் குறைத்தல் கிளிநொச்சியைச் சிங்களமயப்படுத்தல். யாழ். குடா நாட்டு நீர் தொடர்ந்து உவராவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காது அதைப் பாலைவனமாக்கல் போன்ற பெரும் தமிழ் இன விரோத, இனஅழிப்பு நடவடிக்கைகளின் நீண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பகடைக் காயாக யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப் பிரச்சினை கையாளப்படுகிறது. இவற்றைப் புரிந்து கொண்டு தூர நோக்குடனும் மக்கள் நல நோக்குடனும் செயற்படுவது ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதியினதும் கடமை.

நிரந்தரமான மாற்று ஏற்பாடு, மழை காலத்தில் கடலில் கலக்கும் நீரையாவது யாழ்ப்பாணம் கொண்டு வரலாம், முன்னைய திட்டம் கைவிடப்பட்டது தவறு, குடிதண்ணீர்ப் பிரச்சினையால் எமது இனமே அழியப் போகிறது ஆகிய கருத்துக்களின் பின்னால் இரணைமடு நீரைக் குடிதண்ணீராக யாழ்ப்பாணம் கொண்டு வரவேண்டும் என்ற அழுத்தம் இழையோடியுள்ளதை அவதானிக்க முடியும்.

யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியின் உண வுத் தேவையின் பெரும் பகுதியை நிறைவு செய்வதும் முழுமையாகத் தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய விவ சாய பூமியும் கிளிநொச்சி மட்டுமே. இரணைமடு நீரின் பற்றாக்குறை காரணமாக சிறுபோகத்தில் அரைவாசி நிலமே செய்கை பண்ணப்படுகின்றது. வடக்கின் அரிசித் தன்னிறைவுக்கு இரணைமடுவும் அதன் கீழான விவசாயமும் பாதுகாக்கப்படவேண்டும்.

இந்தத் தூரநோக்கோடுதான் இரணைமடு தொடர்பான எந்தத் திட்டமும் அணுகப்படவேண் டும். அதைவிடுத்து இந்த விடயத்தை மிகக் குறுகிய மனப்போக்குடனோ, அல்லது அதிகாரிகள் சொல்வது போல உடனடித் தீர்வுகளுக்கான வழிகளாகவோ அணுகக்கூடாது.

மழைகாலத்தில் நீர் கடலில் கலக்கிறது என்றால் அங்கு வரும் முழு நீரையும் தேங்கி வைக்க குளத்தின் கொள்ளளவு போதாமலுள்ளது என்பதே பொருள். எனவே அணையை உயர்த்துவதால் மட்டுமே இந்த நீரைச் சேகரிக்க முடியும்.

போர்க் காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிர தேசங்களில் பெரும் பொருளாதாரத் தடையின் மத்தியிலும் மக்கள் அரிசி யின்றி வாடவில்லை. காரணம் இரணை மடு, கட்டுக்கரை போன்ற குளங்களின் நீரால் மேற்கொள்ளப்பட்ட விவசாயமே உணவில் ஓரளவுக்காவது தன்னிறைவை ஏற் படுத்தியது.

போர் முடிந்த பின்பு கொழும்பு அரசு வன்னியின் சுயபொருளாதார நிறைவு நிலையைக் குறைத்து வடபகுதி மக்கள் உணவுக்குத் தென்னிலங்கையில் தங்கிநிற்கும் வகையில் நிலமையை உருவாக்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் நிலையில் தமிழ்த் தலைவர்களும் அதற்குத் துணைபோகும் விதத்தில் செயற்படக்கூடாது. உணவுத்தன்னிறைவு நிலையை நாம் கைவிடுவது என்பது எமது இறைமையைக் கைவிடுவதற்கு ஒப்பானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே இரணைமடுத் திட்டத்தைச் செயற்படுத்தவேண்டுமாயின், முதலில் அங்குள்ள விவசாயிகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் – அவர்களுக்குத் தேவையான தண்ணீரை விநியோகிக்கும்

(44 ஆம் பக்கம் பார்க்க)





# ஐ-போன் அரசியல்!

பகீரதன்

ஐந்து அங்குல உயரமும், மூன்று அங்குல தடிமனும் கொண்ட ஓர் ஐ-போனை மைய மாக வைத்துதான் கடந்த சில வாரங்களாக அமெரிக்காவில் அரசியல் சூறாவளி சுழன்று கொண்டிருக்கிறது.

தனிமனித உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் பெயர்போன நாடு அமெரிக்கா. ஓர் ஐ-போன் ஏற் படுத்திய பிரச்சினையால் தனிமனித உரிமைகளா, தேசப் பாதுகாப்பா? இரண்டில் எது முக்கியம் என்ற விவாதம் இப்போது அமெரிக்க அரசியல் களத்தில் முக்கியப் பிரச்சினையாகியுள்ளது.

அமெரிக்காவின் கலி-போர்னியா மாகாணத்தில் கடந்த ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற பயங்கரவா தத் தாக்குதலில் இருந்துதான் இந்த விவகாரம் தொடங்கியது. கலிஃபோர்னியாவின் சான்பெர்னார்டி னோவில் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற, பாகிஸ் தானைப் பூர்வீகமாகக் கொண்ட ரிஸ்வான் ஃபரூக் தம்பதியினர் கண்மூடித்தனமாக துப்பாக்கியில் சுட்டதில் 14 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து, அமெ ரிக்க பொலிஸாரால் அத்தம்பதியினர் சுட்டுக் கொல் லப்பட்டனர்.

இதில், ரிஸ்வான் பயன்படுத்திய அப்பிள் ஐ-போன்-மூலம் இந்த சம்பவத்தில் துப்புத்துலக்க அமெரிக்க புலனாய்வு அமைப்பினர் (எ-ப்.பி.ஐ.) முயற்சித்தனர். ஆனால், ஐ-கிளவுட் கடவுச் சொல்லை முறியடித்து ஐ-போனில் உள்ள, தகவல்களைப் பெற முடியவில்லை.



இதையடுத்து, அந்த ஐ-போனை' தயாரித்த அப்பிள் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியை எ-ப்.பி.ஐ. நாடியது. ஐ-போன்களில் மறையாக்கம் (என்கிரிப்சன்) செய்யப்பட்ட தகவல் களைத் தாங்கள் தெரிந்துகொள்ளும் வகை யில் மென்பொருளைத் தயாரித்துத் தர வேண்டு மென்றும் எ-ப்.பி.ஐ. கோரியது. இதற்கு ஆதரவாக, நீதிமன்ற உத்தரவும் பெறப்பட்டது. ஆனால், ஐ-போன்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் அதில் வைத்துள்ள இரகசியத் தகவல் களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்கள் நிறுவனத்துக்கு உண்டு, எந்தவகை ஐ-போன் களிலும் உள்ள தகவல்களை எ-ப். பி.ஐ. தெரிந்துகொள்ள முடி யும் என்ற நிலை ஏற் பட்டால், நிறுவனத்தின் நம்பகத்தன்மை பெரி தும் பாதிக்கப்படும் என்று கூறி அந்த கோரிக் கையை ஏற்க அப்பிள் நிறுவனம் மறுத்துவிட் டது.

இப்போது விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென் றுள்ளது. விசாரணை அமைப்புகள் தங்களுக்கு உதவுமாறு தனியார் நிறுவ னங்களைக் கட்டாயப்படுத்த முடியாது என்ற சட்டப் பிரிவையும் அப்பிள் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இதைத் தொடர்ந்து, தனியுரிமை காக்கப்படுவதற்கு ஆதரவாகவும், தேசப் பாதுகாப்புதான் முக்கியம் எனவும் இரு பிரிவாக அமெரிக்காவில் இரு அணிகள் திரளத் தொடங்கியுள்ளன.

> ஐ-போன்களை பயன் படுத்தும் வாடிக்கை யாளர்கள் அதில் வைத்துள்ள இரகசியத் தகவல் களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்கள் நிறுவனத்துக்கு உண்டு. எந்த வகை ஐ-போன்களிலும் உள்ள தகவல்களை எ-ப்.பி.ஐ. தெரிந்துகொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டால், நிறுவனத்தின் நம்பகத்தன்மை பெரிதும் பாதிக்கப்படும் என்று கூறி அந்த கோரிக்கையை ஏற்க அப்பிள் நிறுவனம் மறுத்துவிட்டது.

முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் அதிகாரிகள் அப்பிள் நிறுவனத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில், அரசியல் வாதிகள் பலர் தேசப் பாது காப்பு என்று வரும்போது தனியுரிமை பாது காப்பைவிட்டுக்கொடுக் கலாம் என்று வாதி ட்டு வருகின்றனர்.

முக்கியமாக, கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, முகப் புத் தக நிறுவுநர் மார்க் ஜுக்கர்பர்க் ஆகியோர் அப்பிள் நிறுவனத் துக்கு தங்கள் ஆதர வைத் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில், அமெ ரிக்க அரசுக்கு அப்பிள் நிறுவனம் ஒத்து ழைப்பு அளிக்க வேண்டுமென்று மைக்ரோசாப்ட் நிறுவுநர் பில் கேட்ஸ் கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தை முழுமையாக விசாரித்து முடிவை அறிவிக்க அரசு ஒரு விசாரணைக்குழு அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார் அப்பிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி டிம் குக். இது தவிர, வாடிக்கையாளர்கள், பொது மக்களின் ஆதரவைத் திரட்டும் வகையில், அரசின் உத்தரவை ஏற்க அப்பிள் நிறுவனம் தயங்கு வதற்கான காரணங்கள் என்ற தலைப்பில் அப்பிள் நிறுவனம் தனது இணையதளத்தில் பக்கம் பக்கமாக விளக்கமளித்துள்ளது.

முக்கியமாக, மறையாக்கம் (என்கிரிப்சன்) செய்யப் பட்ட தகவல்களைத் தெரிந்துகொள்ளும் வகையில் புதிய மென்பொருளைத் தயாரித்து தங்களுக்குத் தர வேண்டுமென்று எ-ப்.பி.ஐ. கோருகிறது, இது மிகவும் அபாயகரமான விடயம். இதன் மூலம் எந்த ஐ-போனில் உள்ள தகவல்களையும் அவர்கள் எளி தாகஎடுத்துவிட முடியும். எனவே, வாடிக்கையாளர்கள் தங்கள் ஐ-போன் களில் வைத்திருக்கும் ரகசியங் களைக் காப்போம் என்ற எங்கள் நிறுவனத்தின் முக்கிய வாக்குறுதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கூறி யுள்ளது. பயங்கரவாதி பயன்படுத்திய ஐ-போனில் மட்டும் புதிய மென்பொருளைப் பயன்படுத்துவோம், அதன் பிறகு அதனை அழித்துவிடலாம் என்று எ-ப்பி.ஐ. கூறுவதை ஏற்க அப்பிள் நிறுவனம் தயாராக இல்லை.

இதனிடையே, அமெரிக்காவில் இப்போது அதிரடி அரசியல்வாதியாக உருவெடுத்துள்ளவரும், அமெ ரிக்க அதிபர் பதவி வேட்பாளர் போட்டியில் முன்னணி யில் உள்ள குடியரசுக் கட்சியின் முன்னணித் தலை வருமான டொனால்ட் டிரம்ப் இந்த விவகாரத்தையும் கையில்எடுத்தார். அப்பிள்நிறுவனம் அமெரிக்க அரசுக்கு ஒத்துழைக் கும் வரை அந்த நிறுவனத்தின் தயாரிப் புகளை அமெரிக்க மக்கள் அடியோடு புறக்கணிக்க வேண்டும்- என்று அவர் கூறியுள்ளது அப்பிள் நிறுவ னத் துக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரத்தில், அப்பிள் நிறுவனத்துக்கு எதிரான டொனால்ட் டிரம்ப்பின் இந்தக் கருத்தும், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் அப்பிள் ஐ-போன் மூலமாகத்தான் அவரது ஆதரவாளர்களால் பகிரப்பட்டது என்பது நகைமுரண்.



## சாகாத சீதனம் சாகாதா....?

மாப்பிள்ளையாகி
மாங்கல்யம் காக்க
மண் கேட்டு பொன் வாங்கி
பெண்ணெடுக்கும் வாலிபனே

நிறத்துடன் நற்குணம் படைத்த
சிறப்பான பெண் வேண்டும்
உயர் படிப்புடன்
சொத்துச் சுகமும் வேண்டுமோ!
சீர்வரிசை யென்று - உன்
சீவியத்தைப் போக்க
ஆணான நீ எண்ணுகிறாயோ

பிச்சைப்பாத்திரம் போல்- உன்னை
மாப்பிள்ளையாக்கி
மல்லுக் கட்டுகிறார்கள்
மங்கையை வைத்து

படிப்புக்கு ஒரு கோடி
பட்டம் பெற்றால் சில கோடி
புலத்திலிருந்தால் பல கோடி
கேடிகளுக்கு கோடி கொடுத்தால் -
குடும்பமெதற்கு

நிபந்தனைகள் ஏராளம் -நிவர்த்தி
பண்ணினால் தாராள மனத்துடன்
ஏற்பார் மணமகளை - அதையே
அவள் கேட்டால் உன்கதி

உனக்குமொரு நாள்
இந்நிலை வரலாம் - அன்று
புரியும் பெண் நிலை
மண்ணின் மகிமையும் - மக்களின்
உரிமையும் பெண்ணின் பெருமையும்
காக்கும் எம்மினத்திற்கு
கறை சாற்றுகிறாயோ!
சீதனப் போர்வைக்குள்
பெண்ணின் விலை - இன்
நிலை மாற என்ன விலை?

உழைப்பின்றி பிழைப்புத்
தேடி
பெண்ணை வளைத்துப்
போட்டு
உழைக்கும் கூட்டத்தை
க்லைக்க வேண்டும்
எம் மண்ணிலிருந்து

கொட்டடி கோமகன்



> செய்திப் பத்திரிகைத்துறைக்கு என்னதான் போட்டிகளும் சவால்களும் எழுந்தாலும் அவைகளுக்கும் வாசகர் களுக்கும் இடையில் உள்ள உறவு-பாசம்-பந்தம் தொட ரும்-இலகுவில் மறைந்து விடாது

# நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் சவால்கள்

ரம்யன்

தொலைக்காட்சியானது நாட்டின் மிகப்பெரிய தலைவர்களை, சமயப் பெரியார்களை ஏன் மிகப் புகழ் பெற்ற நடிகர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரையும் நேரடியாகக் கொண்டு வந்து கண்முன்னிறுத்தி விடுகின்றது என்பது மட்டுமல்ல எமது சொந்த வீட்டில் சோபாவில் விட்டேத்தியாக அமர்ந்து கொண்டு அவர்களைப் பார்க்கவும் அவர்கள் பேசுவதை, பாடுவதை கேட்கவும் உதவுகின்றது அல்லவா? இது பலபக்கங்களில் எழுதப்படும் தகவல் செய்திகளைவிடப் பல கோணங்களிலான நிழற்படங்களால் காட்டப்படும், வழங்கப்படும் செய்திகளாக அமைகின்றன. எதுவானாலும் அவை ஒரு குறிப்பிட்ட நேர அளவில்தான் வழங்கப்படும். ஆனால் செய்திப் பத்திரிகைகள் பல விவரங்களை, புள்ளி விவரங்களையெல்லாம் விளக்கமாகத் தருகின்றன. பின்னர் பயன்படுத்தக் கூடியவைகளை நாம் சேக ரித்துப் பாதுகாத்துக் கொள்ளலாம். மேலும் முக்கியமான பிரதான விடயங்கள், சம்பவங்கள் தொலைக்காட்சியில் குறிப்பிட்ட அளவில் குறிக்கப்பட்ட நேரத்துக்குள் வழங்கப்படுவதாக இருக்கும். ஆனால் எம் சுற்றாடல்களில் மட்டுமன்றி வெவ்வேறு இடங்களிலும் இடம்பெறும் மிகச்சிறிய விடயங்களையும்கூட தெளிவாகவும் விவரமாகவும் பத்திரிகைகளால் வழங்க முடிகின்றது. அதனைக் குறிக்கப்பட்ட நேரத்தில் அன்றி நாம் விரும்பும் நேரத்தில் வாசித்து அறிந்து கொள்ளமுடியும். உங்களுக்குத் தேவைப்படும் பகுதியை பத்திரிகைகளில் இருந்து வெட்டியும் வைத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப காலத்தில் ஊரில் உலகத்தில் நடப்பவைகளை பதிவு செய்து கொள்ளும் சாதனமாகவே பத்திரிகைகள் இருந்துள்ளன. அதே நிலைமை இன்றும் நீடிப்பதைக் காண்கிறோம். இப்பொழுது டிஜிற்றல் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருவதன் காரணமாக அச்சு ஊடகங்கள் குறிப்பாக செய்திப் பத்திரிகைகளின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே காணப்படுவதாக ஆய்வாளர்கள் அவ்வப்போது கருத்து வெளியிட்டு வருகின்றார்கள். செய்திகளை விவரமாக, விரிவாக அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் இந்தக் காலத்தவர்கள் மத்தியில் வெகுவாகக் குறைந்து காணப்படுவதும் பத்திரிகைகளை மினக்கெட்டு வாசித்து நேரத்தைப் போக்க வேண்டாம் என்ற மனப்பான்மை உருவாகியுள்ளது. பத்திரிகைகளை ஆறஅமர்ந்து வாசித்துக் கொண்டிருப்பதற்கு இப்போதைய அவசர யுகத்தில் நேரமும் காலமும் கிடைக்காமையும்கூட காரணமாக அமையலாம்.

இணையம், அலைபேசிகள் மற்றும் முகநூல் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் செய்திகளை அறிந்துகொள்ளக்கூடிய வசதிகள் அதிகரித்து வருகின்றன. தொழில் பார்க்கும் இடங்களுக்குச் செல்லும் வழியிலேயே இந்த நவீன சாதனங்களின் மூலம் செய்திகளை அறிந்து கொள்ளும் வசதிகள் இருக்கின்றன.

எதுவானாலும் செய்திப் பத்திரிகைகளில் அவைகளை வாசித்தறியும் ஆர்வமானது இலகுவில் மக்களிடமிருந்து மறைந்துவிடும் என்று கூறிவிட முடியாது. இன்று நவீன தொழில்நுட்பத்தில் மிக உன்னதநிலையில் இருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலேயே செய்திப் பத்திரிகைகளுக்குரிய மதிப்பும், வாசகர் தொகையும் குறைந்து விட்டதாகக் கருதமுடியாது. அங்குள்ள பத்திரிகைகள் சமூகத்தின் நலனுக்காக பணிபுரியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் போன்று பார்க்கப்படுகின்றன. அவைகள் மக்களால் தெரிவு செய்யப்படாவிட்டாலும் மக்கள் பிரதிநிதிகள் போன்று அவைகளின் பிரதிநிதிகளுக்கு நாடாளுமன்றம், நகர சபைகள், மாநில சபைகள் போன்ற மக்கள் மன்றங்களிலும் பொது வைபவங்களிலும் தனியான இடம் ஒதுக்கப்பட்டு அவர்களின் பணிக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளுக்கு மட்டுமன்றி நாட்டில், நகரில், கிராமத்தில் நடக்கும் சம்பவங்கள் மற்றும் அரசியல் போக்குகள் தொடர்பாக பத்திரிகைகள் வெளியிடும் கருத்துக்களுக்கு அரசுகளும் ஏனைய சபைகளும் மதிப்பளிக்கின்றன. எனவேதான் பிரிட்டன் போன்ற நாடுகளில் பத்திரிகைத் துறை நான்காம் பீடம் அல்லது மன்றம் (Fourth Eslate) என்று அழைக்கப்படுகின்றது.

செய்திப் பத்திரிகைத்துறையானது சில அறிஞர்கள் கூறுவதுபோல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மேற்கு நாடுகளில் படிப்படியாக காலப்போக்கில் மறைய நேர்ந்தாலும் அந்த மறைவு ஏற்பட வெகு காலம் பிடிக்கும் என்பதே உண்மை. அதுவும் வளர்ந்து வரும் மற்றும் பின்தங்கிய நாடுகளில் செய்திப் பத்திரிகைத்துறையானது இலகுவில் மறைந்துவிடாது என்பதுடன், இந்த நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் ஒரு தவிர்க்கமுடியாத இன்றி அமையாத அடித்தளமாகப் பத்திரிகைகள் நீடிக்கும் என்று நம்பலாம்.

பத்திரிகைகளில் காணப்படும் இன்னுமொரு முக்கிய அம்சம் என்னவென்றால் ஒரு வாசகர் அதில் காணப்படும் ஒரு விடயத்தில் அக்கறை கொள்கிறார், அல்லது பின்னர் தமக்கு தேவைப்படும் என்று நினைக்கிறார் என்றால் அந்த விடயத்தை மட்டும் வெட்டிப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். சில சமயம் அந்த விடயம் சரித்திர முக்கியத்துவம் மிக்கதாகவும் இருக்கலாம். வாசகர் விரும்பினால் தாம் வெட்டி வைத்துக் கொள்ளும் பத்திரிகைத் துணுக்கில் அது நிகழ்ந்த திகதி, இடம் மட்டுமன்றி அது வெளிவந்த பத்திரிகை அச்சிடப்பட்ட திகதியையும்கூட குறித்து வைத்துக் கொள்ளலாம்.

பத்திரிகையானது இவ்வாறெல்லாம் உதவியாக இருப்பதால்தான் இன்றைய செய்தி நாளைய வரலாறு என்று பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள் போலும். பத்திரிகைகள் மூலம் வாசகர்களுக்குக் கிடைக்கும் இன்னுமொரு வசதி என்னவென்றால் ஒரு விடயத்தில் தமக்கு ஓர் அபிப்பிராயம் ஏற்படுமானால் அது பற்றி அந்தப் பத்திரிகைக்கு அவர் எழுத முடியும். அவசியமானால் அந்த அபிப்பிராயத்தை பத்திரிகை ஆசிரியர்கள் தமது பத்திரிகையில் வெளியிட்டு ஏனையவர்களும் அறியும்படி செய்து விடுவார்கள். எனவே செய்திப் பத்திரிகைத்துறைக்கு என்னதான் போட்டிகளும் சவால்களும் எழுந்தாலும் அவைகளுக்கும் வாசகர்களுக்கும் இடையில் உள்ள உறவு-பாசம்-பந்தம் தொடரும்-இலகுவில் மறைந்து விடாது என்று கூறலாம்.



முற்றும்

## செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் - 21



# பிரதிதானம்

திருமதி அ.காசிலிங்கம்

மாலைநேரம் மணி ஏழாகி விட்டிருந்தது. கண்மணி ஐந்து மணிக்கே அந்தத் தனியார் மருத்துவமனைக்கு வந்து விட்டாள். இரண்டு மணித்தியாலங்கள் வரவேற் பறையில் காத்திருந்ததுதான் மிச்சம். இன்னும் அவள் சந்திக்கவேண்டிய மருத்துவ நிபுணர் வந்து சேரவில்லை. மனம் அலுத்துக் கொண்டது. எழுந்துபோய் வரவேற்பாளர் பகுதியில் அமர்ந்திருந்த பெண்ணிடம் விசாரித்தாள். அவள் நிதானமாகப் பதில் சொன்னாள்.

"அம்மா! நாங்கள் ஆறு முப்பதுக்குத்தானே நேரம் போட்டுத் தந்திருக்கிறோம். நீங்கள் ஐந்து மணிக்கே வந்ததுக்கு நாங்கள் என்ன செய்யிறது?" "கோவிக் காத பிள்ளை. எப்படியும் இண்டைக்கு ஐயாவிட்ட காட்டிப்போடவேண்டும் எண்டுதான் நேரத்தோட வந்திட்டன்!"

இதற்கிடையில் மற்றுமொரு குரல் கேட்டது. "ஜெகதீசன் ஐயாவிட்ட காட்டுறவை எல்லாம் ஆயத்தமாய் இருங்கோ! நாங்கள் பெயர் கூப்பிடப் போறம்!"

கண்மணிக்கு அந்த வார்த்தை ஆறுதலைத் தந்தது. கால் விண்விண்ணென்று வலித்ததையும் பொருட்படுத்தாமல் அவள் ஐயாவைச் சந்தித்து விடவேண்டும் என்பதில் முழுமூச்சாயிருந்தாள். அவள் ஒரு நீரிழிவு நோயாளி. காலில் ஒரு புண் வந்து நீண்ட காலமாக மாறாமல் புரையோடிப் போயிருந்தது. அருகிலுள்ள வைத்தியசாலையில் மருந்து மாத்திரைகள் வாங்கிப் போட்டும் மருந்து கட்டியும் அது ஆறியபாடாயில்லை. மாறாக நாளுக்கு நாள் கொதித்து சகிக்க முடியாத அளவுக்கு வேதனையைத் தோற்றுவித்தது. வேறு வழியின்றி அவள் மருத்துவரின் ஆலோசனைப்படி சத்திர சிகிச்சை நிபுணரான ஜெகதீசன் ஐயாவைத் தேடி வந்திருக்கிறாள். ஒவ்வொரு நோயாளராகப் பதிந்து வைத்திருந்த ஒழுங்கிற்கமைய பெயர் சொல்லி அழைக்கப்பட்டனர். கண்மணியின் பதிவு எண் ஒன்பது. ஒவ்வொருவரும் உள்ளேபோய் வைத்திய நிபுணரைச் சந்தித்துவிட்டு வரும்போது அவர்களது முகத்தை உன்னிப்பாகக் கவனிப்பாள் க்ண்மணி. அவளால் எதையும் கிரகிக்க முடியவில்லை. பொறுக்கமுடியாமல் உள்ளே போய்க் காட்டி விட்டு வந்த பெண் ஒருவரிடம் விசாரித்தாள். "ஐயா எப்பிடி? பேசன்ரை ஆறுதலாய் பார்க்கிறாரோ?"

"ஓ...வலு ஆறுதலாய் வடிவாய்ச் சோதிச்சு...நல்ல அன்பாய்க கதைக்கிறார். அவருடைய கதையைக் கேட்டாலே பாதி வருத்தம் மாறிடும்." விருது கொடுக்காத குறையாக உருகி வழிந்தாள் அந்தப் பெண். கண்மணி யின் உள்ளத் துடிப்பு சிறிது அடங்கி யது. எனினும் அவளது பெயர் கூப்பிடப்பட்டது. மீண்டும் எகிறியது. கட்டுப்படுத்த முடியவில்லை. தட்டுத் தடுமாறி ஒரு காலை நொண்டியவாறு அறையினுள் நுழைந்தாள். அவளுக்குத் துணையாக வந்திருந்த பக்கத்துவீட்டுப் பிள்ளையான பாமா அவளைப் பிடித்து மெதுவாக நோயாளரின் இருக்கையில் இருத்தினாள்.

"சொல்லுங்கோ அம்மா உங்களுக்கு என்ன பிரச்சினை?" ஆதரவுடன் கேட்டுக் கொண்டே அவளது முகத்தை நிமிர்ந்து பார்த்தார் நிபுணர். சில கணங்கள் கடந்த உன்னிப்பான பார்வையின் பின் னர் தனது ஞாபகக் கிடங்கியில் இருந்து கிளறியெ டுத்த சிறு துரும்புடன்,"இந்த அம்மாவை நான் எங்கோ பார்த்திருக்கிறேனே!" என்று இழுத்தார். நன்கு பரிச்சயமான முகமாகத் தெரிந்தாலும் முழுதாக ஞாபகத்துக் குத்தர அவரது மூளை மறுத்துக் கொண்டிருந்தது.

"ஐயா என்ரை கால் பெருவிரலிலை ஒரு புண் வந்திட்டுது. இப்ப ஆறுமாசமா வைத்தியம் பாக்கிறன். ஒண்டுக்கும் மாறுதில்லை. கடைசியாய் உங்க ளைத்தான் நம்பி வந்திருக்கிறன். சிலபேர் சொல்லுகினம் விரல் கழட்டவேண்டி வருமாம்." அவரின் பாவனைகளைக் காதில் போட்டுக்கொள் ளாமலே ஒருவித பதற்றத்துடன் கடகடவென்று சொல்லிக் கொண்டு போனாள் கண்மணி. சொல்லிக் கொண்டிருக்கும்போதே கன்னங்களைக் கண்ணீர் நனைத்துக் கொண்டிருந்தது. மருத்துவர் கண்மணியின் சங்கடத்தை உணர்ந்து கொண்டார். அவளைத் தன் வார்த்தைகளால் தேற்றினார்.

"அம்மா! ஒண்டுக்கும் பயப்படாதையுங்கோ. உங்கடை மெடிக்கல் றிப்போர்ட்ஸைத் தாங்கோ?" வாங்கிப் பார்த்தார். "டயபெற்றிக் கிளினிக்குக்கு ஒழுங்காய்ப் போறநீங்களோ? மருந்துகளை குறிப்பிட்ட நேரத்துக்கு எடுக்கிறனீங்களோ?"

"ஓம் ஐயா! கிளினிக்குக்கு ஒழுங்காகய் போறனான் தான். அங்கை நிறைய மருந்துகளும் தாறவை. நான்தான் சில நேரங்களில் குளிசைபோட மறந்து போறனான். ஆனா.... ஒரு நேரம் மறந்தால்... அடுத்த நேரம் போட்டிடுவன்."

"பார்த்தீங்களோ? மருந்துகளை நேரம் தவறாமல் போடவேணும். உங்களைப்போல டயபெற்றிக் உடம்புக்காறருக்கு புண் வந்தால் மாறுறது கஷ்டம். இனியாவது ஒழுங்காய்ப் போடுங்கோ. உங்கட நன் மைக்குத்தான் சொல்லுறன்." காலில் இருந்த புண்ணைப் பரிசோதித்தவர், சொன்னார். "புண் கொஞ்சம் ஆழமாய்ப் பரவி எலும்பிலும் தாக்கி விட்டுது. விறைக்க மருந்து போட்டுத்தான் துப்புரவு செய்து மருந்து கட்டவேணும்." "ஐயோ! என்ரை ஐயப்பனே! நான் என்ன செய்வன்!" தலையில் கைவைத்து ஏங்கியவள். கூவினாள். ஐயப்பனை அவள் அழைத்ததும் மருத்துவருக்கு பொறி தட்டியது. மூளை நரம்புகள் விழித்துக்கொண்ட தரவு மண்டலத்துக்குள் இருந்து இழுத்து வந்த பொருத்தமான வார்த்தைகளை நாவின் வழியே வெளியே விட்டன.

"நீங்கள் ரோகிதனின் அம்மாதானே!"

இப்போது கண்மணி அதிர்ந்தாள்.

"ஓம் ஐயா! அந்தக் கண்ணராவியை ஏன் கேக்கிறியள். என்ரை பிள்ளையையும் புருசனையும் இறுதிக் கட்டப் போரில முள்ளிவாய்க்காலில பறிகொடுத்திட்டு... நான் மட்டும் தனிமரமாய் நிக்கிறன்." பொல பொல வென்று கண்களில் நீரைச் சொரிந்து நின்றவளைப் பார்த்து மருத்துவர் நெகிழ்ந்து போனார். "ஐயா! எனக்கு இப்ப எந்தவிதமான வருமானமும் இல்லை. இஞ்சை வந்து தம்பி வீட்டில ஒண்டி இருக்கிறன். நீங்கள் துண்டு தந்தியளெண்டால் பெரியாஸ்பத்திரியில வந்து நிண்டு வைத்தியம் செய்யிறன். இஞ்சை வைச்சுச் செய்யிறதெண்டால் நிறையக் காசு வேணுமெண்டு சொல்லிச்சினம்."படபடத்தாள்.

"ஓம் ஐயா!
அந்தக் கண்ணராவியை ஏன் கேக்கிறியள். என்ரை பிள்ளையையும் புருசனையும் இறுதிக் கட்டப் போரில முள்ளிவாய்க்காலில பறிகொடுத்திட்டு நான் மட்டும் தனிமரமாய் நிக்கிறன்." பொல பொல வென்று கண்களில் நீரைச் சொரிந்து நின்றவளைப் பார்த்து மருத்துவர் நெகிழ்ந்து போனார்.

மருத்துவர் தலையைக் குனிந்துகொண்டார். கண்களை நீர்த்திரை மறைத்தது. மனத்திரையில் பழைய சம்பவமொன்று நிழலாய் வந்துபோனது. "இந்த அம்மாவுக்கு டிரெஸ்ஸிங் செய்ய ஆயத்தப் படுத்துங்கோ. மருந்து தாறன்." தாதிக்கு உத்தரவிட் டார். தாதி கண்மணியை மருந்து கட்டும் இடத்துக்கு அழைத்துப் போனாள். மருத்துவர் தன்னை மறந்து நினைவுச் சுழலில் சிக்கிப் போனார். பத்து வயதுச் சிறுவனாக ஜெகதீசன் மருத்துவசாலையில் சேர்க்கப்பட்டிருந்தான். காய்ச்சல் அவனது உடலை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. சிறுவயதில் தாயை இழந்து விட்டிருந்த அவனுக்கு தந்தையின் நிழலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. சித்தி என்ற பெயரில் கருமுகில் ஒன்று தந்தை மகன் உறவுக்குள் புகுந்து அவரது அரவணைப்புக்கும் அணை போட்டது. கடும் காய்ச்சலினால் அவதியுற்ற மகனை வைத்தியசாலையில் சேர்த்துவிட்ட தந்தை தினமும் ஒருதடவைதான் வந்து பார்த்துப் போவார்.

# அடுத்த தலைமுறைக்கு தமிழ் மிக அவசியம்

ஒஸ்கர் விருது வென்ற தமிழர் கருத்து



புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அடுத்த தலைமுறையினருக்குத் தமிழ் மிக அவசியம் என்று தெரிவித்திருக்கிறார் இந்தமுறை ஒஸ்கர் விருது பெற்ற தமிழர் லியோன்.

ஹொலிவுட் திரையுலகின் உயரிய மதிப்பாகக் கருதப்படும் ஒஸ்கர் விருதினை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வாழ்நாள் சாதனை பிரிவுக்காக தமிழர் ஒருவர் வென்றுள்ளார்.

இவருக்கு முன்னதாக தமிழகத்தைச் சேர்ந்த இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் ஒஸ்கர் வென்ற முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார். தற்போது, காட்டலாங்கோ லியோன், ஒஸ்கர் வென்ற இரண்டாவது தமிழர் என்ற அடையாளத்தைப் பெற்றுள்ளார். ஒஸ்கர் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த 28ஆம் திகதி (பெப்.28) நடைபெற்றது. அதற்கு முன்னதாக பெப்ரவரி 13ஆம் திகதி தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் லியோனுக்கு விருது வழங்கப்பட் டுள்ளது.

உலகமே லியார்ணாடோ டிகேப்ரியோவுக்கு விருது கிடைத்ததை சிலாகித்துக் கொண்டிருக்கும் வேளையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர், தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த காட்டலாங்கோ லியோன் என்பவர் பெருமைக் குரிய அகாடமி விருதைப் பெற்றது தாமதமாகவே வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனை- (Scientific and Technical Achievements) பிரிவில் காட்டலாங்கோ லியோன் 2016ஆம் ஆண்டுக்கான ஒஸ்கர் விருது பெற்றுள்ளார். சோனி பிக்சர்ஸின் இமேஜ் ஒர்க்ஸ் பிரிவில் பணியாற்றும் இவர், இற்வியூ (itview) என்ற புதி மென்பொருளை கண்டுபிடித்ததற்காக இந்த விருதைப் பெற்றுள்ளார். சாம் ரிச்சர்ட்ஸ், ராபர்ட் ஜே ஆகியோருடன் லியோன் விருதைப் பகிர்ந்து கொண்டார்.

ரைப்படத்தை பகுதி, பகுதியாக ஆய்வு செய்வதற்கு இந்த மென்பொருள் மிகவும் உதவிகரமாக இருப்பதாக பல்வேறு கலைஞர்களும் தெரிவித்திருக்கின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த காட்டலாங்கோ லியோன், கோவையில் வளர்ந்தார். அமெரிக்காவின் மேசசூஸட்ஸ் நகரில் மேற்படிப்பை பயின்றார். பின்னர் சோனி இமேஜஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார்.

விருது பெற்ற அவர், "மனைவி ரூபா மற்றும் மகள் ஸ்ருதிக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அளித்து வந்த தொடர் அன்பும் ஆதரவும் எனக்கு ஊக்கமளித்தன. இந்த விருதினை எனது பெற்றோருக்கு நான் சமர்ப்பிக்கிறேன். இந்த விருது நான் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பதை எனக்கு உணர்த்துகிறது. அனைவருக்கும் நன்றி என்று ஆங்கிலத்தில் ஏற்புரை கூறி முடிக்கும்போது எல்லாருக்கும் நன்றி எனத் தமிழில் பேசினார். ஒஸ்கார் விருது பெற்ற ரஹ்மான் "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று ஒஸ்கார் விருதைப் பெற்றதும் தமிழில் தெரிவித்திருந்தார்.

20 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்தாலும் அழகாக தமிழ் பேசும் லியோன், அடுத்த தலைமுறையினருக்கு தமிழ் மிகவும் அவசியம் என்று ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கும் தமிழ் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார். எனவே, தனது மகளைத் தமிழில் பேச, எழுத ஊக்குவிக்கிறார் என்றும் கூறினார். லொஸ் ஏஞ்சல்ஸில் ஒரு பாடசாலையில் தமிழாசிரியராகவும் அவர் பணியாற்றுகிறார்.

# பிரதிதானம்

(தொடர்ச்சி)

அதே வார்ட்டில் கண்மணியின் மகன் ரோகிதனும் விஷக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தான். இருந்தாற் போல் ஜெகதீசனுக்கு காய்ச்சல் அதிகரித்து மூச்சுத்திணறல் ஏற்பட்டு வலிப்பால் கை கால்கள் குறண்டிப் போயின. இதைக் கண்ணுற்ற கண்மணி ஓடோடிப்போய் வார்ட் மருத்துவரை அழைத்து வந்தாள். அவனுக்கு ஊசி ஏற்றி அவசர சிகிச்சை அளிக்கப்பட்டதன் பின்தான் கண்களை மெதுவாகத் திறந்தான். "அ...ம்...மா..." ஜெகதீசனின் அழைப்பு பூலோகத்தைத் துறந்த அம்மாவுக்குக் கேட்டதோ இல்லையோ... அதே வார்ட்டில் நின்றிருந்த கண்மணிக்குக் கேட்டுவிட்டது. ஓடோடி வந்து நெற்றியைத் தடவி அவனை ஆசு வாசப்படுத்தினாள். கண்களை மெதுவாகத் திறந்து பார்த்த ஜெகதீசன் தாயின் உருவத்தில் அவளைக் கண்டு ஆறுதலடைந்தான். மீண்டும் "அம்மா.... அம்மா..." என்று அரற்றினான். அவனது பலவீனத்தை உணர்ந்து கொண்டவள் அவனுக்கு ஹொர்லிக்ஸ் கரைத்து வந்து பருக்கி விட்டாள். அதைக்குடித்த பின்தான் அவனுக்கு சிறிது தெம்பு வந்தது. மெதுமெதுவாக அவனது குடும்ப விவரத்தை விசாரித்து அறிந்து கொண்டாள். அவனுக்காகப் பச்சாதாபங் கொண்டாள். அன்று மாலை ஜெகதீசனைப் பார்க்க வந்த தந்தையிடம் அவள் சற்றுக் காட்டமாகவே நடந்து கொண்டாள்.

"என்ன மனுசனையா நீர்! இப்படியா பெத்த பிள்ளையை அநாதரவாய் விட்டுப்போறது? இரண்டாம் தாரமாய் வந்தவளுக்குப் பயந்து நடுங்கிற நீர், ஏன் அப்படியொரு கலியாணத்தைச் செய்யவேணும்? தாயையும் இழந்து நீரே கதி எண்டு கிடக்கிற பெடியனைக் கவனிக்காமல் அப்படியென்ன வேலை உமக்கெண்டுதான் நான் கேக்கிறன்?" அநீதியைக் கண்டு பொங்கியெழும் சுபாவம் அவளுடையது. மனதில் தோன்றியதை இப்போது போலவே அப்போதும் படபடவென்று பொரிந்துவிட்டாள்.

"வருசக் கடைசி கந்தோரில நிறைய வேலை தேங்கிக் கிடக்குது. அதுதான் பாருங்கோ லீவு எடுக்கேலாமல் கிடக்குது." அப்பா பதுங்கினார்.

"நீர் உழைக்கிறீரெல்லே, அப்படியிருக்க ஏன் பெடியனை வீட்டில வைத்து சித்தியின்ரை கொடுமைக்கு ஆளாக்குறீர். அவனை ஹொஸ்ட லில விட்டுப்படிக்க வைக்கலாம்தானே! என்ன, நான் சொல்லுறது உமக்குப் புரியுதோ?" வார்த்தைகள் வன்மையா வந்து விழுந்தன.

"நீங்கள் சொன்ன மாதிரியே செய்து விடுறன்." ஏதோ இதைக் கேக்கத்தான் காத்துக்கிடந்த மாதிரி அப்பா தலையாட்டினார். உள்ளே உறுதியிருக்குமாக்கும் அவருக்கு "எங்கயிருந்தோ் வந்த நீங்கள், என்ர பிள்ளையில இவ்வளவு அக்கறை எடுத்ததுக்கு நன்றியம்மா" என்றார்.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அப்பா மாறிபோனார். அவன் மீது அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். அவரது அக்கறையும் உழைப்பும்தான் அவனை இன்று சத்திரசிகிச்சை நிபுணராக மாற்றியிருக்கிறது.

"சேர்! அடுத்த பேஷன்ரை கூப்பிடலாமா?"

தாதியின் குரல் அவரைத் தன்நிலைக்குக் கொண்டு வர, அவர் தன் கடமைக்குத் திரும்பினார். காத்திருந்த ஓரிரு நோயாளர்களையும் பார்வையிட்டு முடிந்ததும் மருந்து கட்டும் பிரத்தியேக அறைக்குப் போனார். அங்கு அவரது உதவியாளர்கள் கண்மணியைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தனர். பயப் பீதியில் கண்மணி தத்தளித்துக் கொண்டிருந்தாள். ஜெகதீசன் அவளை ஆசுவாசப்படுத்தி காலுக்கு விறைப்பு மருந்து செலுத்தி புண்ணைத் துப்புரவு செய்து அவதானித்தபோது எலும்பிலும் தாக்கம் ஏற்பட்டிருப்பதை அவதானித்தார்.

"அம்மா! நீங்கள் பயப்படாதையுங்கோ. எலும்பில கொஞ்சம் தாக்கியிருக்குது. நான் சாடையாய் அராவி எடுக்கப்போறன்." உதவியாளர்கள் ஆயுதத்தை அவரிடம் கொடுக்க அவர் மெதுவாக அராவி எடுத்து சுத்தம் செய்து மருந்து கட்டினார்.

அப்பாடா என்று கண்மணி நிம்மதியடைந்தபோதும் கட்டணம் எவ்வளவு வரப்போகிறதோ என்று ஏங்கினாள். ஆக மிஞ்சினால் தனது காதில கிடக்கிற தோட்டையாவது வித்துப் பணத்தைக் கொடுக்கலாம் என மனம் எண்ணிக்கொண்டது.

கால் விறைத்திருந்ததால் அவளை சக்கர நாற்காலியில் வைத்து உருட்டிக்கொண்டு வரவேற்பறை வரை வந்தார்கள். மருத்துவர் மருந்துச் சிட்டையைத் தாதியரிடம் கொடுத்தார். கண்மணி தயங்கித் தயங்கி "எவ்வளவு டொக்டர்?" என்றாள்.

"அதெல்லாம் ஒண்டுமில்லையம்மா" என்ற மருத்துவர் "இதுக்கான பில்லை என்ர கணக்கில போடச் சொல்லுங்கோ" என்றார் தாதியர்களைத் திரும்பிப் பார்த்து. மருந்துகள் வந்ததும் அவற்றை எப்படிப் பாவிப்பது என்ற விளக்கத்தையும் தானே கண்மணிக்குச் சொல்லிக் கொடுத்து அவளுடன் வாசல் வரை வந்து ஓட்டோவில் ஏற்றியும் விட்டு விடைகொடுத்தார்.

"அம்மா! மருந்துகளை மறக்காமல் ஒழுங்காய்ப் போடவேணும். அப்பதான் காயம் மாறும். பக்கத்தில் இருக்கிற ஆஸ்பத்திரியில ஒன்றுவிட்ட ஒருநாள் போய் மருந்து கட்டவேணும். ஒரு கிழமையால வந்து என்னைப் பார்க்க வேணும்." வழியனுப்பி வைத்தார். ஓட்டோவில் போகிறபோது, கண்மணி நினைத்தாள் இந்தப் பெடியன் முந்தின ஜென்மத்தில என்ர பிள்ளையாப் பிறந்திருக்கும்போல.....



# ஔவையின் அற்புதப் புலமை

அபாண்டி

ஔவையார் ஒரு நாள் சோழ நாட்டிலிருந்த அம்பர் என்ற ஒரு ஊரின் தெரு வழியே நடந்து சென்றுகொண்டிருந்தார். களைப்பு மிகுதியால் அந்தத் தெருவிலிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் சற்றே அமர்ந்தார். அந்தக் காலத்தில் இன்றுள்ளது போல் பேருந்துகளோ மற்ற மோட்டார் வாகனங்களோ கிடையாது. ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால் நடந்தோ, குதிரை மீதோ அல்லது குதிரை அல்லது மாட்டு வண்டியிலோதான் செல்லவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்வதற்காகவென்றே திண்ணை இருக்கும். ஔவையார் அமர்ந்த திண்ணையைக் கொண்ட" வீட்டில் சிலம்பி என்ற விலைமாது இருந்தாள். தன் வீட்டின் திண்ணையில் ஒரு மூதாட்டி அமர்ந்திருப்பதைக் கண்ட சிலம்பி, தான் குடிப்பதற்காக வைத்திருந்த கூழைக் கொணர்ந்து ஔவையாருக்குக் கொடுத்தாள்.

கூழை அருந்திய ஔவையார் அந்த வீட்டின் சுவற்றிலே கரிக் கட்டியினால் எழுதியிருந்த இரண்டு வரிகளைக் கவனித்தார்:

"தண்ணீருங் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே"

தனக்குப் பசியாரக் கூழ் கொடுத்த சிலம்பியை நோக்கி, இதுஎன்ன? என்றுகேட்டார்ஔவையார். குலோத்துங்க சோழ மன்னனின் அவைக் களப் புலவரான கம்பர் வாயால் பாடல் பெற்றவர்கள் மிகவும் சீரோடும் சிறப்போடும் வாழ்வதாகக் கேள்விப்பட்டு நான் சேர்த்து வைத்திருந்த 500 பொற்காசுகளைக் கொடுத்து என் மீது ஒரு பாடல் பாட வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டேன். அதற்குக் கம்பர், ஒரு பாடலுக்கு ஆயிரம் பொன் தர வேண்டுமென்றும் 500 பொன்னுக்கு அரைப் பாடல்தான் கிடைக்கும் என்றும் கூறிக் கரிக் கட்டியால் இவ்விரண்டு வரிகளைச் சுவ்ற்றில் எழுதி விட்டுப் போய்விட்டார். கையிலிருந்த 500 பொன்னும் பறிபோனதால் நான் அன்றிலிருந்து வறுமையில் வாடுகிறேன். என்று கூறினாள் சிலம்பி. அதைக் கேட்ட ஔவையார் உடனே ஒரு கரித் துண்டினை எடுத்து அவ்விரண்டு வரிகளின் கீழே கீழ்க்கண்ட வரிகளைச் சேர்த்துக் கவிதையைப் பூர்த்தி செய்தார்:

"பெண்ணாவாள் அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும் செம்பொற் சிலம்பே சிலம்பு" என்பதாகும் அவ் வரிகள்.

இதையும் சேர்த்து முழுப்பாடலாக,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே - பெண் ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற். சிலம்பே சிலம்பு" என்பதாகும்.

ஔவையார் வாயால் பாடல் பெற்றதும் சிலம்பியின் புகழ் நாடெங்கும் பரவியது. அவள் கால்களில் செம்பொன்னிலான சிலம்பணியுமளவிற்குப் பெரிய செல்வச் சீமாட்டியாக ஆனாள். தான் 500 பொன் பெற்று ஏழையாக்கிய சிலம்பியை ஔவையார் கூழுக்குப் பாடிச் செல்வச் செழிப்பு மிக்கவளாக்கிவிட்டதைக் கேள்வியுற்ற கம்பர் கோபம் கொண்டார். ஒரு நாள் ஔவையார் அரசவைக்கு வருகை தந்தார். அப்பொழுது கம்பர் அவரை நோக்கி ஆரைக் கீரைக்கும் ஔவைக்கும் சிலேடையாக, அதாவது இரு பொருள் படும்படியாகப் பாடினார்.


"ஒரு காலடீ, நாலிலைப் பந்தலடீ"

என்றுகூறினார். இதற்கு உத்தரமாக ஔவையார்,

"எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது."

தமிழில் அ அன்பது எண் 8ஐக் குறிக்கும் வ 1/4 ஐக் குறிக்கும். 8, 1/4 இரண்டையும் சேர்த்தால் அவ என வரும். எட்டேகால் லட்சணமே என்றால் அவ லட் சணமே எனப் பொருள்படும். எமனேறும் பரி எருமை. எமனேறும் பரியே என்றால் எரு மையே எனப் பொருள்படும். மட்டில் பெரியம்மை வாகனமே என்றால் மூதேவியின் வாகனமே என்று பொருள். கூரையில்லா வீடு குட்டிச் சுவர். கூரையில்லா வீடே என்றால் குட்டிச் சுவரே என்று பொருள். குலராமன் தூதுவனே என்றால், ராமாய ணத்தை எழுதியவனே என்றும், ராமனுக்குத் தூது சென்ற அனுமானான குரங்கே என்றும் பொருள்படும். ஆரையடா சொன்னாயது என்றால் நீ சொன்னதன் பொருள் ஆரக்கீரை யென்றும் யாரைப் பார்த்து இப்படிச் சொன்னாய் என்றும் இருபொருள்படும். இத்துடன் அடா என்ற அடைமொழி சேர்த்துத் தன்னை அடி என்றதற்குப் பதிலடி கொடுத்தார்.

எவ்வளவு அருமையான புலமை விளையாட்டு!




# கவனிக்க வைக்கிறான்

போலிச் சான்றிதழ்களின் பின்னணியில் இருக்கும் அரசியல், அதிகாரவர்க்கத்தினரின் கூட்டு பற்றியும் அதன் நுண் அரசியலையும் அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்திருக்கும் படம்தான் கணிதன். அதிகம் பிரபலமாகாத ஒரு தொலைக்காட்சி அலைவரிசையில் செய்தியாளராகப் பணிபுரிகிறார் கவுதம் (அதர்வா). பி.பி.சி. தொலைக்காட்சியில் புலனாய்வுச் செய்தியாளராக வேலை செய்ய வேண்டும் என்பதுதான் அவர் லட்சியம். அந்த லட்சியம் நிறைவேறும் சமயத்தில், போலிச் சான்றிதழ் மூலம் கல்விக் கடன் பெற்றதாக அதர்வாவை போலீஸ் கைது செய்கிறது. அவர் படித்து வாங்கிய பட்டங்களை நீதிமன்றம் அதிரடியாக பறிமுதல் செய்கிறது. பெருத்த அவமானத்துடன் பிணையில் வெளியே வரும் அதர்வா, செய்தியாளருக்குரிய புலனாய்வு மூளையை வைத்து என்ன செய்கிறார் என்பதுதான் மீதிக் கதை.

போலிக் கல்விச் சான்றிதழ் சமூகத்தில் எந்த அளவுக்கு அதிகமாகப் புழங்குகிறது, அதனால் இளைஞர்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள், திறமையே இல்லாதவர்கள் போலிச் சான்றிதழ்கள் மூலம் வேலை வாய்ப்புகளை எப்படியெல்லாம் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதைத் துணிந்து சொன்ன இயக்குநர் டி.என். சந்தோஷைப் பாராட்டலாம்.

சாதாரண பெட்டிக் கடைக்காரர் தொடங்கி அரசு அதிகாரிகள் வரை போலிச் சான்றிதழ் கும்பலின் வலைப் பின்னலில் பிணைந்திருப்பதைக் காட்சிகளில் சொல்லும்போது கண்கள் விரிகின்றன. அந்தக் கும்பல் எல்லா இடங்களிலும் எப்படி வியாபித்திருக்கிறது, ஆலோசனை நிறுவனங்களில் பெறப்படும் இளைஞர்களின் சான்றிதழ்கள், கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு எப்படிப் போலியாகத் தயாரிக்கப்படுகின்றன என்பதையெல்லாம் நுணுக்கமாகச் சொல்லிப் பீதியூட்டுகிறார் இயக்குநர்.

சிக்கலான முடிச்சுகளை அவிழ்க்கும்போதும், நாயகனும் வில்லனும் பரஸ்பரம் வலை விரித்துக்கொள்ளும் காட்சிகளும் இதேபோன்ற சில படங்களை அழுத்தமாகவே நினைவுபடுத்துகின்றன.


காவல்துறை அதர்வாவைக் கைது செய்வதோடு சரி; அதன் பிறகு காணாமல் போய்விடுகிறார்கள். போலிச் சான்றிதழ் கும்பல் பற்றி காவல்துறை பெயரில் போலிச் செய்திகளை அதர்வா, தொலைக்காட்சி செய்தி அலைவரிசைகளில் ஒளிபரப்பச் செய்கிறார். அதைப் பற்றியும்கூட கா்வல் துறைக்கு எதுவுமே தெரியவில்லை.

போலிச் சான்றிதழ் பற்றித் தொடர்ந்து ஊடகங்களில் செய்தி வரும்போதும் அந்தக் கும்பல் விடாமல் அந்த வேலையைத் தொடர்ந்து செய்வது, வில்லனின் இடத்துக்கு அலுவலக நபர் ஒருவர் சென்று கணினியில் உள்ள எல்லாத் தகவல்களையும் சுட்டுக்கொண்டு வருவது என நம் காதில் சுற்ற நிறைய பூமாலைகளை இயக்குநர் தொடுத்துவைத்திருக்கிறார்.

அதர்வாவுக்கு ஏற்ற சரியான வேடம். போலிச் சான்றிதழ் தயாரிக்கும் கும்பலைப் பிடிக்க திட்டம் போடும்போது துருதுருவென மாறிவிடுகிறார். வில்லன்களிடம் மோதும்போது கோபக் கனலாக தெறிக்கவிடுகிறார். காதலியிடம் உருகும்போது பனிக்கட்டியாகி உருகுகிறார்.

இதுவரை பக்கத்து வீட்டுப் பெண் போன்ற சாயலில் ரசிகர்களை வசீகரித்த கேத்ரின் தெரசா, இந்தப் படத்தில் கவர்ச்சி அவதாரம் எடுக்கிறார். வில்லனாக வரும் தருண் அரோரா பார்வையிலும் உடல் மொழியிலும் மிரட்டுகிறார்.

வழக்கமான அதிரடிப் படமாக மட்டும் இல்லாமல், சமூகத்தின் முக்கிய பிரச்சினையை ஊடகங்களின் பார்வையில் படமாக்கியிருப்பதன் மூலம் கணிதன் கவனிக்க வைக்கிறான்!




# யதார்த்தத்துக்கு கிடைத்த ஒஸ்கர்!

■ ஆசை

ஒஸ்கர் விருதுகளில் இந்த ஆண்டின் சிறந்த படத்துக்கான தேர்வில் 'ஸ்பாட்லைட்' படம் முன் வரிசையில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை. 'தி ரெவெனண்ட்' மற்றும் 'மேட் மேக்ஸ்: ஃப்யூரி ரோடு' ஆகிய இரண்டில் ஒன்றுதான் சிறந்த திரைப்படத்துக்கான ஒஸ்கரைத் தட்டிச்செல்லும் என்பது கிட்டத்தட்ட உறுதியாகியிருந்தது. பெரும்பான்மை ரசிகர்கள், சூதாட்ட தரகர்கள் எல்லோருடைய எதிர்பார்ப்பையும் அடித்துத் தூளாக்கி ஒஸ்கரைத் தட்டிச் சென்றிருக்கிறது 'ஸ்பாட்லைட்'. கூடவே, அசல் திரைக்கதைக்கான விருதையும் தட்டிச்சென்றி ருக்கிறது டாம் மெக்கார்த்தி இயக்கியிருக்கும் இந்தப் படம்.

இந்தப் படத்துக்கு ஒஸ்கர் கிடைத்தது குறித்து இரு வேறு விதமான கருத்துகள் உருவாகியிருக்கின்றன. தகுதியான திரைப்படம்தான் என்று ஒருசாராரும், கலையம்சம் இல்லாத திரைப்படம் என்று இன்னொரு சாராரும் மோதிக்கொள்கின்றனர். அப்படி என்னதான் இருக்கிறது இந்தப் படத்தில்?

அமெரிக்காவின் மசசூசெட்ஸ் மாகாணத் தில் உள்ள பொஸ்டன் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பத்திரிகைதான் பொஸ்டன் குளோப். கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார்கள் இளம் சிறார்களுக்கு இழைத்த பாலியல் ரீதியிலான கொடுமைகளைப் பற்றி அந்தப் பத்திரிகையின் 'ஸ்பாட்லைட்' என்ற புலனாய்வுக் குழு 2001-2002 ஆண்டுகளில் புலனாய்வு செய்து வெளியிட்டது. இது, கத்தோலிக்கத் திருச்சபையையும் அமெரிக்காவையும் மட்டுமல்ல; உலகையே உலுக்கியது. காலங்காலமாக இப்படி நடப்பது தெரிந்தும் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் விடயத்தைத் திருச்சபை தொடர்ந்து மூடி மறைத்தே வந்த விசயம் அம்பலமானதுதான் எல்லோரையும் அதிரச் செய்தது.

பொஸ்டன் குளோப் இந்த விசயத்தை வெளியிட்டதும் பாதிக்கப்பட்டவர்கள் பலரும் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி தைரியமாக வெளியிட முன்வந்தனர். இந்த விசயத்தை அம்பலப்படுத்தியதற்காக பொஸ்டன் குளோப் பத்திரிகைக்கு 2003இல் புலிட்சர் விருது கிடைத்தது. கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார்களின் பாலியல் அத்துமீறல்களை பொஸ்டன் குளோப் அம்பலப்படுத்திய விவகாரம்தான் 'ஸ்பாட்லைட்' படத்தின் கதை.



### தண்டிக்கப்படாத குற்றவாளிகள்

படத்தின் தொடக்கத்தில் பொஸ்டன் குளோப் பத்திரிகையின் புதிய ஆசிரியராக மார்ட்டி பேரன் நியமிக்கப்படுகிறார். அவர் நியமிக்கப்பட்டதும் 'ஸ்பாட்லைட்' குழுவை அழைத்து விவாதிக்கிறார். கேகன் என்ற பாதிரியார் சிறுவர்களிடம் பாலியல் அத்துமீறல் செய்த விவகாரம் பொஸ்டனின் பேராயருக்குத் தெரியும் என்று வழக்கறிஞர் கரபாடேயன் கூறியிருப்பது குறித்து பேரன் 'ஸ்பாட்லைட்' குழுவிடம் பேசுகிறார். இந்த விவகாரத்தைக் கையில் எடுக்கும்படி பேரன் சொன்னதும் 'ஸ்பாட்லைட்'குழுவின் தலைவர் ராபி ராபின்சன், திருச்சபைக்கு எதிராக ஏதும் செய்ய முடியாது என்று அவநம்பிக்கையுடன் பேசுகிறார். எனினும், பேரன் விடாப்பிடியாக இருப்பதால் 'ஸ்பாட்லைட்' குழு புலனாய்வில் ஈடுபடுகிறது. அவர்களின் தேடலின் விளைவாக ஒரு பாதிரியார் அல்ல, பொஸ்டனில் மட்டும் கிட்டத்தட்ட 90 பாதிரியார்கள் சிறுவர்களிடம் பாலியல் அத்துமீறல்களைச் செய்திருக்கும் விசயம் தெரியவருகிறது. பாதிக்கப்பட்டவர்களிடமும், இந்த விவகாரத்தில் திருச்சபைக்கு நடுநிலை வகித்த வழக்கறிஞர், திருச்சபையை எதிர்த்த கரபாடேயன் போன்றோரிடமும் 'ஸ்பாட்லைட்' குழு துருவித் துருவி விசாரித்த தில் இந்த விவகாரம் எவ்வளவு பூதாகரமானது என்று தெரியவருகிறது. பல பத்தாண்டுகளாக இந்த அத்துமீறல்கள் குறித்துத் திருச்சபை அறிந்திருந்தும் சம்பந்தப்பட்ட பாதிரியார்களைத் தண்டிக்கவே இல்லை என்பது 'ஸ்பாட்லைட்' குழுவை அதிர வைக்கிறது.

### வெட்டவெளிச்சம்

இதற்கிடையே, 2001இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது அல்குவைதா விமானத் தாக்குதல் நிகழ்த்திய சம்பவம் வருகிறது. அதனால் திருச்சபை விவகாரத்தைச் சற்றுத் தள்ளிப் போடும்படி ஆகிறது. சிறிது இடை வெளிக்குப் பிறகு 'ஸ்பாட்லைட்' குழுவினர் தங்கள் புலனாய்வை மீண்டும் தொடர்கின்றனர். திருச்சபையைச் சேர்ந்த வர்கள் இந்த விவகாரத்தை விட்டு விடும்படி பத்திரிகையாளர்களிடம் நைச்சியமாகப் பேசுகிறார்கள்.

திருச்சபை எவ்வளவோ நல்ல விசயங்களைச் செய்திருக்கிறது, அதையெல்லாம் இந்த விவகாரம் கெடுத்துவிடும் என்றெல்லாம் பேசிப் பார்க்கிறார்கள். எதற்கும் மசியாத 'ஸ்பாட்லைட்' குழுவினர் அவர்களின் விடாப்பிடியான, துணிச்சலான தேடலின் இறுதியில் ஒட்டுமொத்த விவகாரத்தையும் பொஸ்டன் குளோப் இதழில் அம்பலப்படுத்துகிறார்கள்.

“திருச்சபை எவ்வளவோ நல்ல விசயங்களைச் செய்திருக்கிறது, அதையெல்லாம் இந்த விவகாரம் கெடுத்துவிடும் என்றெல்லாம் பேசிப் பார்க்கிறார்கள். எதற்கும் ம்சியாத 'ஸ்பாட்லைட்' குழுவினர் அவர்களின் விடாப்பிடியான, துணிச்சலான தேடலின் இறுதி யில் ஒட்டுமொத்த விவகாரத்தை யும் பொஸ்டன் குளோப் இதழில் அம்பலப் படுத்துகிறார்கள்.”

உலக அளவில் பெரிய அதிர்வாக இது உருவெடுக்கிறது. பாதிரியார்களால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் பொஸ்டன் குளோப் பத்திரிகையைத் தொடர்புகொண்டு தங்களின் பாதிப்பு குறித்துப் பேசத் துணிகிறார்கள். படம் முடிவதற்கு முன் ஒரு பட்டியல் திரையில் காட்டப்படுகிறது. உலகெங்கும் திருச்சபையால் இந்த விவகாரம் மூடிமறைக்கப்பட்ட நாடுகளின் பட்டியல் அது. கூடவே, பொஸ்டனில் இந்த விவகாரத்தை மூடிமறைத்த பேராயர் பதவி உயர்வு பெற்ற தகவலும் வருகிறது. படம் முடிகிறது.

### யதார்த்தத்துக்கு கிடைத்த விருது

ஆக, வழக்கமான ஹொலிவுட்டின் பிரம்மாண்டம், காதல், உக்கிரம், கொண்டாட்டம் என்று எந்த வரையறைக்குள்ளும் அடங்காத யதார்த்தமான, எளிமையான ஒரு படம்தான் 'ஸ்பாட்லைட்'. தீவிர திரைப்பட ரசிகர்களைப் பெரிதும் ஈர்க்காத படம்தான் இது. ஆனாலும், அது எடுத்துக்கொண்ட செய்தி, அதனால் ஏற்படும், ஏற்படக்கூடிய சமூக மாற்றங்களைப் பற்றி யோசித்துப்பார்க்கும்போது இந்தப் படத்தின் முக்கியத்துவம் நமக்குப் புலப்படும். அதற்கு ஓர் உதாரணம்: பாதிரியார்களால் பாதிக்கப்பட்டு, அந்த பாதிப்பை வெளியில் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கானோர் இந்தப் படம் வெளியான நவம்பர் மாதத்துக்குப் பிறகு முதன்முறையாக வாய்திறந்து தங்கள் பாதிப்பைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானோரை இந்தத் திரைப்படம் வாய்திறக்க் வைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எல்லாம் ஒரு படத்தின், ஒரு ஒஸ்கர் விருதின் விளைவு என்று யோசித்துப்பார்க்கும்போது இது தகுதியான ஒஸ்கரே என்று தோன்றுகிறது.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இந்த வாரம்

**06.03.2016 முதல் 12.03.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், புதன், குரு, கேது அனுகூலமாக உள்ளனர். அஷ்டம சனி மற்றும் செவ்வாய், மனதிலும், செயலிலும் முரண்பாட்டை உருவாக்கலாம். உறவினர்களின் உதவி ஊக்கம் தரும். வீடு வாகன வகையில் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. புத்திரர்கள் பொது அறிவு, செயல்திறனில் முன்னேற்றம் காண்பர். பூர்வச் சொத்தில் வரும் பணவரவை வேறு வகையில் முதலீடு செய்ய இடமுண்டு. விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும்.மனைவியின் கருத்தை ஏற்பதால், குடும்பத்தில் ஒற்றுமை வளரும். மாணவர்கள், சிறப்பாக படிப்பர்கள். சிவன் வழிபாடு சகல நன்மையும் தரும்.

## இடபம்

சூரியன், புதன், சுக்கிரன் தாராள நன்மை தருவர். மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். வாழ்க்கையில் நடக்கும் பிரச்சினைகளால், புதிய அனுபவம் பெறுவீர்கள். பேச்சும், செயலும் பரிமளிக்கும். புதுமை எண்ணங்களுடன் பணிபுரி வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். வாகனப் பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்கள் அறிவு, செயல்திறனை பயன்படுத்தி பாராட்டு பெறுவர். உடல்நிலை ஆரோக்கியம் பெறும். வாழ்க்கைத் துணைவர் பாசத்துடன் நடந்து கொள்வார். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து தேர்ச்சி பெறுவர். முருகன் வழிபாடு தைரியம் வளர்க்கும்.

## மிதுனம்

சனி, ராகு, செவ்வாய், சுக்கிரன் அளப்பரிய நன்மை தருவர். தடைகளைக் கடந்து, முன்னேற்றப் பாதையில் நடை போடு வீர்கள். உங்களை இகழ்ந்து பேசியவர்கள் கூட, மனம் திருந்தி நட்புக் கொள்வர். வீட்டில் பாதுகாப்பு அவசியம். வாகனங்களில், நிதானமாக செல்லத் தவறினால் பிரச்சினை வரலாம். புத்திரர்கள், உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். குடும்பச் செலவுக்கு தாராளமாக பணவசதி இருக்கும். கடன்களையும் அடைத்து விடு வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர் களுக்கு உதவுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு, படிப்பில்அதிககவனம்வேண்டும். வைரவர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## கடகம்

குரு, புதன், சந்திரனால் நன்மை கிடைக்கும். குடும்பத்தில் நற்பெயர் பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர் கள் உதவிபுரிவார்கள். பணவரவுக்கான வாய்ப்புகளை துல்லியமாக பயன்படுத்துவீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் ஆலோசனைப் படி செயற்படுவர். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள், சில சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். கடன் தொந்தரவு குறையும். உடல்நிலை சுமாராக இருக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறக் கூடுதல் முயற்சி தேவைப்படும். கவனம். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.துர்க்கை வழிபாடு துன்பம் போக்கும்.

## சிங்கம்

சந்திரன் மட்டுமே நன்மை தருவார். செயல்களில் உற்சாகத்தைக் காட்டினால் தான் வெற்றி பெற முடியும். முக்கிய பணிகள் நிறைவேற பூர்வபுண்ணிய பலன் துணை நிற்கும். அவசரச் செலவுக்கு கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் வரலாம். புத்திரர்கள் உங்கள் எண்ணங்களை உணர்ந்து செயல்படுவர். அக்கம் பக்கத்தவரிடம் தேவையற்ற விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் செலவாகும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற கடுமையாக முயற்சிக்க வேண்டும்.குரு வழிபாடு மங்கள வாழ்வு தரும்.

## கன்னி

குரு, ராகு தவிர, மற்ற கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். பொறாமையுடன் பேசியவர்கள் வியந்திடும் வகையில் செயல்படுவீர்கள். பேசும் வார்த்தை வசீகரமாக இருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்கலாம். புத்திரர்கள் படிப்பு, வேலை யில் முன்னேற்றம் காண்பர். தாய்வழி உறவினர்கள் எதிர்பார்ப்புடன் பழகுவர். விவகாரம் அணுகாத மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவீர்கள். மனைவி, உங்களின் புகழ் பெருக நல்ல ஆலோசனை சொல்வார். மாணவர்கள் படிப்பில் முன்னேறி புதிய இலக்கை அடைவர்.நரசிம்மர் வழி பாடு, நன்மையை அதிகரிக்கும்.

## துலாம்

குரு, ராகு, சுக்கிரனால் நன்மை ஏற்படும். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். செயல்கள் சிறப்பாக அமைந்து, பலவித நன்மைகளைத் தரும். மகான்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தம்பி, தங்கைகளுக்கு உதவுவீர்கள். பொருள்களை கவனமுடன் பாதுகாக்கவும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் எதிர்கால நலன் சிறக்க, தேவையான பணிபுரிவீர்கள். பொறாமையுடன் பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்க கடுமையாக பாடுபட வேண்டி வரும். மாணவர்கள் காலத்தை, பொன் போல் கருதி படித்தால் தான், மதிப்பெண்களை அள்ள முடியும்.ஐய்யப்பன் வழிபாடு, வெற்றி தரும்.

## விருச்சிகம்

சுக்கிரன், புதன், சந்திரன் சிறப்பான பலன் தருவர். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புப் பணம் குறையும். செயல்களில் சிரமம் இருந்தாலும் கடும் பாடுபட்டு சமாளிப் பீர்கள். தம்பி, தங்கைகள் பாசத்துடன் நடந்து கொள் வர். வாகனப் பயன்பாடு திருப்திகர அளவில் இருக் கும். புத்திரர்கள் தமது கடமை எதுவென உணர்ந்து கொள் வர். மனைவி உங்களுடன் குடும்ப விடயங்களில் ஒத்துழைப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற மாற்று உபா யம் உதவும். பணியாளர் கள் அலுவலகத் தில் விண்ணப்பித்த கடன் கிடைக்கதாம தமாகலாம். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் உருவாகும். லட்சுமி வழிபாடு, சகல வளமும் தரும்.

## தனுசு

கேது, சுக்கிரன், சூரியன், குரு அளப்பரிய நன்மை தருவர் மனதில் உற்சாகம் பிறக்கும். பணிகள் வேகமாக நடக்கும்இஷ்டதெய்வ அருளால், புதிய திட்டங்கள் நிறைவேறும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பயணங்கள், இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் திறமை மிகுந்த செயல்புரிந்து பாராட்டு பெறுவர். பூர்வச் சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். எதிர்ப்பாளர்கள் விலகிச் செல்வர். மனைவியின் நல்ல கருத்து, உங்கள் வாழ்வில் மாற்றம் தரும். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்கள் அதிக சலுகை பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.அம்பிகை வழி பாடு சகல நன்மையும் தரும்.

## மகரம்

செவ்வாய், சனி, சுக்கிரனால், வியத்தகு நன்மை உண்டாகும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். மனதிலும், செயலிலும் புத்துணர்வு ஏற்படும். பணியில் இருந்த, தாமத நிலை விலகி முன்னேற்றம் உருவாகும். உடன்பிறந்தவர்கள் உங்கள் சொல் லுக்குத் தகுந்த மரியாதை தருவர். பயணங்கள் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும். மனைவி குடும்பநலன் சிறக்க தேவையான பணிகளை மேற்கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து, பணியாளர்கள் மன நிறைவுடன் பணிபுரிந்து சலுகைகளைப் பெறுவர். பெண்கள், வேண்டுதல் நிறைவேறி, தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு, பரிசு பெறுவர்.பெருமாள் வழிபாடு செல்வவளம் தரும்.

## கும்பம்

குரு, சுக்கிரன் அனுகூல சஷ்டாஷ்டக அமர்வில் உள்ளதால், நற்பலன் வழங்குவர். உறவினர்களைக் குறை சொல்ல வேண்டாம். குடும்பத் தேவைக்கான செலவில், சிக்கனம் பின்பற்றவும். வுஜுகனப் பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்களால் செலவு அதிகமாக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனையை அதிகரிக்க புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் சோம்பலைத் தவிர்ப்பதால் மட்டுமே, ப்ணி இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். பெண்க்ள் வீட்டு உப யோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.சனீஸ்வரர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## மீனம்

சுக்கிரன், ராகு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாக்க, கடும் முயற்சி எடுக்க வேண்டி இருக்கும். அக்கம் பக்கத்தவர் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந் திருக்கும். வீடு, வாகன வகையில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வதால் செலவு கூடும். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். பணியாளர்களுக்கு சில இடைஞ்சல்கள் வரலாம். பொறுமை தேவை. பெண்களுக்கு, தாய்வீட்டு உதவி கிடைக் கும். மாணவர்கள் கடும் முயற்சியால் படிப்பில் தேர்ச்சி பெறுவர்.விநாயகர் வழிபாடு விடிவுகாலம் தரும்.



# பெண்கள் விரும்பும் சுதந்திரம்

ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் கல்வியில் முதன்மை வகிக்கிறார்கள். பெண்கள் தாங்கள் விரும்பியதை செய்யவேண்டும் என்று விரும்பு கிறார்கள். இதிலும் இன்றைய இளம் பெண்கள் பல்வேறு விருப்பங்களை கொண்டுள்ளனர். நவீன யூகத்தில் பெண்கள் தனிமையை அதிகம் விரும்புவர்களாக உள்ளனர். அவர்கள் சுதந்திரத்தில் எவரும் குறுக்கிட கூடாது என்று நினைக்கிறார்கள். அது பெற்றோராக இருந்தாலும் சரி, நண்பர்களாக இருந்தாலும் சரி. புதியதாய் சிறகு முளைத்த பறவையை போல வேலை கிடைத்தவுடன் வானில் பறக்க விரும்பும் இவர்கள், தனிமையையும் விரும்ப துவங்குவது இந்த 20 வயதில் தான்.

உண்மையில் ஆண்களுக்கு இருக்கும் அளவுக்குக் குடும்ப பொறுப்புகள், வீட்டுக்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற நிலைமை பெரும்பாலான பெண்களுக்கு இல்லை. ஆகவே, சுயமாகச் சம்பாதிக்கும் பணத்தில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ள விரும்புகிறார்கள். அப்பா, அண்ணன் போன்றோரின் உதவி இன்றி தானாக முன்னேறி சமூதாயத்தில் காலூன்ற வேண்டும் என்ற வலிமையான கனவு இக்காலத்து பெண்களிடம் அதிகரித்து வருகிறது.

வேலைக்குச் செல்ல அனுமதிக்கும் ஆண்களையே திருமணம் செய்து கொள்ள இன்றைய பெண்கள் விரும்புகிறார் கள். தங்களுடைய தேவையை தங்களால் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இன்றைய பெண்களிடம் அதிகம் உள்ளது.

# பெண்கள் மீதான அன்றாட வன்முறைகள்



பெண்கள் மீது அன்றாடம் நிகழ்த்தப்படும் வன்முறைகள் ஆணாதிக்க சமூகத்தின் வெறியாட்டத்துக்கு ஓர் குருதி சாட்சி. வல்லுறவுக்குள்ளாவது மட்டுமின்றி கொடுமையான வகையில் கொல்லவும் படுகின்றனர்.

பெண்களுக்குப் பாலின ரீதியான பாதுகாப்பு முற்றிலுமாக இல்லாமற் போய் விட்டது. பாலியல் வல்லுறவு குற்றமானது உயர்ந்ருக்கிறது என்பதை உங்களால் கற்பனை செய்தும் பார்க்க முடிகிறதா?

இந்தக் குற்றங்களில் ஈடுபடுவதற்கு அவர்கள் மிகவும் மோசமான வகையில் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். இது ஒருபுறமிருக்க, கலாசாரக் காவல் எனும் பெயரில் மத அடிப்படைவாதக் கும்பல்களின் அராஜகத்தினால் பெண்களுக்குப் பொது வெளி என்பதே அச்சத்துக்குரியதாய் மாறி வருகிறது.

ஒடுக்குமுறையின் வடிவங்களான சாதி, மதம் ஆகியவை இந்த விதியைக் கட்டிக் காக்க மிகவும் வெளிப்படையாகவே பயன்படுத்தப்படுகிறது. பொது வெளியில் பெண்களின் நிலை இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் இருக்க, மிகவும் 'பாதுகாப்பானது', பண்பாட்டின் சின்னம் என்றுசொல்லப்படும்'குடும்ப' அமைப்பும் எந்தவகையிலும் மாறுபட்டதில்லை.

குடும்ப வன்முறைஇன்றளவிலும் ஒழிக்கப்படவில்லை. உண்மையில் ஆணாதிக்கத்தை அப்படியே கட்டிக்காப்பதற்கு ஓர் வலுவான துணையாக விளங்குவது குடும்ப அமைப்பே. குழந்தைகள் குறிப்பாகப் பெண் குழந்தைகள், குடும்ப உறவுகளால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவதும் அதிகரித்து வருகிறது. இவற்றுக்கு அப்பால் கீழ் மத்தியத்தர வர்க்கப் பெண்கள் மற்றும் அடித்தட்டு வர்க்கப் பெண்கள் எதிர் கொள்ளும் துன்பங்கள் இன்னும் கூடுதலானது.

இரட்டை உழைப்பு, குடிகாரக் கணவனின் வன்முறை, பொருளாதாரச் சுமை என்று அப்பெண்கள் கடும் துயர்களுக்குள்ளாகின்றனர். இப்படி சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பெண்களுக்குப் பாதுகாப்பின்மையும், அச்சுறுத்தலும், ஏற்றத்தாழ்வும் நிலவுகையில் பெண் சுதந்திரம் உண்மையில் போலித்தனமானது.

ஏதோ ஒரு குறிப்பிட்ட சதவிகித பெண்கள் பொருளாதார ரீதியில் முன்னேறிவிட்டனர் என்பதை வைத்து பெண்கள் எங்கே அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர் என்று கேள்வி எழுப்புபவர்கள் மூடர்களாக மட்டுமே இருக்க முடியும்.

பெண் விடுதலை இல்லாத ஒரு சமூகம் உண்மையில் பிற் போக்குத்தனமானது, அப்படிப்பட்டச் சமூகமானது சுதந்திரம் பெற்று விட்டதாகச் சொல்லிக் கொள்ளத் தகுதியற்றது.

# முன்னேற்றத்துக்கு தேவை எது?




பெண்களுக்கு தன்னம்பிக்கை தான் முதல் தேவை. நமது வாழ்க்கை நமது கையில் தான் இருக்கிறது என்பதை பெண்கள் உணர வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு மனம் துவண்டு விடாமல், அதிலிருந்து வெளிவரும் வழியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் பெண்களை வலிமைப்படுத்தும்.

சிக்கலில் இருந்து விடுபடுவதன் மூலம் புதிய அனுபவத்தைப் பெறுவோம். அந்த அனுபவம் தான் நம்மை வழி நடத்தும். அதுதான் வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்யும்.

பெண்கள் விழிப்புணர்வு பற்றிய தகவல்கள் பெண்களின் முன்னேற்றத்துக்குத் தேவையானவை. பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க சட்டத்தையும், காவல் துறையையும் நாட, அவர்களுக்கு விழிப்புணர்வு மிக அவசியம்.

ஒவ்வொரு வெற்றிபெற்ற பெண்ணுக்கு பின்னாலும், ஒரு பெரிய போராட்டம் இருக்கும். அந்தப் போராட்டத்தில் பெண்களுக்கு ஆதரவு தெரிவிக்காதவர்கள் கூட, அந்தப் பெண் வெற்றியடைந்ததும் அதில் தங்களுக்கு பங்கு இருப்பதுபோல் காட்டிக்கொள்ள போட்டி போடுவார்கள். பெண்களுக்குப் போதுமான அளவு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு, கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

பெண் கல்வியுடன், தற்காப்பு கலையையும் கற்றுக் கொடுக்க வேண்டும். பல இடங்களில் பெண்களுக்கு சுதந்திரமே இல்லை. ஆனால் சில இடங்களில் இருக்கும் சுதந்திரத்தையும் பெண்கள் வீணடித்து முகம் சுழிக்க வைத்துவிடுகின்றனர். குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ள இயலாத விடயங்கள் அனைத்துமே, வழங்கப்பட்ட சுதந்திரத்தை சிதைப்பதாகவே அமையும். பெண்கள் ஒரு நபரின் தோற்றத்தை மட்டும் பார்க்காமல், அவருடைய சமூக பொறுப்பு, பெண்களைப் பற்றிய உயர்ந்த எண்ணம், சுயமரியாதை, கடமையுணர்வு போன்றவைகளை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து, பொருத்தமானவரை திருமணம் செய்து கொண்டால் திருமணத்தின் பாதுகாப்பை உணரலாம்.

# பளபளப்பாக்கும் பழ பேஸ்பேக்



பழங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல... அழகுக்கும் தான்! பழவகை 'பேக்' களை பயன்படுத்தி சருமத்தையும் உடலையும் அழகாக்கும் வித்தையை விரிவாகப் பார்ப்போம். வேலை, அலைச்சலால் சோர்ந்து போகும் கண்களுக்கு, இந்த பழ பேக் ஒரு கண் கட்டு வித்தை. மஸ்லின் துணியை உள்ளங்கை அளவுக்கு வெட்டி அவற்றை இணைத்து, 2 சிறு சிறு பைகளாக தைத்து விடுங்கள். பிறகு, அதைத் தண்ணீரில் நனைத்து, வாழைப்பழம், தர்பூசணி, பப்பாளி, உருளைக் கிழங்கு, வெள் ளரிக்காய் எல்லாவற்றிலும் தலா ஒரு துண்டு வீதம் போட்டு, பையின் வாயைத் தைத்து, குளிர் சாதனைப் பெட்டியில் வைத்து விடுங்கள். தூங்கப் போகும் போது கண்ணுக்கு மேல் இந்தப் பைகளை ஒரு மணி நேரம் வைத்திருங்கள்.

சோர்வுற்ற கண்களுக்கு நல்ல புத்துணர்வு கிடைக்கும். வாழைப் பழம், கருவளையத்தைப் போக்கும். தர்பூசணி கருவிழியைப் பளபளப் பாக்கும். பப்பாளி வறட்சி இல்லாமல் வைத்திருக்கும். உருளைக்கிழங்கு, வெள்ளரி நன்றாக ப்ளீச் செய்து குளிர்ச்சியைக் கொடுக்கும். இமைகளில் முடி உதிர்வதும் நிற்கும்.

புள்ளி, தழும்பு ஆகியவை காரணமாக முகம் பொலிவு இழக்கலாம். தோடம்பழம் ஒன்றை தண்ணீர்விடாமல் அரைத்து ஜூஸாக்கினால் கால் கப் வரும். மெல்லிய கொட்டன் துணியால் ஜூஸைத் தொட்டுத் தொட்டு முகத்தில் ஒற்றி எடுங்கள்.

முகத்தில் உள்ள கரும்புள்ளி, தழும்புகள் மறைவதுடன், நல்ல நிறத்தையும் பளபளப்பையும் தரும். தோடம் பழத்தின் தோலை வீணாக்காமல், வெந்நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்தத் தண்ணீரில் வெந்தயத் தூளை சேர்த்து தலையை அலசலாம். இதன் மூலம் பேன், பொடுகு, அரிப்பு இதெல்லாம் மறைந்து கூந்தல் பளபளப்பாகும். கொட்டை எடுத்த இரண்டு பேரீச்சம் பழத்தை அரைத்து, தர்பூசணி ஜூஸ் கலந்து முகத்தில் 'பேக்' போடுங்கள். பத்து நிமிடம் கழித்துக் கழுவினால், முகம் பொலிவாக மின்னும்.

# இளமை தரும் விளாம்பழம்



வெயிலில் அதிகம் அலைவதால், முகத்தில் வறட்சியும் சுருக்கங்களும் தோன்றும். சிலருக்கு வயதாக, வயதாக இந்தச் சுருக்கங்கள் அதிகரித்து மனதை வாட்டும். கவலைப் படாதீர்கள், விளாம்பழம் இருக்க வேதனை ஏன்?

இரண்டு கரண்டி பசும்பாலுடன், இரண்டு கரண்டி விளாம்பழ விழுதைச் சேர்த்து நன்றாக அடித்துக் கொள்ளுங்கள். இதை முகத்தில் மாஸ்க் போல போடுங்கள். விளாம்பழ விழுது எவ்வளவு நேரமானாலும் உலராது என்பதால், சிறிது நேரத்தில் நீங்களாகவே கழுவி விடுங்கள். இந்த சிகிச்சையைத் தினமும் காலையில் செய்தால் இழந்த பொலிவு மீள்வதுடன் இன்னும் இளமையாக மாறும் உங்கள் முகம்.

ரோஸ் வோட்டார் - 1 கரண்டி, லவங்க தைலம் - 3 துளி, சந்தனப் பவுடர் - 2 சிட்டிகை, விளாம்பழச் சதை- 2 கரண்டி, இவற்றைக் கலந்து முகத்தில் பூசி, மெதுவாக மசாஜ் செய்ய, ஒளியிலே தெரியும் தேவதையே தான் நீங்கள்!

குழந்தையைப் போன்ற மென்மையான சருமத்தை விரும்பாதவர்கள் யார்? விளாம்பழத்தில் அதற்கான இரகசியம் இருக்கிறது. விளாம்பழத்தின் சதைப் பகுதியைத் தனியே எடுத்துக் காய வையுங்கள். இதனுடன், பார்லி, கஸ்தூரி மஞ்சள், பூலான். கிழங்கு காய்ந்த ரோஜா மொட்டு, எல்லாவற்றையும் சம அளவு எடுத்து அரைத்துக் கொள்ளுங்கள். இதைக் குளியல் பவுடராக பயன்படுத்தினால், முரடு தட்டிய தோல் மிருதுவாவதுடன், கரும்புள்ளிகளும் காணாமல் போகும்.



# முட்டை பிரியாணி



**தேவையான பொருள்கள்:**

முட்டை - 5
பாஸ்மதி ரைஸ் - 500 கிராம்
எண்ணெய் - தேவையான அளவு
கடுகு- சிறிது
வெங்காயம்- 2
எலுமிச்சை பழம் : 1

**தயார் செய்யும் முறை:**

ஒரு சட்டியை அடுப்பில் வைத்து சிறிதளவு எண்ணையை ஊற்றி அதில் கடுகு, சீரகம், கருவேப்பிலை வெங்காயம் ஆகியவற்றை சேர்த்துவதக்கவும், பின்னர் முட்டையை இதனுடன் சேர்த்து பாதி வதங்கியவுடன் சிறிது உப்புச் சேர்த்து வதக்கவும். பின்னர் ஏற்கனவே தயார் நிலையில் உள்ள சாதத்தை இதனுடன் சேர்த்து நன்றாக கிளறி விட்டு, அதில் எலுமிச்சை சாறுசிறிதளவு விட்டு இறக்கவும். இப்போது சுவையான முட்டைபிரியாணி ரெடி

# எளிமையான மேக்கப் சாதனங்கள்



மேக்கப் போடுவதற்கு எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. ஆனால் வெளியே செல்லும் போது அவை அனைத்தையும் கொண்டு போக முடியாதல்லவா? எனவே முக்கியமான 5 பொருள்களை இங்கே கூறுகிறோம். எங்கு சென்றாலும் உங்களுடன் இருக்க வேண்டிய 5 அத்தியாவசிய மேக்கப் சாதனங்கள் இதோ...

**வெட் கிளென்சிங் டிஸ்ஸு:** முகத்திலிருக்கும் அழுக்கு, தூசி ஆகியவற்றை சுத்தம் செய்து மேக்கப் போட்டால் தான் முகம் பளிச்சிடும். இதற்கு ஈரமான வெட்கிளென்சிங்டிஸ்ஸுபோல்வேறுஎதுவும்இல்லை.

**பவுன்டேஷன்:** முகத்திலுள்ளமாசுகளைமறைத்து சீரான தோற்றத்தைத் தரும். மாய்ஸ்சுரைசர் மற்றும்சன்ஸ்கிரீன் உள்ள பவுன்டேனைத் தேர்ந்தெடுப்பது நல்லது. இது முகத்தை மிருதுவாக வைக்கும் அத்துடன் வெய்யிலின் தீய கதிர்களிலிருந்தும் பாதுகாக்கும்.

**மஸ்காரா:** மிகவும் முக்கியமான ஒன்று. ஒரு நொடியில் கண்க்ளின் அழகை பன்மடங்கு அதிகரிக்கக் கூடியது. கண்களை பெரிதாக தோன்ற வைக்கும் தன்மை இதற்கு உண்டு.

**லிப்ஸ்டிக்:** இது உதடுகளுக்கு புத்துயிர் கொடுக்கும். உதடுகளுக்கும் கண் இமைகளின் மீது நிறத்தைச் சேர்க்க இது ஒன்றே போதும்.

**காம்பேக்ட்:** மேக்கப்புக்குமுழுவடிவம்கொடுப்பது பவுடர். இதற்குகாம்பேக்ட்டைஉபயோகிப்பதேசிறந்தது. கண்ணாடியுடன் கிடைக்கும் காம்பேக்ட்டை வாங்கினால் கண்ணாடி தேவையில்லை.

# அமெரிக்க அதிபர் தேர்தல்



# கிளின்ரன்-ட்ரம்ப் நேரடி மோதல் சாத்தியம்

## களநிலைமை ஹிலாரிக்கு சாதகமென ஆரூடம்

ரெங்கன்

அமெரிக்க அதிபர் தேர்தல் வருட இறுதியில் நடக்கவிருக்கும் நிலையில் பிரதான கட்சிகள் இரண்டினதும் வேட்பாளர்களில் இருவர் இருதரப்பிலும் முன்னிலை பெற்றிருக்கின்றனர்.

குடியரசுக் கட்சியின் சார்பில் வேட்புமனுவுக்கு முண்டியடித்துக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தகப் பிரமுகர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சியின் வேட்புமனு கோரி நிற்கும் முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் ஆகியோர் இருதரப்பிலும் இப்போது முன்னிலை வகிக்கிறார்கள் என்பது தெளிவாகியுள்ளது.

கடந்த வார இறுதியில் வெளியாகியிருந்த விவரங்களின்படி மாநிலத்துக்கு மாநிலம் இரு வேட்பாளர்களும் ஏனைய சகபாடிகளைவிட முன்னிலைக்கு நகர்ந்திருப்பது தெரியவந்துள்ளது.

பொதுவில் வரப்போகும் தேர்தலில் 69 வயதான டொனால் ட்ரம்புக்கும், 68 வயதான ஹிலாரி கிளின்ரனுக்கும் இடையில்தான் நேரடிப் போட்டியிருக்கும் என்ற கருத்து மேலோங்கியிருக்கும் நிலையில் பெரும்பாலும் கிளின்ரனின் வெற்றி பிரகாசமாக இருப்பதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் பல காரணங்களில் சில வருமாறு:

ட்ரம்ப் குடியரசுக் கட்சி வேட்பாளராகக் களம் இறங்கிய சமயத்திலிருந்தே பலவித சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு விமர்சனத்துக்குள்ளாகி வருகிறார். இப்போது அதிபராக இருக்கும் பராக் ஒபாமா மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் உலகத் தலைவரான புனித பாப்பரசர் ஆகிய இருவரும் ட்ரம்ப் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் அவருக்குச் சாதகமாக இல்லை. ட்ரம்ப் இஸ்லாமியர்கள் அகதிகளாக அமெரிக்காவுக்குள் வருவதற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருப்பதும் அவருக்குச் சாதகமான சூழலைக் குறைத்துள்ளது.

ஹிலாரி கிளின்ரனைப் பொறுத்தவரை, ஏற்கனவே ராஜாங்க செயலாளராக பராக் ஒபாமாவின் முதல் கட்ட பதவிக் காலத்தில் தமது நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தியவர். ஜனநாயகக் கட்சியின் கொள்கைக் கோட்பாடுகளில் தமக்குள்ள ஆழமான பிடிப்பையும் வெளிப்படுத்தியிருந்தார். இப்பொழுது உலகப் பிரச்சினையாகக் காணப்படும் அகதிகள் விடயத்தில் சர்ச்சையான கருத்துக்கள் எதனையும் அவர் வெளியிட்டதுமில்லை. மேலும், அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் பெண் என்ற முறையிலும் அவருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகின்றது.

அமெரிக்காவிலுள்ள சிறுபான்மையினர் பலரும் அவரையே ஆதரிக்கும் நிலை காணப்படுகின்றது.

கடந்த வாரம் ஏழு மாநிலங்களில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருக்கான வாக்களிப்பில் கிளின்ரன் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவரான பேர்னி சான்டேர்சை 50 புள்ளிகள் அதிகமாகப் பெற்றுத் தோற்கடித்திருந்தார். இதற்கு முக்கிய காரணம் அந்தப் பிரதேசங்களில் வாழும் கறுப்பு இன மக்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிவந்து அவருக்கு வாக்களித்தமையாகும்.

சான்டேர்ஸ் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு கிளின்ரனுக்கு வாழ்த்துக் கூறியிருந்தார்.

"நாளையிலிருந்து இந்தப் பரப்புரை இயக்கமானது தேசிய மட்டத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்று கிளின்ரன் கொலம்பியாவில் தென் கரோலினா பல்கலைக் கழகத்தில் நடந்த வெற்றிக் கூட்டத்தில் கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தார்.

கடந்த வார நிலைமைகளின்படி 2016ஆம் ஆண்டு நவம்பரில் நடக்கும் அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்பும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்ரனும் நேருக்குநேர் போட்டியில் இறங்குவதில் எந்தவித சந்தேகமும் இருக்காது என்ற அபிப்பிராயம் மேலோங்கியுள்ளது. ட்ரம்ப் ஏழு மாநிலங்களில் ஏற்கனவே வெற்றி பெற்று மேலும் பல மாநிலங்களில் முன்னோக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அதேவிதத்தில் ஹிலாரி கிளின்ரனும் ஏழு மாநிலங்களில் கட்சி வேட்பாளராக வெற்றி பெற்று முன்னோக்கி நகர்வது தெரிகின்றது.

# உலக நடப்பு

### சிரிய போர்நிறுத்தம் தொடர்கிறது

சிரியாவில் ஒரு குறிப்பிட்ட தரப்பினருடன் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வரும் போர் நிறுத்தமானது பெரும்பாலும் நிலைகொள்ளத் தொடங்கியிருப்பதையடுத்து போர் ஓய்ந்துள்ள பகுதிகளுக்கும் மனிதாபிமான உதவிகளை விரிவாக்க ஐ.நா. நடவடிக்கை எடுத்து வருவது தெரிய வந்துள்ளது.

அரச படைகளாலும் கிளர்ச்சிக் குழுக்களினாலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ள பகுதிகளில் சுமார் 154,000 பேருக்கு இந்த உதவிகள் கிடைக்கும் என்று தெரிகின்றது. டமாஸ்கஸிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் தகவல் தருகையில், தொடர்பு கொள்ள முடியாத கஷ்டப் பகுதிகளில் முடங்கியுள்ள 1.7 மில்லியன் மக்களுக்கு உதவுவதற்குத் தாங்கள் தயாராய் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி இந்தப் போர் ஓய்வு அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளால் அறிவிக்கப்பட்டது. இந்த ஒரு பகுதி போர் நிறுத்தமானது சிரிய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதிபர் அசாத் போர் நிறுத்தத்தில் இணைந்து கொள்ள 97 எதிர்த்தரப்பு ஆயுதக் குழுக்களும் கடந்த வாரம் சம்மதம் தெரிவித்துள்ளன. போர் ஓய்வு கடந்த சனிக்கிழமையிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனால் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) தீவிரவாதிகளின் நிலைகள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன.

சிரியாவில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் 270,00 மக்களுக்கும் அதிகமாக கொல்லப்பட்டுள்ளார்கள். ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளில் மாபெரும் அகதிகள் பிரச்சினையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போர் நிறுத்தம் தொடருமெனில் நின்றுபோன அமைதிப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்க இருப்பதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

### ஈராக்கில் ஐ.எஸ். எதிர்ப்பை விரிவுபடுத்த பென்ரகன் திட்டம்

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தனது பங்குபணியை அமெரிக்கா மேலும் விரிவுபடுத்துவதற்கு 'திட்டமிட்டுவருகின்றது. இப்போது ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் மோசுல் நகரை மீளக்கைப்பற்றுவதாக இந்த நட வடிக்கை இருக்கும் என்று பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மோசுல் நகரை மீளக்கைப்பற்றுவதற்கு ஈராக்கியப் படைகள் நடவடிக்கை எடுக்கும்போது அமெரிக்க உதவிகளை விரிவுபடுத்த உத்தேசித்திருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் ஆஷ்ரன் பி.கார்ட்டர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார். இதற்கு முன்னர் டிசெம்பரில் ரமாதிநகர் மீட்பில் உள்ளூர் படை இறங்கியவேளையிலும் அந்த வெற்றிக்கும் அமெரிக்கப் படைகள் தம் பங்களிப்பை விரிவுபடுத்தியிருந்தன.

### ஈரானிய தேர்தலில் ரவுஹானி கை ஓங்குகிறது.

ஈரானில் நடந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அடிப்படைவாதிகளுக்கு பலத்த அடி விழுந்திருப்பதுடன் மிதவாத ஜனாதிபதி ஹசன் ரவுஹானியின் ஆதரவாளர்கள் பெரும் வெற்றி பெற்றிருக்கின்றனர் எனவும் செய்திகள் கூறுகின்றன.

அதேநேரம் நாட்டின் அடுத்த உயர்நிலைத் தலைவரைத் தெரிவு செய்யும் ஆயத்தின் கடும்போக்கு சமயவாதியான உறுப்பினர் ஒருவர் அதிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் தேர்தல் அதிகாரிகளால் பல சீர்திருத்த ஆதரவு வேட்பாளர்கள் தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளநிலையிலும்ரவுஹானிக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் சார்பானவர்களே பெரும்பாலும்வெற்றிபெற்றிருக் கின்றனர் என்று கூறப்படு கின்றது.

### குழந்தையின் தலையுடன் மாஸ்கோ நகரில் காணப்பட்ட பெண்

துண்டிக்கப்பட்ட மூன்று அல்லது நான்கு வயதுக் குழந்தையின் தலையுடன் அல்லாகு அக்பர் என்றும் நான் ஒரு பயங்கரவாதி என்றும் குளறியபடி கறுப்பு உடையில் காணப்பட்ட பெண் ஒருவரை மாஸ்கோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

'ரஷ்யா ருடே' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் மாஸ்கோவுக்கு வடமேற்கில் உள்ள ரயில் நிலையத்துக்கு அருகில் எரிந்து போன கட்டடம் ஒன்றில் தலையில்லாத குழந் தையின் உடல் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து துண்டிக்கப்பட்ட தலையுடன் அந்தப் பெண் காணப்பட்டுள்ளார். தலையை தூக்கிப் பிடித்துக் கத்திக் கொண்டிருந்த பெண் அந்தக் குழந்தையின் செவிலித்தாய் என்று கூறப்படுகின்றது.

அபாண்டி

அறிவியல் யுகத்தில் காலச்சக்கரம் கடுமையாகச் சுழன்றுக் கொண்டிருக்கிறது, உலகம் உள்ளங்கையில் சுருங்கியிருக்கிறது. கூடவே நம் சூழலும் பாளாகியிருக்கிறது. நீர், நிலம், காற்று என அனைத்தையும் மாசடையச் செய்திருக்கிற பெருமை நம்மையே சாரும். உலகம் வெப்பத்தில் தகித்துக் கொண்டிருக்கிறது. கமழி அடுக்கு(ஓசோன் மண்டலம்)மெல்லியதாகிப் போகியிருக்கிறது. சுத்தமான காற்றுக்கு உயிர்வாயு நிலையத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். துருவப்பனிப் பாறைகளெல்லாம் உருகி கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது.நெகிழியைப் (பிளாஸ்ரிக்) பயன்படுத்தி பற்பல நோய்களோடு இலவசமாக இணைந்திருக்கிறோம். இயற்கையைக் காக்க தவறியிருக்கிறோம். இனிமேலும் விழித்துக் கொள்ளாவிட்டால் அடுத்த தலைமுறைதான் என்னவாகுவது?



# சூழல் மீதான அக்கறையை அதிகரிப்போம்!

பருவகால மாற்றத்திற்கு 99 சதவீதம் மனிதச் செயல்பாடுகள் தான் காரணம் என்று ஆணித்தரமாக ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. பசுமைப் புரட்சி தொடங்கி ஒரு பக்கம் தன்னிறைவைப் பெற்றுத் தந்தாலும் மறு பக்கம் சுற்றுச்சூழலில் மாசுக்களை உற்பத்தி செய்திருக்கின்றன. கரியமில வாயுக்கள் அதிகமாக கலப்பதினால் தான் வளிமண்டலம் வெப்பமாகியிருக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. இதனால் கடலில் பவளப் பாறைகள் முதற்கொண்டு அழிந்திருக்கின்றன. கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது.

பிரிட்டனின் அந்தார்டிகா ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில், காற்றில் கரியமில வாயுவின் (கார்பனீர் ஒக்சைட்) அளவு உயரும்போது அண்டார்டிக் கடல் பகுதியில் 6 டிகிரி அளவுக்கு கூடுதலாக பனிக்கட்டிகள் உருகுவது தெரிய வந்துள்ளது. இதனால் கடல்நீரின் மட்டம் 6 மீற்றர் உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு கடல் நீர் அளவு உயரும்போது லண்டன், நியூ யோர்க் மற்றும் சான் பிரான்சிஸ்கோ உள்ளிட்ட கடற்கரை நகரங்கள் கடலில் மூழ்கும் ஆபத்து உள்ளது.

## சர்வதேச அரசியல் நாடகம்

உலக வெப்பமயமாதலில் வளர்ந்த நாடுகளின் பங்குதான் அதிகமாக உள்ளது. வளர்ந்த நாடுகளில் உலக மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் இருக்கிறார்கள். ஆனால் உலகை மாசுபடுத்துவதில் அவர்களின் பங்கு 50 சதவீதமாக இருக்கிறது. பெருமளவு கரியமில வாயுக்களை அவர்களது தொழிற்சாலைகளே உமிழ்கின்றன. உலகம் வெப்பமாகுவதைத் தடுக்க வளர்ந்த நாடுகள் கிளீன் நுட்பத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால் வளரும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். இதில் சர்வதேச அரசியல் அரங்கேறுகிறது. சுற்றுச்சூழல் ஒப்பந்தம் போட்டுக் கொண்டால் வளர்ந்த நாடுகளின் உற்பத்தி பாதித்து பொருளாதாரம் பாதிக்கும் என்பதால் அந்த ஒப்பந்தைகளைப் பெயரளவில் வைத்துக் கொள்கிறார்கள்.

## மாற்று வழி தேவை

உலகை வெப்பமயமாக்குவதில் தொழிற்சாலை, வாகனப்புகை ஆகியனவே அதிக பங்கு வகிக்கின்றன. அவைகளிலிருந்து வெளிவரும் வாயுக்களே வெப்பத்தை அதிகரிக்கின்றன. வெளியேறும் வாயுக்களைக் கட்டுப்படுத்தவும், வடிகட்டவும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறியலாம். இயற்கை விவசாயம், தொழில்நுட்பங்கள் மூலம் கட்டுப்படுத்தலாம். கார்பன் மோனாக்சைடை உறிஞ்சிக்கொள்ளும் கேரட் வகைகளை அதிகமாகப் பயிரடலாம். ஜெர்மனியில் நடைமுறையில் இருக்கும் வாயு குளிர்விப்பான் குளங்களை நாமும் அமைக்கலாம்.

## நெகிழி எனும் அரக்கன்

அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் நெகிழியின் சராசரி பயன்பாட்டு நேரம் வெறும் 12 நிமிடங்கள். ஆனால் அதன் வாழ்நாள் 1000 ஆண்டுகள் என்பது பிரமிக்க வைக்கிறது. அவைகளைப் பயன்படுத்தினாலும் தீங்கு, எரித்தாலும் தீங்கு. சுவாசக் கோளாறு, உணவு மண்டல பாதிப்பு, ஒவ்வாமை என புற்றுநோய் வரை இவை தோற்றுவிக்கும் நோய்கள் ஏராளம்.

நெகிழியை மக்களாகிய நாம் பயன்படுத்துவதை அறவே நிறுத்த வேண்டும். அதற்கு மாற்றாக துணிப்பைகளைப் பயன்படுத்தலாம். நெகிழி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை மூடிவிட்டு அதற்கு மாற்றான வேறு தொழில்களை அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.

## கமழி படலம் பாதிப்பு

புற ஊதாக் கதிர்களைத் தடுக்கும் க்மழி (ஓசோன்) மண்டலம் மெல்லியதாகிக் கொண்டிருப்பதால் புவி வழக்கத்துக்கு மாறான வெப்பத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. புற ஊதாக்கதிர்கள் உட்புகுவதால் தோல் புற்று நோய், கண்ணில் சதை வளர்தல், தோல் சுருக்கம், உடலில் எதிர்ப்பு சக்தி குறைதல் என்று பல நோய்கள் வருகின்றன. கடல்வாழ் உயிரினங்களில் ஒரு செல் உயிரினங்கள் செத்து மடிவதற்கு புற ஊதாக்கதிர்களே காரணமாகின்றன.

குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தும் குளோரோ ப்ளோரோ கார்பன்தான் கமழி மண்டலப் பாதிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதற்கு ஈடாக சுற்றுச் சூழலைப் பாதிக்காத வேறு பொருளை நாம் குளிர் விப்பானாக பயன்படுத்தக் கண்டறியவேண்டும். பசுமை வீடுகள் கட்டுதல், அளவாக இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்துதல், சிக்னல்களில் வாகனங்களை புகைகளைக் கக்க விடாமல் நிறுத்தி வைத்தல் போன்ற முறைகள் பயன்தரக்கூடியவை.

## நவீன விவசாயம்

இன்றைய நவீன விவசாய முறை முற்றிலும் மண் வளத்தைக் கெடுப்பதாகவும், சுற்றுச்சூழலை மாசுப்படுத்தவதாகவும்தான் இருக்கிறது. வேதியல் பூச்சிக்கொல்லி மருந்துகள், தெளிப்பான்கள் என அனைத்தும் இயற்கையைப் பாழாக்குபவையாகவும் உண்ணும் உயிரிகளுக்கு தீங்கு விளைப்பவையாகவும் இருக்கின்றன. இதற்கு நாம் இயற்கை விவசாய முறைக்கே திரும்ப வேண்டியிருக்கிறது. நிலத்தின் வளத்தை பாதிக்காத பயிர்ச்சுழற்சி முறைகளும் அவசியமாகிறது, அதிக நிலச்சத்துக்களை உறிஞ்சும் பயிர்களை தொடர்ச்சியாக அல்லாது சுழற்சி முறையில் பயிரிட வேண்டும்.

## சமூக அமைப்புகளை ஒருங்கிணைத்தல்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை அனைத்து அமைப்புகளும் மக்களிடம் எடுத்துச் செல்ல ஏதுவாக் அரசுசார் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக இயங்கு தளங்கள், ஊடகங்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைப்பது தலையாய பணியாக இருக்கிறது.

**உலக வெப்பமயமாதலில் வளர்ந்த நாடுகளின் பங்குதான் அதிகமாக உள்ளது. வளர்ந்த நாடுகளில் உலக மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் இருக்கிறார்கள். ஆனால் உலகை மாசுபடுத்துவதில் அவர்களின் பங்கு 50 சதவீதமாக இருக்கிறது.**


தற்போது இருக்கிற தார் மற்றும் சிமெண்ட் வீதிகளை விடுத்து மழைநீரை அப்படியே உறிஞ்சிக் கொள்ளும் பிளாஸ்டிக் சாலைகளை அமைப்பதில் அக்கறைகாட்டலாம். இதனால் நிலத்தடி நீரைப் பல மடங்கு அதிகரிக்கலாம். நெதர்லாந்தில் ரோட்டர்டம் எனும் நகரம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலான பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்பட்ட முதல் நகரம் எனும் பெருமையைப் பெற்றிருக்கிறது.

## அனைத்துக்கும் ஆதாரம் மழை

நிலம், நீர், காற்று மாசுபாடுகள் தவிர்ப்பதற்கு நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணிகளில் ஒன்று மரம் வளர்த்தலாகும். காற்றில் கரியமில வாயுக்களின் தாக்கத்தைக் குறைக்க, இயற்கை விவசாயத்தை மேம்படுத்த எம் அனைத்து முயற்சிகளுக்கும் மழையே முதன்மையான காரணியாகும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்வோம். மரம் மற்றும் காடுகள் வளர்ப்பதை முன்னிலைப்படுத்துவோம். இப்போது மத்திய மாகாண அரசுகளால் முன்னெடுக்கப்படும் மர நடுகைத் திட்டங்கள் வினைத்திறனுடன் இன்னும் தீவிரமாகச் முன்னெடுத்துச் செல்லல் வேண்டும். நடப்பட்ட மரங்கள் வளர்ந்து ஆளாவதையும் இந்தத் திட்டங்கள் உறுதி செய்யவேண்டும்.,

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் மாதிரிக் காடுகள் அமைத்து காடுகளால் ஏற்படும் நன்மையை உணர்த்தி மக்களை மரம் நட வழிகாட்டவேண்டும். பூங்காக்களில் இருந்த குரோட்டன்களைப் பார்த்துதான் வீட்டில் வளர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் மாதிரிக் காடுகள் பார்த்தும் நம்மவர்கள் மரம் வளர்ப்பார்கள் எனும் நம்பிக்கை இருக்கிறது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மேலும் இறுக்கமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும்போது இது தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். இதுவரையில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவின் முன்பாக வைக்கப்பட்ட கருத்துக்களில் சுற்றுச்சூழல் தொடர்பான அக்கறையுள்ள கருத்துக்களைக்காணமுடியவில்லைஎன்பது வருத்தத்துக்குரியது.



# முடிவில்லா முற்றுப்புள்ளிகள்

வெள்ளம் வந்தும்
அணைகட்டாத
தமிழினத்திலிருந்து
வெளிவரும்
மனிதாபிமானம் மிக்க - ஒரு
இளைஞனின் குரலிது....!
எங்கே செல்கிறோம் நாம்?
எம்மைத் துரத்தித் தின்ற
கழுகுகள் பாவம்
பிழைக்கட்டும்
என்று ஒய்ந்து போக - நம்மை
நாமே விழுங்கி ஏப்பம் விடும்
அற்பப் பிறவிகளாய்
மாறிப் போனோமா?
புங்குடுதீவில் பிடுங்கப்பட்ட
பூவொன்று
உக்கிளாங்குளத்தில்
உதிர்ந்து விட்ட கதை
தெரியுமா
எம்மில் பலருக்கு?
மீண்டும் மீண்டும்
பிஞ்சுகளையே
பிடுங்கினால் பாலைவனச்
சோலைகள்
தானே மிஞ்சும்...!
இப்போதெல்லாம் நீதி
வெல்ல
நியாயத்தை விட வாதமே -
அதிகம்
துணைபுரிகின்றது.
தண்டனை அளிப்பது கூட
தவறென்றாகி விட்டது.
அதனால் தானோ என்னவோ
கடையடைத்தும், கர்த்தால்
அனுஷ்டித்தும்
காமுக(ர்)க் கண்கள் இன்னும்
குருடாக்கப்படவில்லை....

பேசாலையூர் கெ.நிருபன்



# பேருந்தில் எனது பயணம்...

ஜன்னலோரம் எனது இருக்கை...
பருவ மங்கையாய்
பச்சைப் பசேலென முனைந்து
நிற்கும் மரங்கள் ஒவ்வொன்றும்
என்னை விட்டு தூரம்
போய்க்கொண்டிருக்கின்றன..
மரங்கள் மட்டுமல்ல நீயும் தான்...

சாடா.விக்னேஷ்



# நாளைய பொழுதுகளுக்காய்

கனத்துப்போன மனம்
களைத்துக் கொள்ள
விழிகளிரண்டும் முனகலுடன்
கண்ணீரைப் பனித்து
ஆறுதல் தருவதற்காய்
கன்னங்களின் பரப்பை
நனைத்து வழிகிறது...
வலிகளைச் சுமந்த
ஆழ்மனதில்
கடலலைகளாய் துரோகத்தி
ன் படிமங்கள்...
ஆறா ரணங்களை
புன்னகை போர்த்தியே
திணித்துப்போன சூழல்
சுயநலமெனும் போர்வை
விலக
அம்மணமாய்
அசிங்கத்துடன்...
கற்பனை வார்த்தைகளை
கட்டவிழ்த்துக் கதை அளந்த
போலிகளின் நாவுகளுக்கு
அமைதியெனும் பூட்டு
சிறை அமைத்துக்
கொள்கிறது...
விசும்பல் பொழுதுகளில்
உறவு சொல்லிக்
கரமிணைத்த
துரோகிகளின் முகத்திரை
ஒப்பாரிகளின் சத்தத்தில்
கிழிந்து போகிறது...
உறவுகளைக் கருவறுக்கும்
கோடரிக் காம்புகளின்
எக்காளங்கள்,
கொக்கரிப்புக்கள்
எல்லாமும் நின்று போக
உண்மைகளின் புலர்வு
உற்சாகந் தருகிறது...
அக இருளில் அமர்ந்து
தாண்டவங்கள் புரிந்த
வேண்டத்தகா உறவுகளின்
விலகல்கள் தொடங்க
மெல்ல மெல்ல
ஒளிக்கீற்றின் உண்மை
யான
தழுவல்கள்
நம்பிக்கை வளர்க்கின்றன
நாளைய
பொழுதுகளுக்காய்...

மீசாலை பா.பொன்நிலவன்



# யார் அநாதை?

ஒற்றை ஜடை பின்னலிட்டு
ஒடுக்கமாக சாறி கட்டி
கையில் ஒரு புத்தகமும்
காலில் ஒரு பாதணியும்
என் தோற்றத்தை
எளிதாகச் சொல்லலாம்?

மெதுவாய் சாலையோரம்
மெல்லிய பாட்டுடன்
தென்றலோடு கதை பேசி
என்கண்களால் விடையளித்து
விடை பெற்றுச் செல்கிறேன்

எனக்கென ஓர் உறவைத்
தேடி...புதிதாய் ஒரு மண்ணில்
புழுதிப் புகாருமற்ற
நிறைந்த நன்நிலத்தில்
நிரந்தரம் கொள்ள
எண்ணுகிறேன்...

சாலை வழியே
கால் பதித்து
சிந்தித்தபடியே என் பயணம்
அந்தப் பட்டணப் புகாரில்...

ஆயிரம் வினாக்களை
அதிகாரமாய்க் கேட்டுக்
கொள்கிறேன்
என்னைப் படைத்த
அந்த ஆண்டவனிடம்...

எதற்காக என்னை மட்டும்
அநாதையாய்ப் படைத்தாய்?
வீதியில் உலாவரும் ஒரு
ஜீவனேனும்
எனக்காகப் பிறந்திருந்தால்?

"அம்மா"...
என் கைவிரல் பிடித்து
அழைக்கும் மழலை மொழி
அது...
ஆச்சரியமாய்த் திரும்புகிறேன்..
அழகிய சிறிய குழந்தை
என்னைப்போல் தனக்கென
உறவு தேடிக் கொண்டிருந்தது
போலும்..!

விசுவமடு அபிக்குட்டி





# பயணமே சவால்!

என். ராமதுரை

சூரிய மண்டலத்துக்கு வெளியே, எங்கோ ஒரு கிரகத்தில் நம்மைப் போன்ற மனிதர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களைப் பார்க்க நமக்கு ஆசையாக இருக்கிறது. ஆனால் நம்மால் நேரில் சென்று பார்க்க முடியுமா? அந்தக் கிரகத்துக்குச் செல்வதில் ஒன்றல்ல, பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நம்மால் சமாளிக்க முடியும் என்றால் அது சாத்தியமே. முதல் பிரச்சினை, அந்தக் கிரகம் உள்ள தொலைவு. சந்திரனுக்குச் சென்று வந்தோமே என்று கேட்கலாம். சந்திரன் பூமியின் வெளி இணைப்பு வீடு மாதிரி. சந்திரன் வெறும் 4 லட்சம் கி.மீ. தொலைவில் இருக்கிறது. கட்டுச்சோறு கட்டிக்கொண்டு சந்திரனுக்கு ஒன்றரை நாளில் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால், நாம் எங்கோ இருக்கின்ற நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்ற கிரகத்துக்குச் சென்றாகவேண்டும்.

## ஒளியாண்டுத் தொலைவு

பூமிக்கு (சூரியனுக்கு) மிக அருகில் இருக்கின்ற நட்சத்திரம் பிராக்சிமா செண்டாரி நட்சத்திரம். அது 4.24 ஒளியாண்டு தொலைவில் உள்ளது. ஒளியாண்டு என்பது தூரத்தைக் குறிப்பிடுகின்ற அலகு. ஒளிஓரிடத்திலிருந்துகிளம்பியதிலிருந்து ஓராண்டுக் காலத்தில் பயணம் செய்யக்கூடிய தூரமே ஒளியாண்டுத் தொலைவு.

ஒளி ஒரு விநாடியில் சுமார் 3 லட்சம் கி.மீ. தூரம் செல்லும். அந்த அளவில் ஒளியாண்டு தூரம் என்பது சுமார் 9 லட்சத்து 46 ஆயிரம் கோடி கி.மீ. ஆகும். நட்சத்திரங்களுக்கான தூரத்தை கி.மீ. கணக்கில் சொல்வதானால், நிறைய பூஜ்ஜியங்களைப் போட வேண்டியிருக்கும் என்பதால், ஒளியாண்டு என்ற அலகைப் பயன்படுத்துகின்றனர்.

தூரம் ஒரு பெரிய பிரச்சினை அல்ல. தகுந்த தொழில்நுட்பம் இருந்தால் தூரத்தை வெல்லலாம். பஸ், ரயில், விமானம் ஆகியவை இல்லாத காலத்தில் தமிழர்கள் உலகம் முழுவதும் சுற்றவில்லையா? திரைகடலோடி திரவியம் தேடவில்லையா? தொழில்நுட்பங்கள் வந்தபோது தூரம் குறுகிவிட்டது. விமானம் கண்டுபிடிக்கப்பட்டதற்கு முன்னர் லண்டனுக்குக் கப்பல் மூலம் பல மாதம் செல்ல வேண்டியிருந்தது. ராக்கெட்டும் விண்கலமும் சந்திர மண்டலப் பயணத்தைச் சாத்தியமாக்கின.

## அண்டவெளிப் பயணம்

சுமார் 11 ஒளியாண்டுத் தொலைவில் உள்ள டாவ் செடி என்னும் நட்சத்திரத்தை பூமி போன்ற இரு கிரகங்கள் சுற்றுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒளி வேகத்தில் இல்லாவிட்டாலும் கிட்டத்தட்ட ஒலி வேகத்தில் ஓர் விண்கலத்தைச் செலுத்தும் திறன் கொண்ட ராக்கெட்டை நம்மால் உருவாக்க முடியுமானால், நீண்ட அண்ட வெளிப் பயணம் பற்றிச் சிந்திக்க முடியும்.

இப்போது நம்மிடம் உள்ள ராக்கெட்டுகள் அதி வேகத்தில் செல்லக்கூடியவை அல்ல. 2006இல் நாஸா, குட்டிக் கிரகமான புளூட்டோவை நோக்கி ஒரு ஆளில்லா விண்கலத்தைச் செலுத்தியபோது, அந்த ராக்கெட் மணிக்கு 64 ஆயிரம் கி.மீ. வேகத்தில் பாய்ந்தது. விண்வெளி விஞ்ஞான வரலாற்றிலேயே ஒரு ராக்கெட் அந்த வேகத்தில் செலுத்தப்பட்டது அதுவே முதல் தடவை. ஆனால், மிகத் தொலைவில் உள்ள கிரகத்துக்கு நாம் செல்வதானால் ஒரு விண் கலத்தை மணிக்கு பல கோடி கி.மீ. வேகத்தில் செலுத்தக்கூடிய ராக்கெட் தேவை.

ராக்கெட்டுகளில் இப்போது நாம் பயன்படுத்துகின்ற திரவ நைதரசன், திரவ உயிர்வாயு எரிபொருள்களால் அவ்வித வேகத்தை அளிக்க இயலாது. எனவே, புதிய வகை எரிபொருளைக் கண்டுபிடித்தாகவேண்டும். அது மட்டும் போதாது. அதி வேகத்தில் செல்கின்ற ராக்கெட்டைப் புதிய வகைப் பொருள்களைக்கொண்டு தயாரிக்க வேண்டியிருக்கும்.

## எரிபொருள் தேவையில்லை

பூமியிலிருந்து அந்த வேகத்தில் கிளம்பிய பிறகு, வழி நெடுகப் பயணம் செய்ய எரிபொருள் செலவு தேவையில்லை. பயணிக்க ஆரம்பித்த பிறகு விண்கலமானது இயற்கை விதிகளின்படி தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும். நாம் காரில் செல்வதானால், போய்ச் சேருகின்ற இடம் வரையில் இயந்திரம் இயங்கியாக வேண்டும். ஆகவே, ஒவ்வொரு விநாடியும் எரிபொருள் செலவாகிக்கொண்டிருக்கும். விண் வெளிப் பயணம் அப்படியானதல்ல. கிளம்பிய பிறகு இயந்திரம் செயற்படவேண்டியதில்லை. வேகத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அல்லது வேகத்தைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் போதுதான் மறுபடி இயந்திரத்தை இயக்கியாக வேண்டும்.

ஆற்றில் ஆளில்லாப் படகைத் தள்ளிவிட்டால் அது தானாக மிதந்து செல்வதைப்போல விண்கலம் விண்வெளியில் சென்றுகொண்டிருக்கும். சூரியனை கோடிக்கணக்கான ஆண்டுகளாகச் சுற்றிவருகின்ற பூமியில், சூரியனைச் சுற்றிவர ஏதேனும் எரிபொருள் இருக்கிறதா என்ன? அதி வேகத்தில் செல்வதற்கு உதவக்கூடிய எரிபொருளை உருவாக்குவதில் வெற்றிபெற்றுவிட்டால், அந்த வேகத்தில் செல்வதற்கான ராக்கெட்டைத் தயாரிப்பது சாத்தியமாகலாம்.

அவ்வளவு தொலைவு செல்லும் விண்கலத்தில் 2 அல்லது 3 பேர் செல்வது உசிதமாக இருக்காது. குறைந்தது 30 பேர் சென்றாகவேண்டும். மிக நீண்ட தூரப் பயணத்துக்கான விண்கலத்தின் பல்வேறு பகுதிகளையும் கவனித்துப் பராமரிக்கவே பலர் தேவைப்படுவர்.

இந்தவித நீண்ட பயணத்தின் முடிவில், அந்தக் கிரகத்தில் இறங்க முடிவதாக வைத்துக்கொண்டாலும் அங்கிருந்து மீண்டும் புறப்படுவது எப்படி என்பதே பெரிய பிரச்சினை.

பூமிக்கு அருகில் உள்ள செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதன் செல்வதில் உள்ள பிரச்சினையே கீழே இறங்கினால் எப்படி மேலே வருவது என்பதுதான். ஏனெனில், ராக்கெட் இல்லாமல் ஒரு விண்கலம் மேலே வர முடியாது. நாம் எந்தக் கிரகத்துக்குச் சென்றாலும் மேலே ஏறி வருவது என்பது பெரிய பிரச்சினையாகவே இருக்கும். ஒன்று செய்யலாம். அந்தக் கிரகத்தில் இறங்காமல் அதை வட்டமடித்துவிட்டுத் திரும்பலாம். இப்படிச் செய்தால் பிரச்சினை இருக்காது. சந்திரனில் 1969 ஜூலையில் முதல் தடவையாக மனிதன் இறங்கியதற்கு முன்னர், நாஸா அனுப்பிய அப்பலோ -10 விண்கலத்தில் சென்ற அமெரிக்க விண்வெளி வீரர்கள் மூவர் இப்படியாக சந்திரனை ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு, பூமிக்கு வந்து சேர்ந்தனர். ஒத்திகைப் பயணம் என்பதால் அவர்கள் சந்திரனில் இறங்கவில்லை.

சுமார் 11 ஒளியாண்டுத் தொலைவில் உள்ள கிரகத்துக்கு இந்த விதத்தில் ஒத்திகைப் பயணத்தை மேற்கொள்ளலாம். அது வெற்றி பெற்றால் அடுத்த தடவை கீழே இறங்குவது பற்றிச் சிந்திக்கலாம்.

எங்கோ இருக்கிற கிரகத்துக்குப் போய்ச் சேர்வதற்கு 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்றால், விண்கலத்தில் உள்ளவர்கள் எப்படி உயிர் பிழைப்பது? அவர்களுக்குச் சாப்பாடு தண்ணீர் வேண்டாமா? 30 பேருக்கு வேண்டிய உணவைக் கையோடு எடுத்துச் செல்வது என்றால் அவற்றின் எடையே மிகப் பிரம்மாண்டமாக இருக்கும். ஆனால், இந்த சாப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழி உண்டு. அவசியம் கருதி விழித்துக்கொண்டிருக்கிற சிலரைத் தவிர, எவருக்கும் மாதக் கணக்கில் சாப்பாடே கிடையாது என்றால் பிரச்சினை தீர்ந்துவிடும். அதாவது, சாப்பிட வேண்டிய அவசியமே இன்றி அவர்கள் பல ஆண்டுக் காலம் தொடர்ந்து கட்டாயமாக உறங்கும்படி செய்துவிட்டால் பிரச்சினையைச் சமாளித்துவிடலாம். இப்படியான நீள் துயில் சாத்தியமா என்பது ஏற்கெனவே ஆராயப்பட்டு வருகிறது. இதற்கான ஆய்வுக்கு ஆள்கள் தேவை என்று அண்மையில் நாஸா அறிவித்திருக்கிறது. நீங்கள் விண்ணப்பித்தாலும் எடுத்துக்கொள்வார்கள்.

> ஆற்றில் ஆளில்லாப் படகைத் தள்ளிவிட்டால் அது தானாக மிதந்து செல்வதைப் போல விண்கலம் விண்வெளியில் சென்றுகொண்டிருக்கும். சூரியனைக் கோடிக் கணக்கான ஆண்டுகளாகச் சுற்றிவருகின்ற பூமியில், சூரியனைச் சுற்றிவர ஏதேனும் எரிபொருள் இருக்கிறதா என்ன? அதி வேகத்தில் செல்வதற்கு உதவக்கூடிய எரிபொருளை உருவாக்குவதில் வெற்றி பெற்று விட்டால், அந்த வேகத்தில் செல்வதற் கான ராக்கெட்டைத் தயாரிப்பது சாத்திய மாகலாம்.



புதிய நகைச்சுவை தொடர் 1

# ராசியில்லா ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

நான் ஒரு ராசா. நாடு நகரங்கள் கோட்டை கொத்தளங்கள், அரண்மனை, அமைச்சர், சேவகர், ஒற் றர் என்று எதுவுமேயில்லாத ஒரு ராசா. பட்டத்து ராணிகூட இல்லாத பரிதாபகரமான ராசா. எனது ஊரிலே நான் ஒரு ராசா. யாராவது வந்து ராசா என்று விசாரித்தார்களானால் எமது ஊரவர், அவர்களின் கையைப் பிடித்து இழுத்து வந்து என்முன்னே நிறுத்துவார்கள். எனது உற்றார், உறவுகள் ஊரவர் நண்பர்கள் அனைவருக்கும் நான் ராசா. தெரிந்தோ தெரியாமலோ எனக் அம்மா இட்ட பெயர் செல்வராசா. செல்வச் செழிப்போடு ஒரு ராசாவாக வாழ்வேன் என்றெண்ணித்தான் இப்படியொரு அழகான பெயரை இட்டிருப்பாள் என்னுடைய அம்மா. செல்வ ராசா என்னும் பெயரை வெட்டிக் கொத்திச் சுருக்கி ஒரு ராசா வாக மாற்றிவிட்டார்கள். உண்மையைச் சொல்லப் போனால், ராசா என அழைப்பது எனக்கும் பெருமையாகத்தானிருந்தது. அப்படியே அனைவரும் அழைக்கட்டும் எனப் பேசாமல் விட்டுவிட்டேன். எனவே எப்படியோ நான் இப்போது ஒரு ராசா.

நோயினால் பீடிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதுமே வைத்தியசாலையில் முகாமிட்டிருக்கும் ஓர் ஆயுட்கால நோயாளிக்கு ஆரோக்கியநாதன் என்று பெயர். சதா குத்து வெட்டுச் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு சிறைச்சாலையையே சொந்த வீடாகக் கொண்டவனுக்குப் பெயர் குணரத்தினம். பிறந்த நாள் முதல் செல்வத்தின் வாசனையையே அனுபவித்திராத பஞ்சப் பரதேசியான எனக்கு செல்வ ராசா என்று பெயரிட்டிருக்கிறார் கள். இதற்கும் ஒரு யோகம் வேண்டும். பெய ரிலாவது ராசாவாக இருக்கின்றேனே! இந்த ராசாவுக்கு இப்போதுள்ள பெரிய பிரச்சினை என்னவென்றால் வேலையில்லாத் திண்டாட்டம். இதன் காரணமாக இந்த ராசாவுக்கு வாழ்க்கையில் எந்தவித கொண்டாட் டங்களோ மகிழ்ச்சியோ கிடைப்பதில்லை. ஊரிலே எனக்குப் பொருத்தமான வேலைகளொன்றுமே வாய்க்கவில்லை. நான் படித்ததும் குறைவு. சாதாரண தரத்தில் சாதாரண படிப்புடன் பள்ளிப் படிப்புக்குக் கொள்ளி வைத்து விட்டேன். அதற்கு மேலும் எனக்கு படிப்பு ஏறவில்லை. வேறென்ன செய்ய! இப்போது வயதும் இருபது முடிந்து விட்டது.

இருபத் தொன்றுக்குள் நுழைந்து விட்டேன். இனியாவது ஒரு வேலை தேடிச் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும். அம்மாவின் தண்டச் சோற்றில் இனியும் வாழக் கூடாது. இப்படி நான் ஆசைப்படுவது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த வாழ்க்கை கிட்ட வேண்டுமே! நானிந்தப் புண்ணிய பூமியில் ஜன னம் எடுத்த கையுடன் முதல் வேலை யாகச் செய்த கைங்கரியம் எனது தந்தையாரைச் சொர்க்க லோகம் அனுப்பியதுதான். நானிங்கே வர அப்பா என்னைச் 'சைட்' எடுத்துக் கொண்டு சிவலோகம் விரைந்து விட்டார். அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்திருப்பார்போலும். என்னோடு காலம் தள்ள முடியாதென்று எண்ணித்தான் நான் வரமுன்பு மனிதர் போய்ச் சேர்ந்து விட்டார். புண்ணிய ஆத்மா. அப்பா போன நாள் முதல் இன்று வரைக்கும் அம்மாதான் எனது 'அக்டிங்' அப்பாவா கக் கடமை புரிந்து கொண்டிருக்கின்றார்.

எல்லாம் சரி! எனக்கு இப்போது வேண்டியது ஒரு வேலை. அது மட்டும் கிடைத்து விட்டால் உண்மையிலேயே பெயருக்கேற்ற வகையில் நான் ஒரு ராசாவாகி விடுவேன். ஆனால் இங்கே என்னைவிட மெத்தப் படித்தவர்கள் வேலை வேண்டுமென்று வீதியிலிறங்கிப் போராட்டம் நடத்தியும் ஒன் றும் சரிவராது அவர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கையில் என்னுடைய படிப்புக்கு எந்தப் பைத்தியக்காரன் வேலை கொடுப்பான்?

வேலை கிடைக்கும். கூடவே நல்ல சம்பளமும் கிடைக்கும். கடினமான வேலைகள் செய்தால் தினமும் மயிலுகள், குயிலுகளென்று ஏராளமாக உழைக்க லாம். வெட்கத்தைப் பாராது வெட்கத்தைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு கிடைக்கும் வேலைகளைக் கஷ்டப்பட்டுச் செய்தால் நன்றாகச் சம்பாதிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட கடினமான வேலைகளொன்றும் என்னால் செய்ய முடியாது. அந்தளவுக்கு உடலில் தெம்பில்லை. இருந்தாலும் என்னால் முடியவே முடியாது. ஐய்யய்யோ! முடியவே முடியாது. உடம்பில் நோகாத ஏதாவது பம்மாத்து வேலைகௌன்றால் சத்தியமாய் நூறு தடவைகள் சம்மதம்... சம்மதம்....

சிறுவயது முதல் நான் அம்மாவின் செல்லப்பிள்ளை. தேப்பன் தின்னியென்று எனக்கு ஒருவித கஷ்டமான வேலைகளும் தருவதில்லை. அதையே சாக்காக வைத்துக் கள்ளத்தேகம் வளர்த்துப் பழகிவிட்டேன். சொகுசுப் பேர்வழியாகிவிட்டேன். கிட்டத்தட்ட பெண்மை கலந்த ஒருவித மென்மையான உடற்பலத்தையே கொண்டிருப்பவன் போன்று உணர்ந்து கொள்வதுண்டு. பிறப்பில் ஆணாகத்தான் பிறந்தேன் கால ஓட்டத்தில் ஆண்மையும் பெண்மையும் கலந்த அர்த்தநாரீஸ் வரன் ஆகிவிட்டேனோ! தெரியவில்லை. அல்லது முற்றுமுழுக்கப் பெண்ணாகி மாறிவிட்டேனா என்ற பயமும் என்னிடமில்லாமலில்லை. இதன் காரணமாக அந்தரங்கமான முறையில் என்னுடலை நானே செக்கப் பண்ணிப் பார்த்துக்கொள்வதுமுண்டு. நல்லவேளை! கட வுளே அப்படியொரு பொல்லாப்பும் இதுவரையில்லை. அம்மா ஆடு வளர்க் கின்றார். அது பால் கொடுக்கின்றது. கோழி வளர்க்கின்றார். முட்டை கொடுக் கின்றது. என்னை வளர்க்கின்றார் நான் அம்மாவுக்குக் கஷ்டத்தைக் கொடுக் கின்றேன். இனியுமிப்பிடி வேலையில்லாது கஷ்டப்பட முடியாது. எங்கேயா வது ஒரு சொகுசு வேலை கிடைக்காமலா போய்விடுமென்று தன்னம்பிக்கைக்குத் தண்ணீர் அள்ளி ஊற்றி வளர்த் துக் கொண்டிருந்தேன். நம்பிக்கை வீண்போவதில்லைத் தானே! பக்கத்து வயற்கரைத் தும்பிக்கை யானைக் கையெடுத்துக் கும்பிட்ட பலன் கை விட்டாது. சாவுத் தண்டனை நிறைவேற்றும் அலுக் கோஸ் பதவி. அரச வேலை. பென்ஷன் அது இது வென்று நல்ல வசதிகள். சம்பளமும் அதியுயர் சம்பளமாம். அந்த வேலையில் இன்னமும் எவரும் இணைந்துகொள்ளவில்லை. படிப்பும் ணைக்கிருப்பதுபோதும். போட்டிகளுமிருப்பதாகத் தெரியவில்லை. விண்ணப்பித்து விட்டேன் நிச்சயம் வெகுவிரைவில் நானொரு அலுக் கோஸ் ஆகிவிடுவேன்.



## கல்வி...

22 ஆம் பக்கத் தொடர்ச்சி

“இது கடினமான கேள்வி. கல்வி என்பது ஒரு நாட்டின் உள்ளூர் மக்களுடனும் வரலாற்றுடனும் இணைந்திருக்கிறது. அதனால் ஒரு நாட்டின் கல்விமுறையை இன்னோரு நாட்டுக்குப் பொருத்துவது சரியாக இருக்காது. ஆனால், மிகச் சிறந்த ஆசிரியர்கள்தான் சிறந்த கல்விக்கான அடிப்படை. ஆசிரியர் பயிற்சியில் முழுக் கவனம் செலுத்தி வடிவமைப்பதும், அவர்களின் பணிபுரியும் சூழலை ஆரோக்கியமானதாக மாற்றி அமைப்பதும் முக்கியம். நல்ல ஊதியம் அளிப்பதும் அவசியமானது என்றபோதிலும் அது ஒரு நிபந்தனை அல்ல. பின்லாந்தில் மற்ற தொழில் துறை பணிகளில் இருப்போர் பெறும் சராசரி ஊதியத்தையே ஆசிரியர்களும் பெறுகின்றனர்.”

“பின்லாந்து கல்விமுறை குறித்து அதிகம் அறியப்படாத செய்திகள் எவை?” “எல்லா குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான வகுப்பறையில்தான் கற்பிக்கிறோம். நல்ல பாடசாலை புகழ்பெற்ற பாடசாலை, மோசமான பாடசாலை என்ற பிரிவினைகள் எங்கள் நாட்டில் இல்லை. கற்றல் குறைபாட்டுடன் இருக்கும் குழந்தைகளிடம் கூடுதல் கவனம் செலுத்துகிறோம்.

முக்கியமாக, வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 21 பேர்தான். அதைத் தாண்டினால் ஆசிரியரால் தனிப்பட்ட கவனம் செலுத்த முடியாது. அதேபோல எங்கள் மாணவர்கள் வகுப்பறையில் இருக்கும் நேரம் மிகவும் குறைவு. ஒரு நாளைக்கு ஏழு மணி நேரம் வகுப்பறையில் இருப்பதாலேயே மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள் என்பதை நாங்கள் நம்பவில்லை. விளையாடவும், பொழுதுபோக்கவும், வீட்டுப்பாடம் செய்யவும் அவர்களுக்கு நேரம் தர வேண்டும்!”

ஐயா கல்விக் கனவான்களே! உங்களுக்கு இந்தப் பேட்டி சமர்ப்பணம். கல்வியைத் தரமாக்குங்கள். மீதி எல்லாமே நல்லபடி மாறும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT







என்னை கடலில் தூக்கி போட்டால்
கட்டு மரமாகத்தான் மிதப்பேன்





அந்த கட்டுமரத்தின் மேல்
நான் ஸ்டிக்கர் ஒட்டுவேன்

# பெண் பார்ப்பது எப்படி !

படித்ததில் பிடித்தது

WhatsApp



ஒரு தத்துவ ஞானியிடம், ஒரு இளைஞன் சென்று எனக்குப்பெண் பார்க்க வேண்டும் என எனது தாய் ஆசைப்படு கிறாள், நான் எப்படியான பெண்ணைத்தெரிவு செய்ய வேண்டும் ? என்று சொல்லித் தாருங்கள் என்றான்.

அதற்கு அவர் அழகானவளைத் திருமணம் செய்யாதே! அடுத்தவன் அவள் மீது ஆசைப்படுவான். அலங்கோலமான வளைதிருமணம் செய்யாதே! உனக்கே அவள் மீது வெறுப்பு ஏற்பட்டுவிடும்.உயரமானவளை மணம் முடிக்காதே! நீ எட்டிப்பார்க்க வேண்டி வரும்.குட்டையானவளை மணம் செய்தால்! அவளுக்காகத்தலை குனிய வேண்டி வரும்.பருமனானவளையும் மணம் செய்யாதே ! உனக்கு மேல் அவள் முட்டினால் காயம் ஏற்படும்.மெலிவானவளைதிருமணம் செய்யாதே! உன் கண்ணுக்கு அவளைக் காண மாட்டாய்.வெள்ளையானவளையும் மணம் செய்யாதே ! மெழுகுவர்த்தி தான் ஞாபகத்துக்கு வரும்.கறுத்தவளைமணம் செய்தால் இருட்டில் பேய் என்று பயப்படுவாய்.படிக்காதவளை மணம் செய்தால்! நீ கூறுவதை அவள் புரிந்து கொள்ள மாட்டாள். படித்தவளை மணம் முடித்தாலே! உன்னிடம் விவாதத்துக்கு வருவாள். பணக்காரியை மணம் செய்யாதே ! எடுத்ததற்கெல்லாம் எனது பணம் என்பாள்.ஏழையை மணம் முடித்தால்! உனது சாவின் பின்னர் உனது குழந்தை சிரமப்படும்.அதிகம் அன்பானவளை மணம் செய்யாதே! உனது சாவின் பின் வேறு ஒருவனிடம் அவளது அன்பு திரும்பி விடும்.கோபக்காரியை முடித்தால் ! உனது வாழ்க்கை நரகமாகி விடும்.அனைத்தும் தெரிந்தவளை முடித்தால்! உனது பணத்தை கரைத்து விடுவாள்.ஒன்றும் தெரியாதவளை மணம் முடித்தால்! நீ வீட்டு வேலைக் காரனாகி விடுவாய்.அமைதியானவளை மணம் செய்யாதே! நீ செத்தாலும் அவள் அமைதியாகவே இருப்பாள்.ஆர்ப்பரிப்பவளை மணம் முடித்தால்! ஒரு பூச்சிக்கும் ஊரைக்கூட்டி விடுவாள். ஊருக்குள் உள்ள வளை முடித்தால் ! தாய் வீட்டில் கோழி முட்டையிட்டாலும் பார்க்கப்போவாள். தூரத்தில் உள்ளவளை மணம் செய்யாதே. உனது வாழ்க்கை பிரயாணத்தில் கழியும்.என்று உபதேசித்தார் ஞானி.வந்த இளைஞன்,ஏன் பெரியவரே சுருக்கமாக திருமணமே முடிக்க வேண்டாம் என்று சொல்லியிருக் கலாமே? என்றான் கோபத் துடன்.




**சூர்யா** @surya_offl Feb 17

முன்னால் ஓடிக் கொண்டிருப்பவனின் வேகத்தைவிட பின்னுக்கு தள்ளப்பட்டவனின் வேகம் அதிகமாக இருக்கும். எப்போ வேண்டுமானாலும் முத்துவான்.

**Nagasai** @nagasai2016 Feb 17

"அலங்காரம்"
"அகங்காரம்
இரண்டும் அதிகமாக
இல்லாத பெண்கள்
மனைவியாகக்கிடைப்பது
ஆண்களின் வரம்....

## அபிசேக் மியாவ்

ஆடின காலும் பாடின வாயும் மட்டு மல்ல, பேஸ்புக் டுவிட்டர்ல கருத்து சொன்னவனும் சும்மா இருக்க மாட்டான். எதையாவது சொல்லிகிட்டே தான் இருப்பான்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 2 | |
| | 3 | | 7 | | 8 | 4 | | |
| | 5 | | | | | 1 | | |
| 4 | | | | 2 | | | | 3 |
| 6 | | | | | | | | 8 |
| 7 | | | | 9 | | | | 2 |
| 3 | | 1 | | | | | 5 | |
| | | 9 | 3 | | 5 | | 7 | |
| 5 | 6 | | 4 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 2 | 4 | 5 | 6 | 8 | 7 | 1 |
| 4 | 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 5 | 6 |
| 7 | 5 | 6 | 2 | 1 | 8 | 4 | 3 | 9 |
| 2 | 4 | 3 | 9 | 6 | 7 | 5 | 1 | 8 |
| 1 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 2 | 4 |
| 5 | 8 | 9 | 1 | 2 | 4 | 7 | 6 | 3 |
| 3 | 9 | 1 | 7 | 4 | 2 | 6 | 8 | 5 |
| 8 | 2 | 5 | 6 | 9 | 1 | 3 | 4 | 7 |
| 6 | 7 | 4 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 |

சுடோக்குஒருஎண்விளையாட்டுதர்க்கரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதி யில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**மேடம்:** எதிரிகள் இடம் மாறிப் போக வாய்ப் புண்டு. தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். அரசு தொடர் பான உதவி கிடைக்கும்.



**இடபம்:** எதிர்கால முடிவைப் பற்றிப்பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கடுமையாக உழைப்பீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.



**மிதுனம்:** அவப்பெயர் வராத வகையில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். தெய்வ வழிபாடு மன அமை தி க்கு வழிவகுக்கும்



**கடகம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ் வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**சிங்கம்:** செயல் வெற்றி பெற அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அபரி மிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பண வரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத்திட்டமிடுவீர்கள்.





**கன்னி:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பைப்பயன்படுத்துவது நல்லது. பண வரவு சீராக இருக்கும். விலை உயர்ந்த பொருள் களைப் பாதுகாப்பதில் கவனம் தேவை.



**துலாம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாம தம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் மித மான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். சீரான ஓய்வு உடல்நலத்தைப் பாதுகாக்கும்.



**விருச்சிகம்:** உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். சுப விடயத்தில் முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் பயணத்தைப் பயனறிந்து மேற் கொள்வது நல்லது



**தனுசு:** எவரிடமும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கும். கண்களின் பாது காப்பில் கவனம் தேவை. மாணவர்கள் தேர்வு நோக்கில் படிப்பர்.



**மகரம்:** சிரமம் அனைத்தும் விலகும். தொழில், வியாபாரத்தில் மேலதிக வருமானம் கிடைக்கும். பெண்கள் அக்கம் பக்கத்தினரின் பாராட்டைப் பெறுவர். உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**கும்பம்:** நல்லவர்களின் ஆலோசனை நம்பிக்கை அளிக்கும். தொழில், வியா பாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படலாம். இலாபம் சுமார். வாகனத்தின் பாதுகாப்பில் கவனம் தேவை.



**மீனம்:** சமயோசிதமாகச்செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான, புதிய வாய்ப்புக் கிடைக்கும்; வருமானம் அதி கரிக்கும். வழக்கு, விவகாரத்தில் சாதகமான தீர்ப்புக்கிடைக்கும்.





## கொட்டன் ரொப்கள்

புதிய ஸ்ரைல் கொட்டன் ரொப்கள் அறிமுகமாகியுள்ளன. முக்கால் கையுடன், அளவில் நீளமாக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை பல வர்ணக் கலப்புடன், பிரின்ரட் வேலைப்பாடுகள் கொண்டவையாகும். இவை ஒவ்வொன்றும் 750 ரூபாவில் இருந்து 850 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 650 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 300 | 300 | – |
| கணவாய் | 600 | 500 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 500 | 500 |
| சுறா | 600 | 500 | 600 | 800 | 700 | 600 | – |
| சீலா | 300 | 400 | 400 | 500 | 450 | 500 | 400 |
| விளை | 700 | 400 | 400 | 600 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 350 | 500 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 450 | 350 | 300 | 400 | 400 | 500 | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 450 | 600 | – |
| ஒரா | 400 | 400 | – | – | 300 | – | – |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 250 | 200 | 350 |
| நகரை | 200 | 250 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 450 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 250 | 400 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 350 | 250 | 250 | 400 | 400 | 100 | 250 |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 400 | 250 |



## குறிப்புகள்

- கூடையில் பச்சைக் காய்கறிகளைப் போட்டு ஈரத்துணியால் மூடி வைத்தால் மூன்று நாள்கள் வரை அவை வாடாமல் இருக்கும்.
- கிழங்குகளை மூடி வைக்கக் கூடாது. காற்றோட்டம் உள்ள இடத்தில் பரப்பி வைக்க வேண்டும்.
- மீன் வாங்கி சுத்தம் செய்த பாத்திரத்தில் அதன் வாடை போகாமல் இருந்தால், சீயக்காய் மற்றும் புளி சேர்த்துத் தேய்த்து விடுங்கள். நாற்றம் போய் விடும்.
- தோசைக்கல்லைத் தேய்த்துத் தேய்த்து கறைகளைச் சுத்தம் செய்ய வேண்டியதில்லை. பயன்படுத்தியபின்னர், ஒரு ஈரத்துணியால் துடைத்துவிட்டு, பின்னர் ஒரு செய்தித்தாளால் துடைத்து விட்டால் பிசுபிசுப்புப் போய்விடும்.

**நாளை**
மாசி-24
திங்கட்கிழமை 07.03.2016
திதி: திரயோதசி ந.ப.12.01 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பி.இ.01.12 வரை
ராகுகாலம்: 07.54-09.24 வரை
சுபநேரம்: 12.24-01.54 வரை
மகாசிவராத்திரி விரதம்



## பூசணிக்காய்த் தோசை

**தேவையான பொருள்கள்:**

பச்சை அரிசி - 2 கோப்பை
துருவிய மஞ்சள் பூசணி - 1 கோப்பை
உளுத்தம் பருப்பு கால் கோப்பை
நல்லெண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

- பச்சைஅரிசியை இளம் சூடான தண்ணீரில் 2 மணி நேரம் ஊறவைத்து மிருதுவாக அரைக்கவும்.
- உளுந்தைத் தனியாக ஊறவைக்கவும்.
- பூசணியின் விதை, தோல், போன்றவற்றை நீக்கி துருவி அளந்து கொள்ளவும்.
- உளுந்தோடு பூசணித் துருவலையும் சேர்த்து நன்றாக மிருதுவாக அரைத்துக் கொள்ளவும்.
- அரிசி, உளுந்து, அரைத்த மாவுகளை ஒன்றாகக் கலந்து உப்புச் சேர்த்து வைக்கவும்.
- மறுநாள் காலைவரை புளிக்க வைக்கவும்.
- சட்டியில் அல்லது சூடான தோசைக் கல்லில் தோசையை சிறிது கனமாக வார்த்து, சிறிது நல்லெண்ணெய் விட்டு மூடிவைத்து ஒரு பக்கம் மட்டும் சுட்டு எடுக்கவும். (திருப்பிப் போட வேண்டாம்)



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 40 | 20 | 60 | 30 | 30 |
| கத்தரி | 80 | 50 | 100 | 80 | 80 | 60 | 70 | 40 |
| கரட் | 120 | 140 | 100–140 | 140 | 80 | 160 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 100 | 60 | 50 | 80 |
| பாகல் | 100 | 100 | 80 | 100 | 100 | 140 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 70 | 60 | 60 | 140 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 70 | 70 | 80 | 70 | 100 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 60 | 50 | 80 | 60 | 100 | 60 | 60 |
| பூசணி | 60 | 50 | 50 | 50 | 40 | 120 | 35 | 50 |
| தக்காளி | 30 | 40 | 30 | 40 | 30 | 30 | 25 | 30 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 25 |
| பொன்னாங்கானி | 20 | 40 | 30 | 35 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 120 | 100 | 120 | 200 | 120 | 140 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 | 50 | 40 | 30 | 50 |
| கோவா | 50 | 80 | 50 | 60 | 40 | 80 | 40 | 40 |
| வெண்டி | 100 | 80 | 50 | 60 | 100 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 60 | 120 | 100 | 160 | 70 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 120 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 25–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 70 | 80 | 65 | 120 |
| தேசிக்காய் | 60 | 60 | 90 | 60 | 60 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 140 | 120 | 200 | 100 | 120 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 140 | 140 | 150 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 180 | 200 | 400 | 200 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 1–50 | 05 | – | 01.50 | – |

# ராஜித ஏன் இல்லை? டிக்வெல எதற்காக? டில்சான் அவசியமா?




பிரகாஸ்

ஆசியாக்கிண்ணத் தொடர் நடைபெற்று இன்று இறுதியை அடைந்து விட்டது. இந்தியா, பங்களாதேஷ் அணிகள் இன்றைய ஆட்டத்தில் மோதுகின்றன. இன்றைய ஆட்டம் இலங்கை ரசிகர்களைப் பொறுத்தமட்டில் இராமன் ஆண்டாலென்ன அல்லது இராவணன் ஆண்டாலென்ன என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஆசியாக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியினது தோல்விக்கு துடுப்பாட்டம் திருப்திதரும் வகையில் அமையவில்லை, பந்துவீச்சு சிறப்பாக பொருந்த வில்லை, மலிங்க பாதியிலேயே விலகிவிட்டார் என்று பல காரணங்கள் சொல்லப்பட்ட போதிலும் சமநிலை பேணக்கூடிய சீரான அணியைத்தான் தெரிவுக்குழு முன் வைத்துள்ளதா என்ற கேள்வியை நாம் பரீசீலித்துப் பார்க்க வேண்டியது அவசியம். தெரிவுக்குழுவின் மீது எனது கவனம் திரும்புகின்ற போது மூன்று கேள்விகள் எழுகின்றன. ஒன்று ராஜித ஏன் தெரிவுசெய்யப்படவில்லை?, இன்னொன்று டிக் வெல எதற்காக?, பிறிதொன்று டில்சான் தேவைதானா?. இலங்கை அணி அண் மையில் இந்தியாவுக்குப் சுற்றுப்பயணம்மேற்கொண்டுமூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியது. தொடரை இந்தியா 2:1 என்று கைப்பற்றியது. புனேயின் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இதில் ராஜித சிறந்த பெறு பேற்றை வெளிப்படுத்தினார். ரோகித், தவான், ரகானே என முக்கியமான மூவரையும் வீழ்த்தி ஆட்ட நாயகனானார். துடுப்பாட்டத்துக்கு சாதகமான ராஞ்சி ஆடுகளத்தில் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் அவரது பந்துவீச்சு பெரிதாக எடுபடவில்லை. 4 பந்துப்பரிமாற்றங்களில் 45 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஓர் இலக்கைத் தானும் கைப்பற்றவில்லை. இதனால் மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் அவர் புறக்கணிக்கப்பட்டு ஆசியக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் ஆகியவற்றுக்கான அணிகளில் இருந்தும் ராஜித நீக்கப்பட்டார். அறிமுக ஆட்டத்தில் ஆட்ட நாயகனான ஒரு வீரனை, ஓர் ஆட்டத்தின் மோச மான பெறுபேற்றை வைத்து எவ்வாறு நீக்கிவிட முடியும். ராஜிதவின் பந்துவீச்சு, பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் எடுபடக்கூடியது. அந்த வகையில் பங்களா தேஷில் நடைபெற்ற ஆசியக்கிண்ணத் தொடருக்கான அணியிலாவது அவருக்கு இடம்கொடுத்திருக்கலாம் ஏனெனில் பங்களாதேஷின் ஆடுகளங்கள் அத்தனையும் பந்துவீச்சுக்கு சாதகமாகவே உள்ளன. இலங்கையில் இலக்குக்காப்பாளராக சந்திமல் செயற்படுகின்றபொழுது மற்றொரு இலக்குக்காப்பாளரான டிக்வெலஏன் அணியில்தெரிவுசெய்யப்பட்டார். அவரின் இடத்துக்கு ராஜிதவை தெரிவுசெய்திருக்கலாம். டிக்வெல ஆரம்ப வீரராகவும் களமிறங்கக்கூடியவர். அவ்வாறு இருக்கையில் டில்சானின் இடத்துக்கு ஏன் டிக்வெலவை களமிறக்கி பரிசீலிக்கவில்லை. டில்சான், தான் இறுதியாக களமிறங்கிய (ஆசியக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 75 ஓட்டங்களைக் குவித்திருந்தார். அந்த ஆட்டத்தை விடுத்து) 5 ஆட்டங்களில் 58 ஓட்டங்களையே எடுத்துள்ளார். இதன்படி பார்த்தால் அவர் ஓர் ஆட்டத்தில் 11 அல்லது 12 ஓட்டங்களையே எடுக்கிறார். டில்சானின் நிலைமை இவ்வாறிருக்க டிக்வெலவுக்கு ஆசியக்கிண்ணத் தொடரிலும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அனுபவ வீரர் என்ற வகையில் டில்சானை அணியில் வைத்திருக்க விரும்பினால், அவருடன் டிக்வெலவையும் களமிறக்கி சந்திமலை ஆரம்ப வீரராக அல்லாமல் இடையில் களமிறக்கலாம். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தும் கப்புக்கெதரவினை அணியில் இருந்து ஓரங்கட்டியிருக்கலாம். இதன்படி பார்கின்ற பொழுது இலங்கை அணியின் தோல்விகளுக்கு வீரர்கள் மட்டுமல்லாமல் தெரிவுக்குழுவிலும் பெரிததொரு பிழை இருக்கத்தான் செய்கிறது. ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணியினை அறிவித்துள்ள போதிலும் அந்த அணியை மாற்றியமைக்க இலங்கைத் தெரிவுக்குழுவுக்கு எதிர்வரும் எட்டாம் திகதி வரை கால அவகாசம் உள்ளது. உலகக்கிண்ணத் தொடரிலாவது இலங்கைத் தெரிவுக்குழு இருக்கும் வீரர்களை வைத்து சிறப்பான அணியொன்றை முன்வைக்குமா? அல்லது வழமை போன்று சங்கா, மகேலவின் புராணத்தைப் பாடப்போகிறதா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.







## யுவியுடன் பகிடிவிடும் ஹேசல் கீச்

இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் யுவராஜ் சிங்கை அவரது காதலியும் வருங்கால மனைவியுமான ஹேசல் கீச் சமூக வலைத்தளத்தில் கலாய்த்துள்ளார்.

ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை - இந்திய அணிகள் மோதிய ஆட்டத்தில் இந்தியா 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் யுவராஜ் சிங் 18 பந்துகளில் 3 பவுண்டரி, 3 சிக்சருடன் 35 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு சிறந்த பங்களிப்பு வழங்கினார். இதனால் அவருக்கு சிறந்த வீரருக்கான விருது கிடைத்தது. இதற்கு பரிசுத் தொகையாக 2ஆயிரத்து 500 டொலர்கள் வழங்கப்பட்டன. இந்த நிலையில் யுவராஜ் சிங்கின் சிறப்பான ஆட்டத்தை அவரது வருங்கால மனைவி ஹேசல் கீச் பாராட்டியுள்ளார். அவர் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் "கூலான வீரர் யுவராஜ், உன்னுடைய பரிசுத் தொகையில் என்னை சொப்பிங் கூட்டிப்போக முடியுமா" என்று கேட்டுள்ளார்.

இந்திய வீரர் யுவராஜ் சிங்கிற்கும் இங்கிலாந்து நடிகையான ஹேசல் கீச்சிற்கும் சமீபத்தில் தான் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.


இழந்த இளமை கருங்கூந்தலை மீண்டும் பெற
Genuine RKS Herpul
ப்ளெக் ஹெனா
An ISO 9001:2008 Certified Co.
No Ammonia
CR-024540
ஹெனா டை
இந்தியாவில்
வளரும் ஹெனா
தாவரத்தின் இலையை
உலரவைத்து
பொடியாக்கி
தயாரிக்கப்படும்
கூந்தல் டை
இந்தியாவின் முன்னணி
இயற்கை
ஹெனா
உற்பத்தியாளர்களான
RKS இடமிருந்து
AFRIN'S
GENUINE
Herbal
ப்ளெக் ஹெனா
ISO 9001:2008 Certified Co.
Pure, Rich, Natural Cultivated Henna
CR-024541
ப்ளெக் ஹெனா ஹெயா டை
10 கிராம் பக்கட்டின்
விலை 70/= ரூபா மட்டுமே
ப்ளெக் ஹெனா ஹெயா டை
10 கிராம் பக்கட்டின்
விலை 80/= ரூபா மட்டுமே
ஏற்றுமதி தரத்திலான மிக சிறந்த தயாரிப்பு
ISO சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது
அமோனியா (Ammonia) சேர்க்கப்படாததினால் மிக இலகுவாக
கருமை நிறம் ஊட்டக்கூடியது. ஒவ்வாமை மிகவும் குறைவானது.
இலங்கை சுகாதார அமைச்சின் ஔடத அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றது.
Distributed by : Deve Traders (Hotline) 077 9 644 080, 011 2524116
பாவனை முறை : இப்பக்கற்றினுள் மும்மொழிகளிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


TVS
வாங்குவோர் வெல்வோர்
உயர் விசேடத்துவங்களை தேடிச் செல்லும் உங்களுக்காக
TVS இடமிருந்து விசேட பரிசுகள்
உயர் விசேடத்துவம், நேர்த்தியான
வடிவமைப்பு மற்றும் ஒப்பற்ற நம்பிக்கையை
கொண்டு மெருகேற்றப்பட்ட
TVS உற்பத்திளை கொள்வனவு செய்யுங்கள்,
வியக்க வைக்கும் பல பரிசுகளை வெல்லுங்கள்
metro plus
Jupiter
3
கையடக்க
தொலைபேசிகள்
100
2
TVS metro
மோட்டார் சைக்கிள்கள்
5
1
சூப்பர் பரிசு
ரூ.500,000/-
நவீன தொழில்நுட்பம்/ உயர் சக்தி/ எரிபொருள் சிக்கனம்/
கவர்ச்சியான தோற்றம்/ ஒப்பற்ற நம்பிக்கை
• மேலதிக விபரங்களை அருகிலுள்ள TVS விற்பனை முகவரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்
• 2016 பெப்ரவரி 20ம் திகதியிலிருந்து ஏப்பிரல் 30ம் திகதி வரை மட்டுமே
• சீட்டிழுப்பு 2016 மே மாதம் 06 திகதி இடம்பெறும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
TVS
0114 600 500
WP/GT/4533


LG
Life's Good
தோற்றத்தில் நிஜத்தினைப்போல் காணப்படும்
எவையும் தரமானதல்ல,
கொள்வனவு செய்வதற்கு முன் தரமானதா என்பதனை அவதானியுங்கள்
நம்பகமான LG வளிச்சீராக்கிகளுக்கான இலங்கையின் ஒரே ஒரு முகவர்
அபான்ஸ் மட்டுமே
வளிச்சீராக்கி விற்பனையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவம்
பொருத்துதல், பராமரிப்பு, சேவை என்பவற்றுடன் தொழிற்சாலையில் பயிற்சிப்பெற்ற பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் பழுதுபார்க்கப்படும்
அபான்ஸ் உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
இலவசமாக பொருத்துதல்
நம்பகமான உதிரிப்பாகங்கள்
அபான்ஸானது உற்பத்தியாளர்களிடமிருந்து LG வளிச்சீராக்கிகளை நேரடியாக இறக்குமதி செய்யும் இலங்கையின் ஒரே ஒரு முகவராகும். மேலும் அவ்வளிச்சீராக்கிகள் இலங்கையின் காலநிலைக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. தரம் மற்றும் செயல்திறனுக்கான நம்பகமான உத்தரவாதத்துடன் உங்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பரந்தளவான ஆற்றல் சேமிப்பு LG வளிச்சீராக்கிகளை வழங்குவது அபான்ஸ் மட்டுமே.
LG நிலை வேக வளிச்சீராக்கிகள்
79,900/- ரூபாவிலிருந்து
ஸ்பிலிட் வகை • 9000btu–24000btu
சீலிங் கெசட் • 1800btu–48000btu
சீலிங் சஸ்பெண்டட் • 48000btu
சீலிங் கொன்சீல்ட் • 1800btu–93000btu
ப்ளோர் ஸ்டேண்டிங் • 4800btu–92000btu
LG இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்
102,999/- ரூபாவிலிருந்து
INVERTER V Compressor
60%ற்கும் மேலாக ஆற்றல் வெளியீட்டினை குறைப்பதன் மூலமாக இப்புரட்சிகர இன்வேட்டர் தொழில்நுட்பமுடைய LG சாதனங்கள் இரைச்சலற்றதாகவும் அதி செயல்திறன் வாய்ந்ததாகவும் தொழிற்படுகின்றன.
கொரியாவில் தயாரிக்கப்பட்டது
இன்வேட்டர் ஸ்பிலிட் வகை • 18000btu–24000btu
இன்வேட்டர் சீலிங் கெசட் • 18000btu–48000btu
இன்வேட்டர் சீலிங் சஸ்பெண்டட் • 18000btu-48000btu
இன்வேட்டர் சீலிங் கொன்சீல்ட் (மத்திய நிலை) • 48000btu
இன்வேட்டர் ப்ளோர் ஸ்டேண்டிங் • 30000btu- 48000btu
ஒற்றை நிலை
மூன்று நிலை
20 மாதங்கள் வட்டியின்றிய இலகு தவணை கொடுப்பனவு
20% வரையிலான விலைக்கழிவு
60 %
On / Off
Inverter V
ஆற்றல் சேமிப்பு
இன்வேட்டர் அழுத்தி
சிறந்த நீடித்த தன்மை
10 வருடத்திற்கான இன்வேட்டர் அழுத்தி உத்தரவாதம்
Gold Fin™
சிதைவு தடுப்பு சாதனம்
அச்சுவேலி - 0779554229, சங்கானை - 0212250106, சாவகச்சேரி - 0212270005, சுன்னாகம் - 0242240440 / 0772208242, யாழ்ப்பாணம் "A" - 0212220981,
யாழ்ப்பா ணம் "B" - 0213202421, மானிப்பாய் - 0212255259, திருநெல்வேலி - 0212220247
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
HOTLINE
us at www.facebook.com/abans
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Abans


இப்பண்டிகைக்காலத்தில்
அபான்ஸ் இடமிருந்து
வீடு நிறைய
பொருட்கள்
மற்றும்
தங்க காசு
அதிஷ்டம்
40% வரை
தள்ளுப்படி
மில்லியன்
பெறுமதியான பண்டிகைக்கால
அதிஷ்டத்தை
வெல்லுபவர்
நீங்களா?
முதலாம் பரிசு ரூ 500,000 பெறுமதியானது
இரண்டாம் பரிசு ரூ 300,000
60
சந்தோஷம் பெருகும் இப்பண்டிகைக்காலத்தில் முழு வீட்டிற்குமான தங்க நாணயங்களை பகிர்ந்தளிக்கவுள்ளது அபான்ஸ்.
அபான்ஸ் உடன் ரூ.5000ற்கு அல்லது அதற்கு மேலதிகமாக பொருட்கள் கொள்வனவு செய்தீர்களாயின் சீட்டிலுப்பின் மூலம் வீடு நிறைய பொருட்களுடன் தங்க நாணயங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். 60 மாதங்கள் வட்டியின்றிய இலகு தவணை கொடுப்பனவுடன் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
முதலாம், இரண்டாம் வெற்றியாளர்களுக்கு தொலைக்காட்சி, ஹோம்தியட்டர், மோட்டார் சைக்கிள், குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், வீட்டு மின் உபகரணங்கள், வளிச்சீராக்கி, மைக்ரோவேவ் அவன், பிளெண்டர், ரைஸ் குக்கர் போன்ற முழு வீட்டிற்கும் தேவையான அனைத்து இலத்திரனியல் மற்றும் வீட்டு மின் உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்.மூன்றாம் இடத்தை பெறும் வெற்றியாளருக்கு ஹீரோ டேஷ் ஸ்கூட்டர் ஒன்று வழங்கப்படும்.
தெரிவு செய்யப்படும் 50 வாடிக்கையாளர்களுக்கு தங்க காசு 50யை வெற்றிக்கொள்ளும் அரிய வாய்ப்பினை அபான்ஸ் வழங்குகின்றது.
இச்சலுகையானது 2016 மார்ச் 6ஆம் திகதி முதல்
ஏப்ரல் 30ஆம் திகதி வரை மட்டுமே.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மேற்காட்டப்பட்டுள்ள படங்கள் நிஜ படங்களில் இருந்து வேறுபடலாம்.படங்கள் வடிவமைப்புக்காக மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.
* Registration No - WP/GT/4548
HOTLINE
us at www.facebook.com/abans
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

# தீ விபத்துக்கு உள்ளானவர்களுக்கும் சகல தீக்காயங்களுக்குமான முதலுதவி

மருத்துவர்
துஷ்யந்தினி ஆனந்தலிங்கம்

உடனடியாக நெருப்பை அணையுங்கள், அல்லது தீக்காரணிகளை அந்த நபரிலிருந்து விலக்குங்கள் (உதாரணமாக சூடான திரவம், ஆவி, வேதியல் பொருள்கள்)

தீச்சுவாலை இருப்பின் அந்த நபரை நிறுத்தி (ஓடுவதையோ/நடப்பதையோ தவிர்க்கவேண்டும்) நிலத்தில் உருட்டித் தீயை அணையுங்கள், மேலும் தடிப்பான போர்வையால் சுற்றி அணையுங்கள். (மண்ணால் அணைத்தலைத் தவிர்க்க வேண்டும்) நீர் இருப்பின் நீரினாலும் அணைக்கலாம்.


உருகக்கூடிய பொருள்கள் உடலில் காணப்படின், அவற்றை விலக்குங்கள் இறுக்கமான ஆடைகளை உடனடியாக விலக்குங்கள். ஆடையின் பகுதி எரிகாயங்களுடன் ஒட்டியிருப்பின் அந்தப் பகுதியைச் சுற்றி வெட்டியெடுக்கவும். தோலுடன் ஒட்டியிருக்கும் ஆடையின் பகுதியை நீக்க வேண்டாம். ஆபரணங்கள், இடுப்புப்பட்டி போன்றவற்றை உடனடியாக நீக்குங்கள். கழற்றுவதற்குச் சிரமமாக இருப்பின் வெட்டி அகற்றுங்கள். ஏனெனில் எரிகாயங்கள் வேகமாக வீங்கக்கூடியவை. எனவே பின்னர் அகற்றுவது சிரமமாகிவிடும்.

எரிந்த காயப் பகுதிகளை வலி குறையும்வரை ஓடும் குளிர் நீரின் கீழ் பிடிக்கவும். அல்லது குளிர்நீரினுள் அமிழ்த்தவும். (ஐஸ் தண்ணீரோ, ஐஸ்கட்டியோ பாவிக்க வேண்டாம்) ஏனெனில் அவை உடல் வெப்பநிலையைக் குறைத்து மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பின்னர் சுத்தமான தொற்று நீக்கிய ஒட்டாத துணியினால் காயத்துக்குக் கட்டுப்போடுங்கள். பட்டர், கிறீம்களை எரிகாயங்களில் போடவேண்டாம். கொப்புளங்கள் ஏற்பட்டிருப்பின், அவற்றை உடைக்க வேண்டாம். ஏனெனில் இவை எரிகாயத்தில் கிருமித்தொற்றை ஏற்படுத்திவிடும்.

தாங்க முடியாத வலியிருப்பின் பனடோல் அல்லது புரூபன் மாத்திரையைக் கொடுங்கள். சிறுவர்களாக இருப்பின் மருத்துவ ஆலோசனையின்றி மாத்திரை கொடுக்க வேண்டாம்.

எரிகாயம் பெரியதாயிருந்தாலோ, ஆழமானதாயிருந்தாலோ, வெப்ப இழப்பால் ஏற்படும் நரம்பு மண்டல அதிர்ச்சியைத் (Shock) தவிர்ப்பதற்கு எரிகாயத்துக்குள்ளானவரை தட்டையான தரையில் படுக்கச் செய்து பாதங்களை உயர்த்தி வைப்பதுடன், தடிப்பான போர்வையால் போர்த்தி வைத்திருங்கள்.



இயலுமானால் எரிகாயத்தை இதய மட்டத்துக்கு மேல் வைத்திருத்தல் சிறந்தது. வைத்திய உதவியை நாடுவது அவசியம்.

எரிகாயம் மிகவும் ஆழமானதாயிருப்பின், உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் நீரினால் கழுவுவதையும் தவிர்த்தல் வேண்டும். சிறிய தீக்காயமாக இருப்பினும், காய்ச்சல்இருப்பினும் அல்லது எரிகாயம் சிவந்து வீங்கிக் காணப்படின் அல்லது எரிகாயம் தொற்றுக்குள்ளாகியிருப்பின் அல்லது எரிகாயத்திலிருந்து நீர் வடிந்தால் வைத்தியரை நாடுவது அவசியம்.

**சுத்தமான தொற்று நீக்கிய ஒட்டாத துணியினால் காயத்துக்குக் கட்டுப்போடுங்கள். பட்டர், கிறீம்களை எரிகாயங்களில் போடவேண்டாம். கொப்புளங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை உடைக்க வேண்டாம். ஏனெனில் இவை எரிகாயத்தில் கிருமித்தொற்றை ஏற்படுத்திவிடும்.**

சுவாசப் பகுதி எரிந்திருப்பின், தரையில் படுக்கவைத்திருக்கும்பொழுது, தலையின் கீழ் தலையணையோ, வேறு பொருள்களையோ வைக்க வேண்டாம். ஏனெனில் இவை சுவாசப் பாதையை அடைத்து விடலாம்.

முகத்தில் எரிகாயம் ஏற்பட்டிருப்பின், அந்த நபரை இருத்திவைக்க வேண்டும். அவசர சிகிச்சை உதவி கிடைக்கும் வரை நாடித் துடிப்பை, சுவாசத்தைக் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வேதியல் பொருள்களினால் ஏற்பட்ட எரிகாயமாக இருப்பின் நீரினால் கழுவும் பொழுது உடலின் ஏனைய பகுதிகளில் அந்த வேதிப் பொருள்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அமிலத்தைக் காரத்தாலோ, காரத்தை அமிலத்தாலோ நடுநிலைப் படுத்த முயல வேண்டாம். இது மேலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

வேதிப் பொருளால் கண்பகுதி பாதிக்கப்பட்டிருப்பின் கண்ணை அகலத் திறந்து குளிர்ந்த ஓடும் நீரின் கீழ் பிடிக்கவும். Contact lense கண்ணினுள் வைத்திருப்பின் அவற்றை ஓடும் நீரினாலேயே அகற்றுங்கள். கைகளைப் பாவிக்க வேண்டாம். கண்ணின் மீது துணியால் கட்ட வேண்டாம்.






# நீங்கள் உப்பை உட்கொள்வதை எப்படிக் குறைக்கலாம்?


1. சமைக்கின்றபோது கறிவகைகளுக்குக் குறைந்தளவு உப்பையே சேர்ப்போம். உணவுகளில் சுவையை, வாசனையை அதிகரிக்க வாசனை ஊட்டும் திரவியங்களையும் மூலிகைகளையும் பயன்படுத்திக்கொள்வோம்.
2. சாப்பாடுகளைத் திட்டமிடும்போது உடனடியாக உண்ணக்கூடிய பக்குவம் செய்யப்பட்ட உணவுகளைவிட, சோடியம் குறைவாகக் கொண்டுள்ள உடன் புதிய உணவுகளைக் கருத்தில் கொள்வோம்.
3. உப்பிடப்பட்ட, தகரத்தில் அடைக்கப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளைவிட உடன் மீன், கோழி மற்றும் ஏனைய இறைச்சிகள் போன்றவற்றில் சோடியம் குறைவாகவுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வோம்.
4. தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளைத் தெரிவு செய்யும்போது குறைந்த அல்லது உப்பே இல்லாது தயாரிக்கப்பட்டவற்றையே தெரிவு செய்வோம்.
5. உணவுக்குச் சுவையூட்டும் குழம்பு ஊறுகாய், தேசிக்காயும் உப்பும் சேர்ந்த கலவைகள், சட்ணி, பச்சடிக் கலவைகள், "கெச்சப்" பச்சடிக் கலவைகள் போன்ற உப்புச் சேர்க்கப்பட்ட உணவுகளைக் கட்டுப் படுத்துவோம்.
6. உப்புச் சேர்க்கப்பட்ட, உடனடியாக உட்கொள்ளக்கூடிய உணவுகளுக்குப் பதிலாக, குறைந்த சோடியத்தைக் கொண்டுள்ள உடன் புதிய காய்கறிகளையும், பழங்களையும் தேர்ந்தெடுப்போம்.
7. பதப்படுத்தப்பட்ட உணவுகளிலும், பொதியாக்கப்பட்ட உணவுகளிலும் பதப்படுத்தலின்போது அதிகளவிலான உப்புச் சேர்க்கப்படுவதை ஞாபகத்தில் வைத்திருப்போம்.
8. குழந்தைகளுக்கும் இளம்பிள்ளைகளுக்கும் உப்பை அறிமுகப்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்துவோம். இதனால் குறைவான உப்புக்கு திருப்தி அடைவதுடன், சுவைகளைப் பழகிக் கொள்வதிலும் தாமதத்தை ஏற்படுத்தும். இவர்கள் எப்பொழுதும் உப்புச்சுவையை அறிய விரும்புவார்கள்.
9. நீங்கள் குறைவான அளவில் உப்பைப் பாவிப்பதன் மூலம் அந்த அளவில் நாங்களும் திருப்தியடைவோம்.

மருத்துவர்,
திருமதி பிரதீபனா செல்வகரன்.

# பகடைக்காயாகும் குடிதண்ணீர்...

(23 ஆம் பக்க தொடர்ச்சி)
விதத்தில் - இரணைமடுக் குளத்தை மேம்படுத்தவேண்டும். அதற்கான திட்டங்களை முதலில் முன்னெடுத்து விவசாயிகளின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு முயல்வதே இன்று தமிழ் அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய வேலை.

கிளிநொச்சியின் விவசாயத் தேவை போக எஞ்சிய நீரை யாழ்ப்பாணத்துக்கு விநியோகிப்பதைக் கிளிநொச்சி விவசாயிகள் எதிர்க்கவில்லை. ஆனால் அதனை இரணைமடு அணை உயர்த்தப்பட்ட பின்புதான் தீர்மானிக்கப்பட முடியும்.



### ஆறுமுகம் திட்டம்

1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டு நிலக்கீழ் நீர் உவராவதைத் தடுக்க ஆறுமுகம் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி ஆனையிறவு இரும்புப் பாலம் அகற்றப்பட்டு ஆனையிறவு நீரேரிக்கு உப்பு நீர் கலப்பது தடுக்கப்பட்டதுடன், சுண்டிக்குளத்தில் ஓர் அணை கட்டவும் தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தொண்டமானாறு நீரேரியுடன் தொடுக்கும் வகையில் மண்டலாயில் ஒரு பெரும் வாய்க்காலும் வெட்டப்பட்டது. பின் அது அப்படியே கைவிடப்பட்டு விட்டது. அதை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிப்பற்றிஎவரும்அக்கறைகாட்டவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியதுபோன்று இது உடனடி மாற்று ஏற்பாடாக இல்லாவிட்டாலும் நீண்டகால நோக்கில் குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பாதுகாத்து குடிதண்ணீரைப் பெற வழி வகுக்கும்.

யாழ்ப்பாணம் பாலைவனமாவதைத் தடுக்கவும், குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கவும் இவ்வாறான வழிகள் உள்ளபோதும் அவை பற்றிய அக்கறை ஏதுமற்று இருப்பது கவலை அளிக்கிறது. உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இடையிலான மோதலில் குடிதண்ணீர்ப் பிரச்சினை பகடைக் காயாக உருட்டப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசியல் சுயலாப நோக்கங்களுக்காகவே சிலர் இரணைமடுத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று கூறி வருகிறார். அண்மையில் இவர் நாடாளுமன்றத்திலும் இப்படியொரு கருத்தை வழங்கியிருந்தார். நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம்கூட, சில பொறியியலாளர்கள் வைத்த ஆலோசனைகளின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இவற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமும், ஒருங்கிணைப்புக் குழுவில் வெளியிடப்பட்ட கருத்துக்களும் அமைந்திருந்தன.

சுன்னாகத்தில் குடிதண்ணீர் பாவனைக்கு உதவாதவாறு மாசடைந்துள்ளது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். இது தொடர்பாக மாகாண சபைக்கு எதிராகப் பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நிலையில் ஒரு தற்காலிக ஏற்பாடாக "பவுசர்கள்" மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. அந்த நடவடிக்கை முற்றிலும் திருப்திகரமாக அமையமுடியாது. எனவே, குடாநாட்டுக்கான குடிதண்ணீர் திட்டம் ஒன்று விரைவாக வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஒருபுறம் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும்படி போராட்டம். இன்னொரு புறம் குடிதண்ணீர் வழங்கக் கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டத்துக்கு எதிரான போராட்டம். மற்றொருபுறம் இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கு எதிரான போராட்டம்.

இவையெல்லாமே உள்ளூர் அரசியல் விளையாட்டு என்பதனை மக்களுக்குச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

வடக்கின் சுயபொருளாதாரத் தனித்துவத்தைக் குறைத்தல் கிளிநொச்சியைச் சிங்கள மயப்படுத்தல், யாழ். குடாநாட்டு நீர் தொடர்ந்து உவராவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காது அதைப் பாலை வனமாக்கல் போன்ற பெரும் தமிழ் இன விரோத, இனஅழிப்பு நடவடிக்கைகளின் நிண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பகடைக் காயாக யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப் பிரச்சினை கையாளப்படுகிறது. இவற்றைப் புரிந்துகொண்டு தூர நோக்குடனும் மக்கள் நல நோக்குடனும் செயற்படுவது ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதியினதும் கடமை.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 410

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | |
| ■ | | ■ | 16 | | | | ■ |
| 17 | | 18 | | ■ | | ■ | 19 |
| 20 | | | | | ■ | 21 | |

அனுப்புபவர் பெயர்:........................................
பூரணமான தபால் விலாசம்: ........................................
........................................
கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. இந்துக்களின் திருமணத்தின்போது மணமக்களுக்குக் காட்டும் நட்சத்திரம்
5. மனைவி
7. நசி
8. செய்ய வேண்டிய கடமை
9. மரியாதை
10. தன்மைப் பன்மைப் பிரதிப் பெயர்
11. சொற்கள் சேர்ந்து உருவாவது.
13. ஒரு கணிதக் குறியீடு
14. பீதி
15. அருந்துதல்
16. க்விஞர்
17. சமயத்தில் கடும் பற்றுள்ளவன்
20. மிகச் சரியான கணிப்பு
21. புரவி

### மேலிருந்து கீழ்

1. அம்பிகாவதி மனங் கவர்ந்தவள்
2. நாக்கு அறியும் சுவை
3. எரியும் செயற்பாடு
4. உறுதியான தன்மை
5. நாடாளுமன்றின் தலைவர்
6. திடீரென
9. நெருப்பு
12. பொறுத்துக் கொள்ளல்
13. பித்தளைப் பாத்திர வகை
15. பன்மையைக் குறிப்பது
16. புது
17. போதை தருவது
18. இராமன் ஒளிந்திருந்து அம்பு விட்டுக் கொன்றது இவனை
19. பெரிய நீர்த்தேக்கம்.

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 408 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) திருத்தந்தை (6)ராசி (7)யமன் (8)தணிதல் (10) சைவர் (12)வசி (13)சமர்த்தன் (15)கானம் (16)தருமதி (18) தம் (20)மம்மி (21)மன்னன்

### மேலிருந்து கீழ்

(1)திராட்சை (2)ருசி (3)தரணி (4)தையல் (5)அன்னாசி (8)தர்மம் (9)தடித்த (11) வசனம் (12)வன்மம் (14)தருமன் (15)காதல் (17) திமில் (19)மீன்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 408 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
சி.உமாசிவம்,
இல.90, கற்குழி,
வவுனியா.

**2 ஆம் பரிசு**
திருமதி எ.பிருந்தா,
அரசினர் வைத்தியசாலை,
மாங்குளம்.

**3 ஆம் பரிசு**
சிவகுருநாதன் சுபந்தன்,
அருளகம், பிரதான வீதி,
இளவாலை.

**4 ஆம் பரிசு**
நிர்மலாதேவி கணபதிப்பிள்ளை,
இல.49, பெரேரா லேன்,
வெள்ளவத்தை,கொழும்பு - 06

**5 ஆம் பரிசு**
தேவிகா பத்மராஜா,
மடுமாதா வீதி,
பெற்றா, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.மனோகரி,
இல.4, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

வாசுதேவன் அநந்தன்,
கப்பம் புலம், சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

பூவதி தாமோதரம்பிள்ளை,
தபாற்கந்தோர் வீதி,
மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி இல.410 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னா, (16.03.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.410இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.03.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 408 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# யாழ். போதனாவின் சேவைகளை மேம்படுத்த மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை
## பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையானது பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன், குறிப்பாக தாதியர் பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது. எனவே இருக்கும் வளத்தைக் கொண்டு இயங்கும் வைத்தியசாலையின் சேவையை மேம்படுத்தி, அதன் தரத்தை உயர்த்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.- இவ்வாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் அவர் அறிவித்துள்ளார். அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் வருமாறு-

வைத்தியசாலையில் இயலாத நோயாளருடன் உதவிக்கு நிற்போர், அவர்களின் கட்டிலில் அமர்வதைத் தவிர்ப்பதுடன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது அவர்களின் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் விடுதிக்கு வெளியில் சென்று அமர வேண்டும்.

சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் மிக இலகுவில் நோய்த் தொற்றுக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் உள்ளதால், இவர்களை இயன்றவரை வைத்தியசாலைக்குப் பார்வையாளர்களாக அழைத்து வருவதைத் தவிர்க்க வேண்டும்.

மாலை 6 மணிக்குப் பின்னர் பொதுமக்கள் எவரும் வைத்தியசாலை விடுதிகளில், வைத்தியசாலையில் இளைப்பாறும் இருக்கைகளில், அல்லது வைத்தியசாலையின் வேறு எப்பகுதியிலும் நடமாடுவது, தங்கியிருப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

நோயாளரைப் பராமரிக்கும் உதவியாளர் மாத்திரம் விடுதியில் நோயாளரின் அருகே நிற்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

தீவிர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, பிரசவ விடுதிகள், குழந்தை விடுதிகள் போன்றவற்றில் சிகிச்சை பெறுபவர்கள் தீவிர மருத்துவக் கண்காணிப்புக்குள் உள்ளதால் இயன்றவரை மேற்படி பகுதிக்குப்பார்வையாளர்களாக வருவதைக் குறைத்துக் கொள்ளவும்

வைத்தியசாலை வளாகத்தினுள் வெற்றிலை, போதைப்பொருள், புகையிலை மற்றும் மதுபானம் பாவித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலையினுள் பொது இடங்களில் துப்புவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சுவிங்கம் போன்றவற்றை உமிழ்ந்து வருவதையும் தவிர்த்துக் கொள்ளவும்.

வைத்தியசாலைக்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் தமது தேவைக்கும் நோயாளர்களின் தேவைக்குமென எடுத்துவரும் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், இளநீர்க் கோம்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை வைத்தியசாலை வளாகத்தில் விட்டு செல்லாது தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும். குப்பைகூழங்கள் மற்றும் தேவையற்ற பொருள்களை அதற்குரிய கழிவுக்கூடையினுள் இடுதல் வேண்டும்.

வைத்தியசாலை விடுதியில் பாவனைக்குத் தேவையான மிகவும் அத்தியாவசியமான பொருள்களை மட்டுமே வைத்திருக்க வேண்டும். நடைபாதையில் நிற்பதையோ, நடைபாதையில் நின்று அலைபேசியில் உரையாடுவதையோ அல்லது நடைபாதையில் இருப்பதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வைத்தியசாலைக்கு வருபவர்கள் நகைகள் அணிந்து வருவதையும், பெறுமதி மிக்க உடைமைகளைக் கொண்டு வருவதையும் தவிர்த்துக் கொள்ளவும். தலைக்கவசம் மற்றும் பயணப் பைகள், பொதிகள், சொப்பிங்பை போன்றவற்றை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பயணப் பைகள், பொதிகள் எடுத்து வரப்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவற்றைப் பரிசோதனை செய்வார்கள்.

வைத்தியசாலையானது பலர் தங்களது கடமைகளைச் செய்யும் பகுதி. எனவே பொருத்தமான உடைகளை அணிந்து வர வேண்டும். குறிப்பாக ஆண்கள் அரைக் காற்சட்டையுடன் வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுமக்களையும் நோயாளிகளையும் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது, கறுப்புக் கண்ணாடி அணிந்து வருவது தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய விடுதியின் உடைமைகள் மற்றும் பொருள்களை நிர்வாகத்தின் அனுமதியின்றி கையாள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

அலைபேசிகளை மிகவும் அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில் மட்டும் பாவிக்கவும். இதற்கு விடுதியில் மின்னேற்றுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலை வளாகத்தினுள் மதுபானம், வெற்றிலை, போதைப் பொருள்கள் பாவித்தல் மற்றும் புகைத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியசாலைப் பணியாளர்களும் உங்கள் உறவுகளே. அவர்களுடன் முரண்படுதல், வாக்குவாதம் செய்தலைத் தவிர்த்து அன்புடன் பழகுங்கள். உங்களுக்கு வழங்கப்படும் பணிகள், சேவைகளில் ஏதாவது அசௌகரியம் ஏற்படுமிடத்து அதை நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ பணிப்பாளருக்கு அறிவிக்கலாம். இதற்குத் தகுந்த நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

வீடு செல்வதற்கு மருத்துவர் களினால் தீர்மானிக்கப்பட்டவர் களது நோய்நிர்ணய அட்டை எழுதப்பட்டு நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை அல்லது மாலை 4 மணிக்கு பின்னரே வழங்கப்படும். அதுவரை மருத்துவரின் செயற்பாட்டுக்கு இடையூறு செய்யாது இருக்க வேண்டும்.

விடுதியிலிருந்து குணமடைந்து வீடு செல்லும்போது உங்களுக்கு வழங்கப்படும் நோய் நிர்ணய அட்டையை மருத்துவரிடம் பெற்றுக்கொள்வதுடன் உங்களுக்கு தேவையான விவரங்களை மருத்துவர்கள் மற்றும் தாதியர்களிடம் தெளிவாகக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

மீள் பார்வைக்காக விடுதிக்கு வர வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமாயின், காலை 7 மணிக்கே சமுகம் தரவும். விடுதியை விட்டுச் செல்லும் போது நீங்கள் பாவித்த தேவையற்ற பொருள்களை அதற்குரிய கழிவு வாளிகளில் இட்டுச் செல்லுங்கள்.- என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஐ-4)

# சூளைமேடு கொலை வழக்கில் டக்ளஸிடம் விசாரணை

## காணொலி மூலம் நேற்று நடத்தப்பட்டது

கொழும்பு, மார்ச் 6

கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் காணொலி மூலமாக சென்னை அமர்வு நீதிமன்றம் நேற்று விசாரணை நடத்தியுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்களுள் ஒருவராக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா. இவர் 1986ஆம்ஆண்டு சென்னைசூளைமேட்டில் தனது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடன் தங்கியிருந்தார். அந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அந்தப் பகுதி மக்கள் வெடி கொளுத்தினர்.

இதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அப்போது இரு தரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் திருநாவுக்கரசு என்ற இளைஞர் கொல்லப்பட்டார். அத்துடன் பலர் காயமடைந்தனர்.

இந்தக் கொலைக் குற்றச்சாட்டு தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா உட்பட 10 பேரைக் கைது செய்தனர். இந்த வழக்கு சென்னை 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதன் பின்னர் கைது செய்யப்பட்ட பத்துப் பேரும் இலங்கைக்கு வந்து விட்டனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவானந்தா, மீதான வழக்கை விசாரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து, டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை வழக்கை வீடியோ மூலமாக விசாரிக்கவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அன்றைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த குருமூர்த்தி உட்பட 4 பேர் இந்த வழக்கில் சாட்சியம் அளித்தனர். அவர்கள், தங்கள் மீது இயந்திரத் துப்பாக்கியால் சுட்டது ஆனந்தன் என்ற இலங்கை தமிழர் என்று கூறினார்கள். இதனால், குற்றவாளியை அடையாளம் காட்டி அவர்கள் சாட்சியம் அளிக்க வேண்டிய தேவை இருந்தது. இது குறித்து 4 ஆவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி எம்.சாந்தி, சென்னை மாவட்ட முதன்மை நீதிபதிக்குக் கடிதம் எழுதினார்.

இதற்கிடையில் உயர் நீதிமன்ற உத்தரவின்படி, குற்றம் சுமத்தப்பட்டுள்ள டக்ளஸ் தேவானந்தாவிடம் வீடியோ மூலமாக விசாரிக்க சென்னை நகர சிவில் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.பி. ரிஷிரோன், நீதிமன்ற அதிகாரி எஸ்.சுந்தரபாண்டியன் ஆகியோர் நடவடிக்கை எடுத்தனர்.

தேசிய தகவல் மையம் (என்.ஐ.சி.) மூலம் டக்ளஸ் தேவானந்தாவிடம் காணொலி மூலம் விசாரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. முன்னோட்டமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை காணொலிச் சேவையை இயக்கி, பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, நேற்று முற்பகல் 10 மணிக்கு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு டக்ளஸ் தேவானந்தா சென்றார். அவரை அங்குள்ள காணொலி கமரா முன்பு அமர வைத்தனர். அதேபோல, வழக்கில் பொலிஸ் தரப்பு சாட்சி குருமூர்த்தி உள்ளிட்ட 4 பேர் சென்னை 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முன்னிலையானார்கள்.

முற்பகல் 10.35 மணிக்கு டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது டக்ளஸ் தேவானந்தா சார்பில் சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் ஆர்.ராஜன், ஏ.டி.நாகேந்திரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இதன்போது ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். அதில், இந்த வழக்கில் பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகையிலும் சரி, சாட்சிகள் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்திலும் சரி, டக்ளஸ் தேவானந்தா துப்பாக்கியால் சுட்டார் என்று ஒரு இடத்தில் கூட கூறப்படவில்லை.

அதனால் கொலைக் குற்றச்சாட்டு டக்ளஸ் தேவானந்தா மீது இல்லை. ஆனால், அவர் தங்கியிருந்த வீட்டில் இயந்திரத் துப்பாக்கி உள்ளிட்ட வெடி மருந்துப் பொருள்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவரை இந்த வழக்கில் 3 ஆவது குற்றவாளியாக பொலிஸார் சேர்த்துள்ளனர்.

தற்போது சாட்சியம் வழங்கிய குருமூர்த்தி, தங்கள் மீது ஆனந்தன் என்பவர் துப்பாக்கியால் சுட்டார் என்று கூறியுள்ளார். இப்போது வீடியோ மூலமாக டக்ளஸ் தேவானந்தா முன்னிலையாகியுள்ளார். அவர் தான் ஆனந்தன் என்று குரு மூர்த்தி அடையாளம் காட்டினால், கொலைக் குற்றச்சாட்டில் சிக்காத எனது கட்சிக்காரருக்கு பாதிப்புஏற்படும்என்றுகூறியிருந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசு தரப்பு சட்டத்தரணி எம்.பிரபாவதி மனுத் தாக்கல் செய்தார். இதுவரை நீதிமன்றத்தில் பத்திரிகையாளர் உட்பட பலர் இருந்தனர். இதை அவதானித்த நீதிவான், இந்த வழக்கு இரகசிய விசாரணை அடிப்படை யில் விசாரிக்கப்பட உள்ளதால், வழக்கில் தொடர்பில்லாதவர்கள் அனைவரும் நீதி மன்ற அறையில் இருந்து வெளியில் செல்லவேண்டும் என்று கூறினார். அனைவரும் வெளியில் சென்ற பின்னர், நீதிமன்றக் கதவுகளை மூடி, ரகசிய விசாரணை தொடங்கியது.

டக்ளஸ் தேவானந்தாவிடம் வீடியோ மூலம் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது பொலிஸ் தரப்புச் சாட்சிகள் குருமூர்த்தி, பன்னீர் செல்வம், மணி, வீரமுத்து ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தனர்.

இதில் வீடியோ மூலம் விசாரணை நடத்த நீதி மன்றத்தில் மிகப்பெரிய திரை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அப்போது அந்தத் திரையில்தெரிந்தடக்ளஸ்தேவானந்தாவை, பொலிஸ் தரப்புச் சாட்சிகள் அடையாளம் காட்டினார்கள். இவர்தான் துப்பாக்கியால் சுட்டார் என அவர்கள் தெரிவித்தனர். இதன் பின்னர் வழக்கு விசாரணையை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு நீதிபதிக்கு ஒத்தி வைத்தார்.

இதேவேளை, இந்த வீடியோ மூலமான சாட்சியம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில், தமிழக அரசு சார்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட நான்கு சாட்சிகளில் மூவர் என்னை அடையாளம் காட்ட முடியவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஒருவர் மட்டும் அந்தச் சம்பவத்தில் காயமடைந்தவரை ஏற்றிச் சென்ற ஓட்டோ மீது நான் மேல் மாடியிலிருந்து துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதே சாட்சியானவர் முன்னர் ஒரு தடவை சாட்சியமளிக்கும் போது, சம்பவத்தின் போதுநான்கு பேருடன்சேர்ந்து கீழே இருந்து சுட்டதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சூளைமேட்டில் நடந்த சம்பவத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், இங்கே சில ஊடகங்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் மாறுபட்ட செய்திகளை வெளியிடுவது கவலையளிக்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

# இரக்கத்தின் ஆண்டில் இறை மன்னிப்பை வழங்க மறைப்பணியாளர்கள் திருத்தந்தையால் நியமனம்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*



உலகம் முழுவதிலும் வாழும் கத்தோலிக்க திருச்சபையை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அனுஷ்டிக்கப் பணித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ், திருப்பீடம் மட்டுமே மன்னிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு சில பாவங்களுக்கு மன்னிப்பை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவர்களாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரக்கத்தின் மறைப்பணியாளர்களை உலகின் அனைத்துக் கண்டங்களிலிருந்தும் நியமித்துள்ளார். இவர்களில் கனடாவில் உள்ள செபமாலைத்தாசர் சபை பணியகத்தில் பணியாற்றி வரும் இலங்கைச் சபையைச் சேர்ந்த அமுது ஜெயசீலன் அடிகளாரும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் முக்கியத்துவம் பெறும் 2016 ஆண்டின் தவக்காலம் பற்றி இந்தக் கட்டுரை விளக்குகிறது.

**கிறிஸ்தவ மதத்தின் புனித காலம் தவக்காலம்**

இலங்கை, உலகின் நான்கு பெரிய மதங்களையும் தன்னகத்தே கொண்ட நாடு. பௌத்தம் – இந்து –கிறிஸ்தவம் – இஸ்லாம் ஆகிய உலகின் நான்கு மதங்களும் இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த நான்கு மதங்களும் மனிதரைப் பல வழிகளிலும் நல்வழிப்படுத்தவே முயல்கின்றன. இந்த நல்வழிப்படுத்தலுக்கு இந்த நான்கு மதங்களும் சிறப்புக் காலங்களை ஒதுக்கியுள்ளன. 2016 ஆண்டின் தவக்காலம் கத்தோலிக்க திருச்சபையின் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் வருகின்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. 40 நாள்களைக் கொண்ட கிறிஸ்தவ மதத்தின் புனித காலமான தவக்காலம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறை உண்மைகளை நினைவு கூர்ந்து தியானித்து வாழ அழைப்பு விடுக்கிறது. இந்தத் தவக்காலத்தின் உச்சக் கட்டமாகப் புனித வாரம் அமைகிறது. புனித வாரத்தின் இறுதி மூன்று தினங்களும் முக்கிய தினங்களாகும். மார்ச் மாதம் 24 ஆம் திகதி பெரிய வியாழன் அன்று ஆண்டவரின் இராவுணவு நினைவு கூரப்பட்டு கொண்டாடப்படுகிறது. அன்றைதினமே இயேசு தாம் கத்தோலிக்க திருச்சபையில் என்றும் பிரசன்னமாயிருக்க நற்கருணையையும் தம் பணி என்றும் தொடரப்பட குருத்துவத்தையும் எற்படுத்திய தினமாகும். மார்ச் மாதம் 25 ஆம் திகதி பெரிய வெள்ளி திருப்பாடுகளின் வெள்ளி என நினைவு கூரப்படுகிறது. ஆண்டவர் இயேசு மூன்று ஆணிகளில் மும்மணி நேரம் வானத்துக்கும் பூமிக்கும் நடுவில் அந்தர நிலையில் இரு கள்வரிடையே தொங்கி உயிர் துறந்த தினம் இதுவாகும். மார்ச் மாதம் 26ஆம்திகதி பெரிய சனி பாஸ்காத்திரு விழிப்பு தினமாகும். அன்றைய தினம் நள்ளிரவில் ஆலயத்தில் கூடும் இறைமக்கள் ஆண்டவர் இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா என மகிழ்ச்சியோடு ஆர்ப்பரிக்கின்றனர். மார்ச் மாதம் 27 ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிறு அல்லது பாஸ்கா ஞாயிறு கொண்டாடப்படுகிறது. இயேசுவின் உயிர்ப்பே கத்தோலிக்கத் திருச்சபையின் பலமும் அடிப்படையுமாகும். இயேசுவின் உயிர்ப்பே கத்தோலிக்க திருச்சபைக்கு அர்த்தமும் ஆழமும் கொடுத்தது. இயேசுவின் உயிர்ப்பே கத் தோலிக்க திருச்சபையை உயிர் வாழும் மதமாக்கி அனைத்து மதங்களில் இருந்தும் வேறுபடுத்தியது.

> கத்தோலிக்கத் திரு அவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் ஒரு நிகழ்வாக அனைத்துக் கண்டங்களிலிருந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இரக்கத்தின் மறைப் பணி யாளர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளனர். இவர்கள் இந்த இரக்கத்தின் ஆண்டில் இறைவனின் மன்னிப்பை வாரி வழங்கும் தூதுவர்களாகச் செயற்பட அழைக்கப்படுகின்றனர்.

**சிறப்பு யூபிலி ஆண்டில் தவக்காலம் 2016**

2016ஆம் சிறப்பு யூபிலி ஆண்டில் இடம்பெறும் தவக்காலத்தை இறை இரக்கத்தை அனுபவித்துக் கொண்டாடும் நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம் என உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் தமது 2016ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார். பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் – என்ற வார்த்தைகளுடன் 2016ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், இறை இரக்கத்தை அனுபவிக்கவும் பிறருக்கு வழங்கவும் நாமனைவரும் அன்னை மரியைப் போல் இறை வார்த்தையைச் செப உணர்வில் செவிமடுக்க முதலிடம் கொடுப்போம் என அழைப்பு விடுத்துள்ளார்.

இறைவன் மனிதனுடன் ஏற்படுத்திய ஒப்பந்தம் இரக்கத்தின் ஒரு வரலாறு என்பதையும் தமது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, இந்த உடன்படிக்கையில் இறை இரக்கத்தின் மறையுண்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும், இறை இரக்கத்தின் வளமையையும் காண முடியும்எனவும்குறிப்பிட்டுள்ளார். இறை இரக்கத்தின்வழியாக இதயங்களில் மாற்றத்தை அனுபவிக்கும் நாம் அதனை மற்றவர்களுக்கும் திருப்பி வழங்கக் கடமைப்பட்டுள்ளோம். இன்றையை நவீன உலகில் மனிதர்கள் இரக்கம் குறித்த அக்கறையின்றி வாழும் நிலையில், இலாசரின் உருவில் எமது கதவருகே காத்து நிற்கும் இயேசுவைக் குறித்துச் சிந்திக்க வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்துள்ளார். தன்னால்எதுவும்முடியும்-தானேஅனைத்து வல்லமையும் உடையவர் என மனிதர் நினைப்பதே ஆதிகாலத்திலிருந்தே பாவத்தின் வேராக இருந்துள்ளது என்பதையும், தமது தவக்காலச் செய்தியில் எடுத்தியம்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், கடவுளின் வார்த்தைக்கு செவிமடுப்பதற்கும், இரக்கச் செயல்களை ஆற்றுவதற்கும், இந்தத்தவக் காலம் சிறந்ததொரு வாய்ப்பு என்பதால், அனைத்துக்கும் ஒரே பதிலாக நிற்கும்அன்புஎனும்சக்தியைக்கொண்டு இந்தத் தவக்காலத்தில் இறைவனையும் ஏழைகளையும் நோக்கி மனம் திரும்புவோம் என 2016ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் மேலும் அழைப்பு விடுத்துள்ளார்.

**யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் செய்தி**

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இரக்கத்தின் ஆண்டு பற்றித் தெரிவிக்கும்போது, இவ்வாண்டில் இறைவனின் இரக்கத்தை நாம் அனுபவிக்கவும் அதை மற்றவர்களோடு பகிரவும் அழைக்கப்படுகிறோம். இந்த இரக்கத்தின் ஆண்டில் திருச்சபையின் ஓரத்திலும் விரக்தியின் விளிம்பிலும் இருப்போருக்கு இறைவனின் இரக்கத்தை அனுபவிக்க ஒரு சந்தர்ப்பம் வழங்குவோம். திருச் சபையையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சிப்போர் மற்றும் அதனை விரும்பாது வெளியே செல்வோரை அன்புடன் அரவணைப்போம். அவர்களை அன்புடன் அணுகுவோம். அவர்களுடன் அன்புடன் பேசுவோம். அவர்கள் மீண்டும் ஒரு தடவை இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கச் சந்தர்ப்பம் வழங்குவோம். இந்த அழைப்பை இந்த இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் சிறப்புப் பணியாக சம்பந்தப்பட்ட அனைவரையும் ஏற்று ஆற்றும்படி யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார்.

**இறை இரக்க அனுபவம் புதுமையானது**

இறை இரக்க அனுபவம் இறைவனிடம் இருந்து வருவது. அது இனிமையானது – புதுமையானது – அதை அனுபவித்தவர்களே அதற்குச் சான்று பகர முடியும். அந்தப் புதுமையான அனுபவத்தைப் பற்றி 2004ஆம் ஆண்டு ஈரான் நாட்டில் நிகழ்ந்த ஒரு துயர நிகழ்வை சிந்திக்கும்படி வத்திக்கான் எமக்கு அழைப்பு விடுக்கிறது. அதனை இங்கு நோக்குவோம். 2004ஆம் ஆண்டு ஈரான் நாட்டில் நிகழ்ந்த ஒரு துயரநிகழ்வு இது. தனது காதலை நிராகரித்த அமேனே என்ற இளம்பெண்ணின் முகத்தில் அமிலத்தை வீசினார் மஜீத் என்ற இளைஞர். இதனால் இளம்பெண் அமேனேயின் முகமெல்லாம் எரிந்துபோய் அவர் தனது இடது கண்ணின் பார்வையை இழந்தார். 2011 ஆம் ஆண்டு இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு உலகை அதிர்ச்சியடையச் செய்தது. இளம்பெண் அமேனே அமில வீச்சினால் தனது இடது கண் பார்வையை இழந்தது போலவே, மஜீத்தின் இடது கண்ணிலும் அமிலம் ஊற்றப்பட்டு அவரும் பார்வை இழக்க வைக்கப்படவேண்டும் என்பதே அந்தத் தீர்ப்பு. நீதிமன்றம் வழங்கிய அந்தத் தீர்ப்புக்கு இளம்பெண் அமேனே முதலில் துணை போனார் என்பது உண்மை. அந்தத் தீர்ப்பைச் செயல்படுத்தக்கூடாது என்று உலகின் பல அரசுகளும் மனிதாபிமான அமைப்புக்களும் விண்ணப்பித்தாலும் ஈரான் அரசு தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. சிறை அதிகாரிகள் 2011ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற மஜீத்துக்கு மயக்க மருந்தை முதலில் கொடுத்தனர். அவர் மயக்கத்தில் இருந்த நேரம், அமில வீச்சில் கண்ணிழந்த இளம்பெண் அமேனே அந்தத் தண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என்று விண்ணப்பித்ததால் மஜீத்தின் கண்களில் அமிலம் ஊற்றப்படவில்லை. இளம்பெண் அமேனேவின் அகக் கண்கள் திறந்ததால், மஜீத்தின் முகக் கண்கள் காப்பாற்றப்பட்டன. “கண்ணுக்குக் கண்”என்று வாழும் இவ்வுலகப் போக்குக்கு மாற்றுச் சாட்சியங்களாக, அமேனே போன்ற இளம்பெண்கள் “மன்னிப்பு” பாடங்களைச் சொல்லித் தருவதால் இவ்வுலகம் இன்னமும் முழுமையாகக் குருடாகாமல் காப்பாற்றப்பட்டுள்ளது.

**இரக்கத்தின் மறைப்பணியாளர்களுள் இலங்கை அமுது ஜெயசீலன் அடிகளார்**

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி திருநீற்றுப் புதனன்று , வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் திருப்பலி நிறைவேற்றி இரக்கத்தின் மறைப்பணியாளர்களைப் பணிக்கு அனுப்பினர். கத்தோலிக்கத் திருஅவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் ஒரு நிகழ்வாக அனைத்துக் கண்டங்களிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரக்கத்தின் மறைப் பணியாளர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இந்த இரக்கத்தின் ஆண்டில் இறைவனின் மன்னிப்பை வாரி வழங்கும் தூதுவர்களாகச் செயற்பட அழைக்கப்படுகின்றனர். இவர்களில் இலங்கை செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த அமுது ஜெயசீலன் அடிகளாரும் ஒருவர் என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங்கை செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அமுது ஜெய சீலன் அடிகளார் கனடாவில் உள்ள செபமாலைத் தாசர் சபை பணியகத்தில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. திருப்பீடம் மட்டுமே மன்னிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு சில பாவங்களுக்கு, இந்த மறைப் பணியாளர்கள் இந்த யூபிலி ஆண்டில் மன்னிப்பு வழங்குவார்கள் என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

உலகக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த இரக்கத்தின் ஆண்டில், நாம் இறைவனின் எல்லை இல்லாத மன்னிப்பை – அளவு கடந்த அன்பை – என்றும் கிடைக்கும் இரக்கத்தை அனுபவித்து எம்மோடு வாழும் எல்லா மக்களும் அனுபவிக்கத்தக்க விதமாக முதலில் இரக்கத்தின் தூதுவர்களாக மாறுவோம். இலங்கை நாட்டில் இன்று நடைபெறுகின்ற நிகழ்வுகள் இறைவனின் விசேட இரக்கத்தைப் பெரிதும் வேண்டி நிற்கும் நிகழ்வுகளாகவே உள்ளன. அரசியற் கைதிகள் விடுதலை, மீள்குடியேற்றம், மயிலிட்டி மக்கள் துயர், இளவாலை மக்கள் காணி விடுவிப்பு, தீர்வுத் திட்டம், அரசியல்யாப்பு என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இவை அனைத்துக்குமான நிலையான தீர்வு இந்த இரக்கத்தின் ஆண்டில் கிடைக்க இறைவன் ஆசீர் வழங்குவாராக.



இலங்கை சமாதான கற்கைகள் நிலையம் வருடா வருடம் வழங்கிவரும் "சமாதான தூதுவர்" விருது வழங்கலில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த இரு சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். அம்பாறை மாவட்ட உதயன், செய்தியாளரான கலாபூசணம் ஏ.எல்.எம்.சலீம் மற்றும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளரும், சம்மேளனத் தலைவருமான கலாபூசணம் மீரா.எஸ்.இஸடீன் ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-30)





மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. வித்தியாலய அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும், சிறப்பு விருந்தினராக வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ப.பூவேந்திரனும் கலந்து கொண்டனர். (ஐ-9)



பளை, இந்து ஆரம்ப வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் , பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் மற்றும் பிரதேச கிராமசேவையாளர், வலயக்கல்விப்பணிமனை உத்தியோகத்தர்கள் , ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஊரவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



கொழும்பு கலாசார திணைக்களத்தினால் கலைஞர்களைக் கௌரவித்து "கலாபூசணம்" விருது வழங்கும் விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோகிலமணி ஜெயானந்தராஜாவுக்கு இசைத்துறைக்கான கலாபூசணம் விருது வழங்கப்பட்டது. (ஐ-9)



வயாவிளான் மத்திய கல்லூரியில் சிறுவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்கெடுப்பு அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



கனடா இராமன் கல்வி அறக்கட்டளை நிதிய அனுசரணையுடன் சாவகச்சேரியில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும், பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கலும் அண்மையில் சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன்,தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)



வவுனியா, கங்கன்குளம் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி .நடராஜ், சிறப்பு விருந்தினராகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யேசுதாஸ் மற்றும் அயல் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.(ஐ)



யாழ்ப்பாணம் வண்ணை - கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் இரதோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. (ஐ)



பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ திறப்பு விழாவில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளன முன்னாள் தலைவர் எஸ்.ஜெயக்குமார் கலந்து கொண்டார். (ஐ)



உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. (ஐ)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு வீதியோட்ட நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.கே எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்ற போது வீதியோட்ட நிகழ்வில் பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள். (ஐ)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. (ஐ)



புற்றளை மகா வித்தியாலயத்தின் 2016 ஆம் ஆண்டு இல்ல மெய்வன்மைப்போட்டியின்போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.



சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாக் காட்சிகள். (ஐ-9)



அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது. விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



கொடிகாமம் மக்கள் வங்கி சமூகத்தினரால் நடத்தப்பட்ட உண்டியல் திருவிழாவில் பயனாளி ஒருவருக்கு வங்கி உத்தியோகத்தர் பரிசில் வழங்கி வைத்தார். (ஐ-122)



வடகோவை, இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. (ஐ)



வவுனியா அல்- இக்பால் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. (ஐ-402)



கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் ந.கந்தவனச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. (ஜ)



சாவகச்சேரி மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்களாகக் கலந்து கொண்ட தொழிலதிபர் த.ஜெயந்தன், வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் தி.அபராஜிதன் ஆகியோர் போட்டிகளில் முதலிடம் பெற்ற இல்லத்துக்கு கேடயம் வழங்கினர். (ஜ-9)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந. சுகிர்தராஜ், முன்னாள் வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி. பிரகாஷ், வயாவிளான் மத்திய கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் சி . பாலகிருஸ்ணன், புன்னாலைக்கட்டுவன் கிராம அலுவலர் ப . பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஜ)



Colombo Maitland Pearl City லயன்ஸ் கழகத்தால் Salesian Sisters Auxilium Centre இல் உள்ள வறிய மாணவர்களுக்கான கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ)



தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் இராமர், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தனர். (ஜ-9)



முல்லைத்தீவு சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலையின் இந்த ஆண்டுக்கான இல்ல மெய் வன்மைப் போட்டிகள் பாடசாலை அதிபர் மேகநாதனின் தலைமையில் நடைபெற்றன. (ஜ)




பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியில் வலி. கிழக்குக்கு உட்பட்ட 11 வீதிகள் முழுமையாக செப்பனிடப்பட்டுள்ளன. அந்த வகையில் பழனியாண்டவர் வீதியும் செப்பனிடப்பட்டு முதன் முதலாக தார் வீதியாக மாற்றம் கண்டுள்ளது. இதனையொட்டி அப்பகுதி மக்களால் கௌரவிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பழனியாண்டவர் கோயில் முன்றிலில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் யுகராஜா ஜெலீபன் மற்றும் வலி.கிழக்குப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். (ஜ)

கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தர் பொன்னையாவின் பணி நயப்பு விழா, ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வாழ்த்துரை வழங்கினார். (ஜ)



# பொன் நிற நெல்லின் அறுவடை உங்களுக்கே...

## அரசினால் ரூ.25,000/- வீதம் உழவர்களுக்கு உரம் வழங்கிட 37.5 பில்லியன் ரூபாய் நிதியுதவி!

தேசத்திற்கே அன்னமிடும் உழவர்களுக்கு வரும் போகம் முதல் திறந்த சந்தையில் உரம் கொள்வனவு செய்திட ஒரு வருடத்திற்கு ஹெக்டயாருக்கு 25,000/- ரூபாய்.



- நெற் வயல்களுக்கு கால - பெரும் போகத்தில் 1 ஹெக்டயாருக்கு ரூபாய் 25,000/- வீதம் இரண்டு ஹெக்டயார்கள் வரையில் நிதியுதவி.
- இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியில் (RDB) இவ் நிதியினை பெறக்கூடிய வசதி
- செயற்படும் நிலையில் வங்கி கணக்கொன்று இருப்பின் புதிய கணக்கொன்றினை ஆரம்பிக்க தேவையில்லை.
- யூரியா/TSP/MOP போன்ற உர வகைகள் 50 கிலோ.கிராம் பக்கட்டுற்கு உயர் பட்ச சில்லறை விலை ரூ.2,500/-.
- உயர் தரத்திலான உரத்தினை போட்டி விலையின் கீழ் பெற்றிட சந்தர்ப்பம்.
- சேதன பசளையை பாவித்திட அல்லது உற்பத்தி செய்திட சந்தர்ப்பம்.

இன்றே அருகில் உள்ள வங்கி கிளையினை அல்லது விவசாய சேவை அலுவலகத்தினை நாடுங்கள்

மக்கள் வங்கி

RDB

BANK OF CEYLON
BOC

ஆகிய வங்கிகள் மூலம் இத்தொகையினை பெற்றுக்கொள்ள முடியும்.

அரச மற்றும் தனியார் உர விற்பனை முகவர்கள், விவசாய சேவை மத்திய நிலையங்கள் மற்றும் நகர்ந்திடும் விற்பனை வாகனங்களிலும் உழவர்கள் உங்கள் பிரதேசத்திலேயே உர கொள்வனவு செய்திட முடியும்.

மேலதிக தகவல்களுக்கு தேசிய உர செயலாளர் காரியாலயத்திற்கு அழையுங்கள்:

✆ 2 887 449 பெக்ஸ்: 2 881 447

விவசாய அமைச்சு
தேசிய உர செயலாளர் காரியாலயம்

# மகளிர் தினமான மார்ச் 8 இருண்ட நாளாகப் பிரகடனம்

## பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மார்ச் 6

பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து மகளிர் தினமாகிய மார்ச் 8 ஆம் திகதியையும், இந்த மாதம் முழுவதையும் ஒட்டுமொத்தமாக நாட்டு மக்களுக்கு இருண்ட நாள்களாக பிரகடனப்படுத்துகின்றோம்.

இவ்வாறு பெண்கள் செயற்பாட்டுக்கான வலையமைப்பு தெரிவித்துள்ளது.

திருநெல்வேலியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலே அந்த அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும், கொலைகளும், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும், கொலைகளும் மிகவும் மோசமான முறையில் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறைக்கான நீதி இதுவரை கிடைக்காததாலும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போனதாலும் மகளிர் தினமாகிய மார்ச் 8 ஆம் திகதியையும் இந்த மாதம் முழுவதையும் இருண்ட நாள்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளோம்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எமது சமூகத்தில் நிகழ நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். பெண்களுக்கு எதிரான வன்முறையாளர்களாக நாங்கள் இருக்க மாட்டோம். பெண்களுக்கு எதிரான வன்முறையாளராக ஆண்கள் மாற அனுமதிக்க மாட்டோம். பெண்களுக்கு

> “பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும், கொலைகளும், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும், கொலைகளும் மிகவும் மோசமான முறையில் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றன.”

எதிரான வன்முறைகளுக்கு நீதி கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்பதைக் காட்ட எமது வீடுகளிலும், கடைகளிலும் அலுவலகங்களிலும் மார்ச் 8 ஆம் திகதி கறுப்புக் கொடிகளை ஏற்ற வேண்டும். அன்று கறுப்பு உடைகள், கறுப்பு பட்டிகளை அணிந்து பெண்களுக்கு எதிராக நடைபெறும் அநீதிகளை எதிர்த்து பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்.- என்றுள்ளது.

இந்த வலையமைப்புடன் இடர் முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பு மற்றும் வட மாகாண பெண்கள் மாற்றத்துக்கான பரிந்துரை செய்யும் வலையமைப்பு என்பனவும் இணைந்துள்ளன.

அத்துடன் பெண்கள் செயற்பாட்டுக்கான வலையமைப்பானது பெண்கள் வன்முறை அற்றசமூகத்தை உருவாக்குவதற்கு அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் மகளிர் தினமாகிய மார்ச் 8 ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-ற-ரி)

## வேலைவாய்ப்புக்கள்

நீங்கள் பல காலம் தேடிக்கிடைக்காத வேலையினை
சில காலங்களில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

உடன் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
நேரில் தொடர்புகொள்ளுங்கள்

**WINSTAR JOB BANK**

#106, தபாற்பெட்டி சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.

T: 021 320 2789
M: 076 5450 539
Fb: winstarjaffna

(69396)(10.17)

## FAHMA - DUBAI MANPOWER

வெளிநாட்டு வேலைவாய்ப்பு
(முற்பணம் அறவிடப்பட மாட்டாது)

**ஆண், பெண் இருபாலாருக்கும் அவரவர் தகைமைகளுக்கும் தொழிலுக்கும் ஏற்ப வேலைவாய்ப்பு**

**சம்பளம் ரூ.45,000 - 100,000 ரூபா வரை**

போக்குவரத்து, தங்குமிடம், உணவு கம்பனியால்
இலவசமாக வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**இலங்கை - 075 639 8701, 075 710 1916, 071 787 6136.**
**டுபாய் - 00971 5216 64830, 00971 55177 5447**

Email - fahmadubai13@gmail.com
Skype - fahmadubai4

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42ஆம் வீதியில் 3ஆம் இலக்கத்திலுள்ள இரண்டு அறை இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி நாள்.கிழமை.மாத.வருட.வாடகைக்குண்டு.

தொடர்புக்கு:0778378597

## உதவியாளர்கள் பயிலுனர்கள் தேவை

கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு : 077 3143444
Email : Info@dialus.lk

## 2016 Chemistry Personal Classes

Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry English / Tamil. (69693)(15.17)

T.P No: 075 7387 087

## விற்பனைக்கு

TOYOTA AXIO G Grade Car
விற்பனைக்கு உண்டு.Silver Colour
K M - XXXX

தொடர்புகளுக்கு : 0776567447, 078 7336228

## அறைகள் வாடகைக்கு

யாழ் ஸ்ரான்லி வீதியில்
பெண்களுக்கு பாதுகாப்பான
இணைந்த குளியலறையுடன்
அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்புக்கு : 077 7585412

## வீடு வாடகைக்கு உண்டு

இல 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக Mother Care அருகில் இரண்டு அறைகளுடன் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு : 077 3013755

## மணமகள் தேவை

யாழ் இந்து குடும்பத்தைச் சேர்ந்த 11 இல் சூரி.செவ் 1981. இல் பிறந்த மணமகனுக்கு வயறிங்.பிளமிங் வேலை செய்பவர் அரச தொழில் புரியும் தகுதியான மணமகள் தேவை. (68533)(2.19.20)

**077 424 7088**

## வீட்டுக்கு வீடு பால் விற்பனை

யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட
பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு
பால் விற்பனை செய்யப்படும்.
உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து
தருகிறோம்.

தொடர்பு : 076 531 0422

## தேவை

வீட்டுப்பணிப்பெண் தேவை
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0771334904
0776140361

## வேலையாள்கள் தேவை

தச்சு வேலையாட்கள்,மரதளபாட ஸ்பிறே பெயின்ட்டர் உடன் தேவை. நல்ல சம்பளமும் தொடர்ச்சியான வேலையும் வழங்கப்படும்.

தொடர்புக்கு : 0777585412
லிப்றா மரதளபாடநிலையம்

## இலவச கணினி வகுப்புக்கள்

தரம்-10, O/L, A/L மாணவர்களுக்கான
இலவச கணினி வகுப்புக்கள்

- ICT
- Diploma in Business Applications
- Diploma in MS Office
- Diploma in Internet Technology

பெறுமதிமிக்க சான்றிதழ்
காலம் 3 மாதங்கள்

ஆரம்பம்:
06.03.2016 - 20.03.2016 சனி, ஞாயிறு

(69884)(10.17)

IPS Thirunelvely.
0766852529

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு தலையாழியில் (செல்வமகால் திருமண மண்டபத்திற்கு முன்) கே.கே.எஸ் வீதியிலிருந்து 150m தூரத்தில் நிலப்பரப்பு13 குளி2.95 துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.

கோண்டாவில் கிழக்கு வன்னியசிங்கம் வீதியில் (கோண்டாவில்சந்தி ஐயப்பன் கோவிலுக்கு அருகில்) நிலப்பரப்பு21/4 உடன் கூடிய கல்வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 7286061
077 1671174

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை ஜெயசீலன்**

(ஆசிரியர் -
கிளி/கரவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயம்)

எமது பாடசாலை அதிபர் வே.குணசீலன் அவர்களின் சகோதரன் வேலுப்பிள்ளை ஜெயசீலன்அவர்களின் திடீர் மறைவுசெய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை**
(c/29630)(15,17)

## கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் தேர் மற்றும் தீர்த்தத்திருவிழாக்கள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சரித்திர பிரசித்தி பெற்றதும் தொன்மை வாய்ந்ததும் புனிதமும், அதிசயமும், சக்தியும் நிறைந்த மாபெரும் சிவன் ஆலயமான கீரிமலை நகுலேஸ்வர பெருமானுக்கு 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 8ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறுவதால் இலங்கையிலுள்ள சைவ அடியார்கள் அனைவரும் கீரிமலை என்கின்ற புனித நகரில் ஒன்றுகூடி இனிய சிவபூமியில் சிவநாம சிவசிந்தனை சிவசேவையில் ஒருமித்து சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**சுஜீவா வைத்தியசாலை,**
**சுஜீவா விற்பனை நிலையம்.**

## தகவல் தாரீர்

மு/ இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அன்னையின் வைரவிழா எதிர்வரும் 30.08.2016 அன்று, கோலாகல கொண்டாட்டம் காண உள்ள வேளையில், வெளிவர உள்ள வைரவிழா மலருக்காக கீழ்வரும் தகவல்களை வேண்டி நிற்கின்றோம்.

01. பாடசாலையில் கல்வி கற்று அரச மற்றும் அரச சார்பற்ற் பணிகளில் சிறந்தோங்கி மிளிரும் பழைய மாணவர்கள் விவரம்.

02. பாடசாலையில் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டு தற்போது இளைப்பாறி வாழும் ஆசிரியர்கள் விவரம்.

03. பாடசாலையில் கல்வி தொடர்ந்து கொண்டிருக்கையில் அகாலமரணமானோர் விவரம்.

இடர்கால சூழலில் இவ்விவரங்கள் விடுபட்டு போயுள்ளமையால் அன்புள்ளங்கள் இவ்விவரங்களை கீழ்க் காணும் வழிகளில் எமக்கு அறியப்படுத்துமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**குறிப்பு:** 15.04.2016 இற்கு முன் எமக்கு கிடைக்கும் விவரங்கள் மட்டுமே வெளிவரவிருக்கும் வைரவிழா மலரில் பதிவிடப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்

**மின்னஞ்சல்:** miranaippalairc@gmail.com
**தொலைபேசி: அலுவலகம்- 021 229 0801, அதிபர்- 077 288 1895 , உப அதிபர்: 075 047 0641**
முகநூல்:Miranaippalai. RCMV
skype: iranaippalai.rcmv

**வைரவிழா ஏற்பாட்டுக்குழு**
**மு/ இரணைப்பாலை றோ. க.ம.வி**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 15 . 09 . 1934



உதிர்வு 19 . 02 . 2016

அமரர்
**திருமதி நாகேஸ்வரி பத்மநாதன்**

கடந்த 19.02.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியறிந்து எமது துயரத்தில் நேரில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தோருக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, மின்னஞ்சல், பத்திரிகை, முகநூல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது தாயார் நோயுற்று இருந்த போது அவருக்கு மிகுந்த கடமையுணர்வோடு வைத்திய சேவையாற்றிய யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் எமக்கு இதர வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பரக்ள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.199/4, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
(69879)(06.17)

# பிறந்து இரண்டு நாள்களான சிசுவை மலசலகூட குழிக்குள் போட்ட பெண்

கொழும்பு, மார்ச் 6

பிறந்து இரண்டே நாள்களான சிசுவை மலசலகூடக் குழிக்குள் போட்ட பெண் ஒருவரை சிகிரியப் பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

தம்புள்ள வைத்தியசாலை நிர்வாகத்தால் சிகிரியப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய 32 வயதான குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் கடந்த 2 ஆம் திகதி நான்கு மணியளவில் தனது வீட்டில்குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். பின்னர் அந்தக் குழந்தையைத் தனது வீட்டுக்கு அருகில் உள்ள மலசலகூடக் குழி ஒன்றில் போட்டுள்ளதுடன், சிகிச்சைக்காகத் தம்புள்ள வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

பெண் மீது சந்தேகம் கொண்ட வைத்தியர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதன் பின்னர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் அந்தப் பெண் தப்பித்துச் செல்லாமல் இருப்பதற்கு இரண்டு பெண் பொலிஸாரையும் கண்காணிப்புக்கு அமர்த்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

# தெமட்டகொட சமிந்தவை சந்தித்து மனிதத் தன்மையைக் காட்டினேன்

## இப்படிக் கூறுகின்றார் ஞானசார தேரர்

கொழும்பு, மார்ச் 6

பாரசந்திர கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான தெமட்ட கொட சமிந்த எனக்குச் செலுத்திய மரியாதைக்கு நான் மனிதத் தன்மையை வெளிப்படுத்தினேன் என்று தெரிவித்துள்ளார் பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

தெமட்ட கொட சமிந்த, நீதிமன்றத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டு மீளவும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்படும் போது இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது சிகிச்சை பெற்று வரும் தெமட்ட கொட சமிந்தவை, ஞானசார தேரர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். இது தற்போது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஞானசார தேரர், நான் சிறையிலிருக்கும் போது எனக்கு காலில் அணிய செருப்புக்கள் இருக்கவில்லை. குளிக்க தண்ணீர் இருக்கவில்லை. இந்த சமிந்த தான் அந்தக் குறைகள் அனைத்தையும் தேடி எனக்கு நிறைவேற்றித் தந்தான். அவன் சிறையில் முடிந்ததை எனக்காகச் செய்தான். இங்கு மனிதம் தான் முக்கியமானது.

இந்த இளைஞனுக்குப் பிரித் நூல் கட்டியது கௌதம புத்தரின் வழிமுறையைப் பின்பற்றும் ஒரு சீடன் என்ற வகையிலேயே என்று கூறியுள்ளார். (ற-ஐ-5)

# தன்னைக் கண்டித்த ஆசிரியரை கல்லால் தாக்கிய மாணவன்

கொழும்பு, மார்ச் 6

மாணவர்களை வரிசையில் செல்லுமாறு எச்சரித்த ஆசிரியர் ஒருவர், மாணவன் ஒருவரின் கல் தாக்குதலில் காயமடைந்து சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிலாபத்திலுள்ள தேசியப் பாடசாலை ஒன்றின் ஆசிரியரே இவ்வாறு கல் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை வரிசையில் ஒழுங்காக வருமாறு குறித்த ஆசிரியர் பணித்துள்ளார். இதன் போது அந்தப் பாடசாலையில் 12 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர், வரிசையை விட்டு விலத்தி நடந்துள்ளார். இதன் போது, ஆசிரியர் அந்த மாணவனை எச்சரிக்கை செய்துள்ளார்.

அதையடுத்து, அங்கிருந்த கல் ஒன்றால் ஆசிரியரை அந்த மாணவன் தாக்கியுள்ளார். இதனால் காயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதலை மேற்கொண்ட மாணவனின் தாய் அதேபிரதேசத்திலுள்ள வேறொரு பாடசாலையில் அதிபராகப் பணிபுரிபவர் எனவும் தெரியவந்துள்ளது. (ற-ஐ-5)

# சுன்னாகத்தில் பொலிஸாருடன் முரண்பட்டவர் ஓட்டோ சாரதியல்ல

## ஓட்டோ உரிமையாளர் சங்க சுன்னாகம் கிளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சுன்னாகத்தில் ஓட்டோ சாரதியும், போக்குவரத்துப் பொலிஸாரும் முரண்படுவது போன்று வீடியோ வெளியாகிய போதும், பொலிஸாருடன் முரண்படும் நபர் ஓட்டோ சாரதி அல்ல என்றும் அவர் கடை ஒன்றின் உரிமையாளர் என்றும் அவர் பிறிதொரு குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. குறித்த சம்பவம் தொடர்பில் மறுநாள் உதயனில் வெளியான செய்தியில், அலைபேசிகளூடாகப் பரவிய வீடியோவின் அடிப்படையில் ஓட்டோ சாரதிக்கும், பொலிஸாருக்கும் இடையிலான தகராறு என்பதாகச் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால் அவர் ஓட்டோ சாரதி அல்ல என்றும் அந்தச் சம்பவத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் யாழ். மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்க சுன்னாகம் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

முரண்படும் குறித்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும், அவர் தனது மனைவியைத் தாக்கியிருந்தார் என்றும் அது பற்றிய முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட வேண்டியிருந்தவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரது மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் அவர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டதால் அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தவும் நீதிமன்று பணித்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4)

### சிவராத்திரி உற்சவமும் அறநெறி சமூக விழாவும்

பளை, மார்ச் 6

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவமும், அறநெறிச் சமூக விழாவும் நாளை திங்கட்கிழமை இரவு 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன. விசேடபூசையைத் தொடர்ந்து நான்கு சாமப் பூசைகளும் இடம்பெறவுள்ளதுடன், ஆலயமுன்றிலில் ஆலய அறநெறி சமூக விழாவின் அரங்க நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் அறநெறி மாணவர்களின் பண்ணிசை நடனம், பேச்சு, கவிதை ஆகியவற்றுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர் கௌரவிப்பு 2014, உயர் சேவையாளர் கௌரவிப்பு மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் சமுதாயத்தைச் சீர்படுத்துவதில் பெரிதும் பங்களிப்பது சமயமா? சட்டமா? என்னும் தலைப்பிலான சிறப்புப் பட்டி மன்றமும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் அறநெறி சமூக விழாவுக்கு பிரதம விருந்தினராக, கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ந.சுதாகரன் கலந்து கொள்வார். (ற-ஐ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி மயில்வாகனம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மயில்வாகனம் நேற்று 05.03.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சீனிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற முத்தையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் இராஜகுலேந்திரன் காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் விசயகுலேந்திரன் (பிரான்ஸ்), கமலேந்திரன்(இந்தியா), புஸ்பராணி(ஜேர்மனி), காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமணி காலஞ்சென்ற பேரின்பநாயகி காலஞ்சென்ற கனகாம்பாள் மற்றும் நீதிராசா (ஜேர்மனி) காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் யோகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜகுமாரன் (பிரான்ஸ்), ரஜனி (நோர்வே), ரஜி (லண்டன்), சுரேஸ்குமார் (இந்தியா), நந்தகுமார் (நோர்வே), தினேஸ்குமார் (நோர்வே), இராஜ்கோபால் (பிரான்ஸ்), இராஜேஸ்வரன், காலஞ்சென்ற இராஜ்மோகன், ராதிகா, ராஜ்வதனி, கலைச்செல்வன் (பிரான்ஸ்), கலைவாணன் (பிரான்ஸ்), பிறமிலா (லண்டன்), செல்வகுமாரன் (பிரான்ஸ்), செவ்வராணி (இந்தியா), சந்திரகலா (இந்தியா), ரவீந்திரன் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி), ராஜினி, ராஜ்குமார், திலீப்குமார், இராஜேந்தினி, ராஜிகா, தட்சாயினி, உதயகுமார், துளசி (ஜேர்மனி), கலைவாணி, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சுவேதா (பிரான்ஸ்), சுருதி (பிரான்ஸ்), திவ்யா (நோர்வே), காயத்திரி (நோர்வே), கீர்த்தன் (நோர்வே), சஹானா (லண்டன்), தக்ஷிதா (இந்தியா), பிறனிதா (நோர்வே), ஷைலயா (பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்), நிவேதன், சயந்திகா, கயஸ்வினி, யோதீஸ், கஜேந்தினி, சதீஸ்சன், யாழினி, யதுஷாயினி, செனுகன் (பிரான்ஸ்), அஸ்வினா (பிரான்ஸ்), கீர்த்திகா (பிரான்ஸ்), கவினயா (பிரான்ஸ்), சுபிக்ஸன் (இந்தியா), டிலக்ஷனா (இந்தியா), செல்லசுதன் (இந்தியா), விவிதர (இந்தியா), லக்ஸ்மன் (இந்தியா), ஜனார்த்தனி (இந்தியா), நைலா (ஜேர்மனி), லறிஷா (ஜேர்மனி), விஜயராஜ், சண்குமார், அரவிந்குமார், சிந்துஜா, சரண்குமார், அபிநயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.** (69883)(15,17) தகவல்: **குடும்பத்தினர்.**

# பத்திரிகைச் சுவரொட்டிகளை ஒட்டியவர்களுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, மார்ச் 6

"ராஜபக்சர்கள் சரண்டர்" என்று எழுதப்பட்ட சிங்களப் பத்திரிகையின் சுவரொட்டிகளை ஒட்டிய இருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை பத்தரமுல்லை பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

இன்று வெளிவரவுள்ள சிங்களப் பத்திரிகை ஒன்றின் சுவரொட்டிகளை இருவர் ஒட்டிக் கொண்டிருந்துள்ளனர். அதில் "ராஜபக்சர்கள் சரண்டர்" என்று எழுதப்பட்டிருந்தது. இதனை ஒட்டிக் கொண்டிருந்தவர்கள் மீது, வாகனத்தில் வந்த சிலர் கொலை அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர்.

'நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கு எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு இடமளிக்கமாட்டோம். உடனடியாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அகற்றப்பட வேண்டும். அதிக காலம் நீங்கள் எல்லாம் ஆடுவதற்கு இடமளிக்கமாட்டோம்' என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் மீது குறித்த குழுவினர் தாக்குதல் நடத்த முற்பட்ட சமயத்தில், அங்கு பொதுமக்கள் திரண்டதால், மிரட்டிய குழுவினர் தப்பித்துச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### பொத்துவில் கடலில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் சரவு

அம்பாறை, மார்ச் 6

அம்பாறை மாவட்டம், பொத்துவில் கொட்டுக்கல் கடலில் நீராடியபோது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை காணாமற்போன இரு இளைஞர்களும் நேற்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த இப்றாலெப்பை முஹம்மது பஹத் (வயது 17), றஹுமான் ராஹித் (வயது 19) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்து சடலங்களாக மீட்கப்பட்டிருக்கின்றனர். (கு-சி)

## தலா 8 லட்சம்

கப்படுவர்களை சிபாரிசு செய்து அனுப்பாமல் பிரதேச செயலாளர்களே நேரில் சென்று ஒவ்வொரு பயனாளியையும் சந்தித்து தேர்வு செய்யவேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சால் அமைச்சின் நிதியில் யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதில் மதிப்பீட்டு அடிப்படையில், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 700 வீடுகளும், கோப்பாய் – சாவகச்சேரி – மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு தலா 300 வீடுகளும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 200 வீடுகளும், பருத்தித்துறை – சங்கானை – நல்லூர் – உடுவில் – சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் தலா 100 வீடுகளும், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் 150 வீடுகளும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 50 வீடுகளும், காரைநகர் – ஊர்காவற்றுறை – வேலணை பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 80 வீடுகளுமாக தற்போது ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் வீடுகள் யாவும் பாரம்பரிய முறையிலான வீடுகளாகவே அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் மீள்குடியேற்ற அமைச்சு 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு, புள்ளிகள் அடிப்படையில்மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் புள்ளியிடலில், போர் பாதிப்புக்கு உள்ளான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், பெற்றோரை இழந்து பாதுகாவலர்களின் பராமரிப்பில் சிறுவர் உள்ள குடும்பங்கள் என்பவற்றுக்கு கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர்கள் பயனாளிகளைப் பரிந்துரைந்தால், அதனை அப்படியே சிபாரிசு செய்து அனுப்பாமல், பிரதேச செயலாளர்கள் குறித்த பயனாளிகளை நேரில் சென்று சந்தித்து அதன் பின்னரே, பயனாளிகள் பட்டியலை இறுதி செய்ய வேண்டும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்,

இதேவேளை, மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு – கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் ஒவ்வொரு வீட்டுக்கும் 21 லட்சம் வழங்கப்படுவதுடன், பொருத்தும் வீடுக ளாக (பிற்றிங்) அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

## சிவில்

பாளர் நாயகம் சந்திரரட்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி பன்னங்கண்டி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் புனரமைக்கப்படவுள்ள நாகதம்பிரான் ஆலயத்துக்கு அடிக்கல் நடும் நிகழ் வுக்கு வருகை தந்திருந்த அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இருக்கும் எனக்கு இதுவரை ஜனாதிபதியிடமிருந்து சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தை மூடிவிடுமாறு எந்தவித அறிவுறுத்தலும் கிடைக்கப்பெறவில்லை.

எணவே தொடர்ந்தும் எங்களுடைய அவற்றின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்தும் தங்களுடைய பணிகளை முன்னெடுப்பார்கள்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பண்ணைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நிரந்தர அரச நியமனம் பெற்றவர்கள். ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்ள அனைத்து வசதிகளும் உண்டு. இது ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்

அத்தோடு அரசியல்வாதிகளின் தேவையற்ற பொய்யான பரப்புரைகளை நம்பி, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்றவர்கள் குழப்பமடையத் தேவையில்லை – என்றார்.

இதேவேளை கடந்த மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் விடயம் தொடர்பில் ஆராயப்பட்ட போது, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், சிவில் பாதுகாப்பு அலுவலகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சுடன் இணைக்குமாறு ஜனாதிபதியிடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்துள்ளதாக வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

## புலம்பெயர்

இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து நேரில் விளக்கமளிப்பதற்காக அமெரிக்கா சென்ற மங்கள, அந்தப் பணிகளை முடித்துக்கொண்டு தற்போது ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

போர்க்குற்ற மீறல்களை விசாரிக்க விசேட நீதிமன்றை அமைப்பது தொடர்பில் அவர் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கு விளக்கமளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அரசினால் அமைக்கப்படவுள்ள விசேட நீதிமன்றில் உள்நாட்டு நீதிபதிகள் நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஐ.நா மற்றும் பொதுநலவாய நாடுகளின் சட்டவாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த செயன்முறை, ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, நியமிக்கப்பட்ட ஆலோசனைச் செயலணியின் அறிக்கை கிடைத்தவுடன் ஆரம்பிக்கப்படுமென புலம்பெயர் தமிழர் அமைப்புகளிடம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், நல்லிணக்கச் செயன்முறைகள் தொடர்பில் தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள இலங்கைக் குழுவொன்றைத் தென்னாபிரிக்காவுக்கு அனுப்ப அரசு தீர்மானித்துள்ளமை, இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் புலம்பெயர் அமைப்புக்களுடன் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்ற கலந்துரையாடல்களை அடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லிணக்கச் செயன்முறைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தமிழ் புலம்பெயர் அமைப்புக்களின் முக்கியஸ்தர்களுடன் வொஷிங்டன் நகரில் கலந்துரையாடல்கள் மேற் கொண்டார். அதன்பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று அங்குள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடனும் அவர் இது குறித்துக் கலந்துரையாடி உள்ளார்.

இதன்போது, நல்லிணக்கச் செயற்பாடுகளில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஆலோசனைகளை இலங்கை அரசு வரவேற்பதாக குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர், புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும் அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படும் எனக் கூறியுள்ளார். (த–வ)

## வட மாகாண

வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களுக்கும், கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில், நேற்று முற்பகல் 10.15 மணி தொடக்கம், மாலை 4 மணி வரையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் என 15 பேர் வரை கலந்து கொண்டனர். இதன்போது சகல உறுப்பினர்களும் கருத்துத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்போது, வடக்கு மாகாண சபையில் இடம்பெறும் குழப்பங்களுக்கு விரைந்து தீர்வு காணவேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அழைத்து, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேசவேண்டும். இதன் மூலம் இந்தக் குழப்பங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும், என்று உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் கூட்டத்தின் இறுதியில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படவேண்டும். மாகாண சபையில் ஆளும் கட்சிக்கு இடையிலான மோதல்கள் – குழப்பங்கள் இடம்பெறக் கூடாது. முதலமைச்சர் தலைமையில் மாகாண சபைக் கூட்டத்துக்கு முதல்நாள் நடக்கும் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சகலரும் கலந்து கொள்ள வேண்டும். இதன்போது கருத்து மோதல்கள் இடம்பெறலாம். ஆனால் மாகாண சபையில் அவ்வாறான எந்த மோதலுக்கும் இடமளிக்கக் கூடாது.

மாதத்துக்கு ஒரு தடவை, மாகாண சபை உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைமைக்கும் இடையில் சந்திப்புக்கள் நடத்தப்படும். இதனை விட விரைவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–வ–5–101)

## லசந்தவின்

மறைக்க முயன்றனர் எனச் சந்தேகிக்கப்படும் பொலிஸ் உயரதிகாரிகள் இருவரிடம் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

எட்டு வருடங்களுக்கு முன்பு நடந்த இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகளின்போது, வெளியான முக்கிய தகவல்கள் சிலவற்றை அந்தக் காலப் பகுதியில் பதவியிலிருந்த குறித்த பொலிஸ் உயரதிகாரிகள் இருவரும் மூடி மறைத்திருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளதால், அவர்களிடம் ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பதியப்பட்டிருப்பதாகப் புலனாய்வுப் பொலிஸின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் பொலிஸ் பதிவுப் புத்தகத்தில் இருந்த சில பக்கங்கள் காணாமற்போயுள்ளன எனவும், அந்தப் பக்கங்களைக் கழற்றிச் சென்றனர் என்று சந்தேகிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் பற்றித் தகவல்ககள் கிடைத்துள்ளன எனவும், விரைவில் அவர் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்படுவார் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முன்னைய மகிந்த அரசால் மூடி மறைக்கப்பட்ட குறித்த படுகொலைச் சம்பவத்தை விசாரணை செய்து, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தற்போதைய அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–வ–4)

## வீட்டுத்திட்ட

தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது எமது சூழலுக்கு ஏற்றதா ? மற்றும் ஒதுக்கப்பட்ட நிதிக்கு அமைவாக வீடு இருக்கின்றதா ? என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு அந்த அறிக்கை முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசின் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை மீள்குடியேற்ற அமைச்சு, வடக்கு – கிழக்கில், தலா 21 லட்சம் ரூபா செலவில் அமைக்கவுள்ளது. இந்த வீடுகள் பொருத்தும் வீடுகளாக (பிற்றிங்) அமைக்கப்படவுள்ளன.

இவை எமது கலாசாரத்துக்கு பொருத்தமில்லாதவை என்றும், ஒதுக்கப்படும் 21 லட்சத்துக்கு இரண்டு வீடுகள் எமது கலாசாரத்துக்கு ஏற்ற வகையில் அமைக்க முடியும் என்றும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கடந்த மாதம் இடம்பெற்ற பிரதமருடனான சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குறித்த வீட்டை வடக்கு மாகாண முதலமைச்சர் நேரடியாகப் பார்வையிட்டு, அதனடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தார்.

இதற்கமைய வடக்கு மாகாணத் திணைக்களங்களிலுள்ள பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஊடாக, அமைக்கப்பட்ட முன்னோடி வீடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த வீட்டின் தன்மை, அதற்கு செலவு செய்யப்பட்ட தொகை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

குறித்த விடயங்களையும் ஆராய்ந்து பெறப்பட்டுள்ள அறிக்கை வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக, தெரிய வருகின்றது. (த–வ–5)

## வெலிக்கடைச்

இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரைப் பார்ப்பதற்காக வந்திருந்த பெண் ஒருவர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ள கர்ப்பிணிப் பெண், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய தினங்களில் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைச் சம்பவங்கள் அதிகமாக பதிவாகியிருந்ததுடன், இவற்றுக்குப் பாதாள உலகக் குழுக்கள் சம்பந்தப்படிருப்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை இல்லாதொழிக்கும் பொலிஸாரின் விடேட நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தநிலையிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–வ–சி)

## கூட்டமைப்பின்

தேசியக் கூட்டமைப்புக்கு இடையிலான உட்கட்சி விவகாரங்களும் ஆராயப்படவுள்ளன. (த–வ–5)

## ஏப்ரலில்

சர்வதேசப் பிரகடனமொன்றில் கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்பதற்காகவே ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பாரிஸ் பிரகடனத்தில் கைச்சாத்திடும் நோக்கில் ஜனாதிபதி இவ்வாறு அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் ஜனாதிபதியின் இந்த உத்தியோகபூர்வ பயணம் பற்றிய மேலதிக விவரங்களை ஜனாதிபதி செயலகம் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்க்கது. (த–வ–சி)

## கோத்தா


றால் அது வரவேற்கத்தக்க விடயம் என்றும், அதற்குத் தான் ஆதரவு வழங்குவேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைக்கப்படவிருக்கும் புதிய கட்சிக்கு அவர் தலைவரானால் அதுவும் வரவேற்கத்தக்க விடயம் என்றும் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இலங்கை மக்களின் ஏகோபித்த தலைவர் என்றும், நாடாளுமன்றத்திலும் அவரே சிறந்தவர் என்றும் பசில் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (த–வ–சி)

# வீரகத்திப்பிள்ளை, உடுப்பிட்டி அ.மி. சம்பியன் வடமராட்சி வலய கரப்பந்தாட்டத் தொடரில்





வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.

**15 வயதுப் பிரிவினருக்கான இறுதி**

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி கல்லூரி அணியும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியும் மோதின. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை அணி வெற்றி பெற்று நடப்பு வருட வலயச் சம்பியனாகியது.

மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி பெற்றது.

**17 வயதுப் பிரிவினருக்கான இறுதி**

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி.

மூன்றாமிடத்தை வல்வை சிதம்பராக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-108)

## கண்டாவளை கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை விளைபூமிவிளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மார்ச் 6

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108).

**யுனைற்ரெட் வி.கழகத் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ் யுனைற்ரெட் விளையாட்டுக்கழகமும் இணைந்து மின்னொயில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்யுனைற்ரெட்விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து பண்டிவிரிச்சான் வள்ளுவர் அணி மோதவுள்ளது. 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அச்சங்குளம் சென்.ஜோசெப் அணியை எதிர்த்து ஜோச வாஸ்நகர் ஜோசவாஸ் அணி மோதவுள்ளதுகாலை9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எவர்கிறின் அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன அணி மோதவுள்ளது. (ம-108-23)

## உடுப்பிட்டி மகளிர், சென்.தோமஸ், பருத்தித்துறை மெதடிஸ் கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

கரணவாய், மார்ச் 6

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 17 வயதுப்பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் பாடசாலையும், 19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வெற்றி பெற்று நடப்பு வருடத்தின் வலயச் சம்பியனாகின.

**15 வயதுப் பிரிவினரின் இறுதி**

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று குறித்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், பருத்தித்துறைசென்.தோமஸ் பாட சாலை அணியும்மோதின. 3செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது. மூன்றாமிடத்தை பருத்தித்துறைமெத டிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை தனதாக்கியது.

**17 வயதுப் பிரிவினரின் இறுதி**

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில்பருத்தித்துறைசென்.தோமஸ் பாடசாலை அணியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடத்தின. 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனாகியதுசென்.தோமஸ் பாடசாலை அணி. மூன்றாமிடத்தைப் பருத் தித்துறை மெதடிஸ்த பாடசாலை தனதாக்கியது.

**19 வயதுப் பிரிவினரின் இறுதி**

தொடர்ந்து லீக் முறையில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி மற்றும் வல்வை மகளிர் கல்லூரி அணி ஆகியவற்றை வீழ்த்தி 4 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணி சம்பியனாகியது. இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. (ம-422-108)







## யாழ்.மத்தி, கொக்குவில் இந்து கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ்.மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி என்பன வெற்றி பெற்றுள்ளன.

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 54:16 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிஅணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 38:33 என்ற புள்ளி கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## பூப்பந்தாட்டம், கபடித் தொடர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான பூப்பந்தாட்டம், கபடித் தொடர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளன. பூப்பந்தாட்டத் தொடர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் திடலிலும், கபடித் தொடர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. (ம-23)

## போராடி வென்றது அல் இக்பால்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யங்ஸ்ரார் வி.கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல் இக்பால் அணி வெற்றிபெற்றுள்ளது. சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து எபிசி அணி மோதிக்கொண்டது. இதில் அல் இக்பால் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்கா சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டதால்

தென்னாபிரிக்க ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலானமூன்றுஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 3 இலக்குகளால்வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

வோர்ணர் அணியில் இடம் பிடித்திருந்தாலும் பிஞ்சுடன் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார் கவாயா. 9 ஓட்டங்களுடன் கவாயாவை வழியனுப்பினார் ரபாடா. பின்ஞ் – வோர்ணர் இணை தென்னாபிரிக்காவை மிரட்ட ஆரம்பித்தது. ஏழாவது பந்துப் பரிமாற்றத்தில் 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில்20ஓட்டங்களுடன் இன்னிங்ஸை முடித்துக் கொண்டார் வோர்ணர். சிமித் பத்து ஓட்டங்களை எட்டவில்லை. மக்ஸ்வெல் 16 ஓட்டங்களுடனும் மிச்செல் மார்ஷ் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஒரு முனையில் இலக்குகள் சரிந்தாலும் மறு முனையில் விளாசித் தள்ளிய பின்ஞ் 40 ஓட்டங்களுடன் தாகிரின் சுழலில் சிக்கினார். பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்கங்களுடன்ஆட்டமிழக்க முடிவில் ஆஸ்திரேலியா 157-9.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாகத் தாகிர் 3 இலக்குகளையும் ரபாடா, வீஸ் இருவரும்தலா 2 இலக்குகளையும், அப்பொட், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கும் ஆரம்பம் தடுமாற்றமாகவே அமைந்தது. ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஒரே பந்தில் ஆட்டமிழந்தார் வில்லியர்ஸ். வில்லியர்ஸை வீழ்த்திய நீல், டி ஹொக்கையும் அனுப்பி வைத்தார். ஐந்தே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டுமினி. டுமினியின் இழப்புடன் ஆஸ்திரேலியாவின் பிடியில் இருந்தது தென்னாபிரிக்கா. பத்திரமாக மீண்டெடுத்தனர் பிளாசிஸும் றொஸ்சொவ்வும். அணியின் ஓட்ட எண்ணிக்கை 72ஆக இருந்தபொழுது இருவருமே ஆட்டமிழந்தனர். வந்தார் மில்லர். ஆஸ்திரேலியாவுக்கு கில்லராக மாறினார். இலக்கை எட்டக்கூடிய சாராசரிக்கு தென்னாபிரிக்காவை உயர்த்தி சிக்சர்கள், பவுண்டரிகள் அடங்கலாக இன்னிங்ஸை கட்டமைத்தார். முடிவில் 4 பந்துகள் மீதமிருக்க 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது தென்னாபிரிக்கா. மில்லர் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக நீல் 3 இலக்குகளையும், ரை, மார்ஷ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மில்லர் ஆட்டநாயகனானார். (ம)




> வந்தார் மில்லர். ஆஸ்திரேலியாவுக்கு கில்லராக மாறினார். இலக்கை எட்டக் கூடிய சாராசரிக்கு தென்னாபிரிக்காவை உயர்த்தி சிக்சர்கள், பவுண்டரிகள் அடங்கலாக இன்னிங்ஸை கட்டமைத்தார்.

## வலிகாமம் கபடித் தொடர்

வலிகாமம், மார்ச் 6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## நல்லூர் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்ட தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## வருடாந்த பொதுக் கூட்டம்

கரணவாய், மார்ச் 6


பருத்தித்துறை கால்பந்தாட்ட நடுவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நடுவர் சங்கத் தலைவர் பா.முகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்து நடுவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ம-108)

## உடுவில் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயதக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# இலங்கை தேசிய கிரிக்கெட்டுக்கு மூன்று தமிழ் வீரர்கள் இணைப்பு






மலேசிய அணிக்கு எதிராக நடைபெறவுள்ள துடுப்பாட்டத் தொடருக்காக இலங்கை அணிக்காக மூன்று தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

19 வயதுள்ள வேகப்பந்து வீச்சாளரான எஸ்.சிலோஜன், இலக்குக் காப்பாளரான ரியூடர் மற்றும் 21 வயதுடைய முதல்வரிசை துடுப்பாட்ட வீரரான எஸ்.சஞ்சீவன் ஆகியோரே அவ்வாறு தேசிய அணிக்காக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை, மலேசிய அணிகளுக்கு இடையே 3 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. குறித்த தொடர்களுக்காகவே மூவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்காக விளையாடிய ரியூடர் மற்றும் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரிக்காக விளையாடிய சஞ்ஜீவன் இருவரும் கடந்த வருடம் சிங்கப்பூருக்கு எதிரான இலங்கை அணியில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## யுனைற்ரெட் கால்பந்தாட்ட முடிவுகள்

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள். இதன்படி இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மாந்தை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதிக்கொண்டது. இதில் தேவன்பிட்டி சென்.சேவியர் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து 7 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறின் பீல்ட் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூசியா அணி மோதிக் கொண்டது. இதில் பள்ளிமுனை சென்.லூசியா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரவு 8 மணிக்கு இடம்பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சாந்திபுரம் குறோஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாததினால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பும் சமநிலையாக நாணயச்சுழற்சி முறையில் சாந்திபுரம் குறோஸ்ரார் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## ஆலடிசிந்து அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வைகறை வி.கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆலடிசிந்து 'ஏ' அணி வெற்றி பெற்றுள்ளது. யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'ஏ' அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடிசிந்து 'ஏ' அணி 13:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)







# ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இரண்டாவது ரி-20 ஆட்டம் இன்று

ஆஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்ற காரணத்தினால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயம் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் தொடரில் மூன்று ஆட்டங்கள் என்பதால் இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்று விடும். (ம)

# வள்ளுவர்புரம் பாரதி, புதுக்குடியிருப்பு மத்தி. கிண்ணம் வென்றன கோட்டமட்ட கால்பந்தில்

மாங்குளம், மார்ச் 6

புதுக்குடியிருப்பு கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்துத் தொடரில் 15, 19 வயதுப் பிரிவினருக்கான் ஆட்டத்தில் வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலய அணியும், 17வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் கிண்ணங்களைக் கைப்பற்றின.

19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், 17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா கழக மைதானத்திலும்,15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் புதுக்குடியிருப்பு றோ.க.த.க பாடசாலை மைதானத்திலும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

19 வயதினருக்கான தொடரில் முதலாமிடத்தை வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயமும், இரண்டாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை இரணைப்பாலை றோ.க.த .க பாடசாலை அணியும் பெற்றன. 17 வயதினருக்கான தொடரில் முதலாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை புதுக் குடியிருப்பு றோ.க.த.க பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலய அணியும் பெற்றன. 15 வயதினருக்கான தொடரில் முதலாமிடத்தை வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை விஸ்வமடு மகாவித்தியாலய அணியும் பெற்றன. (ம-422)

FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
FLC
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1059 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 19.03.16 சனி 08 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 21.03.16 Mon @ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

மதுரா அழகுக் கலைப் பயிற்சி நிலையம்
கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்
புதிய பிரிவுகள்:- அழகுக்கலை டிப்ளோமா, பேசியல்-20, மேக்கப்-6, மெடிக்கியூர், பெடிக்கியூர், திரெட்டிங் பேஸ்,வக்ஷிங், சாறிரொப்பிங்-10, நெயில் ஆட், மெஹந்தி டிசைனிங், ஸ்ரெயிட்னிங், பேமிங், கேளிங், பிளக்ஸ்பொட் ரீமெண்ட், பிம்பிலிஸ் ட்ரீமெண்ட One Day Ironing, பிறைட் ரெஸ்ஸிங்-6, Head Oil Massage, Spa Treatment, Eye Treatment, மேலதிக பயிற்சி அழகுக்கலை Additional, தையல், Hand Work Sarees Work ஆகிய பயிற்சிகளும் நடைபெறுகின்றன. பயிற்சிகள் இறுதியில் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மகளிர் மட்டும் 077 9362 642 பழைய வீதி, கோப்பாய்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.
கட்டணம் AF. மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/=
பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.
மாணவர்களுக்கு 40% கழிவு
இலவசம்: படிக்கும் பாடங்களின், PHOTOCOPIES, படிக்கதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
உடன் அழைத்து பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகைபிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

ஆசிரியர் தேவை
நல்லூரில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றில் ஆரம்ப பிரிவுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் தேவை.
பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும். (c 29622) (14,18.)
தொடர்பு :077 538 8471

ஆங்கிலமொழிமூல முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடம்
யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய்
எமது சர்வதேச ஆரம்ப பாடசாலையில் Upper Kindergarten (Age:4-5) பிரிவிற்கு கல்வி கற்பிக்ககூடிய அனுபவம் மிகுந்த ஆசிரியர் தேவை.
தொ. பே: 0769208584
0755511773

பணிப்பெண் தேவை
கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (65944) (14,18.)
தொடர்பு: 076 614 1431

மாபிள்ஸ்
ரெறாசோ (Terrazzo) மாபிள் பதித்தல், கிறனைற் (Granite) சமையலறைத் தட்டுகள், கல்வெட்டுகள், நில வேலைகள் நவீன முறையில் செய்து தரப்படும்.
Since 1952
தொல்புரம்.
தொடர்புக்கு : 021 225 0186, 077 355 3372, 077 630 6733


உயர்வகை பல் வைத்திய சேவைக்கு...
For Quality, Professional Dental Care
INTERNATIONAL DENTAL CARE
IDC
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.
Jaffna Branch: No:84, Stanly Road, (Near Ariyakulam Junction) Jaffna, Srilanka. Tel: 021 222 0833, 021 492 3353
Colombo Branch: No:67, W.A.Silva Mw, Wellawatta, Colombo-06, Srilanka. Tel: 011 250 7070, 011 438 0803
Vavuniya Branch: Raaj Medical Lab, No:10, Bazaar Street, Vavuniya, Srilanka. Tel: 024 222 1577, 024 492 5527
Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.